# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2013 16-4-1982 75 காசு துந்து








...ிலாளர் நல அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம்
...மையில் மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்
...சாமி அவர்கள், சென்னை தேனாம்பேட்டை முதலி
...் திட்டப் பகுதியில் கட்டப்பட உள்ள குடியிருப்புப்
... துவக்கிவைத்தார்.

...ன்றப் பேரவைத்
...் திரு பி. எச்.
...் தலைமையில்,
...ள்ளாட்சித்துறை
... குழந்தைவேலு
... மாவட்டத்தில்
...மைக்கவிருக்கும்
27.3.82-ல்
...ாட்டினார்.






சென்னைப் பெருநகர் குடிநீர் வாரிய நிருவாக அலுவலகக் கட்டடத்திற்கு மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியத் தலைவர் திரு எச். பி. என். ஷெட்டி தலைமையில் 22.3.82-ல் அடிக்கல் நாட்டினார்.








# கைத்தறித் தொழில் வளர்ச்சி பெறு

## மாண்புமிகு முதல்வர்

சென்ற ஆண்டும் கைத்தறிப் பொருட்காட்சியைத் துவக்கி வைப்பதற்கு வாய்ப்புத் தந்தார்கள். இன்றும் அதே வாய்ப்பை எனக்குத் தந்திருக்கிறார்கள்.

எனக்கு முன்பு பேசியவர்கள் அனைவரும், இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு இதை அரசியல் கூட்டமாக மாற்றி விடாமல், சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளில் சம்பந்தப்பட்ட விஷயங்களை மட்டும் எப்படிப் பேச வேண்டும் என்று எடுத்துக் காட்டும் வகையிலே பேசியமைக்கு நான் பாராட்டுக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு காரியம் ஏதாவது நடைபெற்றால் அதற்கு ஒரு காரணம் இருந்தாக வேண்டும். கைத்தறி நெசவாளர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்றால் அதை ஒட்டிப் பல்வேறு பிரச்சினைகளுக்கு உதவி செய்கிறோம் என்ற பெருமை அதனுடன் தொக்கி உள்ளது.

நாட்டில் விவசாயத்துக்கு அடுத்தபடியாக நிறையப் பேர் பங்கு கொள்வது நெசவுத் தொழில்தான். அதை எண்ணிப் பார்த்து, உதவி செய்ய வேண்டிய நிலையிலிருக்கிறார்கள் நெசவாளர்கள் என்பதை எண்ணிப் பார்த்து-கைத்தறித் துணிகளை வாங்கும் நல்ல உள்ளம் படைத்த உங்கள் முன்னர் பேசுகிறேன்.

நெசவாளர் பற்றிப் பேசுகின்ற நாம் அவர்களுக்கு ஆற்றவேண்டிய கடமையை எப்படிப் பெருமையாக எண்ணி வருகிறோம் என்பதை அவர்களுக்குச் செய்கின்ற உதவியிலிருந்து தெரிந்து கொள்ள முடியும்.

நெசவாளர்கள் வாழ்வில் கஷ்டம் இல்லையா? தொல்லை இல்லையா? சிக்கல் இல்லையா? வேலையைச் செய்த பின்னர் அவர்களால் நிம்மதியாக வாழ முடிகிறதா என்றால் இல்லை என்ற பதிலே கிடைக்கும்.

நெசவாளர்களுக்கு ஏதாவது நன்மை செய்ய நினைக்கும்போது அதற்குக் காரணமான அமரர் அண்ணா அவர்களைத்தான் எடுத்துக் காட்ட வேண்டி வருகிறது. நான் முதலில் குறிப்பிட்டதுபோல எந்தக் காரியம் செய்தாலும் அதற்கு அடிப்படைக் காரணம் இருக்கிறது.

கைத்தறி நெசவாளர்களுக்குக் கடமை ஆற்றும்போது அமரர் அண்ணா அவர்கள் செய்த பணியை நினைத்துப் பார்ப்பது கடமை என்று குறிப்பிட விரும்புகிறேன்.

பல வருடங்களுக்கு முன்பு புயல் வந்தபோது, கைத்தறி நெசவாளர்கள் தொல்லைப்பட்ட நேரத்தில்-25 ஆயிரரூபாய் நிதி சேர்த்தார். அவர்களுக்குப் பணமாகக் கொடுக்காமல் ஆடைகளாக - கைத்தறி ஆடைகளாக அளித்தார். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அடித்ததுபோல். 25 ஆயிர ரூபாய்க்கும் கைத்தறி ஆடைகளை வாங்கி அந்த மக்களுக்குக் கொடுத்தார். அன்பளிப்பாகக் கொடுக்காமல் கடமையாகக் கருதிக் கொடுத்தார். அதே முறையில் கடமையாற்றுகின்ற விதத்தில் நெசவாளர்களுக்கு காணிக்கை கொடுக்கமுடிகிறது என்றால் அது அண்ணா அவர்கள் சொல்லிக் கொடுத்த பாடம்தான்.

எந்தக் காரியம் செய்தாலும் பல்வேறு நன்மைகள் கிடைக்கும் வகையில் பணியாற்ற வேண்டும்.

சாயத் தொழிற்சாலை அமைக்கப்படுவது குறித்து இங்கே குறிப்பிட்டார்கள். அந்தத் தொழிற்சாலை மூலம் சாயம்மட்டும் கிடைக்கவில்லை. அதன் பின்

தமிழரசு
மலர்: 12 இதழ்: 20
16—4—1982
திருவள்ளுவர் ஆண்டு 2013
துந்துபி — சித்திரை 3

னால் நூற்றுக் கணக்கான பேர் வேலை பெறுகிறார்கள்.

துணிகளை, வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கு பெட்டிகளைத் தயாரிக்கிறோம், பத்திரமாக அனுப்பி வைப்பதற்காக. அந்தப் பெட்டிகளை தமிழகத்தில் செய்ய முடியும். அந்த வேலையை ஊனமுற்றவர்களிடம் ஒப்படைத்தால் அவர்கள் வேலை வாய்ப்புப் பெற முடியும். ஊனமுற்றோர் நல்வாழ்வு பெற் முடியும்.

தமிழ்நாடு அரசு எந்தத் திட்டத்தைத் தீட்டினாலும் அதன் அடிப்படையில் பல நோக்கங்கள் இருக்கின்றன என்பதைக் கூற விரும்புகிறேன்.

முன்பு, நெசவுத் தொழிலாளர்கள் வேலையில்லாமல் துன்பப்பட்டு சேலம் போன்ற இடங்களிலிருந்து சென்னை நோக்கியும் வேறு பல இடங்களுக்கும் சென்ற பழைய நிகழ்ச்சிகள் நினைவுக்கு வருகின்றன. குடும்பம் குடும்பமாக குழந்தை குட்டிகளுடன் தெருத் தெருவாக வேலை தேடி அலைந்தார்கள் அவர்கள். அவர்களுக்கு என்ன வேலை தெரியும்? கல் உடைக்கலாம்; மூட்டை சுமக்கலாம்; வீட்டு வேலை செய்யலாம். இவற்றைத் தவிர வேறு தொழில் செய்ய முடியுமா என்றால் முடியாது, அப்படியே முடியும் என்று வைத்துக் கொண்டாலும் படித்துப் பட்டம் பெற்றவர்களே வேலைக்கு அலையும் போது இவர்களுக்கு எப்படிக் கிடைக்கும்? இன்று நெசவாளர்கள் நிலை உயர்ந்திருக்கிறது என்றாலும் அவர்களது தேவை எல்லாம் பூர்த்தி ஆகிவிட்டது என்று கூற முடியாது. இன்னும் அவர்களுக்கு நிறையச் செய்ய வேண்டியுள்ளது.

கைத்தறியாளர்களுக்கு முக்கியமாக மூலப்பொருள் நூல். பஞ்சு விலை ஏறினால் நூல்விலை ஏறுகிறது; பஞ்சு விலை இறங்கும்போது நூல் விலை இறங்குவதில்லை. இதற்கு யார் காரணம்? இடையில் இருப்பவர்கள்தான். இதைத் தடுக்க நாங்கள் முயற்சி செய்து வருகிறோம்.

நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன் தமிழ்நாட்டில் 5 லட்சத்து 56 ஆயிரம் கைத்தறிகள் இருந்தன. அவற்றில் 1 லட்சத்து 82 ஆயிரம் தறிகள் கூட்டுறவுத்துறையில் இருந்தன. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு 32 லட்சத்து 73 ஆயிரம் தறிகள் ஏற்பட்டுள்ளன.

கூட்டுறவு நெசவாளர்கள் சங்கத்தில் உள்ள தொழிலாளி இறந்து விட்டால் ரூ. 3 ஆயிரம் கொடுக்கப்படுகிறது. இது எதிர் காலத்தில் 5 ஆயிரம் அல்லது 10 ஆயிரம் ரூபாய் ஆக்கப்படலாம்.

*1975-76*-ல் கைத்தறி ஆடை கொள் முதல் ரூபாய் *13.72* கோடி; *1981-82* ல் ரூபாய் *37* கோடியாக உயர்ந்துள்ளது.

*1977-78*-ல் கைத்தறித் துணி உற்பத்தி *79.81* மில்லியன் மீட்டர் ஆகும். *1981-82*-ல் அது *110*மில்லியனாக உயர்ந்துள்ளது.

ஆதி திராவிட இனத்தவர்களுக்குக்கூட, இந்தத் தொழில் கற்றுத் தரப்படுகிறது. எந்த ஜாதியினரும் எந்தத் தொழிலையும் செய்யலாம் என்ற நிலை தமிழகத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்ன தொழிலை இன்ன ஜாதியினர்தான் செய்ய வேண்டும் என்ற நிலை இருக்கக் கூடாது. முன்பு குலத்தொழில் செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டது. ஜாதிப்பிரிவு தொழில்களை அடிமைப்படுத்தக் கூடாது. எனவே ஆதி திராவிட மக்களுக்குக் கைத்தறித் தொழிலில் வாய்ப்புத் தந்தால் அவர்களது வாழ்வு வளம்படும். அந்தச் சமுதாயம் மேன்மையுறும்.

இந்த நிலைமை நாம் மாற்றாவிட்டால் எதிர்காலத்தில் போராட்டம் குறையாது; பூசல்கள் மறையாது.

கைத்தறியாளர்களுக்கு போதுமான அளவு பணிகளை தமிழக அரசு ஆற்றி வருகிறது; ஆதரவு தருகிறது. காரணம் அவர்களுக்கு ஊக்கம் தருவதற்காக -நல்லவற்றைச் செய்ய வேண்டும் என்பதற்காக !

நாம் செய்து தரும் வசதிகள் போதவில்லை என்றால் எதிர்ப்புக் குரல் கொடுங்கள்; தவறுகளைச் சுட்டிக் காட்டுங்கள். அதைத் திருத்தமுயற்சிக்கிறோம்.

எட்டயபுரத்தில் 12 ஆயிரம் கதிர்கள் உள்ள நூற்பு ஆலையை உருவாக்குகிறோம் என்றால் அது பாரதி நூற்றாண்டுக்காக மட்டுமல்ல. அது - பின்தங்கிய பகுதியின் தேவையைப் பூர்த்தி செய்வதாகவும் அமையும் என்பதால் அதைச் செயல்படுத்த இருக்கிறோம்.

கடந்த 34 ஆண்டு சுதந்தர ஆட்சியில் நிறைவேறிய திட்டங்களையும் எங்களது $4\frac{1}{2}$ ஆண்டு ஆட்சியில் நிறைவேறிய திட்டங்களையும் புள்ளி விவரமாகத் தயாரிக்கும்படி நான் கூறியுள்ளேன். கடந்த 30 ஆண்டுகளில் கிடைத்த வேலைவாய்ப்புகளை விட இந்த $4\frac{1}{2}$ ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அதிகம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்கள் புது விதமான -கண்ணைக் கவரத்தக்க வகையில் மட்டுமல்ல - நீண்ட காலம் பயன்படும் வகையில் துணிகளைத் தயாரிக்கிறார்கள். கைத்தறி ஆடைத் தயாரிப்பில் உறுதியான - சீக்கிரம் சாயம் விலகிப் போகாத தன்மைஇருக்க வேண்டும். அத்தகைய ஆடைகளை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் தட்டுப்பாடின்றிக் கிடைக்க விரைவில் மூலப்பொருள் வங்கி ஒன்றை அமைக்க இருக்கிறோம்.

இதற்கென ஒரு வாரியத்தை உருவாக்க இருக்கிறோம்.

அதன் வாயிலாக கைத்தறித் தொழில் வளர்ச்சியடையும்; பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

கைத்தறித் தொழில் இன்ன ஜாதியினருக்குத்தான் உரியது என்ற நிலை கூடாது. எங்கள் குலத்தொழில் என்ற நிலை எவருக்கும் இருக்கக் கூடாது. ஏற்ற தொழிலை எவரும் செய்யலாம். அந்த விதத்திலே கைத்தறித் தொழில் வாழ வேண்டும்; வளர வேண்டும்.


**சென்னையில், அகில இந்தியகைத் தறிப் பொருட்காட்சியை 9-4-82-ல் துவக்கி வைத்து ஆற்றிய உரையிலிருந்து..**

## தாய்க்குலத்தின் உதவி

நெசவுத் தொழில் இதுநாள் வரை நசித்துப்போகாமல் இருக்க-நெசவாளர் பாதி வயிறாவது சாப்பிட உதவுபவர்கள் நமது நாட்டுத் தாய்மார்கள்தான்; ஆடவர்கள் எப்படிப் போனாலும் தாய்மார்கள்தான் மறவாமல் கைத்தறி ஆடைகளை வாங்குபவர்கள்! ஆகவே கைத்தறியாளர்களைக் காப்பாற்றும் தாய்க்குலத்திற்கு எனது மரியாதை கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



# கைத்தறித் தொழில்
## மேம்பாட்டுக்கு
# அரசின் உதவிகள்!



### மாண்புமிகு கல்வி அமைச்சர்
### திரு. செ. அரங்கநாயகம்

**1981**-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் இந்தியத் தலைமை அமைச்சரால் அறிவிக்கப்பட்ட துணிநூல் குறித்தபுதிய 20-அம்சத் திட்டத்தின் கீழ், கைத்தறிப் பிரிவிற்கு சிறப்பிடத்தைக் கொடுத்ததுடன் நாட்டின் துணித் தேவையை நிறைவு செய்வதில் கைத்தறித் துறைக்கு ஓர் உயர் முன்னுரிமையை அளித்துள்ளது.

தமிழ்நாட்டில் 5.56 இலட்சம் கைத்தறிகள் உள்ளன. இம்மாநிலத்தில் வேளாண்மைக்கு அடுத்த படியாக கைத்தறித் தொழில் ஒரு முக்கிய ஊரகத் தொழிலாக விளங்குவதால், மாநில அரசும் அதற்குரிய முக்கியத்துவம் அளித்துள்ளது. கைத்தறித் தொழிலுக்காக ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மாநில அரசு ரூ. 27.82 கோடி செலவிட்டது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 84.58 கோடி அளவிற்கு உயர்ந்தது. இதிலிருந்து மாநில அரசு கைத்தறித் தொழிலுக்கு உயர் முன்னுரிமை அளிப்பது தெளிவாகும்.

கைத்தறித் துணி ஏற்றுமதி அதிகரித்துள்ளதால் அந்நியச் செலாவணியைப் பெற்றுதரும் பிரிவுகளில் கைத்தறித் தொழிலும் ஒன்றாக விளங்குகிறது.



**கைத்தறித் தொழில் வளர்ச்சித் திட்டத்தின் நோக்கம்:**

தமிழகத்தில் உள்ள 5.56 இலட்சம் கைத்தறிகளில், 2.89 இலட்சம் (அதாவது 51%) கைத்தறிகள் கூட்டுறவுச் சங்க அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டு உள்ளன. இந்த 2.89 இலட்சம் தறிகள், 1,251 தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் செயல்பட்டு வருகின்றன. கைத்தறிகளை கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரும் திட்டத்தின் படிதேசிய குறியளவான 60% க்கு பதில் ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் 67% அளவிற்கு கைத்தறிகளைக் கூட்டுறவின் கீழ் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது.

1981-82ஆம் ஆண்டில் 80 புதிய தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், 5 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் தொடங்குவதன் மூலம் 25,300 தறிகளைக் கூட்டுறவு அமைப்பின்கீழ்கொண்டு வரக் கருதப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் (1981-82) 31—12—1981 வரை 26,000 நெசவாளர்கள் தனியார் துறையிலிருந்து விடுவிக்கப்பட்டு கூட்டுறவு அமைப்புக்குக் கொண்டு வரப்பட்டு உள்ளனர். அவர்கள் 64 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் அங்
கத்தினராகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.
நடப்பு ஆண்டில், தறியில்லாத நெசவாளர்
களின் நலனுக்காக 20 தொழிலியல் நெச
வாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்
பட உள்ளன. இவற்றுள் 7 புதிய தொழி
லியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 7 00
ஆதிதிராவிடர் நெசவாளர்களின் நலனுக்
கென்றே ஆரம்பிக்கப்பட்ட உள்ளன.
இத்திட்டம் ஆதிதிராவிடர்களின் நலனுக்
காகவும், அவர்களின் வாழ்க்கைத்தரம் உய
ரும் பொருட்டு வரையறுக்கப்பட்ட தனித்
திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுகிறது.

1980-81ம் ஆண்டில் கைத்தறித் துணி
உற்பத்தி 103 மில்லியன் மீட்டராகும் 1981-
82-ஆம் ஆண்டில் 31—12—81 வரை கைத்
தறித்துணி உற்பத்தி 86 மில்லியன் மீட்ட
ராகும். 1981-82ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்
பட்ட 110 மில்லியன் மீட்டர் உற்பத்திக்
குறியீட்டு அளவை முழுமையாக அடைய
முடியும். 1982-83ஆம் ஆண்டிற்கு 120 மில்லி
யன் மீட்டர் உற்பத்திக் குறியளவு நிர்ணயிக்
கப்பட்டுள்ளது.

நுகர்வோரின் மாறிவரும் ஆர்வங்களுக்
கேற்பவும், விருப்பத்திற்கேற்பவும், புதிய



கைத்தறித் துணிகளுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வளர்ந்து வரும் தேவைகளை ஈடு செய்யவும், கைத்தறி நெசவுத் தொழிலில் புதிய தொழில் முறைகளைக் கையாள வேண்டும். இதைத் கருத்தில் கொண்டு, தறிகளைப் புதுப்பிக்கவும் நவீனப் படுத்தவும் அல்லது புதிய நவீனக் கைத்தறிகளை வாங்கவும் கைத்தறி நெசவாளர் சங்கங்கள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கென்று, 1981-82ஆம் ஆண்டில் ரூ. 22.50இலட்சம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதில் மூன்றில் ஒரு பங்கு உதவித் தொகையாகவும் மூன்றில் இரண்டு பங்கு கடனாகவும் வழங்கப்படுகிறது.

கைத்தறியில் புதிய தயாரிப்புகளையும் புதிய வடிவமைப்புகளையும் உருவாக்குவதற்கு இயலும் வகையில், கோ.-ஆப்டெக்ஸ் இதுவரை மதுரை, திருச்சி, சேலம், கோவை மற்றும் கடைய நல்லூர் ஆகிய இடங்களில் 5 வடிவமைப்பு பணிநிலையங்களை அமைத்துள்ளது. இதற்காக அரசு மொத்தம் ரூ. 17.50 இலட்சம் நிதியுதவி வழங்கியது. மேற்கண்ட வடிவமைப்பு பணிநிலையங்கள் ஆண்டுக்கு 1,100 புதிய வடிவமைப்புகளை உருவாக்கி அவற்றை தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி வருகின்றன. மேற்படி வடிவமைப்புகள் மூலம் ஆண்டொன்றுக்கு ரூ. 8 கோடி அளவிற்கு உற்பத்தி பெருகி உள்ளது.

இதைத்தவிர எட்டையபுரத்தில் 12,000 கதிர் திறன் கொண்ட புதிய கூட்டுறவு நூற்பாலை ஒன்று மகாகவி பாரதியாரின் நினைவாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அண்மையில் எட்டையபுரத்தில் கொண்டாடப்பட்ட பாரதி நூற்றாண்டு விழாவின் அங்கமாக ஆரம்பிக்க இருக்கும் பாரதி கூட்டுறவு நூற்பாலைக்கு 13.12.1981 அன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் கீழ் புதிய கூட்டுறவு நூற்பாலைகள் அமைப்பதாலும், ஏற்கெனவே இயங்கி வரும் நூற்பாலைகளை விரிவுபடுத்துவதனாலும் கூடுதலாக 3,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டும் 12 கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் சிட்ட நூல்களை கோ-ஆப்டெக்ஸ் தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் உள்ள 22 நூல் விற்பனை நிலையங்கள் மூலம் ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள நெசவாளர்களுக்கு வழங்கி வருகின்றது.

அண்மையில் தனியார் துறையிலுள்ள கைத்தறி நெசவாளர்கள் மோட்டா ரக நூல்கள், குறிப்பாக 20 நெ. மற்றும் 2/17 நெ. ரக நூல்கள் கிடைக்காமல் அவதியுற்ற பொழுது ,தேசிய டஞ்சாலை நிறுவனத்தின் ஆலைகள் மூலமாக நூலினைப் பெற்று அவர்களுக்குக் கிடைக்கச் செய்ததன் மூலம் மாநில அரசு தேவையான நடவடிக்கைகளை உடன் மேற்கொண்டது. எதிர் காலத்தில் நூல் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தடுப்பதற்காக அரசு ''மூலப்பொருள் வங்கி'' ஒன்று அமைக்க உத்தேசித்துள்ளது. இவ்வங்கி மத்திய அரசும் மாநில அரசும் சம விகிதத்தில் நிதியுதவியைக் கொண்டு அமைக்கப்படவிருக்கிறது. ஆரம்பத்தில் மத்திய அரசு ரூ. 50 இலட்சம் அளவிற்கு நிதியுதவியை அளிக்க முன் வந்துள்ளது. இருப்பினும் மாநில அரசு இத்திட்டத்திற்கு ரூ. 50 இலட்சம் வழங்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் மத்திய அரசு இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. கோ-ஆப்டெக்ஸ் 1982-83ஆம் ஆண்டு இந்த மூலப் பொருள் வங்கியை ஆரம்பிக்க தேவையான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது

**கைத்தறித் தொழிலுக்கு விற்பனை வசதி செய்தல்:**

கோ-ஆப்டெக்ஸ் என்றழைக்கப்படும் தலைமைச் சங்கமான தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அதனுடன் இணைந்த 1,251 தொடக்கக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச்சங்கங்களின் உற்பத்தியில் 50% அளவிற்கு விற்பனை வசதி செய்து கொடுக்கிறது.

**சிறந்த ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்**


இத்திட்டத்தின் கீழ் சிறந்த கைத்தறித் துணி ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசு வழங்குவதற்காக 1981-82ஆம் ஆண்டில் ரூ. 0.11 இலட்சத் தொகையை அரசு ஒதுக்கியுள்ளது. 1982-83ஆம் ஆண்டிலும் அத்திட்டத்திற்கு இதே அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டிலும் சிறந்த கைத்தறி ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசுகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**நலத் திட்டங்கள்**

சேமிப்பு பாதுகாப்புத் திட்டம்:-கூட்டுறவு அமைப்பின் கீழ் செயலாற்றி வரும் கைத்தறி நெசவாளர்களின் நலனை முன்னிட்டு தமிழ்நாட்டில் ''கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு, பாதுகாப்புத் திட்டம்'' என்ற பெயரில் ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 67,000 கைத்தறி நெசவாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**நெசவாளர் வீட்டு வசதித் திட்டம்**

1962-ம் ஆண்டிற்குப் பிறகு நிறுத்தப்பட்ட நெசவாளர் வீட்டு வசதித் திட்டம்



மீண்டும் புதுப்பிக்கப்பட்டு 1979-80 ஆம் ஆண்டிலிருந்து புதிதாக மாற்றி அமைக்கப்பட்ட வீட்டு வசதித் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசு அளிக்கும் ரூ. 1000 உதவித்தொகையையும், வீட்டு வசதி நகர்ப்பகுதி வளர்ச்சிக் கழகம் அதன் விதிமுறைப்படி அளிக்கும் கடனையும் பயன்படுத்தி 1982-83ஆம் ஆண்டில் 1,000 வீடுகள் கட்டப்படும்.

**கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள்**

மத்திய அரசின் நிதியுதவியுடன் இம்மாநிலத்தில் நான்கு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டங்களையும் இரண்டு ஏற்றுமதி உற்பத்தித் திட்டங்களையும் அரசு வகுத்துள்ளது. சிவராமன் குழுவின் பரிந்துரையின் பேரில் இத்திட்டங்கள் தொடங்கப்பட்டன.

**சேலத்தில் கைத்தறிகளுக்குப் பாவு கஞ்சி போடும் எந்திரம்**

உற்பத்தியைப் பல்திறப்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக, கைத்தறிகளுக்குக் கஞ்சி போட்ட பாவுகள் வழங்குவதற்காக அரசிடமிருந்து ரூ. 21.00 இலட்சம் நிதியுதவி பெற்று, சேலம் கூட்டுறவு நூற்பாலையில் பாவு கஞ்சி போடும் எந்திரம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

**கண்ணைக் கவரும் கைத்தறி ஆடை**

நூல்—எப்போதும் சிக்கலுக்கு உள்ளாவது தான். நூலுடன் தொடர்பு கொண்ட நெசவாளர் வாழ்க்கையும் சிக்கல் கொண்டதுதான். பக்குவமாக அந்தச் சிக்கலை நீக்குவதுதான் மிக முக்கியமான தேவையாகும். மற்ற ஆலைத் தொழிலுக்குக் கிடைக்கும் வாய்ப்பும் வசதியும், விஞ்ஞானக் கருவிகளின் உதவியும் கிடைக்காத போதும் கூட, நேர்த்தியான—மெச்சத்தக்க துணிகளை கைத்தறியாளர்கள் தயாரித்து வருகிறார்கள்.

ஆலைத்துணியில்தான் கண்ணைக் கவரும் ஆடைகளைத் தயாரிக்க முடியும் என்று நம்பப்பட்டது. ஆனால் இப்போது கைத்தறியில் கண்ணைக் கவரும் ஆடைகள் வேகமாகத் தயாராகின்றன.

—பேரறிஞர் அண்ணா

**நவீன சாயச்சாலை**

அரசின் நிதி உதவியுடன் மொத்தம் ரூ. 90 இலட்சம் செலவில் சேலம், திருநெல்வேலி, ஸ்ரீவில்லிபுத்தூர், வேலூர் திருச்சிராப்பள்ளி, ஈரோடு, மதுரை ஆகிய இடங்களில் நவீன சாயச்சாலைகளை நிறுவும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சேலம், வேலூர், ஸ்ரீவில்லிபுத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் நவீனச்சாயச்சாலைகள் ஏற்கனவே செயல்படத் துவங்கி விட்டன. இவைகள் சேலம், வேலூர், ஸ்ரீவில்லிபுத்தூர், பேட்டை கூட்டுறவு நூற்பாலைகளின் வளாகங்களில் செயல்பட்டு வருகின்றன. மற்ற நவீனச் சாலைகள் விரைவில் முடிக்கப்பட்டு செயல்படத்தொடங்கும்.

**தமிழ்நாடு சரிகை நிறுவனம், காஞ்சிபுரம்.**

காஞ்சிபுரம் தமிழ்நாடு சரிகை நிறுவனம் இரண்டாவது பணி முறையைக் கொண்டு வந்தது. மாதம் ஒன்றுக்குத் தங்கச் சரிகை உற்பத்தியை 500 மார்க்குகளிலிருந்து 1000 மார்க்குகளாக அதிகரித்துள்ளது. இந்நிறுவனம் உற்பத்தி செய்த சரிகை முழுவதும் கோ-ஆப்டெக்ஸ் மூலம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச்சங்கங்களுக்குவினியோகம் செய்யப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு சரிகை நிறுவனம் உற்பத்தியை அதிகரிக்க இயலும் வகையில் 1981-82ஆம் ஆண்டில் மூலதனப் பங்கு கடன் வகையில் ரூ. 4.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**மாநில கைத்தறி வாரியம் அமைத்தல்**

தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு கைத்தறித் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள் பல்வேறு விதித்துறைகள்) சட்ட முன்வடிவு குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற்று சட்டமாகிவிட்டது.

மேற்படி புதிய சட்டம் செயல்படுத்தப்படுவதைக் கவனிக்கவும், தனியார்துறையில் உள்ள நெசவாளர்களுக்குத் தேவையான உதவிகளை அளிக்கும் பொருட்டும், அரசு மாநில கைத்தறி வாரியம் ஒன்றை ஏற்படுத்தி அதற்குப் போதுமான அதிகாரங்கள் வழங்க ஆலோசித்து வருகின்றது.

[தமிழ்நாடு சட்டப் பேரவையில் வைக்கப்பட்ட கைத்தறி மற்றும் பஞ்சாலைக்கான 1982-83-ம் ஆண்டு கொள்கையும் திட்டங்களும் பற்றிய கொள்கைக் குறிப்பிலிருந்து தொகுக்கப்பட்டது].



# பெண்களின் முன்னேற்றத்திற்கு கல்வியே அடித்தளம்

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்

## டாக்டர் கா. காளிமுத்து

இங்கு இந்த நல்ல விழாவிலே பங்கேற்க வைத்துப் பாசம் மிகுந்த வரவேற்பையும் எனக்கு வழங்கியிருக்கின்றீர்கள்.

முதன் முதலில் வரவேற்றுப் பேசிய பேராசிரியை வசந்திதேவி அவர்கள் இங்கே இந்த மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில் ஒரு வருத்தமும் கலந்திருக்கிறது என்று சொல்லி, இறுதியாண்டு படிக்கின்ற மாணவச் செல்வங்கள் இந்தக் கல்லூரியை விட்டு வெளியேறப் போகிறார்கள் என்றும், அவர்களை இன்னும் பயமுறுத்துவதைப்போல, என்னென்ன அவர்கள் துன்பப்படப் போகிறார்களோ என்றெல்லாம்கூட, அவர்கள் தாயன்போடு நெஞ்சு நெகிழச் சொன்னார்கள்.

வெளி உலகத்திலே நான்கு சுவர்களுக்குள்ளே வாழ்க்கை நடத்துகின்ற பெண்கள் அஞ்சி அஞ்சித்தான் வாழவேண்டும் என்கின்ற நிலைமை இனிமேல் நிச்சயமாக இராது. தமிழகத்திலேயே அத்தகைய மறுமலர்ச்சி உருவாகிக் கொண்டிருக்கிறது. மறுமலர்ச்சி என்பது மட்டும் அல்ல, பெரும்பாலும் வீட்டிலே பெண்களைப் பார்த்து ஆண்கள்தான் பயப்படுகின்றார்கள் என்கின்ற அளவிற்கு நிலைமை இருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிட முடியாது. வேடிக்கையாகச் சொல்வதுண்டு. ஒருவன் அயர்ந்து உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருக்கிறான். பக்கத்திலே இருக்கின்ற அவனுடைய நண்பன், 'என்ன நீண்ட நேரமாய் யோசிக்கிறாய்?'' என்று கேட்கிறான். இவன் சொல்லுகிறான், 'எனக்கு ஒரு சந்தேகம் வருகிறது. காட்டிலே சிங்கத்தைப் பார்த்துக் கரடி பயப்படுகிறது; கரடியைப் பார்த்து ஓநாய் பயப்படுகிறது; ஓநாயைப் பார்த்து நாய் பயப்படுகிறது; நாயைப் பார்த்துப் பூனை பயப்படுகிறது; பூனையைப் பார்த்து எலி பயப்படுகிறது; எலியைப் பார்த்து என் மனைவி பயப்படுகிறாள்; என் மனைவியைப் பார்த்து நான் பயப்படுகிறேன், ஆகவே என்ன செய்வது என்று புரியவில்லை!'' என்று சொல்கிறான். ஆகவே, வேடிக்கையாகச் சொன்னாலும், நான்கு சுவர்களுக்குள்ளே நடைபெறுகின்ற இல்லறத்திற்கு ஆண் தலைமை ஏற்க முடியாது. அந்த இல்லறத்தினுடைய தலைவியாக விளங்கக்கூடிய உயர்ந்த நிலையில் இருப்பவள் பெண்தான். ஆகையால் முறையாகக் குடும்பத்தை நடத்திச் செல்லுகின்ற ஆற்றல், திறமை இவைகளைப் பெற்றிருப்பவர்கள் பெண்கள் என்பதை நீண்ட நெடுங்காலமாக நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் வைகறையிலே தொடங்கி, நள்ளிரவு மட்டும் ஒரு குடும்பத் தலைவியினுடைய கடமை எவ்

வளவு இருக்கிறது என்பதைக் ''குடும்ப விளக்கு'' என்னும் நூலின் வாயிலாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.


இன்று ''பெண் கல்வி'' என்ற தலைப் பினை எனக்குக் கொடுத்துப் பேசச் செல்லி யிருக்கிறார்கள். பெண்கள் கல்லூரியில் வந்து ஒருவன் பெண் கல்வி தேவையில்லை என்று சொல்லிவிட்டு, அதுவும் கராத்தே வேறு படிக் கின்றீர்கள் என்று சொல்லுகிறார்கள், இந்த நிலைமையில் பேசிவிட்டுச் செல்ல முடியாது. ஆனால், பெண் கல்வி என்பதை மறுக்கின்ற பழைமைச் சித்தாந்தத்திலே ஊறிப்போனவர் களுக்குத்தான் அத்தகைய கருத்துக்களைச் சொல்ல வேண்டுமே தவிர, இன்றைக்கு வளர்ந்துகொண்டிருக்கின்ற சமுதாயத்திலே பெண் கல்வி தேவை என்பது எடுத்துச் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டிய அள விற்கு நிச்சயமாக, நிலைமை இல்லை என் பதை நான் குறிப்பிடக் கடமைப் பட்டிருக் கிறேன்.

பல்வேறு துறைகளிலும் நீங்கள் வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை கல்லூரி முதல்வர் அவர்கள் அறிக்கை வாசிக் கும்பொழுது தெரிவித்தார்கள். நெய்வேலி யில் போய் நிலக்கரி வியாபாரம் செய்வது போல, பெண் கல்வி வளர்ந்து, தழைத்து, ஓங்கி இருக்கின்ற ஒரு கல்லூரியில், பெண் கல்வி தேவை என்பதை எடுத்துச் சொல்லுகின்ற அவசியம் இப்போது இல்லை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆனால், பெண் ணுக்குக் கல்வி தேவை என்று சொல்லுகின்ற போது அது ஏதோ வேலை வாய்ப்புக்காக— அலுவல் பார்ப்பதற்காக என்று மட்டுமே குறிப்பிட்டுச் சொல்லுகின்ற நிலைமை இருக் கிறது. அறிவு என்பது ஆண்களுக்கு ஏன் தேவை என்று சொல்லுகிறோமோ, கல்வி என்பது அதனுடைய குறிக்கோளாக, நோக்க மாக எதைக் குறிப்பிடுகிறோமோ, அந்த நோக் கத்துடன்தான் பெண்களுக்கும் தேவை என் பதை நாம் எண்ணிப் பார்த்திட வேண்டும்.

பழம் வேண்டுமென்பதற்காகவும், நிழல் தருவதற்காகவும் மரம் பயன்படலாம். ஆனால் அதற்காக அலுவல் பார்ப்பதற்காக மட்டுமே கல்வியின் நோக்கம் இருந்துவிடக் கூடாது. பெண்கள் என்றால் சமுதாயத்தின் பாதிக்கும் மேற்பட்ட பகுதி. ஆகப் பாதிக்கு மேற்பட்ட பகுதியைப் பாதிப்பிற்கு ஆளாக்கி விட்டுச் ''சமுதாயம் முன்னேறவில்லை, முன்னேறவில்லை என்று வருத்தப்பட்டுப் பயனில்லை. வேரைக்கிள்ளி வெளியே எறிந்து விட்டுப் பச்சிலை வளர்வதற்கு என்ன பன்னீ ரைத் தெளித்தாலும், நிச்சயமாக வளராது. அந்த வகையில்தான் சமுதாய முன்னேற்றம் என்பது பெண்களுக்கும் சேர்த்து முன்னேறு கின்ற அந்த முன்னேற்றத்தைத்தான் குறிக் கக்கூடுமே தவிர வாய்விட்டு எண்ணக் கூடிய சிலபேர், ஆண்கள் முன்னேறிவிட்டால் அது சமுதாய முன்னேற்றம் என்று கூறுவதைக் குறிக்காது.

ஒன்றை நான் தெளிவாக்க விரும்புகி றேன். தந்தை பெரியார் அவர்கள் அடிக்கடி ஒரு கருத்தைச் சொல்லுவார்கள். பெண்கள் முன்னேற்றம், பெண்கள் விடுதலை என்பவை ஆண்களை நம்பி நீங்கள் முன்னேறலாம் என்று தயவுசெய்து கருதாதீர்கள். என் றைக்கும் பூனைகளால் எலிகளுக்கு விடுதலை கிடையாது. ஆண் வர்க்கத்தாலே பெண் களுக்கு முன்னேற்றம் நிச்சயம் கிடையாது. ஆகவே, பெண்கள் முன்னேறவேண்டுமானால், அவர்கள் தங்களைத் தாங்களே முன்னேற்றிக் கொள்ள வேண்டும். தாங்கள் உயர வேண்டும். ஆணுக்குச் சமமாக வாழ வேண்டும் என்கின்ற உரிமை உணர்வை அவர்கள் பெற்று முன் னேற வேண்டும். ஆனால், அதே உணர்வைப் பெறுவதற்கு இந்தக் கல்வி நிச்சயமாகப் பயன் படும் என்று நான் கருதுகிறேன்.

இன்றைக்கு இருக்கின்ற சமுதாய நிலை மையால் எப்பேர்ப்பட்ட வேதனைக்குப் பெண்குலம் பல நேரத்திலே ஆளாக வேண்டி யிருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்கி



றோம். வரதட்சணைக் கொடுமை, திருமணத்திற்குப் பிறகு அது வராததட்சணை என்று கருதும்போது பெண்களைக் கொடுமைப்படுத்துகின்ற நிலைமையை இன்று சமுதாயத்தில் நாம் காணுகின்றோம் நான் ஒரு புள்ளி விவரத்தைப் படித்துப் பார்த்தேன் 1973-ஆம் ஆண்டில் இந்தியாவில் வரதட்சணைக் கொடுமை காரணமாகத் தற்கொலை செய்து கொண்டு இறந்த பெண்களின் எண்ணிக்கை 37.57 சதவிகிதம். பெண்களைப் பாராட்டுவார்கள், புகழ்வார்கள், போற்றுவார்கள். கல்விக்கு அதிபதியான கலைமகள் பெண்தானே என்று சொல்லுவார்கள். எதையும் பூமாதேவி போலப் பொறுமையோடு இருக்க வேண்டும் என்றும் சுட்டிக் காட்டுவார்கள். மறைந்து விட்ட ஷாஜகான் அவர்கள் எப்படி மும்தாஜ் இறந்தவுடனே, உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹாலைக் கட்டி முடித்தானோ அதைப்போல் பெண்களுக்குப் பெருமையும் சேர்ப்பார்கள். சில நேரத்தில் உயிரோடு அனார்கலிக்குச் சமாதி வைத்ததுபோல் சமாதியும் வைப்பார்கள். ஆகவே, அப்படிப்பட்ட நிலைமையில் பெண் குலம் தன்னை முன்னேற்றிக் கொள்ளுகிறது. தன்னுடைய நிலைமையை எண்ணிப்பார்த்து, அது வாழ்வில் உயர வேண்டும்.

ஆடை அணிகலன்களும், ஆசைக்கு வாசமலர் தேடுவதும், ஆடவருக்குத் தேடிக் கொடுப்பதும் அஞ்சுவதும், நாணுவதும், ஆமையைப் போல வாழ்வதும் கெஞ்சுவதுமாகக் கிடக்கும் மகளிர் குலம் மானிடக் கூட்டத்தின் வலிவற்ற ஒரு பகுதி என்று உள்ள அந்த எண்ணப் போக்கை மாற்றிக் காட்டி சமுதாயத்தின் புகழ்மிக்க இடத்தை—பெருமைமிக்க இடத்தைப் பெண்குலம் பெற வேண்டும். அப்படிப் பெறுவதற்கு வழிகாட்டக் கூடிய பெருமக்கள் இங்குப் பேராசிரியர்களாகப் பணியாற்றுகின்றார்கள்.

நல்ல கல்வியை-பண்புள்ள கல்வியை நீங்கள் பெற்றுக்கொண்டிருக்கிறீர்கள். கற்றுக் கொண்டு இருக்கின்றீர்கள். அது உங்களது எதிர்காலத்திற்குப் பயன்படும் என்கிற நம்பிக்கையை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு நீண்ட நேரம் பேச வேண்டும் என்ற உணர்வு உந்தினாலும் வாய்ப்புக் குறைவாக இருக்கின்ற காரணத்தினால் பல்வேறு கடமைகளுக்கிடையே சிக்கிக் கொண்டு இருக்கின்ற காரணத்தினால் உங்கட்கு வாழ்த்தைக் கூறுகின்றேன்.

அரசியல் சக்தி, சமுதாயத்தை வாழ வைக்கக்கூடிய ஒரு சக்தி என்பதனை நான் தெரிவித்து அந்தச் சக்தியைப் பெண்களின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்துவதற்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, பெண் கல்வி வாழ, பெண்கள் சமுதாயம் முன்னேற இவ்வரசு நிச்சயமாகத் துணைபுரியும்; பெண்களுக்காக ஒரு பல்கலைக் கழகத்தையே நிறுவுவதற்கும் அறிவிப்பினை அரசாங்கம் தெரிவித்திருக்கிறது என்பதை உங்களுக்கு நினைவூட்டி இந்த நல்ல வாய்ப்பைத் தந்த கல்லூரி முதல்வர் அவர்களுக்கும், பேராசிரியர் பெருமக்களுக்கும் மாணவத் தங்கங்களுக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**[மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் திண்டுக்கல் எம். வி. முத்தையா பிள்ளை அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில், கல்லூரி முதல்வர் டாக்டர் சி. பார்வதி அவர்கள் தலைமையில் 15-2-82-ல் ஆற்றிய உரையிலிருந்து.]**

# ஆலயப் பணியாளர்களுக்குப் புதிய சலுகைகள்

தற்போது ஆலயப் பணியாளர்களுக்கு 22 பணிநாட்களுக்கு 1 நாள் மட்டும் 'ஈட்டிய விடுப்பு' கொடுக்கப்பட்டு வருகிறது. இதனை மாற்றி அரசு ஊழியர்களுக்கு வழங்குவதைப் போல, நிரந்தர ஆலயப் பணியாளர்களுக்கு 11 பணிநாட்களுக்கு 1 நாள் ஈட்டிய விடுப்பும், அதிக அளவாக 180 நாட்கள் ஈட்டிய விடுப்பு சேமிக்கவும், அவ்வாறே தற்காலிகப் பணியாளர்களுக்கு 22 நாட்களுக்கு 1 நாள் ஈட்டிய விடுப்பும் அதிக அளவாக 30 நாட்கள் ஈட்டிய விடுப்பு சேமிக்கவும் அனுமதிக்கப்படும். மருத்துவச் சான்றிதழ் பேரில் 'ஈட்டாத விடுப்பு' அரசு ஊழியர்களுக்கு உள்ளதைப் போல் கொடுக்கப்படும். இத்தகவலைச் சட்டசபையில் மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் தெரிவித்தார்கள்.

**250** ரூபாயும் அதற்கு மேலும் ஊதியம் பெறும் ஆலயப் பணியாளர்களுக்குக் குறைந்த அளவு 10 வருடங்கள் பணிக்கால பூர்த்தியான பிறகு, பணிக்காலம் 15 ஆண்டுகளாவது எஞ்சியிருக்கும் நிலையில், வீடுகட்டுவதற்கு முன் பணம் 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். அதே போன்று 250 ரூபாய்க்குக் குறைவாக உள்ள குறைந்த அளவு ஊதியம் பெறுபவர்களுக்கு மேற்சொல்லப்பட்ட பணிக்கால நிபந்தனைக்கு உட்பட்டு 5 ஆயிரம் ரூபாயும் அவர்கள் பணி புரியும் ஆலயத்தின் நிதி நிலைமைகளை அனுசரித்து வழங்கப்படும்.

நிதி வசதி உள்ள ஆலயங்களில் 250 ரூபாயும் அதற்கு மேலும் ஊதியம் பெறும் நிரந்தரமான பணியாளர்களுக்குத் தனது திருமணத்திற்கோ. அல்லது மகன் அல்லது மகள் திருமணத்திற்கோ உதவி அளிக்கப்படும். திருமணம் செய்து கொள்பவர் பெண்ணாயிருந்தால் 1,500 ரூபாயும். ஆணாக இருந்தால் 1000 ரூபாயும் முன்பணமாகக் கொடுக்கப்படும். அதுபோல் 250 ரூபாய்க்குக் கீழ் ஊதியம் பெறும் நிரந்தரப் பணியாளர்களுக்குத் தனது திருமணத்திற்கோ அல்லது மகன் அல்லது மகள் திருமணத்திற்கோ 1000 ரூபாய் முன்பணமாகக் கொடுக்கப்படும்.





# தொழில்கள் வளர துணை புரிவோம்!

## மாண்புமிகு தொழிலமைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசு

படித்து முடித்து விட்டு வேலை வாய்ப்பின்றி வாடிடும் இளைஞர்கள், உடலில் வலுவும், உள்ளத்தில் தெம்பும், உழைக்க ஆர்வமும் கொண்டிருந்தும் பணிகள் கிட்டாமல் மனம் குமுறும் வாலிபர்கள் வேலையின்மை, வறுமை ஆகியனவற்றால் பொறுமை இழந்து, குமுறும் நெஞ்சங்களுக்குச் சொந்தக்காரர்களாய் மாறுவதால் எழும் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள், ஆகியனவற்றை 'வேகமான தொழிற்சாலைகளின் பெருக்கத்தால்மட்டுமே சமாளிக்க முடியும் என்பதைத் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவர் தலைமையில் அமைந்துள்ள இவ்வரசு உரிய முறையில் கவனத்தில் கொண்டுள்ளது.

1977-க்குப் பின்னால் தமிழகம் தொழில் துறையில் சீரான - விரைவான வளர்ச்சியைப் பெற்று வருகிறது என்பதைப் பல்வேறு சான்றுகளால் எடுத்துரைக்கலாம். 1977-ல் தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை சுமார் 8,000 ஆக இருந்தது; 1981ல் சுமார் 10,000 ஆக உயர்ந்துள்ளது. தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் மின் சக்தியின் அளவு 1977ல் சுமார் 3,000 மில்லியன் யூனிட்டுகளாக இருந்தது இப்போது 4,000 மில்லியன் யூனிட்டுகளாக அதிகரித்துள்ளது. பதிவு பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை 1980-81ல் சுமார் 5 இலட்சமாக இருந்தது தற்போது 5.5 இலட்சமாக உயர்ந்துள்ளது. நிரந்தரப்பதிவு பெற்ற சிறு தொழில்களின் எண்ணிக்கை கடந்த நான்கு ஆண்டுகளில் ஏறத்தாழ 100 சதவீதம் உயர்ந்துள்ளது. 1987-ம் ஆண்டு மார்ச் திங்கள் வரை 19 ஆயிரம் சிறுதொழில்களுக்கு நிரந்தரப் பதிவு கொடுக்கப்பட்டது. இது 1981-ஆம் ஆண்டு மே திங்கள் வரை 37 ஆயிரமாக உயர்ந்துள்ளது. 1977க்குப் பின் தொழில் உற்பத்தி வளர்ச்சி இந்தியா முழுவதும் 5.5 சதவீதமாக இருக்க, தமிழகத்தினுடைய உற்பத்தி 10. 5 சதவீதமாக உயர்ந்துள்ளது.

பின் தங்கிய பகுதிகளில் தொழில் துவங்க வழங்கப்படும் மைய அரசின் மூலதன மானியத்தைப் ( Capital-Investment Subsidy ) பெறுவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் கடந்த நான்கு ஆண்டுகளாகத் தொடர்ந்து முதலிடம் வகிக்கிறது. ஐ.டி.பி.ஐ. (Industrial Development Bank of India) என்னும் மைய அரசின் தொழில் வளர்ச்சி வங்கி வழங்கிய தொழில்களுக்கான மொத்தக் கடன் ஒதுக்கீட்டிலும் சுமார் 17 சதவீதம் பெற்று இந்தியாவிலேயே தமிழகம்தான் முதலிடம் வகிக்கிறது. தமிழகத்தில் வேகமான தொழில் வளர்ச்சிக்கு இவை அடையாளங்கள்.

தொழில்கள் வளர அடிப்படை வசதிகள் ஆதாரமானவை என்பதை அரசு உணர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (Tamil Nadu Industrial Investment Corporation) என்னும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தொழில்களுக்குக் கடன்கள் வழங்குவதில் வேகமும், விரைவும் காட்டி அதிக தொழில்களுக்குக் கடன் வழங்கி வருகிறது. கடன் வழங்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு மாவட்டக் கிளைகள் அளவிலேயே சுமார் ஒரு லட்சம் வரை கடன் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 'சிப்காட் (State Industries Promotion Corporation of Tamil Nadu ) என்னும் தமிழக தொழில் மேம்பாட்டுக் கழகம் சுமார் 8 மாவட்டங்களில் தொழில் இணையகங்களை சுமார் 1000 ஏக்கர் நிலப்பரப்புகளில் உண்டாக்கி நடவடிக்கை எடுத்து வருகிறது. வெளிநாடுகளில் வாழும் வசதிமிக்க இந்தியர்களின் மூலதனத்தைத் தமிழகத்தில் கொண்டு வந்து முதலீடு செய்ய, புதிய பிரிவு ஒன்று ( Sipcot )-ல் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

'டிட்கோ' எனும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ,பொதுத் துறையிலும், கூட்டுத்துறையிலும் பல தொழில்களை நிறுவி வருகிறது. சுமார் 18க்கும் மேற்பட்ட புதிய கூட்டுத் தொழில்கள் ரூபாய் 170 கோடி மதிப்பீட்டில் துவங்கப்பட இருக்கிறது. சுமார் ஒன்றரை ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்ட உளுந்தூர்பேட்டை கூட்டுறவுசர்க்கரை ஆலை, அரியலூர் சிமெண்ட் ஆலை, ஆலங்குளம் ஆஸ்பெஸ்டாஸ் ஆலை, தூத்துக்குடி ஆல்காலிக் கெமிக்கல்ஸ் தொழிற்சாலை - இவைகள் பொதுத்துறையின் தொழில் வேகத்திற்குச் சான்றுகள். பொதுத்துறை, கூட்டுத் துறை, கூட்டுறவுத்துறை நிறுவனங்கள் பல, நட்டம்



## இந்த இதழுடன் இலவச இணைப்பு

### முதல்வரின் உரைத் தொகுப்பு

(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலும், மேலவையிலும் ஆளுநர் உரைமீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளித்து ஆற்றிய உரைகளின் தொகுப்பு.)

---

நீங்கி இலாபத்தில் நடைபோடத் துவங்கி உள்ளன.

> ''வெட்டுக்கனிகள் செய்து தங்கம்முதலாம்,
> வேறுபல பொருளும் குடைந்தெடுப்போம்''

என்ற பாரதியின் கனவை நனவாக்கப் பூமித் தாயின் மடியில் புதைந்து கிடக்கும் தங்கம், ஆபரணக் கற்கள் போன்ற கணக்கற்ற கனிமச் செல்வங்களை ஆய்வு செய்து கண்டுபிடித்து வெட்டியெடுக்க உதவிட தனியான இயக்கு னரகம் ( Directorate of Geology ) ஏற்படுத் தப்பட்டுள்ளது. தனியார்கள், பெரும் லாபம் பெற உதவிய கருப்புக்கல் ( Black Granite ) போன்ற கனிமங்கள் 'டாமின்' ( Tamil Nadu Minerals Ltd. ) என்னும் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் மூலம் இவ்வரசு பொறுப் பேற்ற பின் ஏற்படுத்தப்பட்டு அந்நியச்செலா வணியை ஈட்டித் தருகிறது. அரசுக்கும் இலா பம் கிட்டுகிறது. அதேபோல், சேலம் மாவட் டப் பகுதியில் கிடைக்கும் மாக்னசைட் என் கிற கனிமத்தை வெட்டி யெடுத்து, புதியதாக ஏற்படுத்தப்பட்ட 'டான்மேக்' (Tamil Nadu Magnesite Limited) என்கிற தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனத்தின் மூலம், பெரும் லாபத்தை அரசு பெற்று வருகிறது. எலக்ட்ரா னிக் தொழில்களை ஊக்குவிக்க 'எல்காட்' (Tamil Nadu Electronics Corporation Ltd.) என்னும் தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனம் ஒன்று புதியதாக நிறுவப்பட்டுள் ளது. தோல் பொருட்கள் உற்பத்திக் கும் ஏற்றுமதிக்கும் தமிழ்நாடு தோல் நிறு வனம் (Tamil Nadu Leather Corporation) என்னும் நிறுவனம் இவ்வாண்டு தோற்றுவிக் கப்படுகிறது.

தொழில் வளம் பெருக்கிட மாநில அள வில் தொழில் அதிபர்கள், வல்லுநர்களைக் கொண்ட உயர்மட்ட ஆலோசனைக் குழு ஒன்றும் அமைத்திட உள்ளோம்.

அரசுத் துறைகளின் மூலமாக மட்டு மின்றி தனியார்களுக்கும் பல்வேறு விதமான அடிப்படை வாய்ப்பு உண்டாக்கித் தரப்படு கின்றன. பின் தங்கிய பகுதிகளில் தொடங் கப்படும் புதுத் தொழில்களுக்கு வட்டியில்லா விற்பனை வரிக்கடன் ரூபாய் 50 இலட்சத்தில் இருந்து ரூபாய் ஒரு கோடியாகவும், விரிவாக்கத் திற்கு ரூ. 15 இலட்சத்திலிருந்து 50 இலட்ச மாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. மின்னணு ( Electronics ), மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ( Drugs and Pharma-ceuticals ) மற்றும் மோட்டார் வாகன உபரித் தொழில்கள் ( Automobile ancillaries ) தமிழகத்தில் எந்தப் பகுதி யில் துவங்கினாலும் 10 சதவீத மூலதன மானியம் முதல் முறையாக, இந்திய நாட்டின் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் இச் சலுகை அளிக்கப்படுகிறது. தொழில் துறை யில் பின் தங்கிய பகுதிகளாக மாநில அரசே 24 தாலுக்காக்களை அறிவித்து இருக்கிறது. இன்னும் 6 தாலுக்காக்களையும் அறிவிக்க இருக்கிறது. இப்பகுதிகளில் சிறிய தொழில் களுக்காக வழங்கப்பட்ட வசதிகள், பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கும் சமீபத் தில் விரிவாக்கப்பட்டுள்ளன. புதுக்கோட்டை, மானாமதுரை, தூத்துக்குடி, கும்மிடிப்பூண்டி கடலூர் ஆகிய ஐந்து தொழில் இணையங் களில் தொடங்கப்படும் புதிய தொழில்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு மின்வெட்டு இல்லை யென்று இந்தியாவில் இவ்வசதியை அறிவித் துள்ள இரண்டாவது மாநிலம் தமிழ்நாடு தான். தொழில் வளர்ச்சிக்கு மின்சாரம் அடிப் படை என்பதை உணர்ந்த இந்த அரசு சுமார் 1200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனல், புனல் மின் உற்பத்தி நிலையங்களை விரிவாக்க -புதிதாக உண்டாக்க தீவிர முயற்சிகளை மேற் கொண்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலை வரின் ஆலோசனைப்படி வட மாநிலங்களில் தொழில் அதிபர்களைச் சந்தித்து-தரப் படும் வசதிகள் விளக்கப்பட்டபோது, பலர் தொழில் துவங்க முன்வந்த வண்ணம் உள்ள னர்.

> ''பட்டினில் ஆடையும்,
> பஞ்சில் உடையும் பண்ணி
> மலைகளென வீதி குவிப்போம்''

என்ற பாரதியின் எண்ணப்படி சுமார் 35 கோடி ரூபாய் அளவில் புதிய நூற்பாலைகள், நூற்பாலை விரிவாக்கங்கள் ஆரம்பிக்கப்பட வுள்ளன. ''ஆயுதம் செய்வோம், நல்ல காகி தம் செய்வோம்'' என்ற பாரதியின் எண்ணப் படி இந்தியாவிற்கே முன் மாதிரியாக சுமார் 190 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருச்சி மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் செய் தித்தாள் காகிதஆலை தமிழகத்திற்கு புகழும், வளமும் சேர்க்கும். 1977 முதல் கடந்த 4 ஆண்டுகளில் சுமார் 160 தொழில் உரிமங்கள் ( Industrial Licences ) பெறப்பட் டுள்ளன என்பது தமிழகத்திற்கு இனிக்கும் செய்தியாகும். சர்க்கரை ஆலைகள், சிமிண்ட் ஆலைகள், நூற்பாலைகள், மின்னணுத் தொழிற்சாலைகள், இரசாயன தொழிற் சாலைகள் ஆகியன வேகமாய் உருவாக்கப் பட நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன. சிட்கோ-நிறுவனம் சிறு தொழில் கள் பெருகிடப் பணிசெய்து வருகிறது.

தஞ்சைத் தரணியில் வேதாரண்யம் பகுதியில் இருக்கிற எண்ணெய்க் கிணறுகள் இந்தியா முழுமைக்கும் இனிக்கும் செய்தி யாகும். ஒரு மாநில அரசு எவ்வளவு பெரு முயற்சி எடுத்துக் கொண்டாலும், பொதுத்

துறை. கூட்டுத் துறை, கூட்டுறவுத் துறை, தனியார் துறை இப்படி பல்வேறு துறைகளில் ஊக்கம் காட்டி உற்சாகப்படுத்தினாலும்- மாநில வருவாயின் அளவுக் குறைவால்- மைய அரசின் தொழில் முதலீடும், மைய அரசின் பொதுத் துறை நிறுவனங்களும் அதிகம் கிடைக்கப் பெற்றால்தான் முழுமையான, அதிகமான பெருந் தொழில்கள் உருவாக முடியும். பெருந்தொழில்களின் பெருக்கமே சிறு தொழில்களை வளர்க்க முடியும். இந்த இரண்டும் இணைந்து வளர்ந்தாலே வேலையில்லாத் திண்டாட்டம் போக்கிடப்படும்; வறுமை நீக்கப்படும். மைய அரசின் தொழில் முதலீடும் மைய பொதுத் துறைத் தொழிற்சாலைகளும் குறைந்து வருகின்றன. தமிழகத்தில் தொழில் பெருக்கம் உண்டாக்க உதவிடும் மனோபாவம் கொண்டிருக்கிற மைய அரசுக்கு, நன்றிகூறும் அதே வேளையில் சேலத்தில் கிட்டும் கஞ்சமலை இரும்புத் தாதைப் பயன்படுத்தி முழுமையான இரும்பாலை ( Full fledged Steel Plant ) பெட்ரோ கெமிக்கல் காம்ப்ளக்ஸ் ( Petrochemical complex ) சுங்கத் தீர்வை விலக்களிக்கப்பட்ட தொழில் மையங்கள் ( Free Trade Zone) அதிகமான தொழில் முதலீடு, வேகமாக உரிமங்கள் வழங்குதல், தொழில் துவங்க அனுமதியளிக்கும் அதிகாரத்தைப் பகிர்ந்து பரவலாக்குதல் இப்படிப் பல்வேறு பணிகள் மூலம் தமிழகம் வளம் பெற மைய அரசு உதவும் என நம்புகிறேன்.

தமிழகப் பிரதிநிதிகளான எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களும், மைய அரசிடமும் தமிழகத் தொழில் வளர்ச்சிக்குக் கட்சி வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு உதவிட வாதிட வேண்டும் என வேண்டுகிறேன். தமிழக மக்களுக்கு உரிய பங்கை உரிமைகளைப் பெறுவதில் உறவு மனப்பான்மையோடு, மைய அரசிடம் இவ்வரசு தொடர்ந்து வலியுறுத்தும். தமிழகம் ஓர் அமைதிப் பூங்கா; ஆரவாரமற்ற, அற்புத ஆற்றல் மிக்க தொழிலாளர் நிறைந்த, தொழில் அமைதி மிக்க மாநிலம். தமிழக அரசால் வழங்கப்படும் கடன்கள், மானியங்கள், உதவிகள், உற்சாகங்கள், ஒத்துழைப்புகள் ஏராளம். வசதி படைத்தவர் தொழில் நுட்ப வல்லுநர்கள் ஆகியோர் தொழில்கள் துவங்க முன்வந்து வேலையில்லாத் திண்டாட்டம் போக்கி, உற்பத்தியை உயர்த்தி, ஏழை எளியவர்கள் நலன் பெற, பலன் பெற பாடுபடும் புரட்சித் தலைவரின் அரசுக்கு உதவிட வேண்டுகிறேன். தொழில்கள் துவங்கிட அனைத்து உதவிகளும் விரைவில், எளிதில் கிட்டிட அரசின் சார்பில் ஒத்துழைப்புத் தர உறுதி அளிக்கிறேன். ஒன்றுபட்டு உழைப்போம் - உற்பத்தியைப் பெருக்குவோம். ஏழ்மை எனும் கொடிய நோயை அகற்றுவோம் - வாரீர்! வாரீர் என வணங்கி வரவேற்கிறேன்.

[4.4.82 மாலை 6-15 மணிக்கு வானொலியில் ஆற்றிய உரை.]

---

வடஆர்க்காடு மாவட்டம் வில்வாரணி கிராமத்தில் ஆதிதிராவிட மக்களுக்கான வில்வாரணி கிராம ஆதிதிராவிட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு தொழிலியல் விற்பனைச் சங்கத்தை 31.3.82 அன்று கோ-ஆப்டெக்ஸ் ஆலோசனைக் குழுத்தலைவர் அனகாபுத்தூர் திரு சி. இராமலிங்கம் எம்.எல்.சி. தொடங்கி வைத்தார்.

''தமிழ்நாடு அரசின் வரவு செலவுத் திட்டத்தில் கைத்தறி மானியக் கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி தொடங்கப்பட்டுள்ள முதல் தொழிலியல் சங்கம் இது. இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் நெசவுத் தொழிலுக்கு பாதுகாப்புத் தரும் வகையில் நெசவாளர் பாதுகாப்புச் சட்டம், கொண்டுவராமல் இருக்கும்போது, தமிழக அரசு மட்டும் இதனை நிறைவேற்றி நெசவாளர்களைப் பாதுகாத்து உள்ளது என்றும் அனகாபுத்தூர் சி. இராமலிங்கம் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டிலேயே ஆதிதிராவிட மக்களுக்காக முழுத்தொகை மானியமாக அளிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட தொழிலியல் சங்கம் இது.




மாவட்ட ஆட்சித் தலைவர் திரு என். நாராயணன் ஐ.ஏ.எஸ் பாவு நூல் வழங்கினார்.



# கைத்தறிக்கு ஒரு கண்காட்சி

கைத்தறியாளரின் வாழ்வில் முன்னேற்றத்தைக் காண வேண்டும். அவர்களைக் கூட்டுறவின் கீழ் கொணர்ந்து, அவர்தம் உற்பத்திகளை வர்த்தக ரீதியில் விற்பனை செய்து, கைத்தறித் தொழிலைச் சீராக வளர்க்க நிறுவப்பட்ட அமைப்பே இன்று பாரெல்லாம் சுருக்கமாக 'கோ-ஆப்டெக்ஸ்' என்று அழைக்கப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

இச்சங்கத்தின் தலையாய பணி கூட்டுறவில் உற்பத்தி செய்யப்படும் கைத்தறியாடைகளைப் பிரதம சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்து, நாடெங்கிலும் பரந்து நிற்கும் கிளைகள் மூலம் விற்பனை செய்து, நெசவாளர்களுக்கு வாழ்வளிப்பதேயாகும்.

தமிழகத்தில் இன்று மொத்தம் 5.56 இலட்சம் கைத்தறிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் 2.55 இலட்சம் தறிகள் கூட்டுறவில் இயங்குகின்றன. ஏறக்குறைய 30 இலட்சம் நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பினை நல்கும் தமிழகத்தின் மிகப் பெரிய கைத்தொழில் கைத்தறியேயாகும். இன்று தமிழகத்தில் 1150-க்கும் மேற்பட்ட பிரதம கைத்தறி நெசவாளர் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்தச் சங்கங்களின் தாய்ச் சங்கமே கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமாகும்.

கோ-ஆப்டெக்ஸின் முக்கிய நோக்கம், இணைக்கப்பட்டுள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படுகின்ற கச்சாப் பொருள்களான நூல், சரிகை, சாயங்கள், செயற்கைப்பட்டு நூல் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து நியாய விலையில் வழங்குவதும், பிரதம சங்கங்கள் உற்பத்தி செய்கின்ற கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்து, தன் விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்வதும், கொள்முதல் செய்யப்பட்ட துணிகளுக்குப் பட்டியல் தொகை வழங்கி, உற்பத்திக்கு வழி வகுப்பதுமாகும்.

**மூலப்பொருள் வழங்குதல் :**

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் பல்வேறு எண் கொண்ட நூல்களைத் தமிழகத்தில் கூட்டுறவில் செயல்படும் 12 கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து பெற்று தன்னுடைய 22 நூல் வழங்கும் நிலையங்கள் மூலம் கோ-ஆப்டெக்ஸ் வழங்கி வருகிறது. மாதம் ஒன்றுக்கு இவ்வாறு வழங்கப்படும் நூல்களின் அளவு 4,000 முதல் 5,000 பேல்களாகும். நூல் வழங்குவதுடன் கைத்தறித் துணித் தயாரிப்புக்குத் தேவைப்படுகின்ற இதர கச்சாப் பொருள்களான பட்டு நூல், செயற்கைப் பட்டு நூல், சாயப்பொருள்கள் வழங்குவதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டுள்ளது. இப்படி வழங்கப்படும் கச்சாப் பொருள்களின் மதிப்பு ரூ. 40 கோடியாகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியாண்டில் வழங்கப்பட இருக்கும் கச்சாப் பொருட்களின் மதிப்பு ரூபாய் 60 கோடியாக உயரும்.

நாட்டு மக்கள் அளிக்கும் நம்பிக்கையின் அடிப்படையில் 1980-81-ஆம் ஆண்டில் ரூபாய் 42 கோடி அளவிற்கு கைத்தறித் துணி விற்பனையில் சாதனை அடைந்துள்ளோம் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டு 1981-82-க்கு ரூ. 75 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை ரூ. 54.74 கோடி விற்பனை ஆகியுள்ளது.

அந்தக் குறியளவினை எட்டுவதற்கு இக் கைத்தறி விழா பெரிதும் துணை புரியும் என்றும் நம்புகிறோம்.

கூட்டுறவில் கைத்தறிகளின் எண்ணிக்கைகளை 67 சதவிகிதமாக உயர்த்த மேற்கொண்டுள்ள திட்டத்தின் விளைவாய், ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட கால இறுதியாண்டில் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தி அளவு ரூபாய் 90 கோடியிலிருந்து ரூபாய் 100 கோடி அளவிற்கு உயரும். இந்த உற்பத்தியில்

பெரும்பகுதியைக் கொள்முதல் செய்து, விற்பனைக்கு வழிகாணும் தலையாய கடமை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு உரித்தாகும்.

அதாவது ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூபாய் 300 இலட்சம் செலவில் 250 புதிய விற்பனை நிலையங்களைத் துவக்குவதற்கும், தற்போதுள்ள நிலையங்களில் 200-க்கும் மேற்பட்ட விற்பனை நிலையங்களை நவீனப்படுத்துவதற்கும் கோ-ஆப்டெக்ஸ் திட்டமிட்டுள்ளது.

*1981-82* கூட்டுறவு ஆண்டில் இதுவரை 90 புதிய விற்பனை நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன. மேலும் கர்நாடக மாநிலத்திலும், கேரள மாநிலத்திலும் புதிய வட்டார அலுவலகங்கள் அமைக்கப்பட்டு, மேலும் புதிய புதிய விற்பனை நிலையங்கள் துவங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**வடிவமைப்பு நிலையங்கள்:**

நாளும் மாறும் மக்களின் ரசனைகளைக் கருத்தில் கொண்டு, புதிய புதிய வடிவமைப்புகளில், கைத்தறியாடைகளை உருவாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் கூட்டுறவு நெசவாளர்களுக்கு உண்டு. அந்த வகையில் புதிய வடிவமைப்புக்களை உருவாக்க மதுரை, திருச்சி, சேலம், கோவை மற்றும் கடையநல்லூர் ஆகிய இடங்களில் ஐந்து வடிவமைப்பு மற்றும் சேவா நிலையங்கள் பணி



**அனகாபுத்தூர் சி. இராமலிங்கம்,**
**எம். எல். சி.**
**ஆலோசனைக்குழுத் தலைவர்,**
**கோ-ஆப்டெக்ஸ்.**

புரிந்து வருகின்றன. இந்நிலையங்கள் மூலம் ஆண்டொன்றுக்கு 500 முதல் 600 வரை வடிவமைப்புக்கள் உருவாக்கப்பட்டு நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**பாலியஸ்டர் இரக உற்பத்தி:**

இது பாலியஸ்டர் யுகம் என்று சொல்லும் அளவிற்குப் பாலியஸ்டர் ஆடைகள் குவிந்துள்ளன. அந்த வகையில் மில்களுக்கு இணையாக நாமும் முன்னேற வேண்டுமென்ற முனைப்புடன் தமிழகக் கூட்டுறவு நெசவாளர்கள் செயல்பட்டதன் விளைவே இன்று கைத்தறியில் வண்ண வண்ண மாதிரிகளில் பாலியஸ்டர் இரகத் துணிகள் உருவாகி, தமிழகக் கைத்தறி பாலியஸ்டர் துணிகள் மக்களின் உள்ளங்களைக் கொள்ளைகொண்டு அவர் தம் மேனியை அழகுபடுத்திவருகின்றன.

இந்தியாவில் முதல் முதலாக பாலியஸ்டர் துணி உற்பத்தியைக் கைத்தறியில் மேற்கொண்டு உருவாக்கிய பெருமை தமிழகத்தின் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கே உரித்தாகும். பாலியஸ்டர் சட்டைத் துணிகள் நெய்வதில் இன்று 2,300 தறிகள் முனைப்புடன் செயல்பட்டு வருகின்றன. மற்றும் பாலியஸ்டர் வேஷ்டி நெய்வதில் 1200 தறிகளும், பாலியஸ்டர் சேலை நெய்வதில் 2300 தறிகளும் பாலியஸ்டர் சூட்டிங் நெய்வதில் 230 தறிகளும் செயல்பட்டு வருகின்றன. 1981-ஆம் ஆண்டு 21 இலட்சம் மீட்டர் பாலியஸ்டர் துணிகளை உற்பத்தி செய்து, அச்சிட்டு சென்ற தீபாவளி விற்பனையில் மக்களுக்கு வழங்கியது கோ-ஆப்டெக்ஸ்.

மேலும் கீழ்க்கண்ட புதிய இரகங்களை கோ-ஆப்டெக்ஸ் பெருமிதத்துடன் அறிமுகம் செய்தது. அச்சிட்ட சில்டன், அச்சிட்ட சில்க்கோன்சா புடவைகள், பருத்தியில் அச்சிட்ட துணிகள் புதிய அச்சிட்ட அலங்கார வகைத் துணிகள் இவற்றில் அச்சிட்ட சில்டன், அச்சிட்ட சில்க்கோன்சா சேலைகள் மகளிரின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு, பெரும் புகழ் பெற்றுள்ளன. கைத்தறியில் புதியவை காணும் இம்முயற்சி, அயர்வின்றித்தொடரும்.

ஏழை எளிய மக்களின் அன்றாடத் தேவைகளைக் கருத்தில் கொண்டு ஜனதா இரகங்களான சேலைகள், வேட்டிகள், லுங்கிகள், காடா, கலர்த் துணி ஆகியவற்றை உருவாக்குவதில் 20,000 தறிகள் ஈடுபட்டுள்ளன. 1982 மார்ச் வரை 25 மில்லியன் மீட்டர் ஜனதா துணிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

*1981-82*-ஆம் ஆண்டிற்கு 37 மில்லியன் மீட்டர் ஜனதா துணி உற்பத்தி செய்வதற்காகக் குறியீட்டை மத்திய அரசு கொடுத்துள்ளது.

**ஏற்றுமதி:**

கோ-ஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல் என்ற தனி அமைப்பு கைத்தறித் துணிகளின் ஏற்றுமதிக்கென அமைக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, ஜெர்மனி அமெரிக்கா போன்ற நாடுகளுக்குக் கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

சிங்கப்பூரில் ஒரு கிளை விற்பனை நிலையம் துவங்க அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு துவங்கப்பட்டுவிட்டது என்பதையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அந்த முயற்சியில் ஈடுபட்டு, வெற்றியுடன் திரும்பியுள்ளார் கைத்தறித்துறை அமைச்சர் அவர்கள்.

**கைத்தறிக் கண்காட்சி - சென்னை.**

கடந்த பல ஆண்டுகளைவிட இந்த ஆண்டில் மிகச் சிறப்பாகக் கைத்தறிக் கண்காட்சி விழாவைக் கொண்டாட திட்டமிட்டுள்ளோம். கடந்த ஆண்டைப் போன்று இவ்வாண்டிலும்

300 ஸ்டால்கள் இடம் பெறுகின்றன. இவை களில் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங் கள் பங்கு பெறும் ஸ்டால்கள் எண்ணிக்கை 270 ஆகும். கோ-ஆப்டெக்ஸ் ஸ்டால்கள் எண் ணிக்கை 30 ஆகும்.

ஆந்திரப்பிரதேசம், பாண்டிச்சேரி, கரு நாடகம் ஆகிய மாநிலங்களும் அரியானா கைத் தறிக் கழகமும் கைத்தறி மாளிகையும் பங் கேற்றுள்ளன.

பொதுமக்களுடைய விருப்பத்திற்கேற்ப தேர்ந்தெடுத்துக் கொள்ள உதவும்பொருட்டு பட்டு நூல் வகைகள் மற்றும் அச்சிட்ட பட்டு வகைகள், பாலியெஸ்டர் வகைகள், துண்டுகள், படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணிகள், லுங்கிகள், கைத்துண்டுகள், உடைகள் ஆகிய அச்சிடப்பட்ட வகைகள் விற்பனை செய்வ தற்குக் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தனிப்பிரிவு களை ஏற்பாடு செய்திருக்கிறது.

தமிழ்நாட்டில் கைத்தறிக் கண்காட்சி காஞ்சிபுரம், திருச்சி, கும்பகோணம், மதுரை திண்டுக்கல், திருநெல்வேலி, நாகர்கோவில், சேலம், கோயம்புத்தூர், ஈரோடு ஆகிய இடங்களிலும் நடைபெறுகிறது.

கடந்த ஆண்டு சென்னை கைத்தறிக் கண்காட்சியில் விற்பனையளவு ரூ. 236.32 இலட்சமாகும். 1982ஆம் ஆண்டு எதிர் பார்க்கப்படும் விற்பனை அளவு ரூ. 300 இலட்சமாகும். கண்காட்சியின் போது அனைத்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலை யங்களிலும் கடந்த ஆண்டு விற்பனை யாகிய தொகை ரூ. 827 இலட்சம் ஆகும். 1982-ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்படும் விற்பனை அளவு ரூ. 12 கோடியாகும்.



## உலகம் முழுதும்

## கைத்தறி ஆடை

## பவனி வர...

காலகாலமாகப் பலர் ஈடுபட்ட தொழில்-ஒரு காலத்தில் ரோமானிய நாடு பாராட்டிய கைத்தறித் தொழில்-பஞ்சத் தொழிலாக மாறி விட்டது. பத்து பைசா தரலாமா? தோளில் சுமந்து விற்கலாமா? கண்காட்சி ஏற்படுத்தி விற்கலாமா என்று சந்தை தேட வேண்டி யிருக்கிறது. இதற்குக் காரணம் யார்?

வெளி நாடுகளில் நமது தூதுவர்கள் இருக்கிறார்கள். வியாபாரத்தைப் பெருக்கு வதற்கென்றே சில அதிகாரிகள் வெளிநாட்டில் இருக்கிறார்கள். அதற்காக கோடிக் கணக்கான ரூபாய் செலவாகிறது. அவர்கள் வெளி நாட்டில் கைத்தறியாடைகள் வாங்க வேண்டிய ஆர்வத்தைப் பிறருக்கு ஊட்டியிருந்தால் நல்ல சந்தை கிடைத்திருக்கும். அவர்களும் கைத் தறி ஆடைகளை அணிந்து கொண்டு உலகச் சந்தைகளில் மட்டுமல்ல-ஒவ்வொரு இடத் திலும் கைத்தறிக்குச் சந்தை ஏற்படுத்த வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா

## முன்பக்க அட்டையில்

**வண்ணக் கைத்தறிப் பட்டாடையின்**

**வனப்புக் காட்டும் முகப்பு**

**வண்ணப்படம் உதவி: கோ-ஆப்டெக்ஸ்.**

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் பல புதிய ரகங்களில் நூல் துணி மற்றும் பாலியெஸ்டர் லுங்கிகளிலும், சேலைகளிலும் மற்றும் ஜாகார்டு பர்னிசிங்குகளிலும் ஏற்பாடு செய்து வருகிறது.

ப்ராப்ளோன் சால்வை மற்றும் கார் பெட்டுகள் கோப்டெக்ஸால் உற்பத்தி செய் யப்பட்டு அவை கம்பளி போர்வை தேவைப் படுகிற இடங்களில் விற்பனைக்கு அனுப்பப் படுகின்றன.

அச்சிடப்பட்ட சட்டைத் துணி வகைகள் அல்லது, மேலும் சுயவண்ணம் வடிவமைப்பு பாலியெஸ்டர் ஜாகார்டு சட்டைத் துணிகளை உற்பத்தி செய்யுமளவிற்கு கோ-ஆப்டெக்ஸ் தற்போது முன்னேற்றம் அடைந்துள்ளது.

சேலைகளிலும் பிளாங்கட் மற்றும் தலையணையுறைகளிலும் மற்றமாநிலங்களின் துணி வகைகளைப் போன்று கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும் அத்தகைய துணிகளின் அபி விருத்திக்கு ஏற்பாடு செய்துள்ளது. மற்ற மாநிலங்களிலிருந்து அந்த வகை மாதிரி வடி வமைப்புகள் பெறப்பட்டு, அதனை நம் மாநிலத்தில் உற்பத்தி செய்து வருகிறது. அத் தகைய துணி வகைகள் வெளிமாநிலங்களி லுள்ள விற்பனை நிலையங்களுக்கும் அனுப்பப் படுகின்றன.

தேசிய வடிவமைப்புச் சேலைகளில் தொடர்ந்து இரண்டாவதாகப் பருத்தியில் அச் சிடப்பட்ட 'மொகல்' வடிவமைப்புச் சேலை கள் தமிழ்ப் புத்தாண்டு நாளான 14.4.82 அன்று வெளியிடப்பட்டது. விலை ரூ. 65 ஆகும். இந்தவகைச் சேலைகளுக்குச் சிறப்புத் தள்ளுபடி இல்லை.

நெசவாளர்களுக்குப் பட்டுநூல் கிடைக் காத பொழுது அப்பொழுது மத்திய நிதி அமைச்சராக இருந்தவரும் இன்றைய பாது காப்பு அமைச்சராக உள்ளவருமான திரு ஆர். வெங்கட்ராமன் அவர்களையும் தலைமை யமைச்சர் அவர்களையும் சந்தித்து இங்குள்ள நிலை எடுத்துரைத்தோம். அதனால் சீனா விலிருந்து பட்டுநூல் இறக்குமதி செய்து கொடுத்தார்கள்.

கடந்த சில ஆண்டுகளில் கைத்தறித் தொழில் வளர்ச்சிக்காகப் பல்வேறு அரும்பணி களைத் தமிழ்நாடு அரசு ஆற்றியுள்ளது.

# தமிழகத்தில் கைத்தறித் தொழில்

**ஆர். வரதராஜுலு, இ.ஆ.ப.,**
**கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர்**

இந்தியப் பிரதமரால் அறிவிக்கப்பட்ட புதிய 20 அம்சப் பொருளாதாரத் திட்டம் கைத்தறித் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா வசதிகளையும் கொடுப்பதுடன் தொழில் நுட்ப முறையில் நவீன முறைக்கும் வழிவகை செய்கிறது. மத்திய அரசின் கொள்கைக்கேற்ப மாநில அரசும் கைத்தறித் தொழிலுக்கு முன்னுரிமை கொடுத்து திட்டங்களைச் செயல்படுத்தி, வருவது 5வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கைத்தறித் தொழிலுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபாய் 27.82 கோடியை ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்கு ரூ. 84.58 கோடியாக உயர்த்தியிருப்பதிலிருந்து புலனாகும். தறி முதலாளிகளின் பிடியில் சிக்குண்டு வாடும் நெசவாளர்களை விடுவித்து, அவர்களை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர்களாக்கி, அரசினால்செயல்படுத்தப்படும் கைத்தறி வளர்ச்சித் திட்டங்களின் பயனை அவர்களும் பெற, அரசு கொள்கையளவில் ஒரு முடிவெடுத்துள்ளது. அரசினால் செயல்படுத்தப்படும் எல்லா கைத்தறி வளர்ச்சித் திட்டங்களும் கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பையும் நிரந்தரமான நல்ல ஊதியத்தையும் பெற்றுத் தர வேண்டும் என்ற இரட்டை நோக்கிலேயே செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### கைத்தறிகளைக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரல்:

தமிழ் நாட்டிலுள்ள 5.56 இலட்சம் கைத்தறிகளில் 2.93 இலட்சம் கைத்தறிகள் இதுவரை கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டு அவை 1,263 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் இயங்கி வருகின்றன. தற்போதைய கூட்டுறவு அமைப்பில் இயங்கி வரும் தறிகளின் அளவு சுமார் 52.7% ஆகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட கால இறுதிக்குள் கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள தறிகளின் அளவு 67% ஆக இருக்க வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்து அரசு செயல்பட்டு வருகிறது. கூட்டுறவு அமைப்பில் தறிகளைக் கொண்டு வரும் திட்டங்களில், சொந்தத்தில் தறியில்லாத நெசவாளர்களுக்கு, பொதுப் பணியிடம் அமைத்து, தொழில் செய்ய வசதி செய்து கொடுத்தல் மிக முக்கியமான ஒன்றாகும். இத்திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் பிரிவைச் சேர்ந்த 700 நெசவாளர்களுக்கெனத் தனியே புதிய 7 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 1982-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த நெசவாளர்களின் நலனுக்காகப் பொதுத் தொழிற்கூடம் கட்டுவதற்கென அரசு ரூ.44.59 இலட்சம் மொத்த நிதியுதவி 100% மானியம் என்ற அடிப்படையில் வழங்கியுள்ளது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்தும் கடன் வசதி பெற்று, அதன் மூலம் தறி முதலாளிகளின் பிடியிலுள்ள நெசவாளர்களை விடுவித்து அவர்களை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினர்களாக்கத் திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது.

### மூலப் பொருட்கள் விநியோகம்:

தமிழகத்திலுள்ள 12 கூட்டுறவு நூற்பாலைகளும் கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான நூலை உற்பத்தி செய்து வருகின்றன. கூட்டுறவு அமைப்பின் கீழ் செயல்பட்டு வரும் கைத்தறிகளின் அதிகரித்துவரும் எதிர்கால நூல் தேவையைக் கருத்தில் கொண்டு ரூ. 21கோடி மொத்த மூலதனச் செலவில் ஒவ்வொன்றும் 25,000 கதிர்கள் திறன் கொண்ட மூன்று கூட்டுறவு நூற்பாலைகள், ஒவ்வொன்றும் புதுக்கோட்டை, தருமபுரி, தேனி (மதுரை மாவட்டம்) ஆகிய இடங்களில் ஆரம்பிக்கும் விதத்தில் சமீபத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிலுள்ள நெசவாளர்களுக்குத் தேவையான செயற்கை நூலிழையை உற்பத்தி செய்யவென, 12,000 கதிர்கள் திறன்கொண்ட ஒரு கூட்டுறவு நூற்பாலை மகாகவி பாரதியாரின் நினைவாகத் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள எட்டையபுரத்தில் ''பாரதி கூட்டுறவு நூற்பாலை'' என்ற பெயரில் அமைக்கப்பட உள்ளது. சமீபத்தில் நடந்த பாரதி நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, அந்த நூற்பாலைக்கு 13.12.81 அன்று எட்டையபுரத்தில் அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றது. சேலம் மற்றும் வேலூரில் தற்பொழுது செயல்பட்டு வரும் நூற்பாலைகள் அவற்றின் தற்போதைய கதிர்த் திறனுடன் மேலும் 12,000 கதிர்கள் திறனைச் சேர்க்கும் விரிவாக்கத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன. முகவை மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிடர்களின் நலனுக்கென அவர்களுக்காக பிரத்தியேகமாகப்புதிய நூற்பாலை ஒன்று அமைக்க தனித் திட்டத்தில் அரசு ரூ. 2 கோடிக்கு மான்யம் அளித்துள்ளது. மேற்கூறிய புதிய கூட்டுறவு நூற்பாலைகள் அமைப்பதாலும், ஏற்கெனவே செயல்பட்டு வரும் நூற்பாலைகளில் விரிவாக்கத் திட்டத்தைச் செயல்படுத்துவதாலும் 3,500 பேருக்கு கூடுதல் வேலை வாய்ப்பு கிடைக்கும்.

சமீபத்தில் தனியார் துறையில் உள்ள நெசவாளர்கள், மோட்டா ரக நூல்கள், குறிப்பாக 20 நெ. மற்றும் 2-17 நெ. ரக நூல்கள் கிடைக்காமல் பிரச்சினைகள் ஏற்பட்டு சிரமப்பட்ட பொழுது அரசு, உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு தேசிய துணி நூல் கழக ஆலைகளினின்று நூல் பெற்று பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தது. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நூல் தட்டுப்பாட்டினைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு, 'ஒரு மூலப்பொருள் வங்கி' ஒன்றினை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. தற்பொழுது மாநிலத்திலுள்ள பட்டு நெசவாளர்கள் நியாயமான விலையில் அவர்களுக்குத் தேவையான 'கோரா' பட்டு கிடைக்காமல் சிரமப்பட்டு வருகிறார்கள். மாநில அரசு மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக, மத்திய அரசு சீனாவிலிருந்து பட்டு நூல் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. அவ்வாறு இறக்குமதி செய்யப்படும் பட்டு நூலில் தமிழ்நாட்டுக்கு 89 டன் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 32.50 டன் ஏற்கெனவே பெறப்பட்டு மாநிலத்திலுள்ள கூட்டுறவு அமைப்பிலுள்ள மற்றும் தனியார்த் துறை பட்டு நெசவாளர்கட்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

ரிசர்வ் வங்கி 1981-82ம் ஆண்டிற்கு நமது மாநிலத்திலுள்ள

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூல தனம் அளிக்கும் விதத்தில் சலுகை வட்டி விகிதத்தில் மொத்தம் ரூ. 46.31 கோடி காசுக் கடனாக அளித்துள்ளது. இது இந்தியாவில் கூட்டுறவு கைத்தறித் தொழிலுக்கு ரிசர்வ் வங்கி அளிக்கும் நிதியுதவியில் 50 சதவீதம் ஆகும். 1982-83-ம் ஆண்டிற்கு பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கும், தலைமைச் சங்கத்திற்கும் சேர்த்து மொத்தம் ரூ. 85 கோடி காசுக் கடன் கேட்டு ரிசர்வ் வங்கிக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

### வடிவமைப்பு மற்றும் சேவா நிலையங்கள்:

கைத்தறிகளில் புதிய ரகங்களையும், வடிவமைப்புகளையும் அறிமுகப்படுத்த 'கோ-ஆப்டெக்ஸ்' அரசிடமிருந்து ரூபாய் 17.50 இலட்சம் நிதியுதவிபெற்று 5 வடிவமைப்பு மற்றும் சேவா நிலையங்களை மதுரை, திருச்சி, கோவை, சேலம் மற்றும் கடையநல்லூர் ஆகிய இடங்களில் திறந்துள்ளது. சமீபத்தில் சேலத்திலுள்ள வடிவமைப்பு மற்றும் சேவா நிலையம், நுகர்வோர் கவுன்சிலால் தேர்ந்தெடுக்கப்பட்ட வடிவமைப்புகளைக் கொண்ட 'அயோத்தியா சேலைகள்' என்ற புதிய வகை சேலையை உற்பத்தி செய்துள்ளது. இவ்வகை சேலைகள் 5-3-82 அன்று மாண்புமிகு கல்வி மற்றும் கைத்தறி அமைச்சரால் வெளியிடப்பட்டது. அது வாங்குவோரிடையே புகழ் பெறத் தொடங்கியுள்ளது.

### கைத்தறித் துணிகளுக்கு விற்பனை வசதி செய்தல்


கோ-ஆப்டெக்ஸ் மூலமாகப் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குத் தேவையான விற்பனை வசதிகளை அரசு பெரும் அளவில் செய்து கொடுக்கிறது. 1980-81-ம் ஆண்டு கோ-ஆப்டெக்சின் விற்பனை ரூ. 45 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ரூ.48 கோடி அளவுக்கு கோ-ஆப்டெக்சின் விற்பனை இருந்தது. 1981-82ம் ஆண்டில் கோ-ஆப்டெக்சின் விற்பனையளவு ரூ. 65 கோடியைத் தாண்டியுள்ளது. இதைவிட அதிகமான விற்பனையை கோ-ஆப்டெக்ஸ் மேற்கொள்ள வசதியாக அரசு ரூ. 1கோடியை அதிகப்படி பங்கு மூலதனமாக இந்த நிறுவனத்தில் 1981-82-ம் ஆண்டில் முதலீடு செய்துள்ளது. கடந்த தீபாவளி காலத்தில் (அக்டோபர் 1981) கோ-ஆப்டெக்ஸ் ரூ.. 32 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளை விற்பனை செய்தது. இது 1980 தீபாவளியின் பொழுது கோ-ஆப்டெக்ஸ்செய்த விற்பனையைவிட 1½ மடங்கு அதிகமாகும். இவ்வாண்டில் கோ-ஆப்டெக்சின் பொங்கல் விற்பனை ரூ. 15.33 இலட்சம் ஆகும். இது கடந்த பொங்கல் விற்பனையை விட 1-3/4 அளவு அதிகமாகும். கோ-ஆப்டெக்சின் 1982-83-ம் ஆண்டு திட்டத்தின்படி அதன் விற்பனை அடுத்த ஆண்டு ரூ. 100 கோடியாக இருக்க வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கினை எட்டும் வகையில் கோ-ஆப்டெக்ஸ் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியில் நூதன ரகங்களுக்கும் மக்கள் விரும்பி வாங்கும் துணிவகைகளுக்கும் முதலிடம் கொடுத்து உற்பத்தித் திட்டத்தில் ஒரு மாற்றத்தை உருவாக்கியுள்ளது.

கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள நெசவாளர்களின் நலனுக்கென 'கூட்டுறவு நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்' என்ற நல்வாழ்வுத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. 67,000 நெசவாளர்கள் இத்திட்டத்தின் கீழ் இதுவரை கொண்டு வரப்பட்டுள்ளனர். 1980 மார்ச் 1 முதல் இத்திட்டத்தின் கீழ் எந்த ஒரு நெசவாளியாவது இறக்க நேரிட்டால் அவரது வாரிசுதாரருக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து காப்புத் தொகையாக ரூ. 3,000 பெற்றுத் தரப்படுகிறது. இத்தொகையினை அதிகப்படுத்துவது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

கூட்டுறவு இயக்கத்தைச்சார்ந்த நெசவாளர்களின் நலனுக்காக, நெசவாளர் வீட்டுவசதித்திட்டம் ஒன்று 1979-80ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு வீட்டுக்கு ஆகும் மொத்தச் செலவு அதிக பட்சம் ரூ. 8,000. இதில் ரூ.1000 மாநில அரசால் மானியமாகத் தரப்படுகிறது. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் ஒரு வீட்டுக்கு ஆகும் மொத்தச் செலவில் 70 சதவீதத்திற்கு மேற்படாமல் ரு. 5,600 வரை கடனாக வழங்குகிறது. ஆறாவது திட்டக் காலத்தில் 5,000 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 2,073 வீடுகளின் கட்டுமானப்பணி ஆரம்பிக்கப்பட்டு அதில் இதுவரை 1,054 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு மிகுதி பலவித கட்டுமான நிலையிலுள்ளன. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் இதுவரை ரு.59.79 இலட்சம் கடனாக அளித்துள்ளது. மேலும் ரூ. 53.23 இலட்சத்திற்கான கடன் விண்ணப்பம் ஒன்றும் ஹட்கோவின் பரிசீலனையில் உள்ளது. 1982-83-ம் ஆண்டில் அரசு அளிக்கும் ரூ. 1,000 மானியத்தையும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழக நிதியுதவியையும் கொண்டு 1,000 வீடுகள் கட்டப்படும்.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் (வேலை வாய்ப்புப் பற்றிய விதிகள் மற்றும் பலவகைப் பிரிவுகள்) மசோதா 1981, தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலையும்பெற்று சட்டமாகி உள்ளது. இப்புதிய சட்டத்தினைச் செயல்படுத்த அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இச்சட்டம் மாநிலத்திலுள்ள நெசவாளர்களின் வேலை முறைகளை ஒழுங்குபடுத்துகிறது. இச்சட்டம் 12-3-82முதல் அமுலுக்கு வந்துள்ளது. இச்சட்டத்தில் கூறியவற்றைச் செயல்படுத்தும் நோக்கிலும், தனியார் துறையிலுள்ள நெசவாளர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்யவும் உரிய அதிகாரங்களுடன் 'மாநிலக் கைத்தறி வாரியம்'' அமைப்பது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

கைத்தறித் துணிகளை விற்கவும் மக்களுக்குக் கைத்தறியை நினைவூட்டும் வகையிலும், அகில இந்தியக் கைத்தறி இருவார விழாக்கள்' கைத்தறிக் கண்காட்சியுடன் சென்னையிலும் மற்றைய மாவட்ட முக்கிய நகரங்களிலும் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதத்தில்நடத்தப் பெறுகின்றன. இவ்வாண்டு 28 வது அகில இந்திய கைத்தறி இருவரை விழா 9-4-82 முதல் 23-4-82 முடிய 15 நாட்களுக்குச் சென்னையிலும் மற்றும் 11 முக்கிய நகரங்களான காஞ்சிபுரம், திருச்சி, விருதுநகர், மதுரை, திண்டுக்கல், திருநெல்வேலி, தூத்துக்குடி, நாகர்கோவில், சேலம், கோவை மற்றும் ஈரோடு ஆகிய இடங்களிலும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த விழாக்களின் ஒரு பகுதியாகக் கைத்தறிக் கண்காட்சிகளும் இந்த நகரங்களில் நடத்தப்படுகின்றன. இந்தக் கண்காட்சிகளுக்குச் சென்னையிலும் இதர நகரங்களிலும் அதிக அளவில் பொதுமக்கள் வந்து அவர்களுக்குத் தேவையான துணி முழுமையையும் அரசு அளிக்கும் 10 சதவிகிதம் தள்ளுபடி சலுகையைப் பயன்படுத்திக் கைத்தறி, துணிகளை வாங்கி ஏழை கைத்தறி நெசவாளர்களின் வாழ்வுயரக் கை கொடுப்பார்களென நம்புகிறோம்.



# பனைப் பொருள் பெரு வளத் திட்டம்

**இரா. பூர்ணலிங்கம்,**
**ஐ.ஏ.எஸ்.,**
**தலைமைச் செயல் அலுவலர்,**
**தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம்.**

புதுக்கோட்டையில் திருக்கோகர்ணம் அருகில் உள்ள கோவில்பட்டியில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையத்துக்கு வழங்கியுள்ள 10 ஏக்கர் நிலத்தில் பனைத் தொழில் பேட்டை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத் தொழிற்பேட்டையைப் புதுக்கோட்டை மாவ்ட்ட ஆட்சித் தலைவர் திரு எஸ்.டி. காசிராஜன் ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையில் செய்தி அற நிலையத்துறை அமைச்சர் மாண்புமிகுதிரு ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் 20.12.81 அன்று குத்து விளக்கேற்றித் துவக்கி வைத்தார்கள்.

இப்பனைத்தொழில் பேட்டையில் முதல் கட்டமாகச் சில பிரிவுகள் துவக்கப்பட்டுள்ளன. பனை மரத்தின் ஒவ்வொரு உறுப்பையும் மூலப் பொருளாக வைத்துச் செய்யப்படும் கிராமத் தொழில் பிரிவுகளில்பனந்தும்பு ஏற்றுமதி பிரிவும் ஒன்று. இதுவரை தமிழகத்தின் வட மா.வட்டங்களில் உற்பத்தியாகும் கோராத்தும்பை ( Korafibre ) மாநில இணையத்தின் கடப்பாக்கம் துமபுக் கொள்முதல் நிலையத்தின் மூலம் வாங்கி கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குளச்சலுக்கு அனுப்பப்பட்டு வந்தது. குளச்சலில் உள்ள மாநில இணையத்தின் பனந்தும்புத் தொழில் கூடத்தில் இத் தும்பு சுத்திகரிக்கப்பட்டு (processed) ஏற்றுமதிக்கு ஏற்றவாறு பேல்களாக்கித் ( Ballots ) தூத்துக்குடி துறைமுகத்தின் வழியாக சுமார் 35 வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. போக்குவரத்துச் செலவு அதிகமாவதாலும், தென் மாவட்டங்களில் தும்புஉற்பத்திகுறைந்து வருவதாலும் தமிழகத்தின் மையப் பகுதியில் இறுதிச் சுத்திகரிப்பு நிலையத்தை ( Final processing centre ) நிறுவவேண்டும் என மாநில பனைவெல்லக் கூட்டுறவு இணையம் கடந்த சில ஆண்டுகளாகக் கருதியது. இத் தருணத்தில் 1977-ல் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 10 ஏக்கர் நிலத்தையும், கோரையாற்றுப் படுக்கையில் உள்ள பனை மரங்களையும் மாநில இணையத்திற்கு வழங்கி பனைப் பொருள் பெருவளத் திட்டம் ( palmyrah products complex ) ஒன்றை நிறுவ உதவினார்கள். தஞ்சைச் சத்திரம் நிர்வாகத்துக்குச் சொந்தமான பலதோப்புகள் இம்மாவட்டத்தில் இருப்பதை மாநில இணையம் அறிந்து அத் தோப்புகளில் உள்ள சுமார் 50,000 பனைகளை ஒட்டுமொத்தமாகக் குத்தகைக்கு எடுத்துள்ளது.

தருமபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களில்வறட்சிக்கு இலக்காகும் பகுதிக்கான பயிற்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் சாரோலை குருத்தோலை, அகணி நார், புணிநார் முதலியவற்றை இத்

தோப்புகளில் சேகரித்துப் பதப்படுத்தி விநியோகிக்கப்படுகிறது. இராமநாதபுரம் தருமபுரி மாவட்டங்களில் நூற்றுக்கும் அதிகமான பயிற்சி நிலையங்களை நடத்துவதற்குப் புதுக்கோட்டை மாவட்டத்தில் சேகரிக்கப்பட்ட மூலப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. இம் மாவட்டத்தில் ஏற்றுமதிக்குரிய நல்ல ரகத் தும்பும் சேகரிக்கப்படுகிறது. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள மிரட்டு நிலையில் நார்ப் பயிற்சி நிலையத்தையும், கோனாப்பட்டு விராலிமலை முதலிய இடங்களில் பனை ஓலைப் பயிற்சி நிலையங்களையும், மணமேல்குடியில் பனையேறும் பயிற்சி நிலையத்தையும் நிறுவிப் பயிற்சியளித்தது.

புதுக்கோட்டை 'மாவட்டத்துக்கென ஒரு பெருந் திட்டம் ( Master plan ) ஒன்றை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தயாரித்து அரசுக்கு அனுப்பியுள்ளார்கள். இத்திட்டத்தின்படி அகில இந்திய கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு தனது பங்கைத் தமிழ்நாடு மாநில பனைவெல்லக் கூட்டுறவு இணையத்துக்குத் தமிழ்நாடு கதர் வாரியத்தின் மூலமாக வழங்கியது. மாநில இணையம் தன்னிடமுள்ள திட்ட நிதிகளைப் பயன்படுத்திப் புதுக்கோட்டையில் பனைத் தொழில் பேட்டைக்கான கட்டடங்களை நிறுவியுள்ளது. படிப்படியாகப்பனைத்தொழிலின் ஒவ்வொரு தொழில் பிரிவும்தொடங்கப்பட்டது. தற்போது இத் தொழிற்பேட்டையில் பனந்தும்பு உற்பத்தி ஏற்றுமதிப் பிரிவு, பனை ஓலைத் தொழில் பிரிவு, பனை நார்த்தொழில் பிரிவு, தாழை மடல் தொழில்பிரிவு பிரஷ் தொழில்பிரிவு, பாம் கூலா பிரிவு ஆகியவை நிறுவப்பட்டன.

மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பெருவளத் திட்டத்தை ( palmyrah products complex ) தொடங்கி வைத்தார். அவர் பேசுகையில் தமிழகத்தில் உள்ள 4 கோடிப் பனை மரங்களில் இதுவரை பயன்படுத்தப்படாமல் உள்ள 2 கோடி பனை மரங்களையும் பயன்படுத்தி கிராமிய வேலை வாய்ப்பு அளிக்க அரசு முன்னோடியாக இத் திட்டத்தைச் செயல்படுத்துவதாகக் கூறினார். விவேக சிந்தாமணியில் '' கற்பகத்தைச் சார்ந்த காகமும் அமிர்தமுண்ணும்'' என்று குறிப்பிட்டிருப்பதிலிருந்து பனைதான் கற்பக தரு என்பதை உணர முடிகிறது. தேவலோகத்தில் கற்பகத் தரு இருப்பதாகக் கற்பனை செய்யாமல் நம் கண்முன் நிற்கும் கற்பக தருவைப் பயன்படுத்தி நாட்டு மக்கள் நலம் பெற வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். பனை ஏறுவது இழிவு என்று கருதிய காலம் மாறிவிட்டது. இப்போது எல்லா சமூகத்திலும் உள்ள இளைஞர்களும், யுவதிகளும் பனைத்தொழிலைச் செய்ய முன்வரும் அளவுக்கு இத் தொழிலை நவீன மயமாக்கி, வருவதைப் பாராட்டினார். படித்த பெண்கள் ஏணி முறை மூலம் பனை மரங்களில் ஏறுவதைத்தாம் இங்கு பார்த்ததாகக் கூறி அவர்களைப் பாராட்டினார். பனையிலிருந்து கிடைக்கும் பல வகையான மூலப் பொருட்களிலிருந்து செய்யப்படும் பொருட்கள் உள் நாட்டுத் தேவையை நிறைவு செய்வதோடு ஏற்றுமதியும் செய்யப்படுவதை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குஉகந்ததாகும் என்றும் குறிப்பிட்டார். பனையிலிருந்து 40க்கும் மேற்பட்ட வகையான பொருட்கள் செய்யப்படுவதைப் பாராட்டி புதுக்கோட்டை மக்கள் பனைத் தொழில் பேட்டையையும் பொருட்காட்சியையும் பார்க்கும்படிக் கேட்டுக்கொண்டார். திருக்கோகர்ணம் கோவில்பட்டியில் நிறுவப்பட்டுள்ளபனைத்தொழில் பேட்டை புதுக்கோட்டை மாவட்டத்தினருக்குச் சுயவேலை வாய்ப்பு வழங்க உதவும் எனவும் குறிப்பிட்டார்.



மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தும்பு ஏற்றுமதிப் பிரிவைத் துவக்கி வைத்துப் பேசுகையில் பனந்தும்பைத் தவிர வேறு எந்த ஒரு தனிப் பொருளும் 35க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகத் தெரியவில்லை என்றும், 35 நாடுகளுக்கு மேல் ஏற்றுமதி செய்யப்படும் பனந்தும்பை ஏற்றுமதி செய்வதற்காகப் பதப்படுத்தும் ஒரு பிரிவை துவக்கி வைப்பதில் பெருமைப் படுவதாகவும், இத்தொழில் பேட்டையைப் போல் தமிழகத்திலுள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் நிறுவப்படுமானால் பயனின்றி வீணாகும் பனைச் செல்வத்தின் மூலம் கிராமங்கள் சிறப்படைய ஏதுவாகும் என்றும் குறிப்பிட்டார்.

பனை ஏறும் தொழிலாளாகளுக்குச் சொந்தமாகப் பனை மரங்கள் இல்லாமையால் கஷ்டப்படுவதைக் குறைக்கவும் இதனை அறவே போக்கவும் நபர் ஒருவருக்கு 100 ஏற்றுப் பனைகள் வீதம் குறைந்த குத்தகைக்கு வழங்கத் திட்டமிட்டு, இன்று முதல் கட்டமாக 35 பேருக்கு பனைகள் வழங்கப்படுகிறதுஎனக் கூறி தமிழக அரசு பனைத் தொழில் வளர்ச்சிக்காக எடுத்துள்ள நடவடிக்கைகளை மாண்புமிகு கதர் கைத்தறித்துறை அமைச்சர் திரு எஸ்.என். இராஜேந்திரன் அவர்கள் விளக்கினார். மாண்புமிகு கதர் கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் 'மணமேல்குடியில் புதிதாகப்பனை ஏறுவதற்குப் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்குப் பனை மரங்களை வழங்கும் அத்தாட்சிப் பத்திரங்களையும் வழங்கினார்.

பொருட்காட்சியைத் திறந்து வைத்துப் பேசிய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி அவர்கள் பனங்கிழங்கு மாவில் ருசிமிக்க அதிரசங்களை செய்வதைத்தாம் மிகவும் பாராட்டுவதாகத் தெரிவித்தார்.

விழாவில் பனந்தும்புத் தொழிலில் திறமையாகப் பணிபுரியும் பெண்களுக்கு டிபன் காரியர் பரிசாக வழங்கப்பட்டது. சுமார் 24 ஆண்டுகளாகத் தொடர்ந்து தலைவராக இருந்து திறம்பட சங்கத்தை நடத்திவரும் மேலஸ்தானம் ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவு சங்கத் தலைவர் திரு ராமையா நாடாருக்கு மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்கள்.



# தமிழின் சிறப்புரைக்கும் தமிழறியும் பெருமாள்

சங்க காலத்துத் தமிழ்ப் புலவர்களின் வரலாற்று நிகழ்ச்சிகளையும் அவர்கள் தமிழ் இலக்கியத்திற்கு ஆற்றிய அரிய தொண்டுகளையும் விளக்கும் 'விநோத ரசமஞ்சரி' என்னும் நூலில் சொல்லப்பட்டுள்ள அரிய கருத்துக்களைக் கொண்டு 'தமிழறியும் பெருமாள்' என்னும் கதையை உருவாக்கி அதைச் சிறந்த நாட்டிய நாடகமாக மலரச் செய்திருக்கிறர்கள் கலைமாமணிகள் நடராஜ்-சகுந்தலா. மத்திய அரசின் சங்கீத நாடக அகாடமியும் தமிழக அரசும் அளித்த நிதியுதவியின் மூலம் இந்நாடகம் அரங்கேறியுள்ளது.

உலகில் மனிதன் வாழ்வதற்குக் கல்வி அவசியம், கற்றதற்கேற்ப மனிதர்கள் வாழவேண்டும்-நன்றி மறவாத் தன்மை வேண்டும்-கல்வி கற்ற பெண்டிருக்குக் கல்விச் செருக்கு ஆகாது — போன்ற பல தத்துவங்களை இந்நாடகம் எடுத்துரைக்கிறது. தமிழகக் கலைக்கும் தமிழ் மொழிக்கும் இந்நாடகம் பெருந்தொண்டு புரிகிறது.

நடிப்பு -பாடல்கள், கதைக் கோப்பு -காட்சி அமைப்பு-ஒளி அமைப்பு அனைத்தும் அற்புதம்; குறிப்பாக மன்னன் மகள் ஏலங்குழலாள் பேயாக மாறி பலரைத் துன்புறுத்தும் காட்சி காண்போரைத் திகிலடையச் செய்கிறது. இக்காட்சி திரைப்படங்களில் வரும் தந்திரக் காட்சிக்கு இணையாக விளங்குகிறது.

இந்நாடகம் வி.ஜி.பி. கல்சுரல் அகாடமியின் சார்பில் தியாகராயநகரில் உள்ள சங்கரதாஸ் கலை அரங்கில் மார்ச் 14ஆம் நாளன்று அரங்கேறியது. இவ்விழாவிற்கு வருகை புரிந்த அனைவரையும் வி.ஜி. பன்னீர்தாஸ் வரவேற்றுப் பேசினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''இந்தச் சிறந்த நாட்டிய நாடகம் நமது தமிழகக் கலையைத் தரணிக்கு எடுத்துச்சொல்லும் தன்மையுடையது. இதையும், நடராஜ்-சகுந்தலா நடத்தி வரும் ஏனைய நாடகங்களையும் வீடியோ டேப்பில் எடுத்து வெளிநாடுகளுக்கெல்லாம் அனுப்புவதற்கு நாங்கள் சித்தமாக இருக்கிறோம். இதன் மூலம் நமது நாடகக் கலையை வெளிநாட்டினர் எளிதில் உணர இயலும்''

**தமிழ்ப்பித்தன்**

தலைமை ஏற்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு சி. அரங்கநாயகம் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''கலையை மக்கள் நெருங்கி வரவேண்டும்; நாட்டில் கலாசார உயர்வுக்குப் பாடுபட வேண்டும் என்ற முறையில் உருவாக்கப்பட்டிருப்பது இந்த நாடகம்.

''சாதாரண - பாமர மக்களின் உணர்ச்சியைத் தொடுவது கலையின் சிறப்பம்சமாகும். அந்தச் சிறப்பம்சம் இந்த நாடகத்தில் இருக்கிறது.

''படிக்காத ஒருவன் படும் தொல்லையை இதில் சித்திரித்துக்

காட்டியிருக்கிறார்கள், ஆணும் பெண்ணும் போட்டியின்றிச் சமமாக வாழவேண்டும் என்ற கருத்தையும் விளக்கியிருக்கிறார்கள்.

''இதில் பங்கு பெற்றோர், பாத்திரங்களாகவே மாறி விடுகின்றனர். 2 மணி நேரத்திற்கு மேல் சலிப்பின்றிக் கொண்டுசெல்லப்படும் இந் நாடகம் நமது உள்ளத்தைக் கவரத்தக்க அளவுக்கு அமைந்திருக்கிறது.

''இதனை உருவாக்கியுள்ள நடராஜ் - சகுந்தலா அவர்கள் புதிய புதிய நாடகங்களை உருவாக்க வேண்டும் என்னும் ஆர்வத்துடன் நாற்பதாண்டுக்காலம் சலிப்பின்றி உழைத்து வருகின்றனர். கலைத் துறைக்குத் தொண்டாற்றி வருகின்றனர்; அவர்களுக்குப் பாராட்டுகளை வழங்குகின்றேன்.



அடுத்து உரையாற்றிய மாண்புமிகு நீதிபதி திரு எஸ். மோகன் குறிப்பிட்டார்:

''தமிழர் பண்பாட்டையும் கல்விச் சிறப்பையும் இலக்கியவளத்தையும் பாராட்டுவதற்கு ஒரு நாடகம் இருக்கிறதா என்றால், இருக்கிறது, அதுதான் 'தமிழறியும் பெருமாள்' என்று கூறிவிடலாம். உள்ளத்தை ஈர்க்கும் வகையில் அமைந்திருக்கிறது இந்நாடகம். இதனை உருவாக்கிய கலைமாமணி நடராஜ் -சகுந்தலா இருவரும் நம்மை, நமது முன்னோர்கள் வாழ்ந்த காலத்திற்கே அழைத்துச் சென்றுவிட்டார்கள் என்றால் அது மிகையாகாது''

அடுத்து உரையாற்றிய இயல் இசை நாடக மன்றச் செயலர் திரு டி.வி. நாராயணசாமி தெரிவித்தார்:

''ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய கதையை நாடகமாக்கி, இன்றைய நவீன காலத் திரைப்படம் போல அமைத்து, அரங்கேற்றி அனைவரையும் கவர்ந்துவிட்டனர் நமது கலைமாமணிகளான நடராஜ் - சகுந்தலா. இந்நாடகம் வீடியோ டேப் மூலம் உலகெங்கும் பரவுவதை நான் வரவேற்கிறேன்''.

நாடகத்தில் பங்கேற்ற கலைஞர்கள், தொழில் நுணுக்கக் கலைஞர்கள் அனைவரையும் பாராட்டிய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 'ஆடற்கலை அறிஞர்' என்னும் விருதினை நடராஜ-சகுந்தலாவுக்கு வழங்கினார்.

சமூக நாடகங்கள் பெருகி வரும் இந்த நவீன நாட்களில் பழங்காலக் கதையை நாடகமாக உருவாக்குவது - அதிலும் நாட்டிய நாடகமாகத் தீட்டுவது என்பது துணிவுக்கு எடுத்துக்காட்டாகும். துணிவு வெற்றியைத் தேடித் தந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

## கல்வி, அறிவியல் தொழில்நுட்பவியல் துறை

அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் வளர்ச்சிக்குத் தமிழக அரசு மிகுந்த முக்கியத்துவம் தந்து வருகிறது. பள்ளிக் கல்வியிலும், கல்லூரிக் கல்வியிலும் அறிவியல் வளர்ச்சிக்குப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சி கடந்த சில ஆண்டுகளில் மிகச் சிறந்த முறையில் நடந்து வருகிறது. கல்வித்துறையில், அறிவியல் , தொழில் நுட்பவியல் பகுதிகளின் தலையாய பங்கைச் சுட்டிக்காட்ட வேண்டியும் அனைத்து மட்டங்களிலும் இவற்றிற்கு உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையிலும் அரசு. தலைமைச் செயலகக் கல்வித்துறையின் பெயரை ''கல்வி, அறிவியல், தொழில் நுட்பவியல் துறை'' (Department of Education, Science and Technology) என்று மாற்றி உள்ளது .

# நூல்நயம்

இப்பகுதிக்கு இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும். அரசியல் கட்சிகள் தொடர்புள்ள நூல்கள், இப்பகுதியில் மதிப்புரை செய்யப்படுவதில்லை.

—ஆசிரியர்.

## பாரியும் கபிலரும்

ஆசிரியர்: எஸ். இராஜு செட்டியார் பி.ஏ.பி.எல்.,

வெளியீடு: கம்பன் பதிப்பகம், 16, தெளிசிங்கப் பெருமாள் வீதி, திருவல்லிக்கேணி, சென்னை—600005.

விலை ரூ 15 பக்கம் 244.

இலக்கிய நிகழ்ச்சிகளை அடிப்படையாக வைத்துக் கட்டப்பட்ட மாளிகை இந் நாடகம்—மெய்யாக நடமாடிய பாத்திரங்களையும், கற்பனைப் பாத்திரங்களையும் கொண்டு படைக்கப்பெற்ற இந்நாடகத்தின் உரையாடல்கள் இனிமையாகவும் எளிமையாகவும் விறுவிறுப்பாகவும் திகழ்கின்றன.

திருக்குறளின் கருத்துக்களும் அக்காலத்து வரலாற்றுச் செய்திகளும் பாத்திரங்களின் வாயிலாக எடுத்துச் சொல்லப்படும்போது உணர்ச்சிக் காவியத்தைப் படிப்பது போன்ற நிலையை நாம் அடைகிறோம்.

நமது நாட்டில் படிப்பதற்கென்று எழுதப் பெறும் நாடகங்கள் நடிக்க இயலாதனவாக உள்ளன. ஆனால் இந்நாடகம் நடிப்பதற்கும் ஏற்ற வகையில் அமைந்திருப்பது, ஆசிரியரின் திறனை எடுத்துரைக்கிறது.

வள்ளல் பாரிக்கும் புலவர் கபிலருக்கும் இடையே செறிந்திருந்த நட்புக் குறித்துப் புறநானூற்றுச் செய்யுள்களின் வாயிலாக அறிந்துள்ளவர்களுக்கு இந் நூல் ஒரு பெரும் விருந்தாக அமைகிறது. பாத்திரங்களை ஆசிரியர் அறிமுகப்படுத்தியிருக்கும் திறம் பாராட்டுக்குரியது. கல்வியின் பெருமையைக் குறித்தும் ஒழுக்கத்தினால் விளையும் உயர்வு பற்றியும் நூல் முழுதும் சுட்டிக் காட்டியுள்ளார் ஆசிரியர். இலக்கியத்தையும் வரலாற்றையும் சுவையான இந் நாடகத்தின் வாயிலாக நிலைக்க வைத்திருப்பது பாராட்டத்தக்கதாகும்.

## பாரதியின் போர்க்குரல்

ஆசிரியர் : ம.பொ. சிவஞானம்

வெளியீடு : பூங்கொடி பதிப்பகம், சித்திரக்குளத் தெரு, மயிலாப்பூர், சென்னை-600 004.

விலை ரூ. 7.00 பக்கம் 152

பாரதியாரையும் அவரது கவிதைகளையும் திறனாய்வு முறையில் தெரிவிக்கிறது இந்நூல், இதில் உள்ள கட்டுரைகள் அனைத்தும் பாரதியின் தேச பக்தியையும் கவிதைப் புலமையையும் அணு அணுவாக -அங்குலம் அங்குலமாக எடுத்துச் சொல்கின்றன. பாரதி ஓர் இமயம் என்பதை நூலாசிரியரின் கட்டுரைகள் தெள்ளத் தெளிவாகக் காட்டுகின்றன.

பாரதியின் சோஷியலிசப் பாதையை ஆசிரியர் தக்க வகையில் எடுத்துரைத்து நிறுவுகிறார். பாட்டாளிகளுக்காகப் பாடியவர் மகாகவி பாரதி என்பதை மிக அருமையாக விளக்கியிருப்பது பாராட்டுக்குரியது. பாரதி எங்கள் கவி என்ற கட்டுரையைப் படிக்கும்போது நமது தோள்களெல்லாம் பூரிக்கின்றன.

''இலக்கிய வானில் பாரதி என்னும் கவிஞன் பிறைச்சந்திரன் அல்லன்; பூரண சந்திரன்'' என்று ஆசிரியர் ஆணித்தரமாகக் கூறுவதை எவரால் மறுக்க இயலும்?

## மழலைத் தேன்

ஆசிரியர் : கவிஞர் நீல கணேசன்

வெளியீடு : மஞ்சுளா பதிப்பகம் 34, காந்தி ரோடு நடுப்பேட்டை குடியேற்றம் (வ.ஆ.).

விலை ரூ. 2-00 பக்கம் 32

74 சிறு கவிதைகள் கொண்ட தொகுப்பு இந்நூல். பிள்ளைக் கனியமுது-பேசும் பொற்சித்திரம் என்றெல்லாம் வருணிக்கப்பெறும் மழலைத் தங்கங்கள் படித்துப் பயன் பெறும் வகையில் இனிமையும் எளிமையும் நிறைந்த சுவைப் பாடல்களின் குவியலாக இந் நூல் திகழ்கிறது. பல்வேறு அறிஞர்களின் அணிந்துரைகளுடன் வெளிவந்திருக்கும் இந் நூல் சிறுவர்களுக்கு நல்ல நீதி நெறிகளைப் போதிக்கின்றது. உலகப் பெரியார் என்னும் தலைப்பில் உள்ள கவிதைகள் குறிப்பிடத்தக்க வகையில் உள்ளன.

—புலவர் தமிழ்ப்பித்தன்

## இமயம் எங்கள் காலடியில்

ஆசிரியர்: புலவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன்,

வெளியீடு: வசந்தா பதிப்பகம், 21, தருமராசா கோயில் தெரு, ஆலந்தூர், சென்னை-600016.

விலை: ரூ. 8.50. பக்கங்கள்: 192


அழகிய தலைப்புடன் விளங்கும் இந்நூலில் ஏராளமான கவிதைகள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொன்றும் ஒருவகையில் சிறக்கின்றன. 'பாடுகிறேன்!' என்ற பாடலே இந்நூலுக்கு(மத்) தாய்ப்பாக விளங்குகிறது எனலாம்.

இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள பாடல்கள் - கவிதைகள் சென்னை வானொலியிலும், பத்திரிகைகளிலும் வெளி வந்தவை. படித்துச் சுவைக்கவும், பாடி மகிழவும் ஏற்பப் பல்சுவைப் பாடல்கள் விரவியுள்ளன.

இமயம் எங்கள் காலடியில், அந்தி மாலை, மனச் சிறகு, மது விலக்கு, மனச்சான்று பேசினால்? காந்தியடிகள், முன்னேற்றம், பாரதியும் பாவேந்தரும் ஆகிய கவிதைகள், பாடிய கவிஞரின் திறமையைப் வெளிப்படுத்தச் சிறந்த எடுத்துக்காட்டுகள்.

— பி. வி. ஜி.

# நாட்டுக்குத் தேவை தொழில் வளர்ச்சி!
# தொழில் வளர்ச்சிக்குத் தேவை
# டான்சி



தொழில் துறைக்கும்
வீட்டு உபயோகத்திற்கும்
ஏற்ற பல்வேறு
சாதனங்களைத் தயாரிக்கும்
55 தொழிற்கூடங்கள்.
ஆண்டு ஒன்றுக்கு
ரூ. 23 கோடி மதிப்பு உற்பத்தி-
6000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு.

டான்சியின் தயாரிப்புகளில் சில:

- இரும்பு கட்டுமானங்கள்
- நுண்ணலைக் கோபுரங்கள் மற்றும் மின்கடத்திக் கோபுரங்கள்
- இரும்பு மற்றும் மரத்தாலான நாற்காலிகள் முதலியன
- கொல்லுலை உறுப்புகள்
- இயந்திரக் கருவிகள்
- தோல் மற்றும் தோலினாலான பொருட்கள்
- விவசாயக்கருவிகள்
- வார்ப்பட இரும்புக் குழாய்கள்
- எனாமல் பூசிய செப்புக்கம்பிகள்
- பிரெஞ்சி பாலிஷ், காஸ்கட் ஷெல்லாக் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

## டான்சி

**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை 600 014
தொலைபேசி: 82161
தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

DIPR

# ஐ.ஐ.டி

ஆல்கஹாலில் ஓடும் ஊர்தியைப் பார்க்க வேண்டுமா?


குட்டி செயற்கைக் கடலைக் காணவேண்டுமா?

சூரிய ஒளியின் மூலம், குளிர் சாதனத்தை அனுபவிக்க வேண்டுமா?

எல்லாவற்றுக்கும் கிண்டி செல்லவேண்டும்! அங்கே காந்தி மண்டபத்துக்கு அருகிலுள்ள ஐ.ஐ.டி.க்குள் நுழையவேண்டும். ஆம். இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தைச் சுற்றிப் பார்க்க வேண்டும்.

இந்தியத் தொழில் நுட்பக் கழகம் ( Indian Institute of Technology ) பரந்து விரிந்த வானம் போலல்லவா காட்சி தருகிறது!

இயற்கை எழில் மண்டிக்கிடக்கும் அழகான, அமைதியான சூழவில் அமைந்திருக்கும் இந்த அறிவாலயம், ஆயிரமாயிரம் மாணவ மணிகளை, பல்துறை வல்லவர்களாகத் தயார்ப் படுத்தி வருகிறது.



சென்னைக்குப் பெருமை சேர்க்கும் இந்தத் தொழில் நுட்பக் கழகம், 1959ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத் திற்கென்றே நாட்டில் அமைக்கப்பட்டுள்ள தலையாய கல்விக் கழகங்களுள் ஒன்றாக இது விளங்கி வருகிறது.

ஜெர்மன் கூட்டுப் பேராட்சிக் குடியரசிடமிருந்து கிடைக்கப் பெற்ற தாராள நிதி-தொழில் நுட்ப உதவியுடனும், அதற்குச் சரிநிகராக இந்திய அரசாங்கத்திடமிருந்து கிடைத்து வரும் உதவியுடனும் இந்த நிறுவனம் தொடங்கப் பெற்று இன்று ஆல் போல் தழைத்திருக்கிறது.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கழகமாக விளங்கும் இது, சுயாட்சிப் பொறுப்புள்ள குழுமமாகவும் விளங்குகிறது.

B.Tech., M.Tech., M.Sc., M.S., மற்றும் டாக்டர் பட்டப் படிப்பிற்கான கல்வித் திட்டங்களை இக்கழகம் நிறைவேற்றி வருகிறது. கல்வி வசதி அளிப்பதுடன், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித்துறைகள், தொழில் துறை ஆலோசகர் பயிற்சித்துறை, தொடக்கக் கல்வி வசதி ஆகியவற்றிற்குப் பரவலான நடவடிக்கைகளிலும் இக்கழகம் ஈடுபட்டு வருகிறது.

இந்தக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கான பல்வேறு துறைகளின் நடவடிக்கைகளையும் செயல்படுத்துவதற்காகச் சில ஆராய்ச்சி மையங்களையும் பள்ளிக்கூடங்களையும், வெளியிலுள்ள நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ள தனிப் பிரிவுகளையும் இக்கழகம் அமைத்துள்ளது.

பின்வரும் பிரிவுகள் வெளியேயுள்ள நிறுவனங்களோடு பணியாற்றியும் வருகிறது :


மத்திய நூல் நிலையம்.
மத்திய கண்ணாடிப்பொருள் தயாரிப்புப் பிரிவு
மத்திய தொழிற்கூடங்கள்
மத்திய புகைப்படப் பிரிவு

பட்டம் பெற்று வெளியேறும் மாணவர்களுக்கு , வருங்காலத்தில் வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய வேலை வழங்குபவர்களுக்குமிடையே தொடர்பு கொள்வதற்காக, இக்கழகத்தின் வேலை அளிக்கும் அலுவலகம் ஒன்றும் செயல்படுகிறது.

நான்காண்டுக் காலப் பயிற்சிக்கான பி.டெக். (B.Tech) வகுப்பில் சேரக் குறைந்தபட்சக் கல்வித் தகுதியாக 10+2 வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது கணிதம், பௌதிக, வேதியியல் ஆகிய பாடங்களைக் கொண்ட அதற்குச் சமமான வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

இந்தியாவிலுள்ள மற்ற ஐ.ஐ.டி. நிலையங்களுக்கும் (1, பம்பாய் 2. டில்லி 3. கான்பூர் 4. கரக்பூர்) பொதுவாகக் கூட்டு நுழைவுத் தேர்வுகள் ( Joint Entrance Examination) நடத்தப் பெற்ற, திறமையின் அடிப்

பி.வி.கிரி



சூரிய வெப்பச் சக்தியைத் திரட்டுவதற்கான தகடு வரிசைகள்.

படையில் மாணவர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

M.Tech., M.Sc., DIIT போன்றவைகளுக்கு, மேல்நிலைப் பட்ட வகுப்புக்கான போட்டித் தேர்வின் கீழ் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். M.S., Ph.D., போன்றவைகளுக்குத் துறைத் தேர்வுக் குழுவினால், எழுத்துத் தேர்வு மற்றும்பேட்டி போன்றவை மூலமாக மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.


M.Tech., M.S., Ph.D.. பட்ட வகுப்புகளைக் கொண்ட கம்ப்யூட்டர் பயிற்சி நிலையம் ( Computer Centre ), ஆசியாவிலேயே சிறந்ததொரு நிலையமாகத் திகழ்கிறது.


இதுதவிர, கடல் பொறியியல் நிலையம் ( Ocean Engineering Centre), கடல் நீரிலிருந்து மின்சாரம் தயாரித்தல், கடலுக் கடியில் எண்ணெய் வளம் இருப்பதைக் கண்டறிதல், அலைகள் பற்றிய ஆய்வு, கடல்வாழ் இனங்கள் பற்றிய ஆராய்ச்சிகள் முதலானவற்றைக் கற்றுத் தருகின்றது.

இந்தப் பிரிவில் தான் 100 அடி சதுர வடிவத்தில் ஆழமான பிரமாண்டமான தொட்டி ஒன்றைக் கட்டியிருக்கிறார்கள். இதை மேலே இருந்து பார்க்கும்போது குட்டிக் கடலாகக் காட்சியளிக்கிறது!

இங்கே, கதிரவனின் ஆற்றல் ( Solar Energy ) சம்பந்தமான கல்வியும் புகட்டப்படுகிறது. கதிரவனின் ஆற்றல் மூலமாக, குளிர்சாதன வசதி, மின் உற்பத்தி, நீரைக் கொதிக்கவைத்தல், சமையல் அறைகளை வெதுவெதுப்பாக்குதல் மற்றும் செயற்கைக் கோளை இயங்கச் செய்தல் போன்றவைக்கான நுணுக்கங்கள் கற்றுத் தரப்படுகின்றன.

சூரிய வெப்பத்தால் இயங்கும் குளிர் சாதனம்





நீரைக் காய்ச்சி நன்னீர் வடித்தெடுக்கப் பயன்படும் சூரிய வெப்பத்தால் இயங்கும் கருவி.

Fibre மூலமாகச் சிறிய-பெரிய குழாய்கள், பஸ் ஜன்னல்களுக்கான சட்டங்கள், தலைக் கவசம் போன்றவை செய்வதற்கான தொழில் நுணுக்கங்களும் இங்குக் கற்றுத் தரப்படுகின்றன.

உலோகவியல் (Metallurgy) சம்பந்தமான தொழில் நுணுக்கங்கள்-உலோக இணைப்பு, உருக்கு, இரும்பு, எஃகு தொழில் நுட்பங்கள் இங்குக் கற்றுத்தரப் படுகின்றன.

விமானப் பொறியியல் (Aeronautical Engineering ) சம்பந்தமான கல்வியும் இங்குப் புகட்டப்படுகிறது. விமானம் சம்பந்தப்பட்ட அத்தனை நுணுக்கங்களிலும் மாணவர்கள் சடுபடுத்தப்படுகின்றனர்.


கட்டடப் பொறியியல் (Structural Engineering ) சம்பந்தமான எல்லாவிதமான நுணுக்கங்கள், பயிற்சிகள், ஆராய்ச்சிகள் ஆகியவற்றில் மாணவர்கள் சடுபடுத்தப்படுகிறார்கள்.

பொதுவாக, நம் நாட்டில் பொறியியல் சம்பந்தமான சிக்கல் ஏதேனும் இருந்தால் உடனே இங்கே உள்ள ஐ.ஐ.டி.யை நாடினால் போதும். சிக்கல் தீர்ந்து சீக்கிரமே அதற்கு ஒரு வழிவகை ஏற்பட்டுவிடும்.

நம் நாட்டிலுள்ள ஏராளமான தொழிற்கூடங்களுக்குக் கட்டுமான ஆலோசனைகளை இது வழங்கி வருகின்றது. குறிப்பாக பெல், ஸ்பிக், டி.வி. கோபுரம், திருப்பதி தேவஸ்தானம், தபால், தந்தித் துறை இன்னும் பல்வேறு துறைகளுக்கு இது தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கி வருகிறது. இவ்வாறு ஆலோசனை வழங்குவதன் மூலம் இவ்வாண்டு 50 இலட்சம் ரூபாய் அளவுக்கு ஐ.ஐ.டிக்கு வருமானம் கிடைத்திருக்கிறது.

இந்தப் பிரிவில் தண்டவாளத் திற்கிடையே பொருத்தப்படும் நவீன ஸ்லீப்பர் கட்டைகள் உருவாக்கப்படுவதை நேரில் பார்க்கிறோம். சாதாரணமாக, மரக் கட்டைகள்தான் இதற்குப் பயன்படுத்தப்படும். ஆனால், காங்கிரீட்டினால் தயாரிக்கப் படும் இது, மரத்தைவிட உறுதியாகவும், நெடுங்காலத்துக்கு உழைக்கக் கூடியதுமாகவும் இருக்கிறது. மர ஸ்லீப்பர் கட்டை 10

கம்ப்யூட்டர் நிலையம்



ஆண்டுகளுக்கு உழைக்கக்கூடியது என்றால், காங்க்கிரீட் கட்டை 50 ஆண்டுகள் உழைக்கும் திற னுள்ளவையாம்.

''பம்பாய் ஆழ்கடல் பகுதியில் பெட்ரோலியம் கண்டுபிடிக்கும் பணியில் சடுபடுவதற்குக் கடலின் நடுவே மிகப் பெரிய இயந்திர மேடைகளை நிர்மாணிக்கும் பணி யில் இந்நிலையம் தொழில் நுட்ப ஆலோசனை வழங்கியுள்ளது. இதனால், இதுவரையில் இப் பணியை நிறைவேற்ற வெளிநாட் டுத் தொழில் நுட்ப நிபுணர் களை நம்பி இருந்து வந்தநிலை மாறி விட்டது'' என்று இந்நிலை யத்தின் இயக்குநர் திரு பி.வி. இந்திரேசன் அவர்கள் கூறி னார்.

கம்பிகளில் மின்சாரம் கொண்டு செல்லும்போது ஏற் படும் விரயத்தைக் கணிசமாகக் குறைப்பதற்குத் தொழில்நுட்ப ரீதியில் வழிமுறைகளைக் காண இக்கழகம் ஆய்வு ஒன்றை மேற் கொண்டுள்ளது.

கிராமப்புறங்களில் உள்ள வசதிகளைப் பயன்படுத்தி, அங் குள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த சோதனை முறையில் மேற்கொண்ட 'நாரா யணபுரத்திட்டம்' வெற்றிகர மாக நிறைவேற்றப்பட்டு வரு கிறது. இந்தத்திட்டத்தை அம லாக்க வங்கிகளிடம் இருந்து வாங்கிய கடன்களை வட்டி யுடன் திருப்பித் தந்துவிட்டு, சொந்த வருவாயிலேயே செயல் படும் நிலை இப்போது உருவாகி உள்ளது.

இந்த நிலையத்தின் மாணவர் விடுதிகளில், கழிவு நீரைச் சுத்தப் படுத்தி, மீண்டும் பயன்படுத்து வது குறித்து சோதனைகள் நடத் தப்பட்டு வெற்றிகரமாக அமல லாக்கப்பட்டு வருவதையும் நாம் பார்க்கிறோம்.

சென்னை கூவம், அடையாறு ஆகிய ஆறுகளைச் சுத்தப்படுத்த என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்வது என்பது குறித்து ஐ.ஐ.டி. ஆராய்ச்சிகளை மேற் கொள்ளவிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண் டும்.

இந்நிலையம், பெட்ரோலில் ஓடும் வாகனங்களில் "எதனால்" சாராயத்தைப் பயன்படுத்தி ஓட் டுவது குறித்து ஆராய்ச்சி நடத் திய பிறகு, தற்போது டீசல் வண்டிகளில் 'எதனால்'பயன்படுத் வது குறித்து ஆராய்ச்சிகள் செய் யப்பட்டும் வருகிறது. ஆல்க ஹாலில் ஓடும் 'வேன்' ஒன்று வளாகத்தைச் சுற்றிச் சுற்றி வரு வதைப் பார்க்கவும் செய்கிறோம்.

தமிழ்நாடு அரசு நன்கொடை யாக வழங்கியுள்ள,620 ஏக்கரா பரப்பளவு கொண்டது இக் கழகம். இங்கே 2500 பேர் பயிலுகின்றனர். இவர்களு களுள் 117 பேர் மாணவியர். இவர்களுக்காக 12 மாணவர் விடுதிகள் உள்ளன. 400 ஆசிரி யர்கள் பணியாற்றும் இக்கழகத் தில், 1000 குடியிருப்புகள் உள்ளன. 2500 பணியாளர்களும் இருக்கின்றனர்.

இந்த வளாகம் ஒரு நகரிய மாகவே விளங்குகிறது. இந்த வளாகத்துக்குள் குழந்தைகள் பூங்கா, மருத்துவமனை, பள்ளி கள், பணியாளர்கள் - மாதர் சங்கங்கள், கோவில்கள், அஞ்சல் நிலையம், வங்கி, அங்காடி, திறந்தவெளி அரங்கம், நீச்சல் குளம், விளையாட்டுத் திடல் போன்ற பல வசதிகள் உள்ளன. வளாகத்துக்குள்ளே போய் வர 25 காசுக் கட்டணத்தில் தனி யாகப் பேருந்துகளும் விடப்படு கின்றன.

பழமரம் நாடிவரும் பறவை கள் போல, உலகின் பல பகுதி களிலிருந்தும் வரும் நூற்றுக் கணக்கான மாணவர்களைத் தம் பால் ஈர்க்கும் இந்தியத் தொழில் நுட்பக் கழகம், சொந்தக்காலில் நிற்க-சுயதேவையைப் பூர்த்தி செய்ய, ஓர் அறிவாலயமாகத் திகழ்ந்து வருகிறது.

மாணவர்களின் திறமையை கல்விக் கழகத்தின் அரிய பெரிய பணிகளைப் பொதுமக்களும் காணவேண்டாமா? அதற்காகப் பிப்ரவரி 27,28 தேதிகளில் பொது மக்கள் — மாணவர்கள் இங்கே அனுமதிக்கப்பட்டார்கள். அவர்கள் பிரம்மாண்டமான அந்தக் கல்வி நிலையத்தைப் பார்த்து மகிழ்ந்தார்கள், பாராட்டினார்கள். இத்தனை பெருமை வாய்ந்த கல்வி நிலை யத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் எல்லாருக்கும் எழுவது இயல்புதானே? அதற்கு இரண்டு ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்!

## காகிதத் தொழிற்சாலை நிறுவிட...

திருச்சி மாவட்டம் புகளூரில் 190 கோடி ரூபாய் திட்டத்தில் கரும்புச் சர்க்கரையை மூலப் பொருளாகக் கொண்டு ஆண்டு ஒன்றுக்கு 50 ஆயிரம் டன் செய்தித்தாளும் 40 ஆயிரம் டன் எழுது தாளும் தயாரிக்கும் காகிதத் தொழிற்சாலை ஒன்றை நிறுவ அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத் தொழிற்சாலையில் 3 ஆயிரம் பேருக்கு நேரடியாகவும் 5 ஆயிரம் பேருக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு ஏற்படும். இத்திட்டத்திற்கு உலக வங்கி மத்திய அரசு மற்றும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் மூலம் 10 கோடி அமெரிக்க டாலர் கடன் உதவி வழங்க ஒப்புக்கொண்டுள்ளது. இத்தகவலை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திருநாவுக்கரசு அவர்கள் தெரிவித்தார்கள்.

## நெசவுத் தொழில் மேம்பட...

நெசவுத் தொழில் மேம்பாட்டிற்காகப் பல் வேறு முயற்சிகளை அரசு செய்து வருவ தாகவும் தமிழ்நாட்டில் ஐந்து இடங்களில் கோ–ஆப்டெக்ஸ் வடிவமைப்புப் பணி நிலை யங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் இந்த நிலையங்களுக்கு ஆலோசனை கூறப் பெண்கள் கல்லூரி முதல்வர்கள், பெண் மருத்துவர்கள், பெண் ஊழியர்கள், மாணவிகள் மற்றும் குடும்பப் பெண்கள் அடங்கிய 20 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்றும் இந்த குழுவினர் அவ்வப்போது புதிய வடிவமைப்புகளைத் (Designs) தேர்ந்தெடுப் பார்கள் என்றும் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு அரங்கநாயகம் அவர்கள் தெரிவித்தார்கள்.

## மாணவர் பக்கம்



தியாகராயநகர் வெங்கடசுப்பாராவ் மேல்நிலைப் பள்ளி பரிசு பெற்றது.

# நில்-கவனி-செல்!

சென்னை பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில், பெரியார் திடலுக்கு அருகில், போக்குவரத்துத் துணை ஆணையாளர் அலுவலகம் இருப்பதைப் பார்த்து இருப்பீர்கள். அங்குதான் சிறுவர் போக்குவரத்துப் பூங்கா (Children's Traffic Park) உள்ளது.

இந்தப் பூங்காவில் சென்னை நகரச் சாலைகள் போலவே, பல குட்டிச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. சாலைகள் போக்குவரத்து அடையாளங்கள், சமிக்ஞை விளக்குகள் ஆகியவையும் இங்கு பொருத்தப்பட்டுள்ளன.

பள்ளிப் பருவத்திலேயே போக்குவரத்து விதிமுறைகளைத் தெரிந்து கொள்வது, வருங்காலத்துக்கு மிகவும் நல்லது. அதனை மனத்தில் கொண்டுதான் இந்தப் பூங்காவை அமைத்து, நகரத்திலுள்ள பல பள்ளி மாணவ, மாணவியரை இதில் ஈடுபடுத்தி வருகின்றனர் என்று உறுதியாகக் கூறலாம்.

இந்தப் பூங்கா முன்பிருந்த பர்மாஷெல் எண்ணெய் நிறுவனத்தால் ஒன்றரை இலட்சம் ரூபாயில் கட்டுப்பட்டு, பின்னர் பாரத் பெட்ரோலியம் கூட்டு நிறுவனத்திற்குக் கிடைத்தது; பின்னர் இது சென்னை நகர காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சென்னை நகரப் போக்குவரத்துக் காவல்துறை அதிகாரிகள் இதுவரை 27,065 மாணவர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளார்கள். 1981-82ஆம் ஆண்டில் மட்டும் 4,218 மாணவர் பயிற்சி பெற்றனர்.

சர்வதேசக் குழந்தைகள் ஆண்டில் (1979), போக்குவரத்துப் பாதுகாப்பு ஏற்பாடுகளில் பங்கு கொண்டு சிறந்த முறையில் சேவை புரியும் மாணவர்களின் பள்ளிக்குச் சுழற் கோப்பைப் பரிசுத் திட்டத்தை, பாரத் பெட்ரோலியம் கூட்டு நிறுவனம் அறிவித்தது.

ஆண்டுதோறும் இந்தச் சுழற் கோப்பைப் பரிசுடன், பல்வேறு பரிசுகளும் சிறுவருக்கும், சிறுமியருக்கும் அளிக்கப்பட்டுள்ளன. சென்னை நகர போக்குவரத்துக் காவல் துறையினர் ஏற்பாடு செய்துள்ள வினா-விடை எழுத்துப் போட்டிகளிலும் சிறுவர், சிறுமியர் உயர்ந்த மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர்.

இப்போட்டிகளில் 30 பள்ளிகள் கலந்து கொண்டன. வினா-விடைப் போட்டியில் மிக உயர்ந்த மதிப்பெண் பெற்ற பள்ளி, சுழற் கோப்பைப் பரிசைப் பெற்றது.

2.3.82 அன்று இந்தப் பூங்காவிலுள்ள மேடையில், பாரத் பெட்ரோலியம் சாலைப்பாதுகாப்புக்கான சுழற்கோப்பை வழங்கும் விழா நடந்தது.

காவல்துறை ஆணையாளர் திரு எஸ். ஸ்ரீபால் அவர்கள் சுழற்கோப்பையை வழங்கிப் பேசுகையில், இளம் வயதிலேயே சாலைப் போக்குவரத்து விதிமுறைகளைக் கற்றுத் தந்தால், அது அப்படியே மனத்தில் பதியும் என்றார்.

இந்த விழாவில் வினா-விடைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பதக்கங்களையும், சான்றிதழ்களையும் காவல் துறை ஆண்ணயாளர் அவர்கள் வழங்கினார்.




**நடந்தே ஒரு இலட்சத்து இருபதினாயிரம் கிலோ மீட்டர் பயணம் செய்து உலகச் சாதனையை ஏற்படுத்த வேண்டும் என்ற இலட்சியத்தோடு ஆந்திர மாநிலம் அனந்தபூரைச் சேர்ந்த 20 வயது இளைஞர் வெங்கடேஷ் புறப்பட்டிருக்கிறார்.**

பட்டதாரியான வெங்கடேஷ், தமது கல்லூரி வாழ்க்கையிலேயே இம்மாதிரி சாதனைகள் சிலவற்றை நிகழ்த்தியிருக்கிறாராம். இதையும் மிஞ்சி புதிய சாதனை ஏற்படுத்துவதே தமது இலட்சியம் என்கிறார்.

மத்திய அரசின் கல்வித் துறையின் கீழ் உள்ள நேரு யுவ கேந்திரா, வெங்கடேஷின் இப் பயணத்திற்கான ஆதரவை அளித்துள்ளது.

# குதுப்மினார் வரலாறு



குதுப்மினார் கோபுரம் சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டதாகும்.

இந்தியாவில் துருக்கிய வம்ச ஆட்சி நிறுவப்பட்டதன் வெற்றிச் சின்னமாக இது கட்டப்பட்டது. டில்லியை ஆண்ட அடிமை வம்சத்தின் முதலாவது மன்னர் குதுப்-உத்-தீனால் இந்தக் கோபுரம் கட்டப்பட்டது.

இக்கோபுரம் மொத்தம் 5 நிலைகளைக் கொண்டதாகும். குதுப்-உத்தீன் இந்தக் கோபுரத்திற்கு அடித்தளத்தை அமைத்து 21 மீட்டர் (சுமார் 63 அடி) உயரத்திற்கு முதலாவது நிலையைக் கட்டி முடித்தார்.

கி.பி. 1206 முதல் 1210 வரை குதுப்-உத்-தீன் டில்லியை ஆண்டார். குதுப் உத்தீனுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த சுல்தான் இல்டுமிஷ், இக்கோபுரத்தின் பாக்கி 4 நிலைகளைக் கட்டி முடித்தார். இந்தக் கோபுரத்தின் மொத்த உயரம் 72.5 மீட்டர் (சுமார் 217 அடி ).

குதுப்மினார் கோபுரத்திற்குள் மொத்தம் 379 கருங்கல் படிகள் உள்ளன. இவை மிகவும் குறுகலானவையாகும். ஒரு படியில் ஒரே சமயத்தில் 4 பேர் மட்டுமே நிற்க முடியும்.

இந்தக் கோபுரம் காலத்தை எதிர்த்து எதிர்நீச்சல் போட்டு நிலைத்து நின்றுள்ளது.

இருமுறை இந்தக் கோபுரத்தின் மீது இடி விழுந்தது, டில்லியில் நடைபெற்ற பல பூகம்பங்களுக்கு ஈடுகொடுத்து நின்றுள்ளது.

1368-ல் இக்கோபுரத்தின் மீது இடி விழுந்தபோது, இதன் இரு நிலைகள் சேதமடைந்தன. அவற்றை அப்போது டில்லியை ஆண்ட பிரோஷ் ஷா துக்ளக் மீண்டும் கட்டினார்.

1503-ஆம் ஆண்டில், மீண்டும் குதுப்மினாரை இடி தாக்கியது. இதனால் இதற்கு விரிவான சேதமேற்பட்டது. அப்போது, டில்லியை ஆண்ட சிக்கந்தர் லோடி என்னும் மன்னன், இதனைப் பார்த்துத் திருத்தி அமைத்தார்.

1803-ஆம் ஆண்டில் நடைபெற்ற பூகம்பத்தில் இக்கோபுரத்தின் மாடப்பகுதி நகர்ந்து விழுந்து விட்டது.

இந்தக் கோபுரம் டில்லியில் தெற்குப் பகுதியில் இருக்கிறது. இதன் உள்ளே இருக்கும் சுற்றுப் படிக்கட்டுகளில் ஏறி மேலே சென்றால், அங்கிருந்து டில்லிமா நகர் முழுவதையும் பார்க்க முடியும்.

இந்தக் கோபுரம் 1211 முதல் 1235-க்குள் கட்டி முடிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. முன்னதாக அங்கே ஒரு விஷ்ணு ஆலயம் இருந்தது, அந்த ஆலயத்தை முகாலாயர் கைப்பற்றி அங்கு இந்தக் கோபுரத்தை எழுப்பியதாகக் கூறுவர். அந்த ஆலயத்தின் இடிபாடுகளை இன்னமும் குதுப்மினார் அருகில் காணலாம்.

# நமக்குள் பகையுண்டோ?

உலகம் முழுதும் ஒன்றாகி
உணர்வால் செயலால் ஒருமித்து
கலகம் நீங்கி வாழும்நாள்
கண்ணில் தெரிதல் எந்நாளோ?
பலவாய்ப் பிரிவுப் பகைசொல்லும்
பழக்கம் நீங்கி மண்ணுள்ளே
உலவும் மக்கள் எல்லோரும்
ஒன்றாய்க் கூடும் நாளென்றோ?
இனங்கள் நிறங்கள் மொழியென்று
இதனில் எதையும் எண்ணாமல்
எனது இனிய தாய்நாடு
என்னும் இயல்பை மறந்தெங்கும்
தனது தாயாய் தரணியினை
தினமும் தொழுது தரிசித்தால்
பிணக்குப் பிரிவுப் பிளவுண்டோ?
பிறகும் நமக்குள் பகையுண்டோ?

கே. சத்தியநாராயணன்
மேல்நிலை முதலாம் ஆண்டு
நேருஜி நினைவு நகரவை
மேல்நிலைப் பள்ளி
திண்டுக்கல்.



# பயனுள்ள பத்து நாள் முகாம்

இயற்கை நலம் மிக்க நீலகிரியில், அறியாமை போன்ற தவறுகளால் கேடுற்றிருக்கும் இயற்கைச் சூழலைப் பாதுகாக்கவும், இம்மலைவாழ் மக்கள் நலன் பெறவும் மத்திய அரசு, தமிழ்நாடு அரசு ஆகியவை பேரார்வமும் பெருமுயற்சியும் எடுத்துவருவது கண்கூடு.

அரசுப்பணிகளுக்கு உறுதுணையாக, நாட்டுநலப் பணித் திட்டத்தில் மாணவர்கள்செயல்பட்டு வருவது, நல்ல அறிகுறி அன்றோ? அவ்வகையில் உதகை அரசுகலைக் கல்லூரி, நாட்டு நலப் பணித் திட்டம் சார்பில், அண்மையில் புறச்சூழ்நிலை வளர்ச்சிப் பணிக்கான 10 நாள் முகாம் நடந்தது.

நீலகிரி, கோவை, பெரியார் மாவட்டத்தைச் சார்ந்த நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்கள் சுமார் 60 பேர் இம்முகாமில் கலந்து கொண்டனர். இவர்கள் உதகமண்டலம், முதுமலை ஆகிய இடங்களில் பல்வேறு பணிகள் செய்து, நீலகிரியில் இயற்கைச் சூழல் பாதுகாப்பு, மேம்பாட்டுக்கு உதவியதோடு, மக்களிடையே விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தினார்கள் என்றால் அது மிகையாகாது.

தொட்டபெட்டா மலையைச் சார்ந்த கோரிமேடு என்ற பகுதியில், மலைச்சரிவு சார்ந்த இடத்தில், முட்புதர்களும், செடி, கொடிகளும் இருண்டு அடர்ந்து கிடந்த காட்டு இடங்களைத் திருத்தும் மிகக் கடுமையான பணியில், மாணவ மணிகள் ஈடுபட்டனர்.

உதகைக் குளிர் காற்றையும் ஒரு பொருட்டாகக் கருதாது, 2 ஹெக்டேர் பகுதியை இவ்வண்ணம் இவர்கள் திருத்திச் சிறக்கச் செய்து முடித்தது பாராட்டுக்குரியது. இப்படியாக, இக்கடும்பணியில், இவர்கள் கைகள் பதம் பார்க்கப்பட்டன என்றாலும், மாணவர்களின் மன உறுதி அவற்றையெல்லாம் வென்று நின்றதை நேரிடையாகப் பார்க்க முடிந்தது.

இப்பணிகளின் தொடர்ச்சியாக கோரிமேடு வனப் பகுதியில், வன துறையினர் ஒதுக்கித் தந்துள்ள 5 ஏக்கர் பகுதியில், நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்கள், புத்தம் புதிய காட்டை ஏற்படுத்திக் கொடுக்கும் பணியில் தம்மை அர்ப்பணித்துக் கொள்ளத் தயாராயிருக்கிறார்கள்.

முகாமின் எஞ்சிய நான்கு நாட்கள் முதுமலைக் காடுகளில் கழிந்தன. கொடியதாக வருணிக்கப்படும் காட்டின் உட்பகுதியில் 13 கி.மீ. பகுதியை உள்ளடக்கி, மாணவர்கள் நடந்து சென்று வனச் சூழல் அறிவை வளர்த்துக் கொண்டனர்.

மாணவர்கள் 9 குழுக்களாகப் பிரிந்து, மோயாறு-மசினகுடியை ஒட்டியுள்ள ''ஜெயதேவ் அவினியூ'' என்ற வனப் பகுதியில், வன விலங்குகள் கணக்கெடுப்புப் பணியில் மிகுந்த தைரியத்தோடு ஈடுபட்டார்கள். காட்டெருமைகள், களிற்றினங்கள் போன்றவற்றைக் காணும் வாய்ப்புப்பெற்றார்கள். மற்றும் சிறுத்தை, புலிகள், கரடிகள் போன்ற விலங்கினங்களின் காலடிச் சுவடுகளை ஆங்காங்கு கண்ட மாணவர்கள், மும்முரமாக அவற்றை ஆராயும் பணியில் ஈடுபட்டார்கள்.

காடுகளைத் தீ பரவுவதினின்றும் காப்பது எப்படி? என்பது போன்ற விளக்கப் பயிற்சிகளிலும் மாணவர்கள் திறம்பெற்றார்கள். வனவிலங்குகளின் பண்பு நலம் அறியும் அறிவுப் பயிற்சி பெற்ற மாணவர்கள், அவற்றைப் பாதுகாத்து, அவைபோன்ற வனச் செல்வங்களை மேம்படுத்தும் வகையிலும் பயிற்சி பெற்றார்கள்.

முகாம் பணிகளை நேரில் பார்த்த அரசுத் துறை அலுவலர்களும், மக்கள் பிரதிநிதிகளும் வெகுவாகப் பாராட்டினார்கள்.



# ரூ55 முதல் ரூ55000 வரை

முட்டை ஓட்டின் மேல் ஓவியம் வரையலாம். ஆனால், முட்டைக்கு உள்ளே ஓவியம் வரைய முடியுமா?

அரிசியைச் சோறாக்கலாம். அதிலே ஒரு அரசியை உருவாக்க முடியுமா?

சந்தன மரத்தை இழைத்து மணம் நுகரலாம். ஆனால், அதிலே நுண்ணிய சிலை வடிக்க முடியுமா?

'முடியாது என்பது என் அகராதியிலே இல்லை' என்று சொல்லும் வகையிலே, இத்தனை அற்புதங்களையும் பார்க்க முடிகிறது அந்த ஓவியக் கண்காட்சியில்!

சென்னை அண்ணா சாலையிலுள்ள வி.டி.ஐ. என்று புகழப்படும் 'விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிட்யூட்' ஆண்டுதோறும்



அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாளில் ஓவியக் கண்காட்சி ஒன்றை நடத்துகிறது. அதேபோல, இவ்வாண்டும் நடந்தது. இது பன்னிரண்டாவது கண்காட்சியாகும்.

இந்த ஓவியக் கண்காட்சியில் வழக்கம்போல் தமிழ்நாடு, கர்னாடகா, ஆந்திரம், கேரளா ஆகிய மாநிலங்களிலிருந்து கலைஞர்கள் கலந்து கொண்டார்கள். இவர்களில் தமிழ்நாட்டுக் கலைஞர்களே அதிகம் பங்கு பெற்றிருக்கிறார்கள்.

—பி. வி. கிரி.

இந்தக் கண்காட்சியில் 168 படைப்புக்கள் இடம் பெற்றன. கல், துணி, காகிதம், மரம், உலோகம் ஆகியவற்றாலான ஓவியங்கள், சிலைகள் முதலானவை கண்ணைக்கவரும் வகையிலே அமைந்துள்ளன. இவ்வாண்டு நடந்த கண்காட்சியில் சிறப்பு அம்சம், வேங்கை மரத்தாலான பெரிய, அழகிய, மிக நுண்ணிய சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த வாயில் கதவுதான்! ஆந்திர மாநிலம் சித்தூரைச் சேர்ந்த கே. தர்மாச்சாரி என்பவர் இதனை உருவாக்கியுள்ளார். இதை அவர் உருவாக்க ஒன்றரை ஆண்டுகள் ஆயினவாம். இதன் விலை எவ்வளவு தெரியுமா? 55,000 ரூபாய்! கண்காட்சியிலே உள்ள கலைப் பொருள்களில் அதிக விலையுள்ளது இதுவேயாகும்! குறைந்த விலை எவ்வளவு? ரூ.55

இங்கே வண்ண ஓவியங்கள், ஆந்திரக் கலைஞர்களின் கைவண்ணத்தில் மிளிரும் 'கலம்காரி' எனப்படும் சித்திரங்கள், வண்ண மரத்துண்டுகளைப் புதைத்து உருவாக்கப்படும் படைப்புகள் (Inlay and Relief work) எம்ப்ராய்டரி, கல், மர, உலோகச் சிலைகள் எல்லாம் படைப்பாளிகளின் கை வண்ணத்தை - திறமையை வெளிப்படுத்துகின்றன.


இந்தக் கண்காட்சியில், ஊனமுற்ற பள்ளி மாணவர்கள் உருவாக்கிய சித்திரங்கள், கைவேலைப்பாடுகள் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இவற்றைக் கவனிக்கும்போது, ஊனம் அவர்களிடத்திலே இருந்ததே தவிர, அந்த ஓவியத்தில் இல்லை என்பதைப் பார்க்க முடிந்தது.

'கீதோபதேசம்' என்னும் பெரிய அளவு வண்ணப்படம் ஒன்று காட்சியளிக்கிறது. இது வண்ணத் துண்டுத் துணிகளைக் கொண்டு உருவாக்கப்பட்டதாகும். இதன் விலை ரூ. 3250. இதனைப் பார்க்கின்றபோது உழைப்பும் திறமையும் இருந்தால், வேண்டாத பொருள் எதற்குமே ஒரு உருவம் கொடுக்க முடியும்; உயிர் கொடுக்க முடியும் என்று உணர முடிந்தது.

மாமல்லபுரம் சிற்பக்கலைப் பள்ளியில் பயிலும் மாணவர் உருவாக்கிய கல்லாலான கடவுள் சிலை கண்ணைக் கவர்கிறது. இதன் விலை ரூ. 11,800.

வட்ட வடிவ மேசை ஒன்றை





நம் கண்கள் வட்டமிடுகின்றன. அதில் வண்ண மரத்துண்டுகளைப் புதைத்து உருவாக்கிய, (Inlay work) சித்திர வேலைப்பாட்டைக் கண்டு வியக்கிறோம். ஆம், இராமாயணக் காட்சிகளை விளக்குகிறது இந்த (வி)சித்திர மேசை! இதன் விலை ரூ. 45,000. கர்நாடகத்தைச் சேர்ந்த கௌரய்யாவின் கைவண்ணம் இது.

ஓவியர் மாதவன் பிள்ளையின் வண்ண ஓவியங்கள் (oil paintings) கண்ணைக் கவர்கின்றன. ரூ. 2000 விலையுள்ள உமர் கய்யாம் சித்திரம் மனத்தைக் கவர்கின்றது.

திருமழிசையைச் சேர்ந்த டி. கே. மூர்த்தியின் சந்தன மரத்தாலான மிகமிக நுண்ணிய வேலைப்பாடான சிவதாண்டவம் காட்சியைச் சித்திரிக்கும் படைப்பினை இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டே இருக்கலாம். இவரது தந்தைதான் அரிசியால் உருவங்களைச் சமைத்திருக்கிறார்.

அங்கே இருப்பது என்ன? வெள்ளைக் குட்டி யானை ஒன்று நிற்கிறதே! ஆம். மைசூரைச்சேர்ந்த எம்.வி. முதலியார் உருவாக்கிய இந்த யானையின் விலை ஆயிரம் அல்ல, 9,500! இது விற்பனையாகிவிட்டது. மிக விரைவில் அமெரிக்காவுக்குச் செல்லவிருக்கிறது இந்த யானை!.





பார்வையில்லாதவர் படம் வரைய முடியுமா? அல்லது இரு கைகளும் இல்லாதவர்தான் படம் வரைய முடியுமா?

'முடியும்' என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறவர்கள் இரண்டு சிறுவர்கள்!

பார்வையற்ற சிறுவன் போட்ட படத்துக்கு முதல் பரிசும், கைகள் இரண்டும் இல்லாத சிறுவன் போட்ட படத்துக்கு இரண்டாவது பரிசும் கிடைத்தன!


# ஓவியத்தில் இல்லை ஊனம்

சென்னை அண்ணாசாலையிலுள்ள விக்டோரியா டெக்னிக்கல் இன்ஸ்டிடியூட் சார்பில், ஊனமுற்ற குழந்தைகளுக்கான ஓவியப் போட்டி பிப்ரவரி 20-ந் தேதி கில்டு ஆப் சர்வீஸ் மண்டபத்தில் நடந்தது.

இந்தச் சிறுவர்கள் சித்திரப் போட்டியில் 23 கல்வி நிலையங்கள் கலந்து கொண்டன. இவற்றின் மூலம் 77 சிறுவர்களும் 32 சிறுமிகளும் கலந்து கொண்







டார்கள். இவர்கள் அனைவரும் ஊனமுற்ற குழந்தைகளாகும். போட்டியில் பங்கு கொண்ட 12 கல்வி நிலையங்கள் மூலம் 20 சிறுவர்களும், 5 சிறுமிகளும் பரிசு பெற்றார்கள்.

இவர்களுள் முதல் பரிசான ரூ. 500ஐ தட்டிச் சென்றவன் தான், சென்னை அடையாறு செயின்ட் லூயிஸ் காது கேளாதோர், பார்வையற்றோர் பள்ளியைச் சேர்ந்த பி. மகாதேவன். 14 வயதான இவன் இரு கண் பார்வையற்றவன்.

''நான் முதன் முதலாக இந்தப் போட்டியில் கலந்து கொண்டேன். எடுத்த எடுப்பிலேயே நான் முதல் பரிசு பெற்றதற்குக் காரணம் எனக்குப் பாடம் மட்டுமல்ல படம் வரைவதற்கும் பயிற்சி தந்த ஆசிரியர் திரு ஏ. எஸ். நடராஜன் அவர்களேயாவர்'' என்று கூறும் அம்மாணவன், மெழுகு கலர் பென்சிலை உபயோகித்துப் படம் வரைந்துள்ளான். ஒரு சாலை-பஸ் செல்கிறது- ஆடு, மாடுகளை ஒருவன் ஓட்டிச் செல்கிறான்- இந்தச் சித்திரம் தான் முதல் பரிசு பெற்றது.

இந்தச் சிறுவனால், வண்ணம் கொடுக்க எப்படி முடிந்தது?

''எனக்குக் கொஞ்சம் கொஞ்சம் லேசாக ஏதோ தெரிகிறது. ஆனால், அது என்ன வண்ணம் என்று மட்டும் தெரியவில்லை'' என்று கூறும் இம்மாணவன் 6வது படிக்கிறான். பிறவியிலேயே பார்வை இழந்தவனாம்.

இந்தப் போட்டியில் 2-வது பரிசு பெற்ற சிறுவன்தான் சுப்பிரமணி. சென்னை அறிஞர் அண்ணாநகர் ''மித்ரா'' நிறுவனத்தைச் சேர்ந்த இவனுக்கு, இரு கைகளும் கிடையாது. பிறகு எப்படிப் படம் வரைந்தான்?

தனது வலது காலில், பிரஷ்ஷைப் பிடித்து வரைந்திருக்கிறான்!

படம் வரைவது மட்டுமல்ல, சாப்பிடுவதும் காலில்தான்! கால் விரல் இடுக்கில் ஸ்பூனைப் பிடித்துச் சாப்பிடுவதைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. சாப்பிட யாராவது உதவி செய்தால், வேண்டாம் என்று தடுத்து விடுகிறானாம் அவன்!

போட்டியில் கலந்து கொண்ட-பரிசு பெற்ற இந்த ஊனமுற்ற குழந்தையைப் பார்க்கும்போது, **அவர்கள் உள்ளத்தில் மட்டுமல்ல ஓவியத்திலும் இல்லை ஊனம் என்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது''**

மகாத்மா காந்தியடிகளின் நூற்றாண்டு விழா நினைவுப் பரிசு வழங்கும் விழா மார்ச் 11-ந் தேதி நடந்தது.

சென்னை உயர்நீதி மன்றத் தற்காலிகத் தலைமை நீதிபதி திரு பு.ரா. கோகுலகிருஷ்ணன் அவர்கள் பரிசுகளை வழங்கினார். அவர் பேசுகையில், ''தமிழகத்தில் உள்ள சிறந்த கைவினைக் கலைஞர்களைத் தெரிந்தெடுத்து, அவர்களுக்குத் தேவையான ஊக்கம் கொடுத்தால், கலைத்துறையில் தமிழகம் உலகத்திலேயே முன்னணி நிலை வகிக்கும்'' என்றார்.

இவ்வாண்டு நடந்த போட்டியில் திருமழிசையைச் சேர்ந்த இளைஞர் திரு டி.கே. மூர்த்தி முதற்பரிசு பெற்றார். அதற்கான இரண்டாயிரம் ரூபாயும், சான்றிதழும் அவருக்கு வழங்கப்பட்டன.

சந்தன மரத்தாலான சிவ தாண்டவக் காட்சியை மிக நுண்ணிய வேலைப்பாட்டோடு சித்திரித்தமைக்காக இவர் இப்பரிசைப் பெற்றார். இதைச் செய்துமுடிக்க எட்டு மாதங்கள் பிடித்ததாம்.

தென் மாநிலங்களைச் சேர்ந்த திருவாளர்கள் இக்பால் உசேன், பி.பி. சுரேந்திரநாத், கே. தர்மாச்சாரி, ரவீந்திரநாத் சிட்டிபாபு, வி. மாதவன் பிள்ளை, பி. கௌரய்யா ஆகியோரின் சிறந்த கலைப்படைப்புகளுக்குத் தலா ரூ 1000 பரிசாக வழங்கப்பட்டது.

இந்த விழாவைத் துவக்கி வைத்து, நீதிபதி திரு எஸ். நயினார் சுந்தரம் அவர்கள், போட்டியில் கலந்து கொண்ட கலைஞர்களைப் பாராட்டிப் பேசினார்.



# தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு – ஒரு கண்ணோட்டம்

## டாக்டர்: பா. நடராஜன்

தொழில் வளர்ச்சி என்ற சொல்லானது வழக்கமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்ற பொருளில் அல்லாமல், இங்கே அதைவிட ஆழமான, விரிவான ஒரு கருத்தில் கொள்ளப்படுகிறது. தொழில் வளர்ச்சி என்பதன் நோக்கம் மேன்மேலும் தொழிற்பிரிவுகளைத் துவக்குதல் -அதிகமாக உற்பத்தி செய்தல் என்பது மட்டுமல்ல; அதனுடைய நோக்கமே ஆழமான பொருள் கொண்டதாகும். அதிக அளவில் உற்பத்தி என்பது அந்தந்த வட்டாரத்தின் சமசீரான வளர்ச்சியோடு ஒருங்கிணைந்து அமைந்திருக்க வேண்டும். வட்டாரத்தின் வளர்ச்சி தொழில்களின் வளர்ச்சி இரண்டும் கைகோத்து சீராக நடைபோடவேண்டும். அது மட்டுமல்ல; அதனால் உருவாக்கப்படும் வேலைவாய்ப்பு வசதி அளிக்கும் நோக்கமும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். எல்லாவற்றையும் விட, முக்கியமாக நாம் கவனிக்க வேண்டிய அம்சம்-இதற்கான திறவுகோல் மத்திய அரசின் கையில் உள்ளது என்பதேயாகும். எல்லாவற்றிலும் இறுதி முடிவு செய்வதும் மத்திய அரசே. நாட்டின் கொள்கை நடை முறைகளுக்கொப்பவே, மாநிலங்களின் தொழில் முன்னேற்றம் நிர்ணயிக்கப்படுகிறது. ஆகவே, தொழில்வளர்ச்சியில் இந்த மாநிலம் முந்தியுள்ளது; இந்த மாநிலம் பிந்தியுள்ளது என்று வரிசைப்படுத்திக் கூறுவதை அப்படியே அப்பட்டமாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஒரு மாநிலத்தின் தொழில் முன்னேற்றத்தினை இன்னும் விரிவான பரந்தஆய்வின் அடிப்படையின் கீழ்தான் துல்லியமாகக் கணிக்க முடியும்.

இப்பொழுது காற்றுவாக்கில் பரவலாக சொல்லப்படுகிற ஒரு கூற்று, தமிழகத்தின் வளர்ச்சி-தொழில் வளர்ச்சி அப்படியே ஸ்தம்பித்துப் போய் கிடக்கிறது என்பதாகும். தமிழகம் தொழில் வளர்ச்சிப் பாதையிலிருந்து தடம் புரண்டுவிட்டது என்ற ஒரு கருத்தும் நிலவிவருகிறது. இந்தக் குற்றச்சாட்டு ஒரு தலைப்பட்சமாகக் கூறப்படுகிறதென்று முழுக்க முழுக்க கூறுவதற்கில்லையென்றாலும், இந்தக் குற்றச்



சாட்டு, அளவுக்கு மீறியது; ஆராய்ந்து பாராமல் வாரி வீசப்படுகிற ஒரு குற்றச்சாட்டு என்று நான் கருதுகிறேன். ஆழ்ந்து , நிதர்னமாகச் சிந்தித்து நோக்கினால், உண்மை நிலை என்ன என்பதும், மாநிலத்தின் தொழில் வளர்ச்சியை நல்ல முறையில் சீர்தூக்கிப் பார்க்கவும் இயலும். மாநிலத்தின் தொழில் வளர்ச்சி என்பது நாட்டின் தொழில் வாய்ப்புகளுடன் பின்னிப் பிணைந்து இருப்பதைக் காண வேண்டும். உண்மையில் எத்தனைவிதமான கட்டுப்பாடுகளுக்கும் - நுண்ணிய சிக்கல்களுக்கும் மாநிலம் இத்துறையில் ஆளாக வேண்டியுள்ளது என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்கும்பொழுது தேசீய நீரோட்டத்திற்கொப்ப மாநிலம் கைகோத்து வந்துள்ளது என்பதே ஒரு சாதனை என்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.


*1950* முதல் *1960*வரையிலான காலகட்டத்தில் நமது மாநிலமானது 'தொழில் மும்மூர்த்திகள்' என்ற வரிசையில் மகாராஷ்டிரம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களோடு இணைந்து, நாட்டின் வேகமான தொழில் முன்னேற்றத்திற்கு அடிகோலியதாக அமைந்திருந்தது. 60-ல் சராசரி தொழில் வளர்ச்சி விகிதம் 6.2 சதவிகிதமாகும். நாட்டின் நிகரதொழில் உற்பத்தியில் 10 சதவிகிதம் அளவு தமிழகத்தில் உற்பத்தியாகியது. நாட்டின் பெரிய, சிறிய தொழில் உற்பத்திச் சாலைகளில் 11 சதவிகிதம் தமிழ்நாட்டில் மட்டும் இருந்தது.

பிரிட்டிஷ் ஆதிக்க நாட்களில், இந்த மாநிலம் பெற்றிருந்த அருமையான தொடக்க நிலை, பெரும் தொழில்கள், மின்சக்தி நிலையங்கள் பாசனத் திட்டங்கள் உருவாக்கித்தந்ததின் மூலம், பெருந்தொழில்கள் அமைப்பதற்கான அடித்தளங்களை உருவாக்கித் தருதல் ஆகியவற்றில் மைய அரசு காட்டிய தாராள மனப்பாங்கு, வேளாண்மைத் துறையிலிருந்து கிடைத்த நிலையான சுமுகமான உத்வி, எல்லாவற்றிற்கும் மேலாக, ஓரளவுக்குப் படித்த-தொழிற்பயிற்சி பெற்றிருந்த தொழிலாளர்கள், அவர்களை வழிநடத்திச் செல்ல கணிசமான அளவில் முதலீட்டாளர்கள் இந்த எல்லா அம்சங்களும் மாநிலத்தை அதனுடைய இயற்கையான தட்டுப்பாடுகளை வெற்றிகரமாக சமாளித்து வெற்றி காணவும், தொழில் வளர்ச்சிப் பாதையில் ஏறுநடை போடவும் உறுதுணையாக அமைந்திருந்தன.

### மாறுபட்ட அடித்தளம்

மேற்சொன்ன இந்தச் சாதகமான அம்சங்களின் விளைவாக,

இந்நாள் வரையில் நமதுதொழில் துறையில் ஆதிக்கம் செலுத்தி வந்த நெசவுத் தொழில்-ஆடைகள் தயாரிக்கும் தொழிலிலிருந்து மாறுபட்டு - பல்வேறு விதமான வேறு வேறு நவீனரகத் தொழில்களில் மாநிலம் தன் கவனத்தைத் திருப்பியது. பொறியியல், இரசாயனப் பொருட்கள், மின்னணுக் கருவிகள் உருவாக்கிடும் கூடங்கள் உருவாகத் தொடங்கின. மணலி, சென்னை, மேட்டூர்;




தூத்துக்குடி போன்ற இடங்களில் பெரிய பெரிய தொழிற்கூடப் பிரிவுகள் உருவாகி-நல்லதொரு அடித்தளம் அமைக்கப்பட்டு அதன் தொடர்பாக சிறுசிறு தொழில் பிரிவுகள் ,தொழில் பேட்டைகள் தோன்றலாயின. இராணிப் பேட்டை மற்றும் ஒசூர் பகுதிகளில் மலர்ந்துள்ள தொழில் வளர்ச்சி-அதில் நாம் பெற்ற வெற்றிகள் இவை மட்டுமே நமது மாநிலத்தை பஞ்சாப், அரியானா, குஜராத் போன்ற மற்ற மாநிலங்களைப் போல் தொழில் வளர்ச்சியில் சிறந்ததொரு முன்னோடி மாநிலம் எனப்பறை சாற்றிக்கொண்டிருக்கப் போதுமானவையாகும். ஆனால் இங்கே இந்தக் காலக்கட்டத்தோடு -இந்த மாநிலத்தில் ஒரு தேக்கம் ஏற்பட்டது. தொழில் மயமாக்குதல் என்பது அயராமல் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்க வேண்டிய ஒரு கடுமையான முயற்சி என்பது புரிந்து கொள்ளப்படாமல் - தேக்கம் ஒன்று ஏற்பட்டது.

தமிழகத்தில் தொழில் துறையில் வளர்ச்சி 1970க்கு மேலும் தொடர்ந்தது. இருந்தாலும், கடந்த பத்தாண்டுக்கால மத்தியில் நாடு முழுமைக்கான தொழில் முன்னேற்றத்தைப் பாதிக்கும் வகையில் ஏதோ ஒரு நலிவு நாட்டிலும்-இந்த மாநிலத்திலும் ஏற்பட்டுவிட்டதோ என்று எண்ணும் படியான நிலை உருவாகியது என்றே சொல்லலாம். தொழில் உற்பத்தியின் வளர்ச்சி 1974ல் உச்சகட்டத்தை அடைந்து,அதன் பிறகு பல்வேறு வேகமான தடுமாற்ற நிலைகள் ஏற்பட்டு விட்டன. 1979ல் இதன் அளவு 171ஆகக் குறைந்தது. 1974ல் இதன் அளவு 180 .அது மட்டுமல்ல; 70ல் மாநிலத்தின் தொழில் நிலை இவ்வளவு ஏற்றத்தாழ்வினைக் காணவில்லை. மாநிலத்தின் நிகர உற்பத்தியில் தொழில் பிரிவின் பங்கு 1970-71ல் 85.6 சதவிகிதம்;

### மந்தமான முன்னேற்றம்

இந்த மந்தமான முன்னேற்றத்துக்குப் பல்வேறு காரணங்களைச் சொல்லலாம்; சில மாநிலங்களிலேயே ஏற்பட்டவை; சில இந்த மாநிலத்துக்கு வெளியே ஏற்படுகின்றவையாகும். மத்திய முதலீடு படிப்படியாகக் குறைந்து விட்டது; இன்னும் அதிகமாகத் தேவைப்படுகிற மற்ற மாநிலங்களுக்கு மத்திய அரசின் முதலீடு திருப்பிவிடப்பட்டது. அடித்தள அமைப்பு முறையில் ஏற்பட்ட நெருக்கடிகள், தட்டுப்பாடுகள் மறுபடியும் தலைதூக்க ஆரம்பித்துவிட்டன. மின்சக்தி நிலைமை திருப்திகரமாக இல்லை. பொதுவாக, தனியார்துறையிலிருந்து எதிர்பார்த்த வரவேற்பு இல்லாமல் போய்விட்டது. அத்துடன், தொழில் உறவுகள் படிப்படியாகக் குறைந்துவிட்டன.

மத்திய அரசின் பங்கீடு குறைந்து அதனால் உருவாக்கப்



பட்ட மந்த நிலையை, மாநில அரசு எடுத்துக் கொண்ட பெரு முயற்சி-அதன் விளைவாக ஏற்படுத்தப்பட்ட சிறுசிறு தொழில் பிரிவுகள் கணிசமான அளவுக்கு நிறைவு செய்தன என்றேசொல்ல வேண்டும். எண்ணிக்கையிலும், உற்பத்தியிலும், வேலைவாய்ப்பு அளிப்பதிலும் - இந்த சிறு தொழில் பிரிவுகள் தொடர்ந்து தங்களுடைய நிறைவான பணியையாற்றிக் கொண்டு வந்துள்




ளன. வேலைவாய்ப்பு அளிப்பதில் இந்தியாவிலேயே அவை மற்ற மாநிலங்களை விட தலையாய இடத்தைப் பெற்றிருந்தன. அகில இந்தியாவில் 15 சதவிகித அளவினை அவை பெற்றிருந்தன. இந்தக்காலக்கட்டத்தில் தொழில் கூட்டுறவுகளின் வளர்ச்சியும் குறிப்பிடத்தக்கதாக அமைந்திருந்தது. தொழில் துறையில் புதுப்புது முயற்சிகளை மேற்கொள்வதற்காக சிப்காட், டிட்கோ, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சிட்கோ போன்ற நிறுவனங்களை மாநில அரசு உருவாக்கியது. இதன் விளைவாக, 60ஆம் ஆண்டின் வேகத்தை எட்டிப்பிடிக்க முடியாவிட்டாலும், தேர்ந்தெடுத்த பகுதிகளில் மாநிலம் தொடர்ந்து முன்னணியிலே நின்று வந்தது. தோல், மற்றும் தோலிலான பொருட்கள் உற்பத்தியில் அதன் பங்கு 70 சதவிகிதமாக அமைந்திருந்தது. மோட்டார் வாகனங்களுக்கான உதிரிக் கருவிகள், இயந்திரங்கள், இயந்திரக் கருவிகள் தயாரிப்பதில், மகாராஷ்டிரத்திற்கு அடுத்தபடியாக தமிழ்நாடு தான் அடுத்த இடத்தைப் பெற்றுள்ளது. 1975-76ல் மாநிலம் மொத்தம் 142 உரிமங்களைப் பெற்றது; நாட்டிலேயே இது இரண்டாவதாகும். 1978-79ல் தமிழகம் பெற்ற உரிமங்கள் 31 தான். இருந்தாலும் மாநிலங்களின் வரிசையில் இந்த எண்ணிக்கை மூன்றாவதாகும்.

## படிப்படியான சீரான முன்னேற்றம்

கடந்த இரண்டாண்டுகளாக, தொழில் துறையில்படிப்படியான சீரான முன்னேற்றத்தினை நாம் காண்கிறோம். மின்சக்தி நிலைமை அவ்வளவு தாறுமாறாக இல்லாமல்-ஓரளவுக்கு உதவிகரமாக இருக்கிறது. தொழில் உறவுகள் சீர்பட்டு உள்ளன. அத்துடன் விற்பனை வரியில் சலுகைகள் போன்ற தொழில் வளர்ச்சிக்கு தூண்டுகோலாக இருக்கக் கூடிய சில அறிவிப்புகளை கடந்த இரண்டாண்டுகளாக நிதிநிலை அறிக்கைகளில் கண்டோம். இவையெல்லாம் தொழில் வளர்ச்சிக்கு சாதகமானதொரு சூழ்நிலையை உருவாக்கிட உறுதுணையாக அமைந்தன. 1980ல் தமிழ்நாடு 37 தொழில் உரிமங்களைப் பெற்றது. 1981ல் ஜனவரியிலிருந்து சூன் வரையிலான இடைப்பட்ட காலத்திலும் மேலும் 14 உரிமங்கள் பெறப்பட்டன.

மற்ற மாநிலங்களைப்போலவே தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியின் எதிர்காலமும் -மாநிலம் எடுக்கின்ற முயற்சிகளோடு மட்டும் அல்லாமல் மத்திய அரசின் ஒதுக்கீட்டின் அளவையும் பொறுத்தே அமைந்திருக்கும். மின்சக்தி நிலைமை நிச்சயம் இதை முடிவு செய்கிற ஒன்றாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. நமது மாநிலத்தில் நீர் மின்திட்டங்களுக்கு இனிமேல் வழிவகை கிடையாது. ஆகவே அனல்மின் நிலையங்களையே நமது மாநிலம் சார்ந்துள்ளது. நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுதல் ஓரளவுக்கு நமக்கு உதவியாக இருக்கும். அணு மின் சக்தி என்பது நீண்ட நெடுநாட்களாகவே ஆசைக் கனவாகத்தான் இருந்து வருகிறது.



இப்படிப்பட்ட நேர்வுகளில், மத்திய அரசுக்கு முதலீடு செய்கின்ற பொறுப்பு இருந்தாலும், மாநில அரசுக்கு அவற்றை திறமையாக நிர்வகிக்கின்ற பொறுப்புள்ளது. சாண எரிவாயு வளர்ச்சிக்கு மாநிலத்தில் எதிர்காலம் பிரகாசமாக உள்ளது. இந்த வாய்ப்பை மாநில அரசு நழுவவிடக்கூடாது. நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

மிக அதிக அளவில் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை உள்ளடக்கியுள்ள சிறுதொழில் பிரிவுகளுக்கு பல பிரச்சனைகள் உள்ளன. உரிமங்களைப் பெறுதல்; மூலப் பொருட்கள் கிடைக்கப் பெறுதல்; கடன் தொகை கிடைக்கப் பெறுதல்போக்குவரத்து போன்ற பல பிரச்சனைகள் உள்ளன. இவையெல்லாம் தீர்க்க முடியாத பிரச்சனைகள் அல்ல; தன்னுடைய வழி வகைகளிலிருந்தே மாநில அரசு இவற்றிற்கெல்லாம் வழிவகை காணமுடியும்.

மேலும் சுமுகமான தொழில் உறவுகள், மேன்மேலும் பாடுபட தூண்டிவிடும் வரி அமைப்பு முறை, நிலம், நீர்மின்சக்தி போன்றவைகளை ஒதுக்குவதில் நடைமுறைகளை பேலும் இலகுவாக்குதல், உடனடியாக நடவடிக்கை எடுத்தல் இவற்றையெல்லாம் மாநிலமே செய்யமுடியும். மாநிலத்தின் தொழில்முயற்சிக்கு இந்த முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் மாநிலத்தின் தொழில்வளர்ச்சி ஓங்கிடவும், பல்கிப் பெருகவும் ஆக்கரீதியாக வெகுவாகப் பயன்படும். அதுமட்டுமல்ல, இப்படிப்பட்டதொரு சாதகமான சூழ்நிலை, வெளிமாநிலத்தவரையும் நம் மாநிலத்தில் தொழில் துவங்க ஈர்க்கக்கூடும்.


இருந்தாலும், இத்துணை முயற்சிகளினால் கிடைக்கப் பெறும் பயன் முழுமையாக இராது. ஓர் அளவினதாகவே இருக்கும். நமது நாட்டின் அமைப்பு முறையே அதற்குக் காரணம். இதற்குக் காரணம் நமது மாநிலத்தில் தொடர்ந்து தொழில் வளர்ச்சி நிலவவேண்டுமானால், குறைந்தபட்சம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒன்று என்ற அளவிலாவது பெரிய தொழில்கள் மையம் ஒன்று இருத்தல் அவசியம். சிறு தொழில் பிரிவுகள் துணைப்பிரிவுகளாக இத்தொழில் மையத்துடன் இணைக்கப்படுமேயானால், இச்சிறு தொழில் பிரிவுகள் மேன்மேலும் வளரவும், செழிக்கவும் அதிகமான வாய்ப்பு உண்டு. இந்தப் பெரிய தொழில்கள் பொதுத்துறையில் தான் இருக்க வேண்டுமென்ற கொள்கை அமல்



செய்யப்படுமேயானால், அரசின் மிகப் பெரிய அளவிலான வாய்ப்புகளும் வசதிகளும் இருந்தாலுங்கூட, காணுகின்ற முன்னேற்றம் கணிசமான அளவில் இராது. கூட்டுத்துறையே வளர்ச்சிக்கு சரியான வழி. ஆகவே அத்துறையை ஊக்குவிக்க வேண்டும் என நான் கருதுகிறேன். சமுதாய இலட்சியங்களையும் முதலாளித்துவ நோக்கங்களையும் இணைப்பது என்பது மிகமிக சிரமமான ஒன்றாகும். ஒன்றோடொன்று இணைந்தே இருக்கும் நம்முடைய கூட்டுப் பொருளாதார வாழ்வில் இதைத்தவிர வேறு வழியில்லை.

நாம் விரும்பின அளவுக்கு கடந்த சில ஆண்டுகளில் நமது மாநிலத்தின் தொழில் வளர்ச்சி மகத்தானதோர் வளர்ச்சியாக இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால், எந்தக் காரணத்தை முன்னிட்டும் நமது தொழில் வளர்ச்சி ஸ்தம்பித்துப் போய் விட்டது; இருளடைந்து போய் ஒன்றுமே இல்லாமல் போய்விட்டது என்று மட்டுமே யாரும் சொல்லிவிட முடியாது. இன்றுள்ள மாநில அரசின் வழிவகைகள், முயற்சிகள் இவற்றைக் கொண்டு நிலையை மேலும்மேம்பாடடையச் செய்ய முடியும். இந்த வகையில், ஒரு மகத்தான வேகமான கண்ணோட்டம்-எண்ணம்-நோக்கம் நமக்கு மிகமிகத் தேவை. அதுதான் நாம் ஆற்றிட வேண்டிய பணி - நடந்து செல்ல வேண்டிய பாதை.

[Eastern Economist தமிழ்நாடு சிறப்பிதழில் (9-10-81) வெளிவந்த ஆங்கிலக் கட்டுரை.தமிழாக்கம் வ.சம்பந்தம்]



# சட்டமன்றத்தில் திரட்டிய தகவல்கள்

**தொகுப்பு: மருது**

1980-81ஆம் ஆண்டில் தமிழகத்தில் உற்பத்தியான பனை வெல்லத்தின் அளவு 59,645 மெட்ரிக் டன்களாகும். மதிப்பு ரூ. 1,257.77 இலட்சம். தமிழகத்திலிருந்து அமெரிக்காவுக்கு 1979-80ல் பரீட்சார்த்தமாக 37 டன் பனை வெல்லப் பாகு அனுப்பப்பட்டது.

* * * *

மத்திய அரசு 5-1-81 நாளிட்ட தனது அறிக்கையில் தமிழ்நாட்டிற்கு 50 அகில இந்திய சுற்றுலா டாக்சி உரிமங்களை வழங்க அனுமதித்தது. இந்த உரிமங்களைக் கோரி 346 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இவற்றை மாநில போக்குவரத்து அதிகாரி பரிசீலித்து 11-11-81 அன்று தகுதி வாய்ந்த 50 நபர்களுக்கு உரிமங்கள் வழங்க உத்தரவிட்டுள்ளார்.

* * * *

போக்குவரத்துக் கழகங்களின் பழைய பேருந்துகளை மானிய விலையில் பள்ளிகட்கு விற்கும் பொருட்டு எல்லாப் போக்குவரத்துக் கழக இயக்குநர்களுக்கு அரசு அறிவுரை வழங்கியுள்ளது.

* * *

சட்டக் கல்லூரியில் பயிலும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு மாநில அரசுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாணவருக்கும் சென்னையில் ரூ. 70 வீதமும் மாவட்டங்களில் ரூ. 65 வீதமும் உண்டி உறைவிடத் தொகை வழங்கப்படுகிறது. மத்திய அரசு உதவித் தொகை திட்டத்தின்கீழ் தற்பொழுது ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ரூ. 80 முதல் 100 வரை பராமரிப்புத்தொகை வழங்கப்படுகிறது. மேற்படி உண்டி உறைவிடத்தொகையை உயர்த்தி மத்திய அரசு சமீபத்தில் ஆணையிட்டுள்ளது. இதன்படி ஒவ்வொரு மாணவருக்கும் ரூ. 125 முதல் ரூ. 140 வரை உதவித் தொகை கொடுக்கப்படும். இவ்வாணை ஜூலை 1981 முதல் அமல்படுத்தப்படுகிறது.

* * *

குடிசை வாசிகளின் சிரமங்களைப் போக்க சாதாரண மின் பயனீட்டாளர்களைப் போல் அல்லாமல் குடிசை வாசிகள், பிரிவு அலுவலகத்தில் இதற்கென அமர்த்தப்பட்டுள்ள வணிக உதவியாளர்களிடம் நேரடியாக மின் கட்டணத்தைச் செலுத்தலாம். "அட்டைப்பட்டியல்முறை" முறையாக அமலாக்கப்பட்ட பின் குடிசை வாசிகளிடம் அந்தந்த இடத்திலே பணியாற்றும் லைன் மேன்கள் மூலம் மின் கட்டணம் வசூலிக்கலாமா என்பது பற்றி மின் வாரியம் பரிசீலிக்கும்.

* * *

தமிழ்நாட்டின் மின்சாரப் பற்றாக்குறையினால் உச்சநேர மின் விநியோகம் நெருக்கடி ஏற்படுவதைத் தடுக்க எரி வாயு மின் உற்பத்தி இயந்திரங்கள் சிலவற்றை நிறுவ ஒவ்வொன்றும் 50 மெகாவாட் திறன் கொண்ட ஆறு கியாஸ் சுழலி மின் உற்பத்தி நிலையங்கள் ரூ. 112.6 கோடி செலவில் நிறுவ மைய அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

* * *

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள காஞ்சீபுரம் மற்றும் அதனைச் சார்ந்த பகுதிகளில் பட்டு வளர்ப்பினைப் பெருக்குவதற்கென்று தனியாகத் திட்டம் ஏதும் இல்லை. ஆனால் தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தப்படும் நவீன பட்டுவளர்ப்புத் திட்டங்கள் இப்பகுதியிலும் அமல்படுத்தப்படுகின்றன. மேலும் இப்பகுதியில் உள்ளபட்டு விவசாயிகளுக்கு நவீன பட்டுவளர்ச்சிப் பயிற்சி கிடைக்க காஞ்சீபுரத்தில் முன்னோடி மற்றும் சேவை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றது.

* * *

பழுப்பு நிலக்கரி தாரிலிருந்து சாலை பிணைப் பொருள் தயாரிப்பதற்கான சோதனைகள் நெடுஞ்சாலைஆராய்ச்சிநிலையத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. பிணைப் பொருள் தயாரிக்கும் முன்னோடி இயந்திரம் நிறுவப்பட்டு வெள்ளோட்டம் விட உள்ளது.

* * *

தேசிய நெடுஞ்சாலை எண். 45,4 மற்றும் 5-ஐ இணைத்து சென்னை நகருக்குப் புறவழிச் சாலை அமைக்கும் வேலையின் மதிப்பு 1980-81 வீதங்களைத் தழுவி ரூ. 995இலட்சம் ஆகும். இச்சாலையின் மாற்றப்பட்ட நேர்பாடானது இந்திய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டது. அது தற்பொழுது மத்திய அரசின் [illegible]வின் பரிசீலனையில் உள் [illegible] இந்திய அரசால் ஒப்பளிக் [illegible] 1980-85 ஆறாவது [illegible] திட்டத்தில் ரூ. 240 [illegible] உரிமைக்காகவும்

மண் வேலைக்காகவும், வடிகால் வசதிக்காகவும் தொகை கொடுக்கப்பட்டுள்ளது. நில உரிமை பெறல் மதிப்பீடு முடிவாகும் தருவாயில் உள்ளது.

* * * *

தற்போது பதவியில் உள்ள உடல் நலப் பணியாளர்களைப் பல நோக்குத் திட்டப் பணியாளர்களாக அமர்த்துவதற்காக 40 ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 31-12-80 முடிய மொத்தம் 3633 உடல் நலப் பணியாளர்கள் (ஆண், பெண்) பயிற்சி பெற்று இருக்கிறார்கள். மேலும் மேற்கண்ட 9 தலைமை மாவட்ட மருத்துவமனைப் பள்ளிகளில் ஆண்டுதோறும் 780 பேர்கள் (பெண்கள்) பயிற்சி பெறுகிறார்கள்.

* * *

தமிழ்நாட்டில் உள்ள மொத்த தொழுநோய் சிகிச்சை நிலையங்களின் எண்ணிக்கை 320 ஆகும்.

* * *

தமிழகத்தில் தேசியமயமாக்கப்பட்ட வழித்தடங்கள் 1,198. தனியார் வசம் உள்ள வழித்தடங்கள் 3,771.

* * *

தமிழ்நாட்டில் காது கேளாத அனைவருக்கும் காது கேட்கும் கருவிகள் இலவசமாக வழங்குவதற்கு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இதற்கான விவரங்கள் மாவட்ட ஆட்சியாளர்களிடம் கேட்கப்பட்டுள்ளன. அவை கிடைக்கப் பெற்றவுடன் ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும்.

* * *

தமிழ்நாடு திரையரங்குக் கழகம் கிராமப் பகுதிகளில் திரையரங்குகள் கட்டுவதற்கு 81 நபர்களுக்கு டிசம்பர் 1981 முடிய ரூ. 87.25 இலட்சம் கடன் வழங்கியுள்ளது.

* * *

இலங்கையில் உள்ள சர்வதேச கண் வங்கி மூலம் பெறப்படும் விழிகளைத் தவிர, மற்றபடி வேறு நாடுகளிலிருந்து விழிகளை இறக்குமதி செய்யும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

* * *

டாக்சி மற்றும் ஆட்டோ ரிக்ஷாக்களில் பொருத்தப்படும் மீட்டர்களில் உள்ள குறைபாடுகளை நீக்குவதற்காக, மீட்டர் திருத்துபவர்களுக்கு (மெக்கானிக்) அதிகாரச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. அதிகாரச் சீட்டு பெறாதவர் மீட்டர் சரி பார்க்கும் பணியில் ஈடுபட முடியாது. அதிகாரச் சீட்டு பெற்றவர்களுக்கு தனிப்பட்ட மீட்டர் முத்திரைகள் வழங்கப்படும். அவர் சரி செய்த மீட்டரின் மீது அவரின் முத்திரை இடப்படும். பின்னர் அந்தப்பகுதி வட்டாரப் போக்குவரத்து அலுவலர் மீட்டரை ஆய்வு செய்து அவரின் முத்திரையும் மீட்டர்மீது இடப்படும். இதில் அதிகாரச்சீட்டு பெற்ற மெக்கானிக் ஏதேனும் முறைகேடுகளில் ஈடுபட்டதாக தெரியவந்தால் அவரின் அதிகாரச் சீட்டு ரத்து செய்யப்படும். மேற்கூறிய அரசின் கொள்கையின் அடிப்படையில் தமிழ்நாடு மோட்டார் வண்டிகளின் விதிகளில் திருத்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்முறை முதலாவதாக சென்னை நகரில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

மேலும் 'மீட்டர்' குறைபாடுகளைக் கண்டறிந்து தவறு செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கும்படி போக்குவரத்து மற்றும் காவல்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

* * *

விபத்துக்களைக் குறைப்பதற்கென கீழ்க்கண்டவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

1. விபத்தின்றிப் பணி புரியும் ஓட்டுநர்களுக்குப் பரிசுத் தொகை அளிக்கப்படுகிறது.
2. விபத்துக்களில் சம்பந்தப்படும் ஓட்டுநர்களுக்குப் பாதுகாப்பு அறிவுரை வகுப்புகள் நடத்தப்படுகின்றன.
3. விபத்துக்களில் சம்பந்தப்படும் ஓட்டுநர்கள், ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிக்கு மறுபயிற்சி பெற அனுப்பப்படுகின்றனர்.
4. போக்குவரத்து விதிகளை மீறும் ஓட்டுநர்கள் தண்டிக்கப்படுகிறார்கள்.
5. அதிக வேகத்தைக் கட்டுப்படுத்த ''டைசிகன்'' என்ற வேகக் கட்டுப்பாட்டுக் கருவிகள் பேருந்துகளில் பொருத்தப்பட்டு வருகின்றன.

* * *

தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு முதல் உதவிப் பயிற்சியை 4, 5, 7 வகுப்புகளில் அறிவியல் பாடத் திட்டத்தின் கீழ் முதலுதவியைப் பற்றிக் கற்றுத்தரப்படுகிறது. மேலும் மாணவர்களின் உபயோகத்திற்கென முதலுதவிப் பொருள்களும் மருந்துகளும் அடங்கிய முதலுதவிப் பெட்டி வைத்தல்; ஒவ்வொரு வகுப்புக்கும் முதலுதவிக்கென ஒரு முதலுதவிப் பெட்டி வைத்திருத்தல்; முதலுதவி அவ்வப்போது செய்ததைக் குறித்து ஒரு குறிப்புப் புத்தகம் வைத்திருத்தல் ஆகியவை 7-ம் வகுப்பிலேயே பயிற்றுவிக்கப்படுகின்றன. எட்டாம் வகுப்பு ஆங்கிலப் பாட நூலிலும் முதலுதவி பற்றிய பாடம் ஒன்று உள்ளது.

* * * *

கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படாமல் இருக்க தமிழக அரசு ஜூன் 1981 முதல் 10,000 மோட்டா ரக நூல் பேல்களை தேசிய பஞ்சாலைக் கழகத்தின் கீழ் இயங்கும் நூற்பாலைகள் மூலம் நியாய விலையில் விநியோகம் செய்யுமாறு மத்திய அரசின் கீழ் இயங்கும் கைத்தறி வளர்ச்சி ஆணையாளரைக் கேட்டுக் கொண்டது. தனியார் துறையில் உள்ள நெசவாளர்களுக்கு மோட்டா ரக நூல் விநியோகிப்பதற்காக மத்திய அரசு ஒரு திட்டத்தை வகுத்து அமல்படுத்தியது. அதன்படி ஜூலை 1981 முதல் 4565 பேல் மோட்டா ரக நூல் ஒதுக்கீடு பெறப்பட்டு தனியார்துறை நெசவாளர் சங்கங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

* * * *

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தமிழ் நூல்களை வெளியிடுவதற்காகப் புத்தக வெளியீட்டுத்துறை ஒன்றை ஏற்படுத்தி இயக்குநர் ஒருவரை நியமனம் செய்து தனியாக அச்சகம் அமைத்து இப்பணியினை ஆற்ற, தொடக்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.

* * *

காவிரி நதியின் டெல்டாப் பகுதியை நவீனப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. ரூ. 366.60 கோடிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் மூலமாக உலக வங்கியின் நிதி உதவி கோரலாமா என்பதும் அரசின் ஆய்வில் உள்ளது.

* * * *

கரும்புச் சாற்றிலிருந்து சர்க்கரை எடுக்கப்பட்ட பிறகு அதி

ிருந்து உண்டாகும் கழிவுப் பொருள்களில் ஒன்றான மொலாசஸிலிருந்து எரிசாராயம் தயாரிக்கப்பட்ட பின்பு அதனை பெட்ரோலுக்குப் பதிலாக 'எத்னால்' என்கிற பெயரில் அரசு மோட்டார் வாகனங்களுக்கு உபயோகிக்கலாம் என்கிற கருத்து அரசின் பரிசிலனையில் உள்ளது.

தமிழக அரசுக்குச் சொந்தமான மூன்று வண்டிகளை எத்னாலை எரிபொருளாக உபயோகித்து ஆராய்ச்சி முறையில் ஓட்டுவதற்கு முடிவெடுக்கப் பட்டுள்ளது.

* * * *

இராமநாதபுரம் மாவட்டம் சிவகங்கை அருகில் 600 ஏக்கர் நிலப் பரப்பில் கிடைக்கும் கிராபைட் கனிமத்தை அகழ்ந்தெடுத்து, அதனைப் பயன்படுத்தி கிராபைட் சம்பந்தப்பட்ட உற்பத்திப்பொருட்களைத் தயாரிக்கத் தொழிற்சாலை நிறுவும் திட்டம் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் பரிசீலனையில் இருந்து வருகின்றது.

* * * *

தமிழ்நாடு மின்சார வாரியம் சாதனை போனஸ் திட்டத்தைச் செயல்படுத்திவருகிறது.

1. மாதாந்திர அனல்மின் உற்பத்தி ஊக்கப்படி

2. பட்டியல் தயாரிக்கும் உதவியாளர்களுக்கும், கணக்காளர்களுக்கும் வழங்கப்படும் ஊக்கப்படி

3. காசாளர்களுக்கும்-துணை காசாய்வாளர்களுக்கும் வழங்கப்படும் ஊக்கப்படி இத்திட்டம் முறையே 1-4-78, 1-1-81 மற்றும் 1-4-81 முதல் அமலாக்கப்பட்டுள்ளது.

* * * *

நாகர்கோவிலில் வானொலி நிலையம் அமைப்பதற்கு வானொலித் துறைக்குத் தகுந்த இடத்தை ஒதுக்கீடு செய்வதற்கு, மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. கேட்கப்பட்டிருக்கும் நிலம், மற்றும் அதிலுள்ள கட்டடங்களின் விலை மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்படும்.

* * * *

1979-80, 1980-81 மார்ச் முடிய தமிழகத்தில் விளையும் சின்ன வெங்காயம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு வருமாறு :

| | மெட்ரிக் டன்கள் |
|---|---|
| 1979-80 | 5199.06 |
| 1980-81 | 7138.60 |

கூட்டுறவு விற்பனைச் சங்க அங்கத்தினர்களிடமிருந்தும் மற்றும் மண்டிகளிடமிருந்தும் வாங்கியதை ''நேபட்'' (N.A.F.E.D.) நிறுவனம் கொள்முதல் செய்து சிங்கப்பூர், மலேசியா, ஸ்ரீலங்கா முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.

* * * *

நீலகிரி மாவட்டத்தில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மழைத் தண்ணீரைத்தடுத்து சிறு குட்டைகள் அமைக்கும் பணிகள் நடந்து வருகின்றன. மற்றும் ஒருங்கிணைந்த மலை வாழ் மக்களின் மேம்பாட்டுத் துணைத் திட்டத்தின் கீழ் வட ஆர்க்காடு, சேலம், திருச்சி ஆகிய மாவட்டங்களில் மலைப் பகுதிகளில் மழைத் தண்ணீரைத் தேக்கிக் குட்டைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் நீர்பிடிப்புப் பகுதிகளில் செயல்படுத்தப்படும் மண் வளப் பாதுகாப்புத் திட்டப் பணிகளில் மழைக்கால வெள்ள வேகத்தைக் கட்டுப்படுத்த ஓடைகளின் குறுக்கே செக்டேம்கள் தேவையான இடங்களில் கட்டப் படுகின்றன.

* * * *

தர்மபுரி மாவட்டம் போச்சம் பள்ளியில் உள்ள தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்தின், சூரியகாந்தி எண்ணெய்த் தொழிற்சாலையில் கடலெண்ணெய் தயாரிக்க மைய அரசு ஜூலை 1981-ல் அனுமதி வழங்கியுள்ளது. நிலக்கடலைப் பருவத்தில் அவற்றை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கொள்முதல் செய்து கடோலா என்ற பெயரில் சுத்திகரிக்கப்பட்ட கடலெண்ணெய் தயாரித்து விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

* * * *

கிராமப்புறங்களில் பெரிய அளவில் மாட்டுச் சாண எரிவாயு உற்பத்தி செய்வதற்கு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 35,000 சாண எரிவாயு அமைப்புக்களை நிறுவத் திட்டமிட்டுள்ளது. அவற்றில் நடப்பு ஆண்டில் 3,500 அமைப்புக்களை ஏற்படுத்தும்.

தொழில் வணிகத் துறையில் இருந்த பாய் நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், காதி வாரியத்தின்கீழ் கொண்டு வரப் பட்டுள்ளன. பாய்நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கடனுதவி வழங்கி வருகிறது.

* * * *

சேலம் மாவட்டத்தில் 19 கிராமிய நூற்பு நிலையங்கள் செயல்படுகின்றன. கதர் கிராமத் தொழில் வாரியம் கீழ்க்கண்ட நான்கு இடங்களில் நூற்பு நிலையங்களைத் துவங்கிட உத்தேசித்துள்ளது.

1. கோவில்பட்டி,
2. தார மங்கலம்,
3. தோப்பூர்,
4. முத்துகாபட்டி.


* * * *

இந்த அரசு செயல்படுத்தி வரும் முற்போக்குத் திட்டங்களில் ஒன்று, ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் பழங்குடியினர் சமூக, பொருளாதார மேம்பாடுற்று, சமய வாழ்வில் முழு அங்கம் வகிக்குமளவிற்கு அவர்கள் உயர்த்தப்பட வேண்டும் என்பதாகும். இந்த அடிப் படையில், தற்சமயம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநரால் நிருவகிக்கப்பட்டு வரும் பள்ளிகள் அனைத்தையும் கல்வித்துறை நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரவேண்டுமென்ற கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

* * * *

மூன்றாவது ஊதியக்குழுவின் பரிந்துரைப்படி உடற்கல்வி ஆசிரியர்கள் நிலை-1 மற்றும் நிலை 2-ல் உள்ள ஊதிய வேறுபாடுகள் நீக்கப்பட்டு ஒரே ஊதியம் வழங்கப்படுகிறது. இந்த சம்பள விகிதமும் இடைநிலை ஆசிரியர்களின் சம்பள விகிதமும் தற்போது ஒரே மாதிரியானதால் இடைநிலை ஆசிரியர் எவரும் உடற் பயிற்சி ஆசிரியராக நியமனம் பெற, சாதாரணமாக விரும்ப மாட்டார்கள்.

இடைநிலை ஆசிரியர்கள் பி. ஏ. பட்டமும் பி. எட். பட்டமும் பெற்றிருந்தால் அவர்கள் உடற்கல்வி இயக்குனராக உயர் நிலைப் பள்ளிகளில் நியமனம் பெற விதிகள் இடமளிக்கின்றன.



# இல்லாதார்க்கும் இயலாதார்க்கும் -இலவசச் சட்ட உதவி

-அ.ம. விநாயகம்

**வா**ய்ப்பு வசதியற்ற ஏழை மக்களுக்கு நீதி கிடைப்பதில் சம வாய்ப்பு அடைவதை உறுதிப்படுத்த வேண்டிய கடமை அரசுக்கு உண்டு. ஆகவே சட்ட உதவியை நாடுவது மக்களின் உரிமையாகும். இது நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் 39-ஏ விதியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. தமிழக அரசு தனது கடமையை நிறைவேற்றுவதற்காக, தமிழ்நாடு மாநிலச் சட்டஉதவி ஆலோசனைக் கழகத்தை ஏழை எளிய மக்களுக்காகவே நிறுவியுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுக் காலமாக இந்த நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இக்கழகத்தின் கிளைகள் நீதிமன்றங்கள் அமைந்துள்ள ஒவ்வொரு இடத்திலும் உள்ளன. இக்கழகத்தில் உதவி பெற விரும்புவோர் தத்தம் குடியிருப்பின் அருகில் உள்ள நீதிமனறக் கட்டடத்தில் அமைந்துள்ள கிளை அலுவலகத்தை அணுகலாம்; ஏழை எளியோர்களின் பிரச்சனைகள் எதுவானாலும் இங்கே மனுச் செய்து தீர்வுக்கு முயலலாம். சாலை விபத்துக்கள் நமது நாட்டில் மிகவும் அதிகம். (தமிழ்நாட்டில் குறிப்பாக மற்ற மாநிலங்களைவிட அதிகம்) ஒவ்வொரு ஆண்டும் நேர்கின்ற சுமார் 20,000 சாலை விபத்துக்களில், உயிர் இழப்போ, படுகாயமோ 5,000க்கு மேல் ஏற்படுகிறது.

1981ஆம் ஆண்டில் சென்னை நகரில் நேர்ந்த 6,086 விபத்துக்களில் உயிர் இழந்தோர் எண்ணிக்கை 364, படுகாயமுற்றோர் எண்ணிக்கை 593. இந்த விபத்துக்களில் ஏழை மக்கள் தான் அதிகம் இரையாகிறார்கள். இறந்தவர்கள் குடும்பத்திற்கோ, காயமுற்றோர்க்கோ இழப்பபீடு பெறச் சட்டத்தில் வழி உள்ளது. ஆனால் இழப்பீட்டுத் தொகையைப் பெறுவதில் ஏழை மக்களுக்கு இருக்கும் சிக்கல்களைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களுக்கு முழு இழப்பீட்டுத் தொகை கிடைக்காதவாறு தரகர்களும் சுயநலவாதிகளும் தலையிடுகின்றனர். ஆகவே ஏழை மக்களின் துயரத்தைப் போக்கும் பொருட்டுத் தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவிக் கழகம் மக்களுக்கு துணை நிற்கத் திட்டமிட்டுள்ளது. மோட்டார் விபத்துக்களில் உயிர் இழந்தோர், காயமுற்றோர் ஆகியோர்க்கு நீதிமன்றங்களின் மூலமாக ரூபாய் 32,00,000 இழப்பீட்டுத் தொகையைச்சட்ட உதவிக் கழகம் இதுவரை பெற்றுத் தந்துள்ளது.

தமிழ்நாட்டில் விபத்துக்களை ஆராயும் காவலர்கள் இழப்பீட்டு மனுவைத் தயாரித்து இழப்பீடு கோரும் மனுதாரிடம் கையொப்பம் வாங்கி நீதிமன்றத்திற்கு அனுப்பச் செய்ய, சட்டத்தின் கீழ் ஆணையுள்ளது. இத்தகைய மனுக்களை நீதிமன்றத்திற்கு அனுப்பும் போது ஒரு நகலைச் சட்ட உதவிக் கழகத்திற்கும் அனுப்ப வேண்டும் என்பது ஆணை. மேற்படி மனுவை நீதிமன்றத்தில் 180 நாட்களுக்குள் தாக்கல் செய்ய வேண்டுமென்று சட்டத்திலிருந்த போதிலும், பாதிக்கப்பட்டவர்களின் பரிதாப நிலையைக் கருத்தில் கொண்டு கருணை அடிப்படையில் காவலர் அதிகாரிகள் தனிக் கவனம் செலுத்தி விபத்து நடந்த 15 தினங்களுக்குள்ளாகவே சம்பந்தப்பட்ட ரிகார்டுகளையும் மனுவையும் பெற்று நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது. இந்தப் பணியைக் காவலர்கள் மக்களிடம் கூறுவதோடு இலவசச்சட்ட உதவி இயக்ககத்தினால் கிட்டும் சலுகைகளையும் எடுத்துரைத்து அன்புடன் பணியாற்ற வேண்டியது அவசியம். காவலர்கள் இந்தக் கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்கும் உரிமையும் மக்களுக்கு வேண்டும்.

சாலை விபத்துக்களினால் உயிர் இழந்தோர் அல்லது காயமுற்றோர் இழப்பீடு பெற வேண்

டுமாயின் காவலரிடம் சட்ட உதவிக் கழகத்தை அணுக உதவி நாடலாம். இல்லையேல் அருகில் உள்ள தமிழ்நாடு சட்ட உதவிக் கழகத்தின் கிளையில் உள்ள அலுவலரை அணுகித் தகவல் தெரிவித்தால் அவர்கள் ஆவன செய்வார்கள்.



மேற்கண்ட அமைப்பின் கிளை நிறுவனமான செங்கற்பட்டு மாவட்ட சட்ட உதவிக் குழு, கோவளத்தில் 20.3.82ல் முகாம் நடத்தியது. தமிழ்நாடு மாநில சட்ட உதவிக் கழகத் துணைத் தலைவர் திரு என். கிருஷ்ணசாமி ரெட்டியார், தலைவர் திரு பி. ராமகிருஷ்ணன், தமிழ்நாடு மாநிலத் தலைமை வழக்கறிஞர் திரு ஆர். கிருஷ்ணமூர்த்தி, சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி (பொறுப்பு) திரு பி.ஆர். கோகுலகிருஷ்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதி திரு எஸ். மூர்தாசாபாசல் அலி அவர்கள் செங்கை மாவட்ட சட்ட ஆலோசனைக் குழுவின் சார்பில் வழக்காடிப் பெற்றதற்கான தொகையினை வழங்கிச் சிறப்புரை யாற்றுகையில் குறிப்பிட்டதாவது;

''குக்கிராம மக்கள் இப்பணிக் கழகம் மூலம் தகுந்த நேரங்களில் உதவியை நாடிப் பெறலாம். சட்டம் இயற்ற மக்கள் மன்றம் வேண்டும், மக்கள் மன்றத்தினால் இயற்றப்படும் சட்டங்களை முறைபடுத்த நிர்வாகம் வேண்டும். நிர்வாகத்திற்கு, சட்டத்தினால் ஏற்படும் சிக்கல்களுக்கு நீதிமன்றம் தான் பரிகாரம் காணவேண்டும். அப்பொழுதுதான் ஜனநாயகம் தழைக்கும். இன்ஷ்யூரன்ஸ் நிறுவனத்தில் உள்ளவர்கள் சட்டத்திலே உள்ள சில நடைமுறைகளைப் பயன்படுத்தி, கிடைக்க வேண்டிய ஈட்டுத் தொகையைச் சரிவரக் கொடுப்பதில்லை. ஒருவன் தான் செய்த குற்றத்திற்காகத்தான் தண்டனை பெறுகிறான். ஆனால் அவனுடைய குடும்பத்திற்கு என்ன பரிகாரம்? தண்டனையைக்குறைத்து பணத்தின் ஒருபகுதியை வழங்க வேண்டும்; நடைமுறையில் ஆற்றிவரும் இலவசச் சட்ட உதவிப் பணியை மிகவும் பாராட்டுகிறேன். பொது மக்கள் இப்படிப்பட்ட சட்ட உதவிக் குழுக்கள் மூலம் பயன் பெறலாம்''

**செங்கல்பட்டு மாவட்டத்தில் இலவசச் சட்ட உதவிக் குழுக்கள் செயல்படும் இடங்களும் பணிகளும்.**

1. செங்கல்பட்டு 2. காஞ்சிபுரம் 3. திருத்தணி 4. திருவள்ளுர் 5. பூவிருந்தவல்லி 6. பொன்னேரி 7. திருவொற்றியூர் 8. மதுராந்தகம் ஆகிய ஊர்களில் நீதிமன்றக் கட்டடங்களில் இலவச சட்ட உதவி அலுவலகங்களில் சட்டச் சிக்கல்கள், வாழ்க்கைச் சிக்கல்கள் பற்றிய மனுக்களை காலை 10.30 மணிமுதல் மாலை 5.00 மணிக்குள் கொடுக்கலாம்.

4.8.1980ல் வளக்கணாம் பூண்டி சுப்பிரமணி (22 வயது) என்பவர், தந்தை பெரியார் போக்குவரத்து பேருந்தில் சிக்கி சாலை விபத்துக்குட்பட்டு இறந்தார். கர்ப்பிணியாகஇருந்த அவரது மனைவி எல்லம்மாள் (19 வயது), அம்மையார் குப்பத்தில் நடந்த இலவசச் சட்ட உதவி முகாமில் கொடுத்த மனுவின் பேரில் அவருக்காக செங்கல்பட்டு சட்டஉதவிக் குழு இழப்பீட்டு வழக்குத் தொடர்ந்தது. போக்குவரத்துக் கழகம் எல்லம்மாளிடம் ரூபாய் ஐயாயிரம் இழப்பீடாகக் கொடுப்பதாகச் சொல்லி அவரது சம்மதத்தைப் பெற்றுவழக்கைத் திரும்பப்பெற சொல்லி கையொப்பம் பெற்றதாக எல்லம்மாள் சட்ட உதவிக் குழுவிற்கு 26.2.81ல் மனுச் செய்தார். மேற்படி குழு இதற்கு மறுப்புத் தெரிவித்து, மேற்கொண்டு வழக்கை நடத்தி 19.10.1981ல் எல்லம்மாளுக்கும் அவரது குழந்தைக்கும் ரூ. 30.000 இழப்பீட்டுத் தொகை வாங்கிக் கொடுத்திருக்கிறது. சாலை விபத்தில் சிக்கியவர்கள் தங்களுக்கு, சட்டப்படி கிடைக்கக் கூடிய, இழப்பீட்டுத்தொகை சுமாராக எவ்வளவு என்பதை அருகிலுள்ள சட்ட உதவிக் குழுவினரிடமிருந்து தெரிந்துகொண்டு சமரசமாகப் போவது நலம்.

விவசாயப் பொறி இயல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற வி. சந்திரனுக்கு ஓய்வு ஊதியத்தை ஒட்டு மொத்தமாக உடனடியாக ரூ. 5345 செலுத்த உத்தரவாயிற்று. பணம் பெறு முன் அவர் இறந்து விட்டார். மேற்படி உத்தரவை அதிகாரிகள் ரத்து செய்துவிட்டார்கள். செங்கல்பட்டு இலவச உதவிக் குழு மாத்தூரில் நடத்திய முகாமில் 16.11.1980-ல் சந்திரனின் மனைவி மனுக் கொடுத்தார். அதற்குத் தக்க சான்றுகள் காட்டி அந்த உத்தரவை ரத்து செய்து பழையபடி உத்திரவான ரூ.5345 ஐக் கொடுக்கும்படி 13.1.81ல் மேல் அதிகாரிகளிடம் மேற்படி குழு உத்தரவு வாங்கிக் கொடுத்தது. இது ஆதிதிராவிடவகுப்பைச் சேர்ந்த-காலஞ்சென்ற சந்திரனுடைய மனைவிக்கும் அவரது 7 குழந்தைகளுக்கும் பெரும் உதவியாக இருந்தது.

''இவ்வளவு பெரியகாரியத்தை மிகவும் சுலபமாக முடித்துத்தந்து இருக்கிறீர்கள். இதற்கெல்லாம் நாங்கள் அடிபணிந்து எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்'' என்று சந்திரன் மகன் மனோகரன் 24.2.81 ல் தெரிவித்து இருக்கிறார்.

சென்னைக்கு அருகிலுள்ள கௌதமபுரத்தில் வசிக்கும் ஒருவர் 1980 நவம்பரில் தன் மகளும் மருமகனும் மணவாழ்க்கை நடத்தாமல் பிரிந்திருப்பதைப் பற்றி உதவிகோரி எழுதினார். தந்தைக்குப் பார்வை யில்லை. நேரில் வந்துபோக வசதியற்றவர். செங்கல்பட்டு இலவச சட்ட உதவிக் குழுவினர் அவர்களுடைய மகள், மருமகன் இருவருடனும் உடனடியாகத் தொடர்பு கொண்டு நண்பர்கள் உதவியுடன் சமரசப் படுத்தி 28.11.1980 முதல் கணவருடன் மனைவியும் சேர்ந்து வாழ ஆவன செய்தது.

''இந்த விதத்தில் என்னை என் கணவர் அழைத்துச் சென்று என் வாழ்க்கையைத் தொடர உதவி செய்த தங்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று 27.11.1980-ல் மனைவி செங்கல்பட்டு உதவிக் குழுவிற்கு எழுதியிருக்கிறார்.

**தமிழ்நாடு மாநில சட்டஉதவி ஆலோசனைக் கழகம், இல்லாதோர்க்கும் இயலாதோர்க்கும் இலவசச்சட்ட உதவியை அளித்து அவர்தம் வாழ்வுக்கு ஒளி விளக்காகத் திகழ்கிறது என்றால் அது மிகையல்ல!**



# கவி கண்ட உலகு





தொழிலாளர் சிறப்பதனை உயர்த்திக் காட்டி
தொழிலாரலே வளமைதனை எங்கும் நாட்டி
எழிலார்ந்த சோலையிலே தமிழை மீட்டி
எந்நாளும் பகுத்தறிவால் மடமை ஓட்டி
விழிப்போடு தமிழகத்தில் புதுமை தீட்டி
வியக்கின்ற சமுதாயத் திறனைக் கூட்டி
மொழிக்காகத் தன்னுயிரை நாளும் வாட்டி
மெய்யுலகைப் பண்ணுலகில் கண்டார் வாழி!

ஒருவனுக்கு ஒருத்தியெனும் பண்பை நெய்து
ஒருகுலமாய் ஓரினமாய் அமைப்பைச் செய்து
பெருந்தீங்கு செய்வோரைச் சொல்லால் கொய்து
பெட்பில்லாச் சமுதாயம் திருத்தம் செய்து
அருநெஞ்சைப் பாலெனவே நாளும் சேர்த்து
அரியதொரு மாற்றத்தை நினைவில் தைத்து
கருமைநிறப் புற்கட்டு மீசை வைத்து
சிறுமையிலாச் சமுதாயம் கண்டார் வாழி!

கலப்புமண வாழ்வுக்கே வழிவ குத்தார்
கைம்பெண்ணின் திருமணத்தை ஆதரித்தார்!
நலமெல்லாம் தமிழுக்கே என்று ரைத்தார்
நயமான கொள்கைக்குப் பண்தொ டுத்தார்!
உலகத்தை அறிவுலகாய் ஆக்க வந்தார்
உதவாத புல்லர்களின் திமிரொ டித்தார்!
குலம்விளங்கக் குடும்பத்தில் விளக்கு வைத்தார்
குருட்டுமதி பெற்றவர்க்கு ஞானம் தந்தார்!

தேக்கிவிடும் அணைநீர்போல் பயனைத் தேக்கித்
தேவையிலாச் சாதிமதச் சண்டை நீக்கி
ஆக்கிவரும் செயலுக்கே திறனை ஊக்கி
ஆற்றலிலே அறிவுலகின் தீமை போக்கி
தாக்குகின்ற அறியாமை நோயைத் தாக்கித்
தமிழ்மானங் காத்திடவே பாட லாக்கி
போக்கற்ற நிலைதிருந்தப் பேனா தூக்கி
போரில்லாச் சமுதாயப் புரட்சி செய்தார்!

வீரத்தால் வீணர்களைத் திணறச் செய்தார்
வியப்பூட்டும் புரட்சிமழை பொழிய வைத்தார்
தீரத்தால் பகைமைதனைக் குனிய வைத்தார்
தீண்டாமைப் பேய்நீங்க முழக்க மிட்டார்
நேரத்தில் கதிர்போல எழுந்தே வந்தார்
நேர்கோட்டைப் போலவொரு நெறியில் நின்றார்!
ஓரத்தில் ஒதுங்கிநின்ற மாந்தர் தம்மை
ஓயாமல் கவியெழுதி நிமிரச் செய்தார்!





கவிஞர் ஆற்றலரசு




# காவலர் குடியிருப்பில் மருத்துவ மையம்

சென்னை மாநகரில், செம்பியம் சரகத்தில் உள்ள கே. 1. காவல் நிலையக் குடியிருப்பில் அரிமா சங்கத்தினர் ஒரு புதிய மருத்துவச் சாதனையை நிகழ்த்தி வருகிறார்கள்.

காவலர் குடியிருப்பில் உள்ள ஒரு வீடே இந்தப் புதிய பணிக்காக இவர்களுக்கு ஒதுக்கித் தரப்பட்டிருக்கிறது.

சென்னையில் பணியாற்றுகிற மருத்துவர்களான டாக்டர் ஆர். நஞ்சுண்டராவ், டாக்டர் என். சுந்தரவல்லி, டாக்டர் எம்.எஸ் கிருஷ்ணா, டாக்டர் குணசாகரன், டாக்டர் மனோரமா போன்ற பலரும் வாரந்தோறும் திங்கள், புதன், சனி ஆகிய மூன்று கிழமைகளில் இங்கே வருகை தருகிறார்கள். அந்நாட்களில் காவலர் இல்லங்களில் உள்ள காவலர்கள், அவர்கள் வீட்டுத் தாய்க்குலத்தார், குழந்தைகள் ஆகியோர் இவர்களிடம் மருத்துவச் சோதனை செய்து கொள்ளுகிறார்கள். நோய் நொடிகளுக்குத் தக்க மருந்துகள் அவர்களுக்கு அளிக்கப்படுகின்றன. நோய் நீங்கி வாழத்தக்க நல்ல பல ஆலோசனைகள் அந்நாட்களில் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

மேற்கண்ட அரிமா சங்க மருத்துவர்களுக்கு உதவியாக டாக்டர் எஸ். தியாகராசன், டாக்டர் கே. நெடுஞ்செழியன், டாக்டர் ஜே.சி. மோகன்தாஸ் போன்ற- கண் மருத்துவமனை, குழந்தைகள் மருத்துவமனை பொது மருத்துவமனை, பல் மருத்துவமனை, அரசுப் பொது மருத்துவமனை செவிலியர் பயிற்சிக் கல்லூரி டாக்டர்களும், பயிற்சியாளர்களும், மாணவர்களும் வருகிறார்கள்.

இவர்களால் அந்தக் குடியிருப்பில் உள்ள 48 வீடுகளைச் சேர்ந்த அனைவரும் சிறந்த மருத்துவத்தை - சிறந்த ஆலோசனைகளைப் பெறுகிறார்கள்.

**பி.எல்.ராஜேந்திரன்**

அரிமா சங்க மருத்துவர்களும், மற்றவர்களும் இங்கே தாங்கள் வேலை நேரத்தில் அல்ல; ஓய்வு நேரத்திலேயே வருகை தருகிறார்கள் என்பதும், இதற்கென அவர்கள் எந்தவித ஊதியத்தையும் பெறுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்க செய்திகள். ஏழை எளியவர்களுக்கு மருத்துவம் செய்யும் உன்னதப் பணியையே அவர்களெல்லாம் தங்கள் ஓய்வு நேரப் பொழுதுபோக்காகக் கொண்டிருக்கிறார்கள்.

"சட்டம் ஒழுங்கைக் காக்கும் பணியிலேயே பெரும்பாலான நேரத்தைச் செலவிட வேண்டியிருப்பதால், மனைவி மக்களைக் கவனிக்க எங்களுக்குப் போதுமான நேரமில்லை. அந்தப் பெருங்குறை எங்களுக்கு இவர்களால் அடியோடு நீங்கி விட்டது ''என்று பெருமகிழ்வோடு சொன்னார் செம்பியம் சரகம் காவலர் குடியிருப்பில் உள்ள காவலர் ஒருவர்.





இந்தக் குடியிருப்பில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் ஒவ்வொரு அடையாள அட்டை தரப்பட்டுள்ளது. அதில் ,அந்தந்த வீட்டிலுள்ள உறுப்பினர்கள் பெயர், வயது, தடுப்பு ஊசி போன்றவை இடப்பட்டதற்கான விவரம் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன.

''ஒரு வீட்டிற்கு ஒரு அட்டை இப்படித் தருகிறோம்; இதைப் பெற்றுக் கொள்வதற்கான பதிவுக் கட்டணமாக ஒரே ஒரு ரூபாய் மட்டுமே வீட்டுக்கு வீடு பெறப்படுகிறது. இது தவிர, வேறு எதற்காகவும் ஒரு காசும் நாங்கள் வாங்குவதில்லை, மருந்தெல்லாம் கூட அரிமா சங்கப் பணத்திலேயே வாங்கிக்கொள்கிறோம்'' என்றார் டாக்டர் ஆர். நஞ்சுண்டராவ்.

செம்பியம், அபிராமபுரம், மத்திய சென்னை, கிழக்குச் சென்னை, சென்னைப் பெருநகர் (கிழக்கு) ஆகிய பிரிவுகளில் உள்ள அரிமா சங்கங்களும், சென்னை அரிமா சங்க மகளிர் பிரிவும், கஸ்தூரிபா சேவாசங்கமும் இணைந்து இந்தத் தூய பணியைத் துவளாமல் செய்து வருகின்றன.

நோய் வாய்ப்பட்டவர்களை மருத்துவ மனைக்குக் கொண்டு செல்வதும், பெரிய டாக்டர்களை அணுகி பரிசோதிக்கச் செய்வதும் மிகச் சிரமம் எனக் கருதும் இக்குடியிருப்பினர், நோய்வாய்ப்பட்டவர்களை நாடி, பெரிய பெரிய டாக்டர்களே வருவதைப் பெரும் பேறாகக் கருதுகிறார்கள். அங்கே வைத்துப் பார்க்க இயலாத 'கேஸ்'களுக்குத் தாங்கள் பணிபுரிகின்ற பெரிய மருத்துவ மனைக்கு வரச்சொல்லி அவர்கள் சீட்டுக் கொடுப்பதும், அப்படிக் கொண்டு செல்லப்படும் 'கேஸ்'கள் தனிக் கவனத்தோடு பார்க்கப்படுவதும் எல்லோருக்கும் திருப்தியளிப்பதாக இருக்கிறது.

எழும்பூரில் உள்ள குழந்தைகள் மருத்துவமனையின் அனுபவம் முதிர்ந்த டாக்டர்களில் ஒருவரும், குழந்தை மருத்துவக் கழக இணைப் பேராசிரியையும், மகளிர் அரிமா சங்கத்தலைவியுமான டாக்டர் செல்வி. என். சுந்தரவல்லி, காவலர் இல்லக் குழந்தைகளை ஆழ்ந்து பரிசோதிப்பதும், கவனத்தோடு மருந்திடுவதும் நமக்கே வியப்பாக இருக்கிறது.

அவரை அணுகி, ''உங்கள் மகளிர் அரிமா சங்கம், இந்தக் குடியிருப்பிற்கு ஏதாவது தனிப்பட்ட முறையில் உதவி யிருக்கிறதா?'' என்றோம்.

''இந்தக் குடியிருப்பில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்கு முன்னாலும் ஒவ்வொரு மரம் உண்டாக்குவதற்காக, அந்தந்த வீட்டுக்காரர்களே கவனித்துக் கொள்ள வேண்டும் என்றுசொல்லி ஏராளமான தென்னை, மா, யூகலிப்டஸ் கன்றுகளைத் தந்திருக்கிறோம். நோயற்ற வாழ்வுக்கு நல்ல காற்றோட்டம் அவசியமல்லவா?'' என்றார் அவர்.

இவரது மருத்துவப் பணிக்காக அரிமா சங்கச்சார்பில், அனைத்து மாவட்டப் பரிசொன்றும் விரைவில் இவருக்கு வழங்கப்பட இருக்கிறது.

செம்பியம் சரகம் காவல்துறையினர் குடியிருப்பில் உள்ள இந்த மருத்துவ முகாம் 14.11.1981 அன்று துவக்கிவைக்கப்பட்டது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு, எச்.வி. ஹண்டே, மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு ,சி.பொன்னையன் இருவரும் பங்கேற்ற அவ்விழாவில்-காவல் துறை ஆணையர் திரு ஸ்ரீபால், துணை ஆணையர் திரு கே. சுப்பையா, உதவி ஆணையர் திரு எம். சிதம்பரசாமி ஆகியோரும், அரிமாசங்கத்தைச் சேர்ந்தஜோசப் ஈனாக், டாக்டர் மோகன்ராவ், கண் வங்கித் தலைவர் தவே முதலிய பலரும் மகிழ்வோடு பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.









''இந்தியாவிலேயே, காவலர் குடியிருப்பில் இப்படியொரு நிரந்தர மருத்துவ மையம் அமைக்கப்படுவது இதுவே முதல்தடவை'' என்பதை அவ்விழாவில் பேசிய அனைவருமே குறிப்பிட்டனர்.

''தலைநகரிலுள்ள எல்லா காவலர் குடியிருப்பிலுமே அரசின் அனுமதியோடு இப்படிப்பட்ட மருத்துவ மையம் அமைப்பதுபற்றிப் பரிசீலிக்கப்படும்' எனறு தனது உரையின் போது குறிப்பிட்டார் காவல்துறை ஆணையர் திரு ஸ்ரீபால்.

அந்த விழாவில் - காவல்துறையினர் பலரும், செம்பியம் வட்டாரத்திலுள்ளவர்களும், இராணிமேரி கல்லூரியில் படிப்பவர்களுமான தேசிய சமூக சேவை சங்க மாணவிகள் பலரும் கண்தானம் வழங்கியது இங்கே குறிப்பிடத்தக்கதும், பாராட்டத்தக்கதும் ஆகும்.

செம்பியம் காவலர் குடியிருப்பில் உள்ள இந்தப் பகல்நேர மருத்துவ மையம் மாலை நேரத்தில் இரவுப் பள்ளியாக மாறிவிடுகிறது. அரிச்சுவடியில் இருந்து பத்தாம் வகுப்பு வரை பயிலும் 60 மாணவ-மாணவிகள் இங்கே படிக்கிறார்கள்.

இராணிமேரிக் கல்லூரி தேசிய சமூக சேவை சங்கத்தாரும், செம்பியம் பகுதியினருமான மாணவிகள், எம்.டி. சுஜாதா, ஆர். சாரதா, கே. வைஜயந்தி, டி. சுகுணா, டி. பிரியா, கே. உமா, சி. ராணி, தேவசேனா, ஆர். கௌரி ஆகியோரே மாறி மாறி இந்த இரவுப் பள்ளியின் ஆசிரியைகளாகப் பணியாற்றுகிறார்கள். வைஷ்ணவா மகளிர் கல்லூரி தேசிய சமூக சேவை சங்கத்தாரும் இத்தகைய மருத்துவ முகாம்களில் பங்கேற்று பணிபுரிகிறார்கள்.



''அவர்கள் தவிர ,எங்கள் அரிமா சங்கத்தினர் சார்பில் ராஜேஸ்வரி என்பவரையும் கௌரவச் சம்பளத்தோடு இப்பள்ளி ஆசிரியையாக நாங்கள் நியமித்திருக்கிறோம்'' என்றார் டாக்டர் எம்.எஸ். கிருஷ்ணா.

தேசிய சமூக சேவை சங்க மாணவிகளை அச்சங்க திட்ட அலுவலர் செல்வி பிரேமாவதி வழி நடத்துகிறார்.

குழந்தைகளுக்கான நூல் நிலையமொன்றும் இயங்கும். இக்கட்டடத்தில் காவல்துறையால் வழங்கப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டியொன்றும் வைக்கப்பட்டுள்ளது.

அரிமா சங்கத்தார், இம் மையம் சார்பில் அக்குடியிருப்புக் குழந்தைகளிடையே அவ்வப்போது பல்வேறு போட்டிகளும், கேளிக்கை நிகழ்ச்சிகளும் நடத்தி அங்குள்ளாரை மகிழ்விப்பதுண்டு.

அண்மையில் 27.3.82அன்று பெரம்பூரிலுள்ள 'ரயில்வே நியூ ஹாலில்' அப்படியொரு பல்வகைப் பொழுதுபோக்குக் கலை நிகழ்ச்சி தமிழக அரசின் இரண்டாவது செயலாளர் திரு, கே. சொக்கலிங்கம் (இ.ஆ.ப.) தலைமையில் நடத்தப்பெற்றது.

அபிராமபுரம் அரிமா சங்கத்தார் முன்னின்று நடத்திய இவ்விழாவில் டாக்டர் டி. குணசாகரன் வரவேற்புரையாற்றினார். காவல்துறை ஆணையர், துணை ஆணையர், உதவிஆணையர்,இராணிமேரி கல்லூரி தேசிய சமூக சேவை சங்க திட்ட அலுவலர் செல்வி பிரேமாவதி, வைஷ்ணவா மகளிர் கல்லூரி சமூக சேவை சங்க திட்டஅலுவலர் செல்வி. ஏ.சுதா ஆகியோர் உரையாற்றினர்.

திரு எம். சுப்பிரமணியம் நன்றி கூறினார்.

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

## 23—2—82

பார்வையற்றவர்களுக்கு வாழ்வளிக்கும் நோக்கத்தில், வேலைவாய்ப்பு, கல்வி கற்றுக் கொடுத்தல் முதலிய பல்வேறு திட்டங்களுக்காகத் தமிழக அரசு 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது என்று மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் அறிவித்தார்கள்.

## 24—2—82

150 ஊராட்சி ஒன்றியங்களில், 30 கோடி ரூபாய் செலவில் குடிநீர்த்திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. ராகவானந்தம் அவர்கள் அறிவித்தார்கள்.

## 26—2—82

தையல் பயிற்சி பெற்ற பெண்களுக்கு வேலை வாய்ப்பளிக்கக் கூட்டுறவுத் துறையில் தையல் நிலையங்களைத் திறப்பது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது என்று மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் அறிவித்தார்கள்.

## 28—2—82

குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டத்தின் மூலம் தமிழகத்தில் ஒரு வேளைக்கு கூட உணவில்லாமல் கஷ்டப்படும் ஏழை குழந்தைகளுக்கு இலவச மதிய உணவு அளிக்க 100 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்தார்கள்.

தேசிய வேலைவாய்ப்புத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்துவதில் தமிழகம் முன்னணியில் நிற்கிறது என்று மத்திய அரசு பாராட்டு தெரிவித்துள்ளது.

## 1—3—82

உதகமண்டலத்தில் உள்ள இந்துஸ்தான் போட்டோ பிலிம் தயாரிக்கும் தொழிற்சாலையில் வண்ண பிலிம் தயாரிப்புக்காக 100 கோடி ரூபாய் செலவில் விரிவாக்கத் திட்டம் ஒன்றை மத்திய அரசு பரிசீலனை செய்து வருவதாகவும், இந்த விரிவாக்கம் உதகமண்டலத்திலேயே ஏற்படுத்தப்படவேண்டும் என்றும் மத்திய அரசைத் தமிழக அரசு கேட்டு வருகிறது.

## 2—3—82

அண்ணா சாலைக்கும் வேளச்சேரிக்கும் இடையே அடையாறு பகுதியில் 1 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் 110 கிலோ வாட் திறன்படைத்த துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் ஒன்று தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளது. இதனை அமைப்பதற்கு மத்திய திட்டக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின்மூலம் இந்தப் பகுதியில் மின் வினியோகம் சீராகவும், தடங்கலின்றியும் நடைபெறும் என்று மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு எஸ். ராமச்சந்திரன் அவர்கள் அறிவித்தார்கள்.

ஸ்வீடன் நாட்டு உதவியுடன் 105 ஹெக்டேர் பரப்பில் சூபாபுல் பயிரிடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. நீர்ப்பாசனம் இருந்தால் இந்த மரம் நன்றாக வளரும். நாட்டுத் தீவனத் திட்டத்தின் கீழ் இதனைப் பயிராக்கலாம். இந்தக் சூபாபுல் வளர்ப்பு பற்றி மேலும் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன என்று சட்டமன்றத்தில் மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார்கள்.

பணியாளர் இறந்து விட்டால், வாரிசுதாரருக்குப் பணிதரும் திட்டத்தைத் தனியார் பள்ளிப் பணியாளர்களுக்குப் பயன்படும் வண்ணமும் விரிவாக்க அரசு பரிசீலனை செய்து வருகிறது. இச்சலுகைகள் அரசுப் பள்ளிகள் மற்றும் அரசுக் கல்லூரிகளில் பணி புரியும் பணியாளர்களுக்கு இப்பொழுது கிடைத்து வருகின்றன. இத்தகவலைச் சட்டமன்ற மேலவையில் மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் திரு அரங்கநாயகம் அவர்கள் அறிவித்தார்கள்.

## 3—3—82

தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் ஒன்று 10 கோடி ரூபாய் மூலதனத்துடன் நிறுவப்பட்டுள்ளது. இக்கழகம் பிற்பட்டோர் மற்றும் குற்றப்பரம்பரையில் இருந்து நீக்கப்பட்ட இனத்தோரின் நலனுக்காகச் செயல்பட உள்ளது. இந்திய கம்பெனிகள் சட்டப்படி தனியார் கம்பெனியாக இக்கழகம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்று சட்ட மன்றத்தில் மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் திரு நெடுஞ்செழியன் அவர்கள் அறிவித்தார்கள்.

தூத்துக்குடி அருகே அந்தோனியார் புரத்தில் பனை பொருட்களிலிருந்து சீனி கற்கண்டு, பாம்கோலா, ஆகியவைதயாரிக்கும் தொழிற்கூடம் ஒன்றை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் துவக்கிவைத்தார்கள்.

ஏழைமக்களுக்கு வரும் காசநோயை அறவே ஒழிக்கத் தமிழ்நாட்டு மருத்துவ மனைகளில் படுக்கை வசதிகள் அதிகரிக்கப் படும் என்று மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள் அறிவித்தார் கள்

விவசாயிகளுக்காக 104 கோடி ரூபாய் செலவில் உலக வங்கி உதவியு டன் விற்பனைக் கூடங்கள் திறக்கப்பட விருக்கின்றன. 1959-ஆம் ஆண்டு தமிழ் நாடு வேளாண் பொருள் விற்பனைச் சட் டத்தின் கீழ் விற்பனைக் கூடங்கள் திறக் பட்டு உற்பத்தி செய்கிற பொருட் களை விவசாயிகள் நல்ல விலைக்கு விற்க அரசு தகுந்த நடவடிக்கைகளை எடுத் திருக்கிறது. இத்தொழிற்கூடங்களிலேயே விவசாயிகள் தங்கள் பொருட்களைச் சேமித்து வைக்கவும் அங்கேயே தங்கவும் வசதி செய்யப்படவிருக்கிறது என்று சட்ட மன்றத்தில் மாண்புமிகு வேளாண் மைத் துறை அமைச்சர் திரு கா. காளி முத்து அவர்கள் அறிவித்தார்கள்.

## 5—3—82

நிர்வாக வசதியின் காரணமாகப் பெரிய மாவட்டங்களான இராமநாதபுரம், மதுரை, வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப் படும். முதலில் இராமநாதபுர மாவட் டத்தையும் அடுத்து மதுரை மாவட்டத் தையும் இரண்டாகப் பிரிக்க நட வடிக்கைகள் எடுக்கப்படும். மூன்றாவ தாக வட ஆர்க்காடு எடுத்துக் கொள்ளப் படும் என்று மேலவையில் கேள்வி நேரத்தின்போது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோம சுந்தரம் அவர்கள் அறிவித்தார்கள்.

## 6—3—82

மத்திய அரசின் புதிய சிமெண்ட் வினி யோகக் கொள்கையின் காரணமாக ஏற் கனவே வழங்கப்பட்ட சிமெண்ட் பர் மிட்டுகள் செல்லாது என்றும் புதிதாக சிமெண்ட் பர்மிட்டுகள் வழங்குவது நிறுத்தப்பட்டு விட்டது என்றும் இனி எல்லோரும் வெளிச் சந்தையில் தான் சிமெண்ட் வாங்க வேண்டும் என் றும் மேலவையில் கேள்வி நேரத்தின் போது மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்கள்.

## 7—3—82

சென்னை மாநகரில் சேரும் குப்பைகளை கொட்டி அவற்றை உரமாக மாற்றும் பொருட்டு சைதாப்பேட்டையில் ஒன் றரை கோடி ரூபாய் செலவில், ஒரு கம் போஸ் உரக் கிடங்கு அமைக்கப்படும் என்று சட்டசபையில் மாண்புமிகு உள் ளாட்சித் துறை அமைச்சர் திரு குழந்தைவேலு அவர்கள் அறிவித் தார்கள்.

## 9—3—82

சேலம் மாவட்டத்தில் வறட்சி நிவா ரணப் பணிகளுக்காக அரசு 401 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது என்று சட்ட சபையில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் அறிவித்தார்கள்.

• சென்னையில் சாலைகள் அமைக்க, விளக்குகள் போட, மழை நீரை வடிகால் மூலம் வெளியேற்ற, வடிகாலைப் பரா மரிக்க, தனியார் தெருக்களுக்கு அடிப் படை வசதி செய்ய ஆகியவற்றிற்காக மாநகராட்சிக்கு அரசு 5 கோடி ரூபாய் கொடுத்துள்ளது என்று சட்டசபையில் மாண்புமகு உள்ளாட்சித்துறை அமைச் சர் திரு. குழந்தைவேலு அவர்கள் அறி வித்தார்கள்.

## 10—3—82

தமிழ்நாட்டில் சாகுபடி பரப்பை அதிகப் படுத்த ஸ்வீடன் நாட்டு உதவியுடன் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கோவையில் நீர் ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைக்கப்படுகிறது என்று சட்ட சபையில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. கா. காளிமுத்து அவர்கள் அறிவித்தார்கள்.

## 11—3—82

வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஏலகிரி, சாத்தனூர் ஆகிய இரு இடங்களையும் சுற்றுலா மையமாக்க அரசு திட்டமிட்டி ருக்கிறது என்று சட்டசபையில் கேள்வி நேரத்தின்போது மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் அறிவித் தார்கள்.

## 12—3—82

சென்னை மாநகரில் கொசுத் தொல் லையை ஒழித்து மலேரியா ஒழிப்புப் பணி யைத் தீவிரமாக மேற்கொள்ள மாநக ராட்சிக்கு 25 இலட்சம்ரூபாய் கடனுதவி செய்யத் தமிழக அரசு முடிவெடுத் துள்ளது என்று சட்டப் பேரவையில் மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்கள் அறிவித்தார்கள்.

### வழி பிறக்கும்

டில்லி சென்றிருந்தபோது கூட மற்றவர் களுக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. எனக்கு மட்டும் கைத்தறி ஆடைகள் அணி விக்கப்பட்டன. ஏன் என்று கேட்டதற்கு 'உங்களுக்கு இந்த ஆடைகள் தானே பிடிக்கும்?'' என்றார்கள்.

ஆனால் இதனால் மட்டும் பிரச்சினைகள் தீராது. நமது மத்திய அரசு உறுதியான கொள்கைகளைக் கடைப்பிடித்தால் நிச்சயம் இதற்கு ஒரு வழி பிறக்கும்.

மத்திய அரசுடன் வம்புக்கு நிற்க நான் விரும்பவில்லை. அதனால்தான் 'நம்ம மத்திய அரசு' என்று பாத்யதை கொண்டாடிக் கூறுகிறேன்.

—பேரறிஞர் அண்ணா

## 13—3—82

நகராட்சிச் சந்தைகள் மூலம் தனியாருக்குச் செல்லும் லாபம் பொதுமக்களுக்குக் கிடைக்கும் வகையில் தனியார் நடத்தும் சந்தைகளை அரசே ஏற்று நடத்தும் என்று சட்டப் பேரவையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் அறிவித்தார்கள்.

## 15—3—82

கன்னியாகுமரி மாவட்டக் கலவரத்திலும் துப்பாக்கிச் சூட்டிலும் இறந்தோரின் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் 10 ஆயிரம் ரூபாய் நிதி உதவி அளிக்கப்படும் என்றும், காயம் பட்டோருக்கு உதவி வழங்கப்படும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள்.

22 கோடி ரூபாய் செலவில் 4 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய பட்டு உற்பத்தித் திட்டம் ஒன்றைத் தமிழக அரசு செயல்படுத்தவிருக்கிறது என்று மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்கள்

## 16—3—82

தமிழ்நாட்டில் புதிதாக 2 ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர் என்றும் 1982-83-ஆம் ஆண்டில் கல்விக்காக அரசு 318 கோடி ரூபாய் செலவிட இருக்கிறது என்றும் சட்டசபையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு அரங்கநாயகம் அவர்கள் அறிவித்தார்கள்.

## 17—3—82

வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள பில்லூரில் 20 கோடி ரூபாய் செலவில் மிகப் பெரும் நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்டத் தமிழக அரசு முயற்சி செய்து வருகிறது என்று சட்டப்பேரவையில் மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு. கே. ராஜாமுகமது அவர்கள் அறிவித்தார்கள்.

## 21—3—82

'மெரினா கடற்கரையை அழகுபடுத்த 25 இலட்சம் ரூபாய் செலவில் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் இத்திட்டத்தில் பல நிறங்களில் 10 முதல் 15 அடி உயரம் வரை வளரும் மரங்கள், தென்னை மரங்கள் முதலியவை நடப்படும்; திறந்தவெளி சிற்றுண்டிச் சாலைகள் கட்டப்படும்என்றும் மாண்புமிகு கதர் மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு எஸ். என் ராஜேந்திரன் அவர்கள் அறிவித்தார்கள்.

## 22—3—82

தனிப்பட்டவர்களிடம் அநியாய வட்டிக்குக் கடன் வாங்கி அவதிப்படும் ஏழை-எளிய, நடுத்தர மக்களின் துயர்துடைக்கும் வகையில் 150 கோடி ரூபாய் நகைக் கடனை அரசு வழங்கவிருக்கிறது. என்று சட்டப் பேரவையில் மாண்புமிகுசட்டத் துறை அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் அறிவித்தார்கள்.

ஆசிரியர்களுக்குப் பல்வேறு சலுகைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் அடுத்த ஆண்டில் 10 பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்படும் என்றும் 150 உடற்பயிற்சி ஆசிரியைப் பதவிகளும் புதிதாக ஏற்படுத்தப்படும் என்றும் மேலவையில் மாண்புமிகுகல்வித் துறை அமைச்சர் திரு. அரங்கநாயகம் அவர்கள் அறிவித்தார்கள்.

## 23—3—82

முகவை மாவட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்காக 4 கோடி ரூபாய் செலவில் நூற்பு ஆலை அமைக்கப்படும் என்று மேலவையில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்திரு விஜயசாரதி அவர்கள் அறிவித்தார்கள்.

## 24—3—82

மூன்று தீயணைப்பு அலுவலர்களுக்கும் 117 பணியாளர்களுக்கும் இலவசக் குடியிருப்புகள் அளிக்கப்படும் என்று சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள்.

## 25—3—82

திருச்சி நகராட்சியை மாநகராட்சியாக மாற்ற அரசு முடிவு செய்துள்ளது என்று மேலவையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு குழந்தைவேலு அவர்கள் அறிவித்தார்கள்.

போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்களுக்கும் பொது மக்களுக்கும் பல சலுகைகளை அளிக்கும் வகையில் 77 அறிவிப்புகளைச் சட்டப் பேரவையில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்கள் அறிவித்தார்கள்.

**உ**தவி பெறும் கல்லூரிகளில் முதுகலைப் பேராசிரியர்களாகவும் துறைத் தலைவர்களாகவும் பணியாற்றுபவர்கள் தற்போது ரூ 1200—50—1600—60—1900 என்னும் விகிதத்தில் ஊதியம் பெறுகின்றனர்; ஆனால் அரசுக் கல்லூரிகளில் பணிபுரியும் முதுகலைப் பேராசிரியர்களும் துறைத் தலைவரும் ரூ 700—40—1100—50—1600 ரூ 50 தனிச் சம்பளம் என்னும் விகிதத்தில்தான் ஊதியம் பெற்று வருகின்றனர். ஒரே வகைப் பணியை ஆற்றுகின்றவர்களுக்கு இரு வேறு வகை ஊதியம் அளிக்கப்படும் நிலையைக் களைந்து, உதவி பெறும் கல்லூரிப் பேராசிரியர்களுக்கும் துறைத் தலைவர்களுக்கும் வழங்கப்படும் ஊதியம் அரசுக் கல்லூரிப் பேராசிரியர்களுக்கும், துறைத் தலைவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று ஒரு நபர் குழு பரிந்துரை அளித்துள்ளது. இதனை அரசு ஏற்று, நடைமுறைப்படுத்த ஆணையிட்டுள்ளது.



# ஒரு கிராமம் புது வாழ்வைத் தேடுகிறது!

மு. முத்துக்காளத்தி,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
தென்னார்க்காடு மாவட்டம்.

கடலூர் பழைய நகர்ப் பகுதியொன்றுக்குப் பெயர், பனங்காட்டுக் காலனி. இந்தக் கிராமத்தின் பெயர் சிலருக்குக் கிளுகிளுப்பூட்டும். பலருக்குக் கலவரத்தையும் பயத்தையும் கொடுக்கும். கள்ளச் சாராயம் காய்ச்சுவது இங்கே ஒரு குடிசைத் தொழில் போல் பெருகியிருந்தது. ஆண்களும் பெண்களும் ஈடுபட்டிருந்தார்கள். சட்டத்திற்குப் புறம்பான செயலில் தாங்கள் ஈடுபடுவது அவர்களுக்குத் தெரிந்தே இருந்தது. பசிக்கும் வயிற்றுக்குச் சோறிட வேறுவழி தோன்றாமல் அவர்கள் அந்தப் பாவ காரியத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார்கள்.

தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி வி. சந்திரலேகா, காவல்துறை கண்காணிப்பாளர் திரு டி.எஸ். பஞ்சாபகேசன், சமூக நல ஊழியர் திரு என்.வி. ஜெயசீலன் ஆகியோர் எடுத்துக் கொண்ட சீரிய முயற்சிகளின் விளைவாக இந்தக் கிராமத்தைச் சீர்திருத்த இளைஞர்கள் வரிந்து கட்டி முன் வந்தனர். பெரியவர்களும் அவர்களோடு ஒத்துழைத்து, இளைஞர்களின் முன்னேற்றக் கருத்துக்களை ஏற்று வாலாயமாகக் கள்ளச் சாராயம் காய்ச்சும் தொழிலுக்கு முற்றுப்புள்ளி வைத்து சாராயப் பானைகளையும், அடுப்பையும் உடைத்து நொறுக்கி, ''இனிமேல் நாங்கள் இந்தத் தொழிலில் ஈடுபட மாட்டோம். வேறு கண்ணியமான தொழில் செய்து பிழைப்போம்'' என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இவர்கள் அனைவரும் ஆதி திராவிடர் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.

எப்படியும் பிழைக்கும் எண்ணத்தை விட்டு, இப்படித்தான் வாழ்வோம் - உழைப்பால் உயர்வோம் என்று சபதம் செய்தனர். இந்தச் சங்கற்பம் நிலைத்து நிற்க வேண்டுமானால், ஒவ்வொரு குடும்பமும் நிரந்தர வருமானம் வரும் ஒரு தொழிலில் ஈடுபடுத்தப்பட வேண்டும். இதற்கான திட்டத்தைத் தீட்டிச் செயல்படுத்திட, ஆட்சித் தலைவர் அவர்களின் ஆலோசனைப்படி, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட அலுவலர் டாக்டர் மணி அவர்கள் இந்தக் குக்கிராமத்தினை ஆய்வு செய்து, அங்குள்ள 108 குடும்பத்தினரையும் பல்வேறு தொழில்களில் ஈடுபடுத்தி அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டமொன்றை உருவாக்கியுள்ளார். இதற்கான கடன் வசதிகளை கடலூர் பழையநகர் பாரதீய ஸ்டேட் வங்கி அளிக்க முன்வந்துள்ளது.

ஒரு கறவை மாடு ரூ. 2,000 வீதம் ஆளுக்கு இரண்டு கறவை மாடுகள் வீதம் மொத்தம் 93 பேருக்கு ரூ. 3,72,000 கடன் வசதி கிடைக்கச் செய்யப்படும். இதில் 50 சதவிகிதம் அதாவது ரூ. 1,86,000 மானியம். ஒரு நபர் ரூ. 4,000 மதிப்பில் இரு கறவை மாடுகள் வாங்கிவளர்த்து வருவார். இந்தத் தொகையில் அவர் ரூ. 2,000 கடன் தொகையையடைத்தால் போதும். மீதி ரூ. 2,000 மானியமாகும். சைக்கிள் ரிக்ஷா வாங்க 20 பேருக்கு, தலா ரூ. 1,800 வீதம் மொத்தம் ரூ. 36,000 கடன் வழங்கப்படும். இதில் மூன்றில் ஒரு பாகம் அதாவது ரூ. 12,000 மானியம். ஒருவருக்கு ரூ. 600 மானியம். டயர் வண்டிகள் வாங்க ஒருவருக்கு ரூ. 5,500 வீதம் 10 பேருக்குக் கடன் வழங்கப்படும். மொத்தக்கடன் தொகையான ரூ. 55,000ல் மூன்றில் ஒரு பங்கு அதாவது ரூ. 18,333 மானியமாகும். ஒரு நபருக்கு ரூ. 1,830 மானியமாகக் கிடைக்கும். மீதித் தொகையை அவர் அடைத்தால் போதும். இவ்வாறே ஆடுகள் வாங்க, பெட்டிக் கடைகள் வைக்க, சைக்கிள் கடைகள் நடத்த, ஒலி பெருக்கி கடை வைக்க, கூட்டுறவுச் சங்கம் மூலம் ஆட்டோ ரிக்ஷா வாங்க, குதிரை வண்டி வாங்க என்று பல்வேறு தொழில்களுக்கு மொத்தம் ரூ 6 இலட்சத்திற்கு மேல் கடன் கிடைக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 3இலட்சத்திற்கு மேல் மானியமாகக் கிடைக்கும்.

இந்தத் திட்டங்கள் செயல் வடிவம் பெறுவதற்கு முன்பாக இடைக்கால உதவித் தொகையாக ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ. 50 வழங்கும் நிகழ்ச்சி, 20.3.82 அன்று பனங்காட்டுக் காலனியில் நடந்தது. தொகையை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி வி. சந்திரலேகா வழங்கினார். விழாவில் கடலூர் பழைய நகர் பாரதிய ஸ்டேட் வங்கிக் கிளை மேலாளர் திரு வி.சிவராஜ், வேளாண்மைப் பிரிவு மேலாளர் திருமதி விமலா கோபலன், திட்ட அலுவலர் டாக்டர் மணி மற்றும் பனங்காட்டுக் காலனிவாழ் மக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


எழிலான வண்ணங்கள்!
இனிதான எண்ணங்கள்!
கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள் வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர் மகளிர் அனைவரும் விரும்பும் அருமை புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம் வகைகள்...அழகார்ந்த ரகங்கள் அனைத்தும் உண்டு!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

-4-1982 75 காசு








# சட்டமன்ற உறுப்பினர் தின விழா

30-3-'82 - 5-4-'82





தமிழரசு இலவச இணைப்பு

16-4-1982



# முதல்வரின் உரைத் தொகுப்பு



# முதல்வரின் உரைத்தொகுப்பு

## 1982-பிப்ரவரி

சட்டமன்றப் பேரவை
சட்ட மன்ற மேலவை

# பதிப்புரை

மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், 1—2—1982 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, சட்டமன்ற மேலவை ஆகியவற்றின் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றினார். ஆளுநர் உரைமீது நிகழ்ந்த விவாதங்களுக்கு, மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் சட்டமன்றப் பேரவையிலும் மேலவையிலும் விளக்கமாகப் பதிலளித்தார். அரசின் ஆக்கப் பணிகளையும் ஆற்றப்படும் அரும் பணிகளையும் எடுத்தியம்பி அவர்கள் ஆற்றிய உரைகளைத் தொகுத்து நூலாக வெளியிடுகிறோம்.

இயக்குநர்,<br>
செய்தி-மக்கள் தொடர்பு,<br>
தமிழ்நாடு அரசு.

ஏப்ரல், 1982.


# முதல்வரின் உரைத் தொகுப்பு

பொதுவாக இம்மாமன்றத்திலே பேசியவர்கள் நாங்கள் ஆட்சிக்கு வரும்போது தேர்தல் நேரத்திலே வெளியிட்ட அறிக்கையில் என்னென்ன குறிப்பிட்டோமோ அவற்றைச் செய்யாமல் மக்களை ஏமாற்றுகிறோம் என்கிற எண்ணத்தை வெளியிலே சொல்வதோடு மட்டுமல்லாமல் இங்கேயும் அதையே வேறுவகையான வார்த்தைகளில் வெளியிட்டிருக்கிறார்கள். தேர்தல் நேரத்திலே தேர்தல் அறிக்கையிலே என்ன சொன்னோம் என்பதையும் அதில் நாங்கள் சொன்னதை எப்படி ஏறத்தாழ இந்த இரண்டு ஆண்டுகளில் நிறைவேற்ற முயன்று வருகிறோம் என்பதையும் இங்கு சொல்ல விரும்புகிறேன்.

1980-ஆம் ஆண்டு நாங்கள் அளித்த தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்குறுதிகளை, எப்படி நிறைவேற்ற முயற்சிக்கின்றோம் என்பதை வெளியிட முயன்று, அம்முயற்சி இங்கே இருக்கக் கூடிய மாமன்ற உறுப்பினர்களுக்கு நியாயம் தான் என்று படுமேயானால், அதுவே எங்களுக்கு முழு மனநிறைவைத் தரக்கூடிய ஒன்றாகும்.

## விவசாயிகளின் நலன்கள்:

விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும், இடுபொருள்கள் குறைந்த விலையில் கிடைக்கவும், விவசாயிகளின் ஆதாய விலையை முன்கூட்டியே அறியவும், விவசாய சங்கப் பிரதிநிதிகளின் துணை கொண்டு நடுவர் குழு மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிட்டிருந்தோம். விவசாய சங்கத்தைச் சேர்ந்தவர்களுடைய பிரதிநிதிகளைக் கொண்டு ஒரு குழு அமைத்து, அதன் தலைவருக்கு ஏறக்குறைய அமைச்சருக்கு உரிய உரிமையோடு பதவி அளித்து



அனைத்துக் கட்சி வ்வசாயப் பிரதிநிதிகளையும், அந்தக் குழு விலே அங்கம் வகிக்கச் செய்து, அந்தப் பரிந்துரைகளை ஏற்றுச் செயலாக்க நாங்கள் முனைவோம் என்றும் கூறியிருந்தோம்.

வேளாண்மை உற்பத்திப் பொருள்களுக்கு நியாயவிலை கொடுப்பது என்பதிலே இந்தியப் பேரரசு நிர்ணயித்த விலையை விட, அதிகமான விலையை நாங்கள் கொடுத்துக் கொண்டு வந் தோம் என்பதை இந்த மன்றம் அறியும்.

ஆனால் அதற்கு முன்னால் ஒன்றைச் சிந்திக்க வேண்டும். தமிழகத்தை கறுப்புப் பட்டியலில் சேர்த்து விடுவோம் என்று சொன்ன அந்தப் பின்னணியைத் தயவு செய்து கொஞ்சம் சிந் தித்துப் பார்க்க வேண்டும். ரிசர்வ் வங்கி எப்படிப்பட்ட கட்டளை யிடுகிறது, மறுக்கிறது என்பதோடு, கறுப்புப் பட்டியலில் சேர்க் கப்பட்டால் வெவ்வேறு காரியங்கள், மற்ற உதவிகள் இவை களுக்கெல்லாம் தரக் கூடிய பணம் அதோடு நிறுத்தப்பட்டு விடும் என்பதையும், இங்கே என்னென்ன திட்டங்களை அதிகப்படுத்த வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறீர்களோ, நாங்களும் செய்ய வேண்டுமென்று விரும்புகிறோமோ அவைகள் எதையுமே செய்ய முடியாமல் போகும் என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும். கூடுமான வரையில் இந்தியப் பேரரசோடு சுமுகமான வகையில் மீண்டும் மீண்டும் கேட்டு எழுதிப் பதில் பெற்று, அவர்களுக்கு விளக்கம் தந்து, அவர்கள் கருத்துக்களை மாற்றிக் கொள்ளச் செய்ய நாங்கள் விரும்புகிறோமே தவிர, வேண்டு மென்றே ஒரு சிக்கலான நிலைமையை ஏற்படுத்தி, அத னால் நாம் போடுகிற திட்டங்கள் அனைத்தும் தடைபட்டுவிடக் கூடாது என்பதிலே மிகுந்த அக்கறை எங்களுக்கு உள்ளது.

விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு விலையை உயர்த்தியதோடு மட்டுமல்ல, நாங்கள் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று மைய அரசுக்குச் சிபாரிசு செய்தோம், வற்புறுத்தினோம். இயலாது என்று கூறியது மட்டுமல்ல, உயர்த்தக் கூடாது என்றும் இறுதியாகப் பதில் வந்தது. இங்கே அமைக்கப்பட்டிருக்கிற உச்ச மட்ட விவசாயிகள் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவின் தலைவர் அவர்கள் எங்கள் கட்சியைச் சார்ந்தவராக இருந்தும்கூட அவர்கள் சொல்லியும் நீங்கள் செய்யவில்லையே, என்று கேட்டார்கள். நாங்களும் அதைப் பற்றிச் சிந்தித்து, நெல் விலை ரூபாய் 147 என்று நிர்ணயிக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு எழுதினோம். ஆகவே விவசாயிகளுக்கு அதிகமான நலன்களைச் செய்ய வேண்டும், போதுமான அளவில் வருவாய் கிடைக்க வேண்டும் என்பதில் இந்த அரசுக்கு மாற்றுக் கருத்து எதுவும் இல்லை. ஆனால் தன்னிச்சைப்படி செய்ய முடியாத சூழ்நிலை. நாம் திட்டங்கள் தீட்டுவது என்றாலும் மத்திய அரசினுடைய ஒப்புதல் பெற வேண்டியிருக்கிறது. ஒட்டு மொத்தமாக ஓர் ஆண்டுக்கு எவ்வளவு செலவு செய்யலாம் என்றாலும் கூட மத்திய அரசினுடைய திட்டக் குழுவிடம் நாம் அனுமதி கேட்க வேண்டியிருக்



கிறது. இவைகளையெல்லாம் சிந்தித்துப் பார்த்தால் இந்த அரசு என்னென்ன செய்ய முடியுமோ அந்த வகையில், அந்த அளவிற்குத் தன் கடமையைச் செய்திருக்கிறது என்பதையும் தேர்தல் நேரத்தில் என்ன சொன்னோமோ அதைச் செய்ய நாங்கள் முயன்று கொண்டிருக்கின்றோம், செய்து காட்டினோம் என்பதையும் தயவு செய்து மாமன்ற உறுப்பினர்கள் தெரிந்து கொண்டிருந்தாலும் மறந்துவிட மாட்டீர்கள் என்று நான் கருது கிறேன்.

விவசாய நலக் குழுக்கள் ஆங்காங்கே அமைக்கப்பட வேண்டும், விலை நிர்ணயிக்க வேண்டிய உரிமை அந்த விவசாயிகளுக்கு, உற்பத்தி செய்பவர்களுக்கு இருக்க வேண்டும் என்ற கருத்து நம் யாருக்கும் வேறுபட்ட கருத்தல்ல என்பதை நானும் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் அந்தக் கருத்தை நிறைவேற்றுவதற்கு முன் நமக்கிருக்கிற வசதி, வாய்ப்புகளைத்தான் பயன்படுத்த வேண்டியிருப்பினும் மக்களுடைய ஒத்துழைப்போடு, விவசாயிகள் துணையோடு, ஆதரவோடு அந்தந்த சங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட குழுக்களை ஆங்காங்கே நாம் நியமித்து ஆவன செய்ய முற்பட்டோம் என்பதை இந்த மாமன்றம் மறந்துவிடாது என நான் கருதுகிறேன். அந்த முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம். பல விவசாயச் சங்கப் பிரதிநிதிகளும் அதில் பங்கு கொண்டிருக் கிறார்கள்.

## கிராமங்கள் தன்னிறைவு பெறுகின்றன

இதேபோல் தன்னிறைவுத் திட்டத்திலும் எங்கள் கருத்தைச் சொல்லியிருக்கிறோம். கிராமப்புற மேம்பாட்டுத் திட்டம் என்று சொல்லித் தேர்தல் அறிக்கையில் நாங்கள் குறிப்பிட்டதற்காகத் தான் அதைத் தன்னிறைவுத் திட்டம் என்று கொண்டு வந்தோம்.

தன்னிறைவுத் திட்டம் என்பது பரவலாக எங்குமே பேசப் படுகின்ற ஒரு முக்கியமான செய்தியாக இன்றைய தினம் ஆகி யிருக்கிறது என்பதை யாரும் மறக்க மாட்டார்கள். எந்த மாநிலமும் இந்தியத் துணைக் கண்டத்தில் இப்படிப்பட்ட ஒரு நல்ல திட்டத்தைத் தொடங்காத நிலையில், எவ்வளவு தொகை இதற்காகத் தேவை என்பதை எண்ணிப் பார்த்து, ஏன் இதை எடுத்துச் செய்து வீணாகக் கெட்ட பெயருக்கு ஆளாக வேண்டி யிருக்குமே என்று எண்ணி ஒதுங்கி விடாமல், இருக்கின்றபணத்தை எப்படி எப்படி நல்ல முறையில் பயன்படுத்த வேண்டுமோ அதற் கேற்பத் திட்டங்களை வகுத்து அமரர் அண்ணா விரும்பிய, என் போன்றவர்களுக்குச் சொல்லித் தந்திருக்கின்ற அந்தக் கொள் கையின் அடிப்படையில், லட்சியத்தைச் சிறிதும் விட்டுக் கொடுக் காத முறையில் அதைப் புரிந்துரை செய்து நடைமுறைப்படுத்தி யிருக்கிறோம்.

எத்தனையோ முறைகளிலே, எத்தனையோ வகைகளிலே தேவைகள் இருக்கின்றன. ஆனால் அவைகளிலே தவிர்க்க முடியாத தேவை அல்லது ஒரு மனிதன் வாழ்வதற்குக் குறைந்த அளவு அடிப்படையில் நாம் எண்ணிப் பார்த்தால், நான் மனம் விட்டுப் பேச விரும்புகிறேன், ஒரு முதலமைச்சர் பதவியிலே இருந்தால்கூட, ஒரு சாதாரண மனிதனாக, பசியால், பட்டினியால் வாடிக் கொண்டிருக்கின்ற ஒருவனுடைய நிலையில் என்னை வைத்து நான் பேச விரும்புகிறேன். இப்போது மக்கள் நொந்து இருக்கிறார்கள், அவர்களுடைய உள்ளம் குமுறிக் கொண்டிருக்கிறது, அவர்கள் எப்படிப் பொறுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கூட நம்மால் சொல்லி விளக்கம் தர முடியாத அளவிற்கு வறுமை, பசி, வேலையில்லாத் திண்டாட்டம் என்பதை நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். இன்றைய தினம் நாட்டின் நிலைமை இது. ஆகையால்தான், நாங்களே சிந்தித்து முடிவெடுத்து இந்தத் திட்டத்தினை எப்படியாவது தமிழகத்தில் ஐந்தாண்டுக் காலத்திற்குள் நிறைவேற்றியாக வேண்டும் என்ற 'தீராத' வேட்கையில் இந்தத் திட்டத்தை அமுல்படுத்தினேன். இந்தத் தன்னிறைவுத் திட்டத்தில் முதன் முதலாகக் குடிதண்ணீர் வசதி எல்லாக் கிராமங்களுக்கும், கொடுத்தாக வேண்டும் என்பது முக்கியமான ஒன்று என்ற வகையில் அதற்கு முதன்மை கொடுக்கப்பட்டது. 69 ஒன்றியங்களுக்காவது கிடைக்க வேண்டும் என்று முதலில் துவக்கினோம்.

திட்டமிடுவதோடு நின்றுவிடவில்லை. அவைகளைக் கவனிப்பதற்குக் குழுக்களையும் நியமித்திருக்கிறோம். அவர்கள் அதிகாரிகளுக்குத் துணையாக இருந்து குற்றங்களை எடுத்துச் சொல்லாமல் மறைக்கவோ, சாதகமான நிலைமைகளை உருவாக்கவோ இடமளிக்காமல் அனைத்துக் கட்சியைச் சார்ந்த நண்பர்களையும் கலந்து அந்தக் காரியத்தை செய்யவும், குற்றங்குறைகள் இருப்பின் அவற்றை எடுத்துச் சொல்லவும் வாய்ப்புத் தந்திருக்கிறோம். அதிலும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாதத்திற்கு ஒருமுறை இத்தகைய நடவடிக்கைகளைக் குறித்து, கண்டிப்பாக எங்களுக்கு அறிக்கை தர வேண்டும் என்று சொல்லியிருப்பதன் மூலம் எங்களுக்கும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அப்படி வருவதால்தான் எங்கே மேல்நிலைத் தொட்டி உடைகிறது என்பதையும் எங்கே குழாய்கள் பழுதுபடுகின்றன என்பதையும் பொது மக்களுக்கு வழங்கப்பட்ட தண்ணீர் சப்ளை எங்கே நின்றுவிட்டது என்பதையும் தெரிந்து கொள்ள ஒரு வாய்ப்பு இப்போது கிடைத்திருக்கிறது. இது பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்களை அழைத்து, இரண்டு நாட்கள் கூட்டங்களை நடத்தினோம். அவர்களிடத்தில் இதுபற்றிக் கண்டிப்பாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, அந்த வகையில் திட்டமிடுவது, பணத்தை ஒதுக்கீடு செய்வது என்பதோடு நின்று விடாமல் ஒதுக்கப்பட்ட பணத்தைக் கொண்டு பணிகளை எப்படிச் செய்கிறார்கள் என்று கூடத் தெரிந்து கொள்ள நாங்கள் ஒரு முறையான அமைப்பை ஏற்படுத்தியிருக்கிறோம். அதாவது பொதுமக்களுக்கும் தொடர்பு

ஏற்படுத்தி, பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் ஆங்காங்கே உள்ள குழுக்களில் இடம் பெற்றுப் பணியாற்றவும் நாங்கள் வாய்ப்பளித்திருக்கிறோம்.

நாங்கள் தேர்தலிலே மக்களைச் சந்தித்தபோது, சில கோட்பாடுகளை அடிப்படையாக வைத்து, எதை எதை நாங்கள் செய்யவேண்டுமென்று சொன்னோமோ, அவைகளை எப்படி நடைமுறைப்படுத்துகிறோம் என்பதை எடுத்துக்கூற வேண்டிய மிகப் பெரிய கடமை எனக்கிருக்கின்றது. இந்த அரசைப் பொறுத்தவரையில் கிராமப் பொருளாதாரம், கிராம மேம்பாடு, கிராமத்திற்கென அவசர நிலைமைகளில் செய்ய வேண்டிய புதிய காரியம் என்ற வகையில் மூன்றாகப் பிரித்து, நாங்கள் தேர்தல் அறிக்கையிலே வெளியிட்டு, இதை நடைமுறைப்படுத்த முயற்சிக்கிறோம். நிதி நிலைமை எந்த அளவிற்கு ஒத்துழைக்கிறதோ அந்த அளவிற்கு அவைகளைச் செயலாக்க நாங்கள் முனைகிறோம். அந்த வகையில், 1980-81-ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தில் முதற் கட்டமாக 69 ஊராட்சி ஒன்றியங்களில் கீழ்க்கண்ட பணிகள் எடுக்கப்பட்டு, முடிக்கப் பட்டிருக்கின்றன என்பதைக் குறிப்பிட நான் கடமைப்பட்டி ருக்கிறேன்.

குடிநீர் வசதித் திட்டங்கள் 2509; செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 18.03 இலட்சம்; இணைப்புச் சாலைகள் 6587.06 கிலோமீட்டர்; செலவழிக்கப்பட்ட தொகை ரூ.1236.32 இலட்சம். சிறு பாலங்கள் எண்ணிக்கை 3043; செலவழிக்கப்பட்டதொகை ரூ. 350.80 இலட்சம். ஆதி திராவிடர்களுக்கான இடுகாட்டுக்குச் செல்லும் சாலை வசதி ஏற்படுத்தித் தர அமைக்கப்பட்ட சாலைகள் 927.71 கிலோ மீட்டர். செலவழிக்கப்பட்டதொகை ரூ. 79.87 இலட்சம். சிறு பாலங்கள் என்ற வகையில் மேலும் பல இடங்களில் கட்ட வேண்டுமென்று கணக்கிட்டு 1023 நிறைவேற்றப்பட்டன. ரூ. 68.20 இலட்சம் மேற்கொண்டு செலவழிக்கப் பட்டது. ஊரக மருந்தகங்கள் 82; செலவு தொகை ரூ. 47.42 இலட்சம்; தாய்-சேய் நல நிலையங்கள் 237; செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 118.87 இலட்சம். பள்ளிக் கட்டிடங்கள் 947; செல வழிக்கப்பட்ட தொகை ரூ. 486.48 இலட்சம்.

அதேபோல் இரண்டாவது கட்டமாக எடுத்துக் கொள்ளப் பட்ட 150 வட்டாரங்களில் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள பணிகள் விவரம் வருமாறு—

குடிநீர் வசதிக்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடு 5922; முடிக் கப்பட்ட எண்ணிக்கை 2891. 31-12-1981 வரை செலவழிக்கப் பட்ட தொகை ரூ. 1342.96 இலட்சம். இணைப்புச் சாலைகள் 11,534.95 கி. மீ. குறியீடு; முடிக்கப்பட்டவை 4994.90 செல வழிக்கப்பட்ட தொகை ரூ. 1672.4 இலட்சம். சிறு பாலங்கள் குறி

யீடு 11,256; முடிக்கப்பட்டவை 59.16; செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 1053.98 இலட்சம். ஆதிதிராவிடர் மயானத்திற்குச் செல்லும் சாலை 742.60 கிலோ மீட்டர்—குறியீடு; முடிக்கப் பட்டவை 505.10 கிலோ மீட்டர்; செலவழிக்கப்பட்ட தொகை ரூ.31.05 இலட்சம். சிறு பாசன வசதி மேம்பாட்டுத் திட்டங்கள் 933; முடிக்கப்பட்டவை 386; செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 2.68 இலட்சம்; ஊரக மருந்தகங்கள் எண்ணிக்கை 170; முடிக்கப்பட்டவை 16; செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 111.48 இலட்சம். தாய்-சேய் நல விடுதிகள் எண்ணிக்கை 492; முடிக்கப்பட்டவை 33; செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 175.94 இலட்சம். பள்ளிக் கட்டிடங்கள் எண்ணிக்கை 1774; முடிக்கப் பட டவை 355 ; செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 677.32 இலட்சம்.

இதையெல்லாம் நான் இங்கு குறிப்பிட்டுச் சொல்லக் காரணம் —இந்த அரசு எந்தெந்த வசதி வாய்ப்புகளைப் பெற்றிருக்கிறதோ அதைப் பயன்படுத்தி நாங்கள் தேர்தல் காலத்தில் சொன்னவைகளை நடத்தி முடிப்பதற்கு எப்படியும் எங்கள் கடமைகளைச் செய்கிறோம் என்பது மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிந்திருக்கும் என்றாலும் இங்கே அவற்றை வெளியிடுவதன் மூலம் மாமன்றத்தின் வெளியிலே உள்ளவர்களுக்கும் தெரிவிக்க வேண்டுமென்ற காரணத்தாலும் தான் குறிப்பிடுகிறேன்.

நாங்கள் தேர்தல் அறிக்கையில் ஒன்றைக் குறிப்பிட்டிருந்தோம். கிராமப்புறங்களில் பெண்களுக்குத் தனிக் கழிப்பிடங்கள் இல்லை; அதை ஏற்படுத்தித் தரவேண்டுமென்ற எண்ணத்தில் அது பற்றி நாங்கள் குறிப்பிட்டிருந்தோம். 1980-81-ஆம் ஆண்டு துவக்கப்பட்டு 69 முதல் கட்ட தன்னிறைவுத் திட்ட ஒன்றியங்களிலே ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 22 வீதம் 138 கழிப்பிடங்கள், ஒவ்வொன்றிற்கும் 6330 ரூபாய் வீதம் 8.74 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன என்பதையும் இரண்டாவது கட்ட தன்னிறைவுத் திட்ட ஒன்றியங்களில் நிறைவேற்றுவது குறித்து ஆராய்கையில் தமிழகத்திலே உள்ள 16 ஆயிரம் கிராமங்களில் ஆடவர்-பெண்டிர் இருபாலர்க்கும் ஒவ்வொரு கழிப்பிடத்திற்கும் 14,100 ரூபாய் வீதம் கழிப்பிடம் அமைக்கும் திட்டத்தை 22.56 கோடி ரூபாய் செலவில் 3, 4 ஆண்டுகளிலே நிறைவேற்றத் திட்டமிடப்பட்டு உள்ளது.

## வறட்சி நிவாரணப் பணிகள் :

13 மாவட்டங்களில் ஏற்பட்ட வறட்சி நிலைமையைச் சமாளிக்கப் பல்வேறு நிவாரணப் பணிகளை எடுத்துக் கொள்ள 137 கோடி ரூபாய் அளவுக்கு விரிவான குறிப்புகள் தயாரித்து அதை மத்திய அரசுக்கு அனுப்பி மத்திய அரசிடம் நிதி உதவி கோரப்பட்டது. மத்திய அரசு ஆய்வுக் குழுவை 1981-ல்

ஏப்ரல் 1, 2, 3, 4 தேதிகளில் தமிழகத்திற்கு அனுப்பி வைத்தது. அந்தந்தக் குழுவின் பரிந்துரை அடிப்படையில் 48 கோடியே 90 இலட்சம் ரூபாய் என்று மத்திய அரசு நிர்ணயித்தது.

ஜூலை மாதத்திலே கீழ்க்கண்ட இனங்கள் மீது மத்திய அரசாங்கத்திற்கு நிர்ணயித்த உச்சவரம்பை உயர்த்தும்படி கேட்டுக் கொண்டோம். அனுமதிக்கப்பட்ட உச்சவரம்புக் குழாய்க் கிணறு அமைப்பதற்கு 8 கோடி; கூடுதலாகக் கோரப்பட்ட தொகை 3.62 கோடி. நகராட்சி,பேரூராட்சி குடிநீர்த் திட்டங்கள் 2 கோடி; கூடுதலாகக் கோரப்பட்டது 40 இலட்சம். சென்னை மாநகர் குடிநீர்த் திட்டங்கள், அதற்காகக் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 87 இலட்சம். நீர்ப்பாசன வேலைகளுக்கு அனுமதிக்கப்பட்ட அளவு 15 கோடி. கூடுதல் கோரப்பட்ட தொகை 1.50 கோடி.


## சென்னைக்குக் குடிநீர்த் திட்டம் :

இதுபோன்று சாலைப் பணிகள், ஊரணிகள், குட்டைகள் மேம்பாடு இவைகளுக்கெல்லாம் அவ்வப்பொழுது குறிப்பாகக் கொடுத்து, ஏறத்தாழ 8 கோடியே 92 இலட்சம் கூடுதல் கோரப் பட்டிருந்தது. அவர்கள் ஓரளவுக்குக் கொடுக்க முன்வந்தார்கள். அவர்கள் கொடுத்த தொகை போக தமிழக அரசு அதிகமாகச் செலவழித்திருக்கிறது. சென்னை நகரக் குடிநீர்ப் பணிகளைப் பொறுத்தவரையில் மட்டும் புதிதாக 1.87 இலட்சத்தைக் குடி நீர்ப்பணிகள் என்ற தலைப்பில் அதிகமாகச் சேர்த்துக் கொடுக்க ஒப்புதல் தெரிவித்துள்ளது.

இந்த அரசு பதவிக்கு வருவதற்கு முன் 1980 தேர்தலின் போது கிருஷ்ணாநதிநீரைக் கொண்டு வருவதைப் பற்றி நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம். கிருஷ்ணாநதி நீரைக்கொண்டு வரலாம் என்று நாங்கள் விரும்புவதை அதிலே குறிப்பிட்ட பொழுது அதற்கு அடிப்படைக் காரணம் நாங்கள் ஆட்சிக்கு வந்த நேரத்தில் ஆந்திராவின் முதலமைச்சராக இருந்த சென்னா ரெட்டி அவர்கள் மிக அக்கறை காட்டியது மட்டுமல்ல, அதை எந்த அளவிற்கு விரைவாகச் செயல்படுத்த முடியுமோ அதைச் செயலாக்கலாம் என்ற எண்ணத்தையும் அவர்கள் சொல்லி மற்ற மாநிலங்கள் தரவேண்டிய 10 டி. எம். சி. தண்ணீரை அவர்கள் தரத் தயங்கினாலும்கூட எங்களைப் பொறுத்தவரையில் தர வேண்டிய 5 எம். எம். சி. தண்ணீரை நாங்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று அவர்கள் சொன்னார்கள். அதையொட்டி அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு நடந்து கொண்டிருந்தது. ஆனால் தாமதம் ஆவதைப் பார்த்து, இனி இது பயன்படாமல் போய்விடுமோ என்ற அச்சம் வேறு கிருஷ்ணா நதித் தண்ணீர் வருவது என்பது இயலாத காரியமாகிவிடுமோ என்று இருந்த நேரத்தில், சில ஆண்டுகளுக்கு முன்னால் இந்திராகாந்தி

அம்மையார் அவர்கள் என்ன கருத்தைச் சொன்னார்களோ, அதே கருத்தை மீண்டும் இப்பொழுது சொல்லி அதை நடத்துவது உதவிகரமாக இருக்கும் என்று ஆந்திர அரசினரும் நம் அதிகாரிகளும் குறிப்பிடுவதோடு அண்மையில் சில சாதகமான எண்ணங்களையும் சொல்லியிருக்கிறார்கள். இது பற்றிய குறிப்பை நான் இங்கே எடுத்துக் காட்டுவது பொருத்தமுடையதாக இருக்கும் என்று நம்புகிறேன்.

வீராணம் திட்டத்தில் 2.5 டி. எம். சி. தண்ணீர் கிடைக்கும். கால்வாயின் நீளம் 192 கிலோ மீட்டர். ஆகக்கூடிய செலவு ரூ. 150 கோடி. கட்டளைக் கால்வாய்த் திட்டம் 15 டி. எம். சி. 451 கிலோ மீட்டர் நீளம். ஆகக் கூடிய செலவு ரூ. 203 கோடி. கிருஷ்ணா நதி திட்டம் 15 டி. எம். சி. 260 கிலோ மீட்டர் நீளம். ஆகக்கூடிய செலவு ரூ. 188 கோடி. இந்த ரூ. 188 கோடி. 260 கிலோ மீட்டருக்கு எப்படி வருகிறது என்ற கேள்வி இருக்கும். அதற்கு ஒன்றைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் ஒரு யோசனையைச் சொல்லி இருக்கிறார்கள். அவர்களுக்கும் பாசன வசதிக்காகத் தண்ணீர் கொண்டு வர வேண்டியிருக்கிறது. அதிலே நாங்கள் ஸ்ரீசைலம் வரை கொண்டு வருகிறோம். அது ஆந்திரப் பிரதேசத்திற்குள்ளேயே இருக்கிறது. அதை குந்தேறு என்கிற நதியின் வழியாகக் கொண்டு வந்து, அதை சோமசீலம் அணைக்கட்டிலே சேர்த்து அதுவரையிலே நாங்கள் கொண்டு வந்துவிடுகிறோம் என்கிறார்கள். அவர்களுக்குத் தேவை-ஆகவே அதை மேற்கொண்டு அங்கிருந்து நீங்கள் செம்பரம்பாக்கம்



ஏரிக்குக் கொண்டுவருவதற்கு, நீங்கள் பாதித் தொகையை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதிலே குறிப்பிட்ட இடத்திலிருந்து 163.9 கிலோ மீட்டர்தான் போட வேண்டியிருக்கிறது. ஆகவே அந்த இடங்களுக்குப் பாதிப்பாதி, அல்லது இன்னும் கொஞ்சம் அதிகம் அல்லது குறைவு என்ற விதத்திலே பேசி முடித்தோமானால் நாங்களும் செலவு செய்கிறோம் நீங்களும் செலவு செய்யுங்கள் என்கிறார்கள். இந்த வகையில்தான் அந்த ரூ. 188 கோடி என்ற நிலை வந்திருக்கிறது. இதை அவர்கள் ஏற்றுக் கொண்டிருக் கிறார்கள். இதற்கு மத்திய அரசும் உதவியாக இருக்கிறது. ஆகவே அதை மீண்டும் எடுத்துப் பரிசீலிப்பது மட்டுமல்லாமல் அதை ஏற்றுக்கொண்டு, உடனடியாக அந்தப் பணியைத் தொடங்குவதற்கு என்ன என்ன செய்யவேண்டுமோ அதை மைய அரசோடு தொடர்பு கொண்டு, ஆந்திர அரசோடு பேசி ஒரு முடிவுக்கு வரலாம் என்று இந்த அரசு கருதுகிறது.

இந்த 5 டி. எம். சி. தண்ணீர் கொண்டு வந்தால் மட்டும் போதாது. சென்னையிலே இதற்காகக் குழாய் அமைப்பது என்பது மிகப் பெரிய செலவு ஆகக்கூடிய ஒன்றாக இருக்கிறது. ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு முன்னால் போட்ட குழாய்களை எல்லாம் இப்பொழுது திரும்பவும் மாற்ற வேண்டிய அவசியத்தில் நாம் இருக்கின்றோம். ஆகவே, அந்த வகையில் கட்டளைக் கால்வாயா, கிருஷ்ணா நதியா, எதை நாங்கள் எடுத்துக் கொள் ளப் போகிறோம் என்ற சந்தேகம் யாருக்காவது இருக்குமானால் கிருஷ்ணா நதி நீரை விரைவில் கொண்டு வருவோம் அதில் தண்ணீர் அதிகமாப் பெறுவதற்கு வாய்ப்பு உள்ளதால், முதலில் 5. சி. எம். சி. கிடைக்கிறது. அதற்குப் பிறகு மகாராஷ்டிரா மாநிலம் கர்நாடக மாநிலம் 5 டி. எம். சி. 5 டி. எம். சி. என்று 10 டி. எம். சி. தர இருக்கிறது. அது முன்னால் ஏற்றுக்கொண்டு ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் நம்பிக்கையின் அடிப்படை யில் அது தொடர்கிறது என்ற காரணத்தால் உடனடியாகச் சென்னை மாநகராட்சிக்கு, மாநகரத்தினுடைய மக்களுக்குப் பயன்படத்தக்க வகையில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்று கருதுகின்றோம்.

கட்டளைக் கால்வாய் என்று சொல்லும்போது காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றியும் இதோடு இணைத்துப் பேசுவது பிரச் சினையோடு பிரச்னையாக முடியும் என்று நான் கருதுகிறேன். காவிரி நதி நீர்ப் பிரச்சினை பற்றி அண்மைக்காலத்தில் கர்நாடக அரசினுருடைய முதலமைச்சர் என்னுடைய நெருங்கிய நண்பராக நானும் அவரும் கூறிக்கொள்ளக் கூடியவர்கள் 2 முதல்மைச்சர் களாக இருந்தாலும் அவரவர்களுடைய பசியைப் பற்றி அவர வர்கள்தான் பேச வேண்டும்; தங்களைப் பற்றித்தான் பேசிக் கொள்வார்கள் என்று அவர்கள் அவர்களைப் பற்றிப் பேசிக் கொள்ளுகிறார்கள். நாம் நம்மைப் பற்றிப் பேசிக்கொள்ளு கிறோம் என்பதைப் போல ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அதுவும் இப்போது இருக்கின்ற தண்ணீர் எல்லாம் தங்களுக்கே போத

வில்லை என்றுகூட சொல்லியிருக்கிறார்கள் என்ற நிலையில்தான் பேசுவோம் என்கிற நிலை தொடர்ந்து இருந்தது.

நாங்கள் கர்நாடகத்தில் சென்று பேசியபோது அந்தக் கூட்டத்தை முடித்துவிட்டதாகச் சொல்லாமல் அது தொடருகிறது என்கிற நிலையிலே இருக்கட்டும் என்ற எண்ணத்தோடுதான் விரும்பினோம். ஆனால் அதற்குப் பிறகு அவருடைய பேச்சுக்கள் அவர்கள் மேகதாது திட்டத்திலே அக்கறை காட்டுவதை எண்ணுகிறபோது அது நிச்சயமாகத் தமிழகத்திற்கு மாபெரும் ஆபத்தை மட்டுமல்ல அநியாயத்தைச் செய்வதாக இருக்கிறது என்பதை உணருகிற காரணத்தால் இனி மைய அரசுடன்தான் நாம் தொடர்பு கொண்டு இதற்கு ஒரு வழி காண வேண்டும் என்ற நிலைமையிலே இருக்கிறோமே தவிர, அண்டை மாநிலங்களோடு நல்ல உறவுவேண்டும் என்று எண்ணினாலும் இந்தப் பிரச்சினையில் கர்நாடகத்தோடு தனியாகப் பேசி எந்தப் பயனும் பெற முடியாது என்கிற அந்த அளவுக்கு எங்களுடைய உள்ளம் ஏமாற்றத்தை அடைந்துவிட்டது என்று சொல்லுகிற அளவுக்கு அந்தக் கர்நாடக மாநில முதல் அமைச்சர் மற்றும் அவருடைய அமைச்சர்கள் பேச்சுக்களும் செயலும் ஆகிவிட்டன என்று இந்த மன்றத்திலே வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, இனி மைய அரசுதான் ஒரு முடிவைச் சொல்வது என்ற நிலைமையில் நாம் இருக்கிறோம். ஆகவே, நாம் பேச வேண்டியது மைய அரசோடுதானே தவிர கர்நாடக அரசோடு பேசுவதில் பயன் இல்லை என்ற முடிவுக்கு இந்த அரசு வந்திருக்கிறது என்பதை வேதனையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நமக்குத் தேவையெல்லாம், நாம் விரும்புவதெல்லாம் ஒன்றே ஒன்றைத்தான். இப்போது நாம் பயன்படுத்துகிறதில் எந்த அளவுக்கு உற்பத்தி செய்கின்றோமோ அந்த நிலைமைகளுக்கு உற்பத்திப் பாதகம் இல்லாத நிலையில் நமக்குத் தண்ணீர் கிடைக்க உத்திரவாதம் வேண்டும். அதுதான் நாங்கள் பேசிய கொள்கை. அந்தக் கொள்கையில் இருந்து தமிழகஅரசு பின் வாங்கவில்லை, அதைத்தான் இதுவரையில் வற்புறுத்தி வந்திருக்கிறது என்பதைத் திட்டவட்டமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட ஒரு நிலையை நாம் கவனித்துப் பார்க்கும் போது, கட்டளைக் கால்வாயிலிருந்து வருகின்ற தண்ணீரை, அந்தப் பகுதியில் மழை பெய்த அந்த நதியிலே கலந்து கடலிலே போய்க் கலந்து வீணாகிப் போகும் அந்தத் தண்ணீரைப் புதுக்கோட்டை மாவட்டத்திற்கும், இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் திருப்பி, அந்தப் பகுதிகளில் அதைப் பயன்படுத்தலாம் என்கிற திட்டம் ஆய்வில் இருக்கிறது. அதை ஆய்வு செய்யச் சொல்லியிருக்கிறோம். இதிலே யாரும் தவறு சொல்ல முடியாது. குற்றம் காண முடியாது. நாம் வேறுவிதமாகக் காவிரி ஆற்று நீரை மேட்டூரில் இருந்தோ அல்லது வேறு வகையிலோ எடுத்தால், தவறாக எடுத்துக் கொண்டோம் என்றும் நம் மீது பழிசுமத்த முடியாது. ஆகவே, இயற்கைத் தமிழகத்திற்குத் தருகின்ற அந்த

மழைத் தண்ணீரை நாம் அந்தப் பகுதிகளுக்குத் திருப்பி, அந்தப் பகுதி வாழ் மக்களுக்குப் பயன்படும் வகையில், அங்குள்ள ஏரி, குளம், ஆகியவற்றை நிரப்பக் கூடிய சூழ்நிலையை உருவாக்கி, இப்போது நாம் நிறைவேற்றுகின்ற தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் ஆங்காங்கு ஏரி, குளம் ஆழமாக்கப்பட்டு, சீரமைக்கப்பட்டுள்ளதால் அவற்றில் அதனைத் தேக்கி வைத்து, பயன்படுத்தலாம் என்பது எங்களுடைய எண்ணமாகும். இந்தத் திட்டமும் அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.


## அமைதியும் ஒழுங்கும்

நாட்டில் அமைதி இல்லை என்றும், நாட்டிலே அவ்வப்போது அவசரச் சட்டங்கள் போடப்படுகின்றன என்றும் அவசரச் சட்டத்தை நம்பியே ஓர் ஆட்சி இருந்துவிடக் கூடாது என்றும் இங்கே மாமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். நான் அவர்கள் சொல்வதை மறந்துவிடவில்லை, மதிக்கிறேன். அதைப் பற்றி சிந்திக்கவும் வேண்டும் என்ற அக்கறை இருக்கிறது; அலட்சியப்படுத்தவில்லை. ஆனால், அந்தத் தேவை அவ்வப் போது ஏன் ஏற்படுகிறது என்று தயவு செய்து சிந்திக்கவும் அப்படிப்பட்ட அவசரச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டால்கூட அவை அமுல் நடத்தப்படுகின்றனவா என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஓர் அவசரச் சட்டம் இப்போது கையில் இருக்கிறது அல்லது நிறைவேற்றப்பட்ட சட்டம் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதைப் பயன்படுத்துகிறோமா, எப்படிப் பயன்படுத்துகிறோம் என்று எண்ணிப் பார்க்கும்போது ஓர் அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது எந்த நோக்கத்தில்? யாருக்காகக் கொண்டு வரப்பட்டது? எப்படிப்பட்டவர்களுக்காகக் கொண்டு வரப்பட்டது? எத்தகைய செயல்களைத் தடை செய்வதற்காகக் கொண்டு வரப்பட்டது? எத்தகைய வன்முறை எண்ணங்கள் தோன்றக்கூடாது, அதற்கு இடம் தரக்கூடாது என்பதற்காகக் கொண்டு வரப்பட்டது என்பதை எல்லாம் நாம் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்பது என்னுடைய பணிவான வேண்டுகோள். சிந்தித்துப் பார்க்காமல் நீங்கள் கருத்துச் சொல்லியிருக்க மாட்டீர்கள். ஆனால் சிந்தித்துப் பார்க்கும்போது பொதுத் தன்மையில் இருந்து சிந்தித்தோமேயானால் சிலவற்றை நியாயம் என்று சொல்வதற்கு நமது உள்ளம் இடம் கொடுக்கும்.

## சட்டமும் ஒழுங்கும்

சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்வது மிகவும் எளிது. ஆனால் உண்மையிலேயே சட்டம், ஒழுங்கு கெட்டு விட்டதா என்றால், என்னைப் பொறுத்தவரையில் நான் அண்ணாவோடு இருந்த காலத்திலிருந்தும் அதற்குப் முன்னால் 1930-ல் கள்ளுக்கடை மறியலின்போது நடந்த செயல்களை எல்லாம் நேரில் கண்டதிலிருந்தும் எல்லாவற்றையும் எண்ணிப் பார்த்



தால், நான் மனம விட்டுச் சொல்வேன், அந்தக் காலங்களில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டிருந்த நிலைமைபோல் இன்றில்லை என்று திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன். ஆனால் அன்றைய தினம் இவ்வளவு பத்திரிகைகள் இல்லை. படித்தவர்கள் இவ்வளவுபேர் இல்லை. மக்கள் தொகையும் இந்த அளவுக்கு இல்லை. இப்போது எதையெடுத்தாலும், ஜாதிப் பிரச்சினையாக ஆக்க முடிகிறது. மதப் பிரச்சினையாக ஆக்க முடிகிறது. அரசியல் பிரச்சினையாக ஆக்க முடிகிறது. தனி நபரைப் பற்றிப் பேசத் தொடங்கி, அரசியல் கட்சி வரை போய், அங்கே ஜாதி உணர்வு மேலோங்கி மதத்தலைவர்கள் அதற்குப் பரிகாரம் தேட வேண்டும் என்று கேட்கிற அளவுக்கு நாடு போய்க் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் சட்டம் ஒழுங்கைப் பற்றிக் குறிப்பிடும்போது, இதைத்தான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஒன்றை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்க

வேண்டும். இன்றைய தினம் காவல் துறையினர் அதிகமான அளவுக்குத் தாக்கப்படுகிற நிலைமைகள் ஏற்படுகின்றன என்றால் காவல் துறையினர் எடுத்த எடுப்பிலேயே பலவந்தமாகக் காரியங்களில் ஈடுபடாததுதான் காரணம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

## அரசும் சட்டமும்

இந்த மாமன்றத்திலே ஓர் உறுப்பினர் குறிப்பிடும்போது சொன்னதாக என் நினைவு. எதற்கெடுத்தாலும் சுட்டுத் தள்ளுகிறார்கள்; கேட்டால் நச்சலைட் என்று சொல்கிறார்கள் என்றார். அதிலும் அடிக்கடி இந்த மாமன்றத்திலே பேசியவர்களில பலர் தர்மபுரி பற்றி அதிகமாகப் பேசினார்கள். அதற்குப் பெயர் தர்மபுரிதான். ஆனால் எதிர்பாராத விதமாக அங்கே அதர்மம் அதிகமாக நடைபெறுகிற நிலைமை ஏற்பட்டதால்தான் அதைத் தடுப்பதற்கு என்ன செய்வது என்கின்ற நிலைமை அரசுக்கு கேள்விக் குறியாக வந்து, இதைத் தவிர வேறு வழியில்லையே என்ற நிலைமை உருவாக்கப்படுகிறது என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். நான் விவாதத்திற்காக அல்ல, அனுபவப்பூர்வமாகச் சொல்கிறேன்.

நச்சலைட் என்றால் அவர்கள் சுடப்படத்தான் வேண்டும் என்பது இந்த அரசினுடைய கொள்கை அல்ல. பல நச்சலைட்டுகள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். பலர் விடுதலைகூட செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்போது அவர்கள் அந்த நிலைமையிலே இல்லை என்று சொன்னதற்குப் பிறகு அது பற்றி விசாரித்து அறிந்து அவர்களை விடுதலை செய்யவும் நாங்கள் முன்வந்து இருக்கிறோம் என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்கின்றபோது நச்சலைட்டுகள் என்றால் சுடப்படத்தான் வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்பதைக் கண்டிப்பாக நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இது உண்மை.

வன்முறையில் எந்த நாடும் ஒரு ஒழுங்கான அரசியல் அமைப்பை அமைத்துக் கொள்ள முடியாது என்பதை உள்நாட்டில் மட்டுமல்ல, வெளிநாட்டிலேகூட அதைப்பற்றி புரிந்து கொள்ளக்கூடிய நிகழ்ச்சிகள் அண்மைக் காலங்களில் நடப்பதை நாம் காண்கிறோம். ஆகவே நமது நாட்டுக்கு, நமது மாநிலத்திற்கு எது சரி என்று தோன்றுகிறதோ அவைகளைச் செய்ய வேண்டும் என்பதுதான் எங்களது கருத்தாகும். கூடுமான வரையில் கைது செய்யத்தான் நாம் விரும்புகிறோமே தவிர, கைது செய்து அதன் மேல் நடவடிக்கை எடுக்கத்தான் விரும்புகிறோமே தவிர, வேறு அல்ல.

ஆனால் அது முடியாமல் போய், காவலர்களுக்கு ஆபத்து வருகிறது; அல்லது ஒன்றிரண்டு உயிர்கள் அங்கே இதனால் போய்விட்டது என்ற நிலை வரும்போது, இனி இப்படிப்பட்டவர்களை விடக்கூடாது என்ற வகையில் சொன்னாலும் சரி, தற்காப்பு என்று சொன்னாலும் சரி, தப்பித்துப் போய் விடக்கூடாது என்ற நிலைமையிலே அப்படி நடந்தது என்று சொன்னாலும் சரி, காவலர்கள் அந்த நடவடிக்கைகளில் இறங்கி யாருடைய உயிராவது இழக்கப்படக்கூடிய சூழ்நிலையை இருக்குமேயானால், நமக்கு நிச்சயமாக அதில் மகிழ்ச்சி இல்லை.

அமரர் அண்ணா அவர்கள் ஓர் இடத்தில் பேசியதாக எனக்கு நினைவு. புழுவால் எதையும் செய்ய முடியாது. ஆனால், திரும்பத் திரும்ப அதைச் சித்திரவதை செய்து கொண்டிருந்தால், அது நெளிந்தாவது தன் எதிர்ப்பை வெளிப்படுத்தும்; ஒன்றும் செய்ய முடியவில்லையென்றாலும் நெளிந்தாவது தன் உடலால் வேதனையை வெளிப்படுத்த முனையும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது எவ்வளவுதான் காவல்துறையைச் சேர்ந்தவர்கள் அமைதியாக இருக்க வேண்டும், துப்பாக்கியை எடுத்துச் சுடக்கூடாது என்றாலும் அவர்கள் சாகடிக்கப்படக் கூடிய நிலைமைக்கு வந்த பிறகு அவர்கள் எப்படி தங்களைக் காத்துக் கொள்ளாமல் இருக்க முடியும்?

## அரசும் அவசரச் சட்டங்களும்


*1975*-ஆம் ஆண்டு 20 அவசரச் சட்டங்கள் வந்திருக்கின்றன; *1980*-ஆம் ஆண்டு 15 அவசரச் சட்டங்கள் வந்திருக்கின்றன; *1981*-ஆம் ஆண்டு 19 அவசரச் சட்டங்கள் வந்திருக்கின்றன. இதைச் சொல்வதிலிருந்து நீங்கள் தவறு செய்யவில்லையா, ஆகவே நான் செய்யக் கூடாதா என்கிற கேள்விக்கு நான் வரவில்லை. அப்படி அவசரச் சட்டத்தை உண்டாக்குகின்ற நிலையை, நாட்டை ஆளுகின்றவர்களுக்கு உண்டாக்குகிறார்கள். ஆகவேதான் அவைகள் கொண்டு வரவேண்டி இருக்கிறதே தவிர இதில் வேறு நோக்கம் இல்லை என்பதை இங்கே நான் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன்.

முதலில் யாராவது கைது செய்யப்படுவார்கள் என்று தோன்றி இருந்தால், எங்களுக்கு வேண்டியவர்கள் யாராவது தவறு செய்தால் அவர்கள்தான் முதலிலே கைது செய்து வைக்கப்படுவார்களே தவிர, அதற்குப் பிறகுதான் மற்றவர்கள் என்பதை இங்கே நான் அறுதியிட்டுக் கூறுகின்றேன். அப்படிப் பலர் மேல் இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே கூட அதைத் தொடர்ந்து செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் யாராவது அதிகாரிகளே எங்காவது தவறு செய்தால், அவர்களையும் கைது செய்வதற்கும்கூட இந்தச் சட்டம் பயன்பட வேண்டி வரலாம் என்று நான் சொல்வதை

நீங்கள் நம்ப வேண்டும் என்பது வேண்டுகோளாகும். ஆகவே, அவசரச் சட்டம் கொண்டு வருவது என்பது பழிவாங்குவதற்காக அல்ல.

## பத்திரிகைச் சுதந்திரமும் நாட்டு நடப்பும்

ஆனால், அதோடு இன்னும் சொல்லுகிறார்கள். பத்திரிகைகளையே தடை செய்ய வேண்டும்; எதிர் கருத்து எழுதினால் அவர்களைக் கைது செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு செய்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஒரு பத்திரிகையிலே ஒரு செய்தி வந்தது. 'எம். ஜி. இராமச்சந்திரன் வீட்டில் சி.பி.ஐ. சோதனை. எம். ஜி. இராமச்சந்திரன் வீட்டில், ராமாவரம் தோட்டத்தில் சி. பி. ஐ. சோதனையிட்டார்களாம் என்று இந்த 'ளாம்'கூட இல்லை. 'சோதனை இட்டார்கள்' பல மணி நேரம் சோதனை இட்டார்கள். அப்புறம் மாம்பலத்தில் உள்ள அவருடைய அலுவலகத்தில் சோதனை இட்டார்கள். இப்படி ஒரு செய்தி பத்திரிகையிலே வருகிறது என்றால், அதற்கு என்ன ஆதாரம்? இன்கம்டாக்ஸ்'ஆபீசர் வந்தால் அது உடனே வெளியே தெரியும். ஒத்துக் கொள்வதிலே நமக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை. அது எங்கும் நடக்கிற காரியம். சி. பி. ஐ. வந்து தேடுகிறார்கள் என்றால் தேவை இருந்தால் தேடுவார்கள், எங்கே போகவேண்டு



மோ போவார்கள். கண்டுபிடிப்பார்கள். தண்டனை கொடுக்கப்பட வேண்டி இருந்தால் சட்டப்படி கிடைக்கும். ஆனால், இல்லாத ஒன்றை நடக்காத ஒன்றை இப்படிப் பத்திரிகையிலே நடந்ததாகப் போடுகிறவர்களை இதுபோல செய்திகளைத் தவறாக, வேண்டுமென்றே வெளிபிடுகிறவர்களை என்ன செய்வது, எத்தனையோ முறை சொல்லிப் பார்த்தாகிவிட்டது. எந்தப் பத்திரிகையானாலும் இப்படிப்பட்ட செய்திகள் வெளியிடுவதைத் தடுப்பதற்கு எந்த வழியும் காணப்படவில்லை. ஏதோ ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து பத்திரிகைகளையே நடத்த முடியாமல் செய்துவிட வேண்டும் என்ற ஆசை இந்த அரசுக்கு நிச்சயமாகக் கிடையாது.

## நீர்ப்பாசனச் சீரமைப்பு

இந்த அறிக்கையில் நீர்ப்பாசன வசதியைப் பற்றி நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம். அதற்காகப் பல்வேறு மாவட்டங்களில் நிலவிவரும் பாசனக் கட்டண விகிதங்களைச் சீரமைக்கும் வகையில் 1977-ஆம் ஆண்டு ஒரு குழு அமைக்கப்பட்டது. மாற்றுப் பயிர் மீது விதிக்கப்படும் தண்டத் தீர்வையை ரத்து செய்வது பற்றியும் தனது ஆலோசனையைக் கூறுமாறும் இக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. இக்குழு சமீபத்தில் தனது அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்துள்ளது. இவ்வறிக்கையை அமைச்சரவை விவாதித்து முடிவு செய்வதற்காக வைக்கப்பட்டுள்ளது. அதை வரும் ஆண்டில் எப்படி நடைமுறைப்படுத்தலாம் என்பதை நிர்ணயித்து அதை அமுலுக்குக் கொண்டு வருவோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

---



எந்தவொரு அரசியல் கட்சியுமே தேர்தல் முடிந்து ஆட்சிக்கு வந்த அந்த ஆண்டே வாக்குறுதி கொடுத்த அத்தனையையும் நிறைவேற்றிட முடியும் என்று இங்கே யாரும் எதிர்பார்க்க மாட்டார்கள். அப்படிக் குறை சொல்லவும் நீங்கள் முன் வர மாட்டார்கள் என்பதிலே உங்கள் அனுபவத்தின் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நான்கைந்து ஆண்டுகளில் எந்த நடவடிக்கையையுமே எடுக்காமல் இருந்தால் அந்தப் பிரச்சனை வரும்.

## பல்கலைக் கழகங்கள் தொடக்கம்

சென்ற ஆண்டு நாங்கள் ஆரம்பிப்போம் என்று சொன்ன பல்கலைக் கழகத்தை நாங்கள் ஆரம்பித்தோம்; திருச்சியிலேயும், கோவையிலேயும், தமிழ்ப் பல்கலைக் கழகத்தைப் பற்றித் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடவில்லை. ஆனால், ஆரம்பித்தோம். உலகத் தமிழ்ச் சங்கத்திற்காக மதுரையில் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டது என்பதையும், விரைவில் தொடக்க விழா நடைபெறும் என்பதையும் இங்கே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இடம் தேடுவதில் கொஞ்சம் சிரமம் ஏற்பட்டது. ஊருக்கு வெளியில் அமைப்பதா, நகரத்திற்குள்ளேயே அமைப்பதா என்பதைச் சிந்தித்து, அதற்காக அமைச்சர்களையும் அணுகி அவர்களைப் பார்க்கும்படி செய்து, மாவட்ட ஆட்சித் தலைவரையும் அங்கே போய்ப் பார்த்து அந்த இடத்தைத் தேர்தெடுக்கச் செய்திருக்கிறோம். ஆகவே, அது நிச்சயமாக நடைபெறும். அப்படிச் சொன்னதை நாங்கள் நிறைவேற்றியே தீருவோம்.

## நியாய விலையில் உணவுப் பொருள்கள்

நியாய விலையில் மக்களுக்கு உணவுப் பொருள்கள் கிடைக்க வேண்டும் என்பதிலே இந்த அரசுக்கு மிகுந்த அக்கறை உண்டு. ஏறத்தாழ 16,000 கடைகளை இன்றைய தினம் உருவாக்கியிருக்கிறோம் என்றாலும் முழுமையாக உணவுப் பொருள் கிடைக்கிறதா, சரியாகக் கிடைக்கிறதா என்பதிலே பலருக்கு, சந்தேகம் இருக்கிறது. சில இடங்களில் இப்படிப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதும் இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு நன்கு தெரியும்.

இங்கே ஒன்றை நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். 500 குடும்பங்கள் உள்ள இடத்தில் ஒரு நியாய விலைக் கடை இருக்க வேண்டுமென்ற கோரிக்கை, இந்த அரசும் ஏற்றுக் கொள்கிறது. அந்த 500 குடும்பங்களுக்கு ஒரு கடை என்று சொல்லும் போது பணியாளர்கள் எத்தனை பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள் என்று கணக்கிட்டுப் பார்த்தோம் அதைப் போலவே கணக்கிட்டுப் பார்க்கும் போது, எத்தனை பேர்கள் பணியிலே ஈடுபட்டால் எவ்வளவுசம்பளம் கொடுக்க வேண்டி

யிருக்கும் என்றும் கணக்கிட்டுப் பார்த்தோம். ஆனால், அந்த வகையில் அதை எப்படி அமுல்படுத்துவது என்பதைப் பற்றி பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். அந்தக் கடைகளுக்குத் தேவையான உணவுப் பொருட்களை நாம் தந்தாக வேண்டும்.

விலைவாசி குறைய வேண்டும்; உயர்ந்து கொண்டேபோகிறது. ஆனால் விலைவாசி உயர்ந்து கொண்டே போகிறதே தவிர உற்பத்திச் செய்கின்றவர்களுக்குத் தேவையான அளவுக்கு, அவர்கள் செலவு செய்கிற அளவுக்கு வருமானம் கிட்டவில்லை; இலாபம் இல்லை என்பது குறை. இதையும் கூறுகிறோம். ஒரு பக்கம் விலைவாசி உயருகிறது. இன்னொரு புறம் பொருட்களை எந்த அளவுக்கு செலவு செய்து உற்பத்திச் செய்கிறார்களோ அந்த அளவுக்கு அவர்களுக்குத் தேவையான அளவுக்கு விலை கிடைக்கவில்லை. அப்படியானால் இடையிலே யார் நஷ்டப்படுவது என்பதுதான் கேள்வி.

பொதுமக்களுக்கு அதிலும் உத்தரவாதமுள்ள ஆதாயத்தைப் பெற முடியாத நிலையில் இருக்கின்ற அந்த உழைக்கும் வர்க்கத்திற்காகக் கேட்கக்கூட நாதியற்ற நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். அந்தக் கோடிக்கணக்கான உழைக்கும் வர்க்கத்தினர் இன்றைய தினம் அத்தியாவசியமான பொருள்களை வாங்குவதற்காகக் கடைக்குச் சென்றால் அங்கே விலை உயர்ந்திருக்கின்றது என்ற நிலைமை ஏற்படுமானால் அவர்களுக்குத் தேவையான அளவுக்கு வருமானம் உயர்த்தப்படுகின்றதா? உயர்த்தப்பட முடிகின்றதா? உயர்த்தும்படி செய்ய யாராவது முன்வந்து கேட்க முடிகிறதா என்றால் முடிவதில்லை. விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச கூலி கொடுக்க வேண்டும் என்று சொன்னோம். எவ்வளவு போராட்டத்திற்குப் பிறகு சில இடங்களிலே அது கொடுக்கப்படுகின்றது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அதிலே எத்தனை நடவடிக்கைகள்; எத்தனை தகராறுகள்? வெளியிலே இருந்து ஆட்களைக் கொண்டு வரக்கூடாது என்று தடை. அவைகளை எல்லாம் செய்த பிறகும் சட்டத்தை விதித்து உத்தரவிட்டதற்குப் பிறகும் இதுதான் நிலைமை என்றால் சாதாரண மக்கள் என்ன செய்வார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்றைய தினம் என். ஜி. ஓ. க்களை எடுத்துக் கொண்டால் அவர்களுக்காகக் கேட்பதற்குச் சங்கங்கள் இருக்கின்றன. அப்படி இல்லாத கோடிக்கணக்கான ஏழை மக்களுக்கு அன்றாடம் வேலை செய்து சம்பாதிக்கின்ற மக்களுக்கு இந்த விலைவாசி உயரும் போது அதற்கேற்றவாறு அவர்களுக்கும் போதிய வருமானம் வேண்டும் என்று கேட்க யார் இருக்கிறோம். நம்முடைய கருத்துக்களைச் சொல்கிறோம். விலைவாசி உயரக்கூடாது, ஏழைகள் கஷ்டப்படுவார்கள் என்று நாம் சொல்கிறோமே தவிர அதற்காக என்ன வழி செய்வது என்பது பற்றி யாரும் தனியாக சிந்தித்தோ

அல்லது கூட்டாகச் சிந்தித்தோ இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை. அப்படி எடுப்பதும் அவ்வளவு எளிதான காரியம் அல்ல. ஆகவே நியாயவிலைக் கடைகளின் மூலம் நியாயமான விலையில் பொருள்கள் கிடைக்கும் என்றால் அதாவது அவர்களுக்குக் கிடைக்கின்றதே என்ற மகிழ்ச்சியாவது அவர்களுக்கு இருக்கும். ஆனால் அதை நிறைவேற்றுவதும் எளிதல்ல.





பொருள்களை உற்பத்தி செய்கின்றவர்களுக்கு விலை குறைந்துவிடக் கூடாது; வாங்குபவர்களுக்கும் விலை உயர்ந்து விடக் கூடாது. ஆகவே, இவர்கள் இருவரும் சேர்ந்து விலையினை நிர்ணயிக்கிற முறையை ஏற்படுத்தி அந்தக் கடைக்கு அவர்கள் சொந்தக்காரர்களாக இருப்பார்களேயானால் வருகின்ற லாபமும் அவர்களுக்கே பங்காகக் கிடைக்கின்ற உரிமை இருக்கும். அப்படிப் பட்ட நிலைமையில் சாதாரண மக்களைப் பற்றி அவர்களால் சிந்திக்காமல் இருக்க முடியாது.






ஆகவே, வெறும் உத்திரவுகளை மட்டும் வைத்துக்கொண்டு நடவடிக்கையில் இறங்க முடியாது. அங்கே இருக்கின்ற மக்களின் வாழ்க்கை நிலைமையைப் பற்றியும் பரிசீலித்து, வாரத்துக்கு ஒரு முறை அல்லது மாதத்திற்கு இருமுறை அவர்கள் கூடிப்பேசி இதுதான் விலை, இதைத்தான் வைத்துக் கொள்ள வேண்டும் என்று நிர்ணயிருக்கிற அந்த உரிமை அவர்களுக்கு இருக்குமானால் நிச்சயமாக அதைப் பற்றி சிந்திக்க முடியும். சிந்தித்துப் பணி யாற்ற முடியும்.

உணவுப் பொருள்கள், அத்தியாவசியப் பொருள்கள் என்ப திலே நான் மீண்டும் அதைப் பற்றி விளக்கம் தர வேண்டும் என்று கருதுகிறேன். முதலில் இடைத்தரகர்களை நீக்கியாக வேண்டும். இடைத் தரகர்களை நீக்கியாக வேண்டும் என்றால், அரசு அவற்றை வாங்கி விநியோகிக்க வேண்டும்.

அரசு அவற்றை வாங்கி விநியோகிப்பதற்கு முன், யார் அந்தப் பொருள்களை வாங்குகின்றார்களோ, வாங்கிப் பயன் படுத்துகின்றார்களோ-அவர்களே விற்பனை செய்கின்றவர் களோடு இணைந்து இதில் செயல்படுபவர்களாக இருந்தால் மிகப் பெரிய பிரச்சனைகள் குறைக்கப்படும்; ஆங்காங்கு விளைகின்ற பொருள்களின் தரத்திற்கேற்ப, தேவைக்கேற்ப, எவ்வளவு உற் பத்தி செய்யப்படுகின்றதோ, அதற்கேற்ப அந்தந்த ஊர்களுக்கு எவ்வளவு அனுப்பவேண்டும் என்பதை நிர்ணயித்து நல்லமுறையில் செயல்பட முடியும் என்று நான் கருதுகிறேன். அவைகளைச் செய்தாக வேண்டும் என்றும் நான் சொல்லிக் கொள்கிறேன்.

## ஆதிதிராவிடர் நலன் பேணும் அரசு

ஆதிதிராவிடர்களுக்கு இந்த அரசு வந்த பிறகு இதுவரையில் 11,355 வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளன. மேலும் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 60,399 வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. மேலும் 27,774 வீடுகள் நடப்பு ஆண்டில் கட்டப் பட்டு வருகின்றன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் ஆண்டு ஒன்றுக்கு 40 ஆயிரம் வீடுகள் வீதம் 2 லட்சம் வீடுகள் கட்ட அரசு முடிவு எடுத்து ஆணையிட்டுள்ளது. மேலும் 67,334 வீட்டு மனைப் பட்டாக்கள் ஆதிதிராவிடர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ளன. இவைகளையெல்லாம் நான் இங்கே குறிப் பிடுவதற்குக் காரணம், தேர்தல் நேரத்திலே நாங்கள் என்ன என்ன சொன்னோமோ அவைகளை எந்த வகையில் செயலாற்று கிறோம் என்ற புள்ளி விவரத்தைத் தெரிவிப்பதற்காகத்தான்



குறிப்பாக 4-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே ஆதி திராவிடர், மலைவாழ் மக்கள் நலனுக்காக மத்திய அரசு ஆதரவுத் திட்டத்தின்கீழ் மைய அரசு ரூ. 206 80 லட்சம் ஒதுக்கியது; மாநில அரசு அந்தத்திட்டத்தின் கீழ் செலவிட்டது ரூ. 244.90 இலட்சமாகும். இதிலிருந்து மாநில அரசு மத்திய அரசு ஒதுக்கிய தொகையைவிட அதிகமாகவே ஒதுக்கியிருப்பது நன்கு விளங்கும். எனவே உறுப்பினர் குறிப்பிட்டுள்ளதைப் போன்று வேறு எந்தப் பணிக்கும் நிதி மாற்றமோ நிதி பயன்படுத்தியமையோ நடைபெறவில்லை என்பதை தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். 1980-81-ஆம் ஆண்டில் மைய அரசு திட்டங்களுக்கு ரூ. 244.02 இலட்சம் மட்டுமே இந்திய அரசிடமிருந்து பெறப்பட்டது. ஆனால், இத்திட்டங்களுக்கு ரூ. 469.26 இலட்சம் ஆதிதிராவிட நலத் திட்டங்களுக்காக மாநில அரசு செலவு செய்து வருகிறது. ஆகவே, நிதிமாற்றமோ அல்லது பயன்படுத்தாமையோ இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## வீட்டு வசதி

ஆண்டுக்கு 20 ஆயிரம் வீடுகள் என்ற கணக்கில் தாழ்த்தப் பட்டவர்களுக்கு, வேறு வீடு இல்லாதவர்களுக்கு என்று கட்டுவது என்று வைத்துக் கொள்வோம். அப்படிக் கட்டிக் கொடுப்ப தாக இருந்தால் ஏறத்தாழ 7 லட்சம் பெர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும். ஆண்டுக்கு 20 ஆயிரம் வீடுகள் என்று கட்டிக் கொடுத்தால்கூட, எத்தனை ஆண்டுகள் ஆகும்? 35 ஆண்டுகள் அளவுக்காவது குறைந்தது ஆகும். அதற்குள் மேலும் எத்தனை குழந்தைகள் பிறக்கப் போகின்றன, எண்ணிக்கை எப்படியாகும், என்னென்ன பிரச்சனைகள் வரும், விலைவாசிகள் எப்படி உயரும் என்பதெல்லாம் நமக்குத் தெரியாது. இன்று 16 ஆயிரம் ரூபாய் ஆகிறது. அன்றைக்கு ரூ. 35 ஆயிரம் அளவுக்கு ஆகுமோ என்று தெரியாது. அந்த 7 லட்சம் பேர் களுக்கு ஆண்டுக்கு 20 ஆயிரம் வீடுகள் வீதம் கட்டுவதாக இருந் தாலும் 35 ஆண்டுகள் ஆகும். நாம் 40 ஆயிரம் வீடுகள் ஆண் டுக்குக் கட்டித் தருவதாக இருந்தாலும் இன்னும் 15 ஆண்டுகளில் முடியலாம். அதைவிட லட்சக்கணக்கான வீடுகள் என்ற வகை யில், நாம் கட்டிக்கொடுக்க முனைந்தால்தான், விரைவில் ஒரு 5 அல்லது 6 ஆண்டு காலத்திற்குள் கூடுமான அளவில் வீடு இல்லாத தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்களுக்குக் கட்டிக் கொடுக்க முடியும். அதற்காகத்தான் அவர்களே உழைத்து கட்டிக் கொள்ளலாம். அந்த அளவுக்குக் கோடிக்கணக்கானபணம் அரசிடம் இல்லை. அரசும் கடன் கொடுத்து, அரசு மானியம் கொடுத்து அவர்களே சிறு சிறு வீடுகளை அங்கே கட்டிக்கொள்ள லாம் என்ற திட்டத்தை அமலாக்க முனைந்தோம். அந்த வகை யில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான என்னென்ன செய்திருக் கிறோம் என்று சொல்லி விடுகிறேன்.

## கல்வி வசதி

பள்ளிகள் என்று எடுத்துக் கொள்வோம். தொடக்கப் பள்ளிகள் 840. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு செய்திருப்பது. அவைகளில் 65,623 ஆண்கள், 63,014 பேர்கள் பெண்கள் படிக்கிறார்கள். நடுநிலைப் பள்ளிகள் 79. அவைகளில் ஆண்கள் 14,384 பேர்களும், பெண்கள் 11,308 பேர்களும் படிக்கிறார்கள், உயர்நிலைப் பள்ளிகள் 19. அவைகளில் 34,455 ஆண்கள், 2,03 பெண்கள் படிக்கிறார்கள். மேல்நிலைப் பள்ளிகள் 4. அவைகளில் 3,414 ஆண்களும், 2,541 பெண்களும் படிக்கிறார்கள். ஆக பள்ளிகளின் எண்ணிக்கை ஒட்டு மொத்தமாக 942. படிக்கின்ற ஆண்கள் 86,826, பெண்கள் 78,900 ஆகும்.



1977-78-க்கு முன்பு கல்வி உதவித் தொகை பணமாக வழங்கப்பட்டது. இது மாணவ மாணவிகளுக்குப் போதுமானதாக இல்லை என்றும் உரிய காலத்தில் கொடுக்கப்படாமலும் இருந்ததால், 1977-78 முதல் புத்தகமாக வழங்கப்படுகிறது. இவ்வாறு கடந்த 4 ஆண்டுகளில் இதற்கான செலவுத் தொகை 425.51 இலட்சம் ஆகும். 1967-68 முதல் 1975-76 வரை 9 ஆண்டுகளில் வழங்கப்பட்ட மொத்த உதவித் தொகை 627.63 இலட்சம் தான். இதை தயவுசெய்து நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இப்பொழுது 5 ஆண்டுகளில் 425 இலட்சம்.

கல்லூரிப் படிப்புக்கு 1967-68 முதல் உதவித் தொகை கொடுக்கப்பட்டது. 1975-76 வரையில் ரூ. 867.95 இலட்சம். 1977-78 முதல் 1980-81 முடிய ரூ. 903.58 இலட்சம். ஆகவே ஆதிதிராவிட மக்களுக்காக நாங்கள் என்னென்ன செய்திருக்கிறோம் என்பதை சொல்வதற்காகத்தான் இவ்வளவு கோடிட்டுக் காட்டியிருக்கிறோம்.

ஆகவே வேறு பிரச்சனைகளைப் பற்றியும் பேச வேண்டியதாக இருப்பதால் இதை நான் குறைத்துக் கொள்கிறேன்.

## உறைவிட வசதி

மாணவர்கள் இல்லங்கள் கட்டுவதற்கு 1974-75 முதல் 1975-76 முடிய ரூ. 109.08 இலட்சம். 1977-78 முதல் 1980- முடிய ரூ. 560.93 இலட்சம். இதிலே நாங்கள் அக்கறை காட்டவில்லை என்று சொல்வார்களானால், அவர்களுக்கு உண்மையின் மீது அக்கறை இல்லை என்றுதான் நான் சொல்ல வேண்டும். 1977-78 முதல் 1980-81 வரையில் கட்டி முடிக்கப்பட்ட விடுதிகள் 51, கட்டப்பட்டு வரும் விடுதிகள் 85, கட்டப்பட இருக்கும் மாணவர் விடுதிகள் 81, 1980-81-ம் ஆண்டுக்கான மாணவர் வர் இல்லங்கள் கட்ட அனுமதிக்கப்பட்ட தொகை, தற்போதுள்ள கணக்குப்படி பார்த்தால் 204.20 இலட்சம் என்றும், 646 விடுதிகள் என்றும் இங்கே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஆதிதிராவிட மக்களுக்கு 1961-62-ல் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கடன் மற்றும் மான்யங்கள் என்று வழங்கப்பட்டு வந்ததற்குப் பதிலாக 1977-78 முதல் அரசு மான்யமாக வழங்கப்பட்டு வருகிறது 1967-68 முதல் 1975-76 முடிய 9 ஆண்டுகளில் இவ்வாறு கடனாக,, மான்யமாக வழங்கப்பட்ட தொகை ரூ. 44.71 இலட்சம். ஆனால், கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் அரசு மான்யமாகவே ரூ. 38.23 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது என்பதை நான் இங்கே மன நிறைவோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



இலவச வீட்டு மனைகள் 1967-68 முதல் 1975-76 முடிய கையகப்படுத்தப்பட்ட மனைகளில் விலை மற்றும் செலவுகள் ரூ. 234.68 இலட்சம். வீட்டு மனைகள் பெற்றவர்களின் எண்ணிக்கை 91,658. 1977-78 முதல் 1980-81 வரை, 4 ஆண்டுகளுக்குக் கையகப்படுத்தப்பட்ட மனைகள் விலை மற்றும் செலவு ரூ. 399.60 இலட்சம் ஆகும். வீட்டு மனைகள் பெற்றவர்கள் எண்ணிக்கை 1,10,473. 9 ஆண்டுகளில் 91 ஆயிரம் பேர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அதாவது 91,658 பேர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இப்போது இந்த ஆட்சியில் 4 ஆண்டுகளில் 1,0,473 பேர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் ஆதிதிராவிட மக்கள் மீது அக்கறை செலுத்தவில்லை என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது.

## கலப்புத் திருமணங்களுக்கு உதவி

அடுத்து, கலப்புத் திருமணங்கள், திருமணத் தம்பதியரில் ஒருவர் ஆதிதிராவிடராக இருக்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் கொண்டு வரப்பட்ட திட்டம், 1976-ல் கிறித்தவராக ஆகிய ஆதிதிராவிடருக்கும் என்று ஆக்கப்பட்டது. ஆரம்பக் கட்டத்தில் கலப்புத் திருமணத்திற்குப் பாராட்டுப் பத்திரம், தங்கப் பதக்கம், ரூபாய் 200 என்று வழங்கப்பட்டு வந்தது. 1979-80 முதல் வருமானம் 6 ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் இருந்தால், திருமணச் செலவுக்காக ரூ. 300-ம் அவர்கள் பெயரில்




கூட்டாக வைக்கப்பட்ட தொகை ரூபாய் 4 ஆயிரம் என்று முதலீடு செய்யவும் இந்த அரசு வகை செய்திருக்கிறது. கலப்புத் திருமணத்திற்காக 1968-69 முதல் 1975-76 வரை 8 ஆண்டுகளில் மொத்தம் செலவிடப்பட்ட தொகை 1.76 இலட்சம் ரூபாய் தான். ஆனால் 1977-78 முதல் 1980-81 முடிய நான்கு ஆண்டுகளில் செலவிடப்பட்ட தொகை ரூ. 8.87 இலட்சம். ரூபாய் 4 ஆயிரம் வீதம் உதவித் தொகை பெற்ற தம்பதியர்கள் எண்ணிக்கை 153 பேர்கள்.

# கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம்

கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தில் தமிழகம் இந்தியாவிலேயே முதல் நிலையில் இருப்பது பற்றி 'ஃபைனான்ஸ் எக்ஸ்பிரஸ்'' என்ற பத்திரிகையில் வெளியாகியுள்ள செய்தியின் தமிழாக்கத்தை நான் இங்கே படிக்கலாம் என்று கருதுகிறேன். ஏனெனில் அனைத்து அதிகாரிகளும் இப்படித் தவறுகளைச் செய்வதில்லை. ஓரிருவர் செய்கின்ற தவறுகள் தமிழகத்திற்கே பெருமை தேடித்தருகிற அதிகாரிகள் அத்தனை பேருக்கும் களங்கத்தை ஏற்படுத்துகிறது. பத்திரிகையிலே வந்திருக்கிற இந்தச் செய்திகளை நான் இந்த மன்றத்திலே சொல்லாவிட்டால், தமிழகத்திலே திறமையோடும், ஆர்வத்தோடும், தகுதியோடும் பணியாற்றுகிறவர்களுக்குத் துரோகம் செய்தவன் ஆவேன் என்ற காரணத்தாலே இந்தக் குறிப்பை நான் இங்கே படிக்கிறேன்.

''தமிழ்நாடு மட்டுமே கணக்குகளை ஒப்படைத்துள்ளது. மத்திய அரசு மாநில அரசுகளுக்கான இரண்டாவது தவணை நிதியை நிறுத்தி வைத்துள்ளது. தேசிய கிராமப்புற வேலை



வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பல்வேறு மாநிலங்களுக்கு ஒதுக்க வேண்டிய ரூபாய் 90 கோடி இரண்டாவது திட்ட நிதியை மத்திய அரசு நிறுத்தி வைக்க முடிவு செய்துள்ளது என்று நம்பப்படுவதாக தகவல் வந்திருக்கிறது. இந்த நிதியாண்டு துவக்கத்தில் பல்வேறு மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட முதல் தவணைத் தொகை எவ்வாறு செலவிடப்பட்டுள்ளது என்கிற விவரங்களை மாநில அரசுகள் தரத் தவறியதுதான் மத்திய அரசு இவ்வாறு முடிவு எடுத்துள்ளதற்குக் காரணமாகும். எனினும் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நாளது தேதி வரை வரப் பெற்ற எல்லா நிதி உதவிக்கும் சரியான கணக்குகளை 'கொடுத்த ஒரே மாநி மான தமிழகத்திற்கு இரண்டாவது தவணையான தொகையை வழங்குவது என்று மத்திய அரசு முடிவு செய்துள்ளது'' என்ற தகவலை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இதிலிருந்து ஒன்றை நாம் புரிந்து கொள்ள முடியும். பொறுப்புக்களை நிறைவேற்றுபவர்கள், பணியாற்றியவர்கள் எப்படி செய்தார் என்பதை அறிந்து, கணக்குகளைப் பெற்று, எந்தெந்தக் காலத்தில் எப்படியெப்படி செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் அங்கே அனுப்பியிருக்கிறார்கள். மற்ற மாநிலத்தவர்கள் அந்த அளவிற்குக் கூட செய்யவில்லை. ஆகவே, அதை நிறுத்தி விட்டார்கள். ஆனால், தமிழகத்திற்கு மட்டும் இரண்டாவது தவணை கொடுக்கப்படுகிறது என்பதை எண்ணிப் பார்த்தால், உண்மையிலேயே தமிழ்நாட்டு அதிகாரிகள் எவ்வளவு சரியாகத் தங்கள் பணியைச் செய்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

இங்கே இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் நாட்டிலுள்ள 326 வட்டாரங்களில் ஒவ்வொரு வட்டாரத்திலும் 300 குடும்பங்களுக்கு என்று திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. ஓர் ஆண்டுக்கு 1.8 இலட்சம் குடும்பங்களுக்கு வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களை வறுமைக் கோட்டிற்கு மேலே கொண்டுவரும் நோக்கத்தோடு ஒரு சிறப்புக் கூட்டமைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


இதற்கு மத்திய அரசின் சிறப்பு உதவியாக 1980-81ஆம் ஆண்டில் 9.56 கோடி ரூபாய் பெறப்பட்டு, மாவட்டங்களில் உள்ள திட்ட அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டது. முதலிலே குறிப்பிட்டபடி 1.8 இலட்சம் குடும்பங்கள் பல தொழில்கள் துவக்கியும், வேறு துறைகளில் பொருளாதார வளர்ச்சி பெறவும் தேவையான மூலதனத்தில் 33 விழுக்காடு மானியமாகவும், தமிழ் நாடு வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் குறைந்த வட்டியில் மூலதனக் கடனாக 25 விழுக்காடும், கூட்டுறவு மற்றும் வாணிப வங்கிகள் மூலமாக மீதி தேவையான தொகையைப் பெற்று அவர்கள் தொழில்களைத் துவங்கி, மேம்பட வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1980-81-ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 81,35,840 ரூபாய் ஒதுக்கப்பட்டது. மேற்கண்ட திட்டத்தில் குறைந்த வட்டியில் மூலதனக் கடனாகக் கொடுக்க தமிழ்நாடு ஆதிதிராவிட வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்திற்கு 1980-81-ல்

ரூபாய் 2 கோடியும், 1981-82-ல் 1 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசு இந்தக் காரியங்களைச் செய்வதற்கு, சரிவர ஒரு மாநில அரசு எவ்வளவு செயல்பட முடியுமோ அதற்கேற்றவாறு உதவி செய்ய முன் வருகிற

தென்ற செய்தியை இந்த மன்றத்திலே சொல்லுவது இந்தஅரசின் கடமையென்று கருதுகிறேன். மத்திய அரசிலிருந்து பல்வேறு வழிகளில் ஒரு மாநிலத்திற்கு உதவித் தொகைகள் கிடைக்கின்றன. அதைச் சரிவர செயல்படுத்தாமல் இருந்தால், விரயம் செய்தால், வீண் அடித்தால்தான் தடங்கல்கள் ஏற்படும். நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு, நாங்கள் கேட்ட தொகை முழு அளவிற்கு இல்லையென்றாலும், அவர்கள் நம்புகிற அளவிற்கு, தேவை எவ்வளவு என்று நினைக்கிறார்களோ அந்த அளவிற்கு உதவிகள் தொடர்ந்து கிடைக்கின்ற என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆதிதிராவிடர்களுக்கு 11,355 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 60,399 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. மேலும் 27,774 வீடுகள் நடப்பு ஆண்டில் கட்டப்பட இருக்கின்றன. அதாவது, 5 ஆண்டுத் திட்டக் காலத்திற்குள் ஆண்டு ஒன்றுக்கு 40,000 வீடுகள் வீதம் 2 இலட்சம் வீடுகள் கட்ட முடிவெடுத்து, ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் 67,334 வீட்டு மனைப் பட்டாக்கள் ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

## அரிசித் தட்டுப்பாடு நீங்கியது

நாங்கள் ஆட்சியை விட்டு வெளியேற்றப்படும் வரை அரிசி விலை சீராக இருந்தது என்பதை இங்குள்ள எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள். அதற்குப் பிறகு நிலைமை என்ன ஆயிற்று? 2, 3 மாத காலத்தில் அவ்வளவு கட்டுக்கோப்பும் அழிந்து, சீர்குலைக்கப்பட்டது. ஏன வெளியேயிருந்து அதிக விலைக்கு வாங்கினீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள். அது நியாயம்தான். ஆனால், நியாய விலைக் கடைகள் மூலமாக நாட்டு மக்களுக்கு அரிசியை குறைந்த விலைக்குக் கொடுக்க வேண்டுமென்ற நிலையில் வெளியே அரிசியின் விலை ஏறிக்கொண்டிருக்கும் நிலையில் அரிசியே கிடைக்காமல் போய்விடுமோ என்று அச்சப்படும் நிலை இருக்கும்போது அரசு கணக்கைப் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? அதனால்தான் ஓர் உத்தரவு போட்டது. அந்த உத்தரவில்கூட வெளியிலிருந்து அரிசியை வாங்கும்போது சிவில் சப்ளைஸ் கார்ப்பரேசன் மூலமாகத்தான் வாங்க வேண்டுமென்று உத்தரவு போட்டோம். தனிப்பட்டவர்கள் வாங்கக் கூடாது என்று அதில் சொல்லியிருந்தோம். மத்திய அரசும் உதவி செய்தது. தரவும் செய்தார்கள். ஆனால், வாகன் இல்லை. அப்படியும் ஆந்திரா ஒரிசா போன்ற மாநிலங்களைக் கேட்டோம். பஞ்சாபிலிருந்தும் வாங்கி வைத்தோம். இப்படியெல்லாம் செய்து



வறட்சி என்பதை நாட்டு மக்கள் உணராமல், வெளியே தெரியாமல் செய்தோம். 56 கோடி ரூபாய்க்கு மேல் செலவிட்டு என்னென்ன செய்யவேண்டுமோ அத்தனையும் செய்தோம். 49.77 கோடி ரூபாய் மத்திய அரசு கொடுத்தது. பிரச்சனையை நல்ல முறையில் ஒழுங்குபடுத்தினோம். இன்றுவரை வறட்சி எப்போது வந்தது. எப்போது நீங்கியது என்று அரிசியைப் பொறுத்தவரையில் வெளியே தெரியாத அளவுக்குத் தேவையான அரிசியை நாட்டு மக்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலமாகக் கொடுத்தோம்.

## அண்ணாவின் தத்துவம்

பொருளாதார சமத்துவம் மற்றும் மக்களுடைய சமத்துவம் இரண்டும்தான் அமரர் அண்ணா அவர்களுடைய கொள்கை. இந்த நிலையில் நின்று பார்த்தால் அண்ணாவின் கொள்கை நாட்டிலுள்ள ஏழையெளிய மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒன்று. நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன், ''மக்களுக்காகத்தான் கொள்கையே தவிர, கொள்கைக்காக மக்கள் அல்ல.'' இதுதான் எனக்குத் தெரிந்தவரையில் நான் அறிந்துகொண்ட பாடம். பார்க்கப் போனால், சமுதாயத்தில் மக்கள் வாழ்வதற்காக ஏற்றத் தாழ்வற்ற சமதர்ம சமுதாயத்தைஅமைக்க வேண்டும். சமுதாயத்திலே பொருளாதாரத்தையும், சமுதாய அமைப்பையும் சமத்துவ நிலைக்குக் கொண்டுவர வேண்டும். சம நிலைக்குக் கொண்டுவர வேண்டும். அப்படி நாம் விரும்புகின்றபோது நாட்டிலுள்ள பணமுள்ளவர்களையும் முதலாளிகளையும் அழித்துவிட்டு இன்னொரு பற்றாக்குறை என்று சொல்லுகின்ற அளவுக்கு அவர்களையும் வறுமைக் கோட்டுக்குக் கீழ்

கொண்டுவர வேண்டுமா? நாட்டிலே இன்றைக்கு எத்தனை பேர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் இருக்கிறார்கள். இப்படி செய்வதன் மூலம் மட்டுமே நாட்டிலே வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்ப வர்களை எல்லாம், ஏழைகளாக இருப்பவர்களை எல்லாம் முத லாளிகளாக ஆக்க முடியுமா? அந்த அளவுக்கு ஒன்றும் அமரர் அண்ணா அவர்கள் சொல்லவில்லை. ''லெவலிங் அப் அண்ட் லெவலிங் டவுன்'' என்று அவர்கள் சொல்லி மிக உயர்ந்த நிலை யில் இருப்பவர்களை மத்திய நிலைக்குக் கொண்டு வாருங்கள், அதே சமயத்தில் மிகத் தாழ்ந்த நிலையில் இருப்பவர்களை மத்திய நிலைக்குக் கொண்டு வாருங்கள் என்றுதான் சொல்லி யிருக்கிறார்கள். அந்த நிலை அமைய வேண்டும் என்று எண்ணிய அமரர் அண்ணா அவர்களின் கொள்கை வழி நின்று, அவர்களின் கொள்கையைப் புரிந்து கொண்டு பயணம் செய்துகொண்டிருக் கிறோம்.

அந்த வகையில் பார்த்தால் சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு என்பது பணத்தில் மட்டுமல்ல. சமுதாய அமைப்பும் மாற்றப்பட வேண்டும். அந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு இடையூறாக



இருப்பவர்கள் யார்? இங்கேதான் இடைத்தரகர்கள் என்று சொல்கிறார்கள். அவர்களை ஒழிக்காவிட்டால் நாம் நிச்சய மாக ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தைக் காண முடியாது.

## மின்வாரியத்தின் நிலை


மின் வாரியத்தின் மூலம் தொடர்ந்து மேலும் மேலும் நட்டப்பட்டுக் கொண்டே போவதும், அதன் காரணமாக மின் கட்டணத்தை உயர்த்திக் கொண்டே போவது என்பதும் சரியல்ல. எங்கெங்கே பணத்தைப் பெற முடியுமோ அங்கிருந்தெல்லாம் பணத்தைப் பெற்று நட்டத்தை ஈடுகட்ட வேண்டும் என்று மத்திய அரசு வற்புறுத்துவதும், ''நாங்கள் கோடிக் கணக்கில் பணம்' தந்து தமிழகத்தில் மின் உற்பத்திக்கு வாய்ப்புச் செய்து தருகிறோம். மேலும் வெளியே இருந்தெல்லாம் கடன் வாங்கித் தருகிறோம். ஆனால் தமிழ்நாட்டில் உள்ள நீங்கள் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தொடர்ந்து நட்டத்தை ஏற்படுத்திக் கொண்டிருப்பது எப்படி நியாயமாகும்'' என்று அவர்கள் கேட்பதும் உண்மையிலேயே நியாயமானதுதான். இதன் காரணமாக நாம் கட்டணத்தை உயர்த்த வேண்டிய அவசியம் வருகிறது. அப்படி உயர்த்தினால் இங்கே இருக்கிற அனைவரும்-என்னையும் சேர்த்தே சொல்கிறேன்-கட்டணத்தை உயர்த்தக் கூடாது என்று சொல்கிறோம். விவசாயிகளுக்கு உயர்த்தக் கூடாது என்கிறோம். பெரிய விவசாயிகளானாலும் சரி, சிறிய விவசாயிகளானாலும் சரி, எல்லோருக்கும் மின் கட்டணம் சமமாக இருக்க வேண்டும் என்று சொல்கிறோம். சரி, வீடுகளுக்கு மின் கட்டணத்தை உயர்த்துவோம் என்றால் அது எப்படி நியாயமாகும் என்ற கேள்வி உண்டாகிறது. இப்படிப் பல்வேறு பிரச்சினைகள் உருவாகின்றன. இவற்றையெல்லாம் ஒழுங்குபடுத்த எண்ணிப் பார்க்கிறபோதுதான் யாராவது முன் வந்து இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு ''நாங்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்து தருகிறோம், நீங்கள் நட்டத்தை அடையத் தேவையில்லை உங்களுக்கு ஆண்டுக்கு இவ்வளவு என்று தருகிறோம்''; என்று சொல்வார்களானால், ஏன் நாம் அதை ஒப்புக் கொள்ளக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன். நமக்குப் பணம் வேண்டும். பணம் வேண்டும் என்பது மட்டுமல்ல; அதிகமாக வேண்டும். நான் கணக்குப் போட்டுப் பார்த்தேன். ஒயர் கெட்டுப் போனது, அல்லது திருடு போனது என்று எல்லாக் கணக்கையும் பார்த்தால் ஆண்டுதோறும் நமக்கு விரயமாகும் பணம் சாதாரணமாக 17 கோடி ரூபாய் அளவுக்கு இருக்கிறது. இதைக் கண்டுபிடிக்க வேண்டியவர்கள் கண்டு பிடிப்பதில்லை. இதற்காகத்தான் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தோம். 'ஸ்பாட் பில்லிங்' முறையில் கார்டு கொடுக்க வேண்டும் என்று தொழிலாளர்களுக்குச் சொன்னால் உடனே அவர்கள் கோர்ட்டுக்குப் போய்த் தடை உத்தரவைப் பெற்று வருகிறார்கள்.

அதற்காக நாம் சும்மா இருக்க முடியாது. நம்முடைய கடமை ஒன்று இருக்கிறது. மக்களுக்காக மின்சாரம் வழங்கியாக வேண்டும். புதிய தொழிற்சாலைகள் உண்டாக வேண்டும். புதிய தொழிற்சாலைகள் வந்தால்தான் பலருக்கு வேலை கிடைக்கும். பொருளாதாரம் உயரும். மக்களுக்கு வேலை கிடைத்துஅவர்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும். மக்கள் எளிமையில் இருக்கும் வரை நாம் நிம்மதியாக இருக்க முடியாது. அந்த வகையில் நாம்

அந்தக் காரியத்தைச் செய்ய முனையும்போது அதற்கு இடையூறாக இருப்பது, நமது கொள்கைக்கு இடையூறாக இருப்பது எதுவானாலும் அதைப் பற்றிக் கவலைப்பட முடியாது.

சிமெண்ட் பற்றாக்குறை என்கிறோம். பல கட்டிடங்கள் கட்டப்பட முடியாமல் இருக்கின்றன. பல கட்டிடங்கள் பாதியில் நிற்கின்றன. சிமெண்டுக்கு அவ்வளவு கஷ்டம் இருக்கிறது. இந்த அரசைப் பொறுத்த வரையில் அப்படிப்பட்ட நிலைமையைத் தவிர்க்க முடியாத நிலையில் அந்த ஆலைகளை எல்லாம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால் இந்த அரசு எடுத்துக் கொள்ளத் தயங்காது என்று சொல்லிக் கொள்கிறேன்.

ஆகவே, கொள்கை என்பது மக்களை வாழ வைக்க ஒரு சாதனமே தவிர வேறல்ல. தேசியமய மாக்குவதானாலும் சரி, தனியாரிடம் கொடுப்பதானாலும் சரி அதன் காரணமாக மக்களுக்குப் பயன்படும் என்றால் அதைச் செய்வதற்கு நாம் தயங்கக் கூடாது. இதைப் பயன்படுத்திக் கொண்டு தனிப்பட்டவர்கள் தங்கள் வாழ்க்கையை உயர்த்திக் கொள்ள முனைவார்களானால், அந்தப் போக்கைத் தடுத்திட நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



சிமெண்ட் தொழிற்சாலையை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்கிற நாம், மின்சார உற்பத்தியைத் தனியாருக்கு விட்டு விடலாம் என்று எண்ணக்கூடிய அளவிற்கு நான் ஏன் கட்டாயத்திற்கு ஆளாகிறேன்? ஏழைகளுக்காகச் செலவழிக்க வேண்டிய 100 கோடி ரூபாய் ஆண்டுக்காண்டு விரயம் ஆகிக் கொண்டிருக்கிறது. மற்றவர்களும் ஒத்துழைத்தால் 100 கோடி ரூபாய் இலாபத்தைப் பெற்று மொத்தம் ஆண்டுக்கு 200 கோடி ரூபாய் வரும். இதை வைத்துக் கொண்டு பல திட்டங்கள் தீட்டலாம். அதற்காகத்தான் சொல்கிறேனே தவிர வேறு ஒன்றுமில்லை. அண்ணாவினுடைய கொள்கையில் எந்த மாறுபாடும் இந்த அரசுக்கு இல்லை என்பதை எல்லோரும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளலாம்; நம்பலாம்.

## மது விலக்கு

இங்கே மதுவிலக்குக் கொள்கை பற்றியெல்லாம்கூட சொன்னார்கள். அவர்கள் அச்சப்படுவதாகச் சொன்னார்கள். அவர்கள் மொழியிலே ரத்து செய்துவிட்டதாகச் சொல்லுகின்றார்கள். எங்களுடைய மொழியிலே அது தளர்த்தப்பட்டிருக்கிறது என்று சொல்கிறேன். இப்படித்தான் நிலைமைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். தயவு செய்து உறுப்பினர்கள் நம்பலாம். அண்ணா அவர்கள் வழியிலிருந்து நாங்கள் மாற மாட்டோம்.

## கல்வியில் மறுமலர்ச்சி

கல்வியிலே ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்தியாக வேண்டும். வெறும் பட்டப்படிப்பு மட்டுமென்ற நிலையிலிருந்து மாறி, தொழிற் கல்வியோடுதான் அது வளர வேண்டுமென்ற நிலைக்கு முழுமையாகக் கொண்டுவரும்வரை நாட்டிலே நல்ல நிலைமைகளைக் காண முடியாது. ஆகவே ஒவ்வொரு குழந்தைக்கும் குறிப்பிட்ட வயதிலிருந்து தொழிற் கல்வியை அளிக்கும் அளவிற்குக் கற்பிக்கும் பணியை மேற்கொண்டால்தான் நன்மை அளிக்கும். இந்த நாட்டின் எதிர்காலம் இளைஞர்கள் கையில் ஒப்படைக்கப் போகிறோமென்று சொல்லும்போது, எப்படிப்பட்ட இளைஞர்கள் கையில் ஒப்படைக்க இருக்கிறோமென்பதை நம்பிக்கையோடு சொல்ல முடியும்.

இந்த நேரத்தில் அண்ணா அவர்கள் சொன்னதை நினைவுபடுத்த விரும்புகிறேன். மாணவர்கள் கோட்டைக்கு முன்னால் ஒருமுறை போராட்டம் நடத்த இருந்தபோது, ஒரு மாணவர், பச்சையப்பன் கல்லூரியிலிருந்து வந்து, அண்ணா அவர்களைச் சந்தித்தார். நான் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளப் போகிறேன், உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன்' என்று மாணவர் சொன்னார். 'நீ அப்படிச் செய்வாயானால், என்னை இனி பார்க்கக்கூடாது, என் பெயரைப் பயன்படுத்தக்கூடாது' என்று அண்ணா அவர்கள், சொன்னார்கள். உண்மையிலேயே என் முதல் விரோதி நீதான்' என்றும் சொன்னார். அந்த மாணவர் அழுதே விட்டார். அப்போது திராவிட நாடு கேட்டுக் கொண்டிருந்த காலம். திராவிட நாடு வேண்டுமென்று கேட்கிறோம். திராவிட நாடு இப்போது கிடைக்கவில்லை என்று வைத்துக் கொள், 15ஆண்டுகள் கழித்துக் கிடைக்கிறது அல்லது 20 ஆண்டுகள் கழித்துக்கிடைத்து விட்டது, அப்படிக் கிடைக்கும் நேரத்தில் இந்த நாட்டிற்குத் தேவையான பணிகளை ஆற்றப்போவது யார்? பொறியாளர்கள் வேண்டும், நல்ல வழக்கறிஞர்கள் வேண்டும், நல்ல மருத்துவர்கள் வேண்டுமென்றால் உங்களைப் போன்றவர்கள் கற்று, தேர்வு பெறாவிட்டால் வெளிநாட்டிலிருந்துதான் கொண்டுவர வேண்டும், அந்த நிலையில் விடுதலை பெற்றால் என்ன, பெறாவிட்டால் என்ன, எல்லாம் ஒன்றுதான் என்று சொன்னார்கள். பிரிவினையா, இல்லையா என்பதல்ல பிரச்சினை. மாணவர்

களுக்கு நல்ல கல்வி கொடுக்க வேண்டுமென்றால், அதற்கு முழுப் பொறுப்பையும் இப்போது இருக்கின்ற நாம் ஏற்றுக் கொண்டால்தான்; அதை நம்முடைய கடமை உணர்வாக இருக்கும், அதை விட்டுவிட்டு, கட்சியை வளர்க்க சந்தர்ப்பத்தைப் பயன்



படுத்திக் கொண்டு, சிலரைத் தூண்டிவிட்டு, காரியங்களைச் செய்தால், அது உண்மையிலேயே நாட்டுக்குச் செய்யும் துரோகம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, ஒன்றைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். எந்தப் பிரச்சினையானாலும், முதலில் ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்வதில்லை என்ற உறுதிக்கு வந்தாக வேண்டும். உங்கள் பிரச்சினையைப் பேசித் தீர்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் போராடினால், அதைப் பார்க்கின்ற மாணவர்கள் என்ன செய்வார்கள்? வீட்டிலே இருக்கின்ற பெரியவர்கள் எதைப் பழக்கமாக வைத்துக் கொள்கிறார்களோ, அதில் கொஞ்சமாவது அந்தக் குழந்தைகளின் குணமாக இருக்குமென்பதை ஒத்துக் கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் 5 மணி நேரந்தானே என்று குறைபட்டுக் கொள்ளலாம், '5 மணி நேரம்' சொல்லிக் கொடுக்கிறோம். வேலை செய்கிறோம், 19 மணி நேரம் அவர்கள் வெளியே இருந்தாலும்கூட 5 மணி நேரத்தில் மாணவர்களை, மாணவிகளை நாம் நல்ல குடிமகன்களாக—ஜனநாயகத்திற்குத் தேவையான மக்களாக உருவாக்கித் தந்தோம் என்று எண்ணி, அதை நீங்கள் செய்தால், இந்த அரசு நன்றி உடையதாக இருக்குமென்பது மட்டுமல்ல, எதிர்காலத் தமிழக வரலாறு உங்களைப் போற்றுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## பால் கமிஷன் அறிக்கை

பால் கமிஷன் அறிக்கையைப் பொறுத்த வரையில், அது கிடைத்த 6 மாதத்திற்குள் அவையில் வைக்கப்பட வேண்டும். சட்டமன்றத்தில் 6 மாதத்திற்குள் வைக்க வேண்டும் என்பது தான் விதி. பால் கமிஷன் அறிக்கை கிடைத்த பிறகு அதனை நாங்கள் தமிழில் மொழி பெயர்த்து, சட்ட மன்றப் பேரவை யிலும், மேலவையிலும் வைப்பதற்கு முயன்றோம். அதைப் போலவே இப்போது வைத்திருக்கிறோம். ஆனால் இதற்கிடை யில் நாங்கள் தாமதித்து விட்டோம் என்றும், மக்களை ஏமாற்றி விட்டோம் என்றும், அந்த அறிக்கையையே மறைத்து விட்டோம் என்றும் எங்கள் மீது பழி சுமத்தினார்கள். அது எப்படி நியாயம் என்றுதான்- கேட்க விரும்புகிறேன். இதைக் காலதாமதம் என்று சொல்லுவோமானால் இங்கே நடந்த சிலவற்றை உறுப் பினர்களின் நினைவுக்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். பல்வேறு விசாரணைக் கமிஷன்களில் அறிக் கைகள் எந்த அளவுக்குத் தாமதப்படுத்தப்பட்டு பின்பு சட்ட மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கின்றன என்பதை விளக்க விரும்புகிறேன். நாங்கள் எப்படிச் செயல்பட்டிருக்கின்றோம் என்பதையும் இதற்கு முன்னால் இருந்தவர்கள் எப்படிச் செயல் பட்டிருக்கிறார்கள் என்பதையும் உணர்ந்து கொள்ள இது ஒரு வாய்ப்பாக அமையும் என்று கருதுகிறேன்.

முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு. கருணாநிதி அவர்களுக்குஅண்ணாமலைப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் அளித்த போது 23-7-1971 அன்று காவல் துறையினர் நடத்திய தடியடிப்பிரயோகம் குறித்து சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு என். எஸ். இராமசாமி விசாரணைக் கமிஷன் அறிக்கை அரசுக்குக் கிடைத்த தேதி 27-12-1971. ஆனால் அது அவையில் வைக்கப்பட்ட தேதி 18-8-1972. ஏறத்தாழ 8 மாதங்கள் கால தாமதப் படுத்தப்பட்டு அவையில் வைக்கப்பட்டது.

அடுத்து மதுராந்தகம் வட்டத்தில் அமைந்துள்ள பெரிய குப்பம் கிராமத்தில் நடந்த விரும்பத்தகாத சம்பவங்கள் குறித்து நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிஷனின் அறிக்கை அரசுக்குக் கிடைத்த தேதி 7-12-1973, ஆனால் அது 16 மாதத் தாமதத் திற்குப் பிறகுதான் சட்டமன்ற அவைகளிலே வைக்கப்பட்டது. அப்போது யாராவது இதைப்பற்றி சொன்னார்களா? யாராவது கேட்டார்களா? நாங்கள் 6 மாதத்திற்குள் வைத்து விட்டோம். அதன்மீது பேசுவதற்குக் கூட வாய்ப்பு இருக்கிறது. இப்படிப் பட்ட நிலைமையில் இவர்கள் மறைத்து விட்டார்கள் என்பதும் காலம் தாழ்த்தி விட்டார்கள் என்பதும் எப்படிச் சரியாகும் என்று தான் கேட்க விரும்புகிறேன்.

கொலையா? தற்கொலையா? கொலையாக இருக்குமானால் அதைச் செய்தவர் யார்? இது இன்னும் தெளிவுபடுத்தப்பட வில்லை. அப்படித்தான் விசாரணைக் கமிஷன் அறிக்கை நமக்குக் கிடைத்திருக்கிறது. இதிலே மறைப்பதற்கு என்ன இருக்கிறது? இன்னார்தான் கொலை செய்தார் என்று சொல்லியிருந்தால், அந்த அறிக்கையை நாங்கள் வெளியிடாமல் இருந்தால் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் சொன்னது போல மறைத்தார்கள் என்று சொல்ல நியாயம் இருக்கிறது. அதிலே மறைப்பதற்கே அவசியமில்லை, இப்படித்தான் இருக்கிறது அறிக்கை. அதுதான் எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. இதை நாங்கள் மறைக்க வேண்டிய அவசியமில்லை. இதை மறைப்பதால் எங்களுக்கு என்ன லாபம்? வெளியிடுவதால் என்ன நஷ்டம் எங்களுக்கு வரப் போகிறது? இப்போது வெளியே சொன்னதால் என்ன ஆபத்து வந்து விட்டது? மறைத்தது என் பதற்கான எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல், 'மறைத் தார்கள், மறைத்தார்கள்' என்று சொல்லி ஒன்றும் இல்லாத ஒன்றை பூதாகரமாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்' என் பதை வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். அவையில் வைக்க வேண்டிய கட்டத்தில் வைக்காமல் மறைத்து வைத்துவிட்டு,

நாங்கள் வேறு வகையிலே காரியமாற்றத்தைத் தொடங்கியிருந் தால் சரிதான். இதைப்பற்றி பேசப் போகிறார்கள் என்றாலும், நான் சொல்ல வேண்டிய பதிலை சொல்ல வேண்டிய அவசியத் திற் குள்ளாக்கியதால் சொல்கிறேன். இது கொலையா, தற் கொலையா? கொலையாக இருந்தால் யார் செய்தது என்பதை விசாரிக்க எந்தப் பிரிவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று எழுதி யிருக்கிறார்கள். அதை முன்பே உத்தரவு போட்டுவிட்டுக் கொடுத் திருக்கிறோம். இதைவிட என்ன செய்ய வேண்டும்? இது எப்படி மறைப்பதாகும். குற்றம் இல்லாதபோது எங்கள் மீது பழி சொல்லுகிறபோது, பதில் சொல்லாமல் எப்படி இருப்பது தாமதமா என்றால் இல்லை. ஆறு மாதங்களுக்குள்ளாக வைத்து விட்டோம். அதுவும் மொழிபெயர்த்து வைத்திருக்கிறோம். இடையிலே என்ன நடந்தது என்பதைப் பற்றி நீங்கள் முடிவு செய்து கொள்ளுங்கள்.

## சட்டம், அன்றும் இன்றும்

இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். *1938* அல்லது *1939*-ஆம் ஆண்டில் என்று நினைக்கிறேன். அனேக மாக 1939-ஆம் ஆண்டாக இருக்கலாம். இப்போது மிட்லண்டு தியேட்டர் பக்கத்தில் உள்ள மைதானத்தில்தான் பொதுக்கூட் டங்கள் நடக்கும். அப்போது திரு எம். என். ராய் இங்கே வந்து பேசியதை நான் நேரில் கேட்டேன். ஆங்கிலேயர்களுக்கு மிகவும் நெருக்கடியாக இருந்த நேரத்தில் அந்தக் கூட்டம் நடைபெற்றது.

காந்தி அடிகள் தனி நபர் சத்தியாகிரகத்தைத் தொடங்கி யிருந்தார். அப்போது எம். என். ராய் அவர்கள் பொதுக் கூட்டத்தில் ஒரு கருத்தைத் தெரிவித்தார். இந்தியாவில் ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் எத்தனைக் காவல் துறையினர் இருப்

பார்கள், அதைப் போலவே எத்தனை இராணுவத்தினர் இருப்பார்கள். இவர்களிடம் இருக்கும் மொத்தத் தோட்டாக்கள் எவ்வளவு? இவர்களிடம் இருக்கும் துப்பாக்கிகள் எவ்வளவு? இவைகளையெல்லாம் கணக்கிட்டால், இவற்றோடு நம் நாட்டிலுள்ள கிராமங்களில் எண்ணிக்கையைக் கணக்கிட்டால் 5 அல்லது 10 கிராமங்களுக்குக்கூட ஒரு காவலர் சென்று எதையும் செய்ய முடியாத நிலைதான் இருக்கும். ஆகவே, நாம் வேறு வழியில் முயன்றால், விரைவில் இந்தியாவை விடுதலை செய்ய முடியும் என்று பேசியதை நானே கேட்டேன். இன்று நாம் அதைப்போல் பேச முடியுமா? பேசத் தயாரா? சட்டம் தடுக்கிறது என்பது மட்டுமல்ல, மக்கள் உணர்கிறார்கள். இன்று அந்தத் தேவையும் இல்லை, வன்முறை வேண்டாம். தமக்குத் தேவையானதை மக்களிடம் சொல்வோம். வன்முறையின் மூலம் எதையும், பெறாமல், மக்களிடையே ஆதரவோடு, வாக்குச் சீட்டின் துணை கொண்டு எதையும் மாற்றுவோம் என்ற நம்பிக்கையில் நாம் அரசியலை அமைத்துக் கொண்டு அதன் வழியில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

எந்தச் சட்டம் கொண்டு வருவதாக இருந்தாலும் எந்த ஒழுங்கை நிலைநாட்ட வேண்டுமென்று விரும்பினாலும், ஒட்டு மொத்தமாக ''நாட்டுமக்களுடைய நன்மையை முன்னிட்டு'' என்ற எண்ணத்தை மனதிலே கொண்டு அரசோடு ஒத்துழைத்து அரசுக்கு யோசனை கூறி நிறைவேற்ற முன்வந்தால் பிரச்சினைகள் மிக மிகக் குறையும் என்று நான் கருதுகிறேன்.

## பத்திரிகையும் பொறுப்புணர்வும்

'பத்திரிகை ஆசிரியர்'களுக்கு இருக்கும் பொறுப்பு சாதாரண பொறுப்பு அல்ல. நிருபர்கள் செய்தியைக் கொடுத்தால் கூட, அந்தச் செய்தியைப் பார்த்து, படித்து, அதை சட்டபூர்வமாகப் பரிசீலித்து அதற்குப் பிறகுதான் வெளியிட வேண்டும் என்ற நியதி இருக்கிறது.

நாம் ஒரு சட்டம் கொண்டு வருகிறோம் என்றால் அதன் காரணமாகச் சில தவறுகளைத் தடுப்பதற்காகவும், அவர்கள் அச்சத்தோடு இருக்க வேண்டும் என்றுதான் கொண்டு வருகிறோமே தவிர, உடனே அவர்கள் தண்டனையை அடைய வேண்டும் என்ற கருத்தில் அல்ல. கள்ளச் சாராயம் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அது எங்கே எப்படி எப்படியெல்லாம் நடக்கிறது என்பதைச் சொன்னார்கள். எந்தெந்த வகையில் விநியோகிக்கப்படுகிறது என்பதையெல்லாம் கூட சொன்னார்கள். அந்தக் குற்றம் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்கிறோம். தேசிய தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் எங்கள் கட்சிக்காரர்களையும் கைது செய்கிறோம் வேறு கட்சியைச் சார்ந்தவர்களையும் கைது செய்கிறோம். கட்சியிலே சம்பந்தப்படாதவர்களையும் கைது செய்கிறோம் கள்ளச், சாராயத்திற்குப் பின்னால் இருந்து கொண்டு பணத்தைக் கொடுத்து மற்றவர்களைச் செய்யச் சொல்லி தாங்கள் மட்டும் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பித்துக் கொள்கிறவர்கள் இனித் தப்பித்துக் கொள்ள முடியாதபடி நடவடிக்கை எடுக்கிறோம். இதுதான் முக்கியமே தவிர சாதா

ரண ஏழை எளிய மக்கள், வாழ்வதற்கு வேறு வழியில்லாதவர்கள் சோற்றுக்கே திண்டாடுகிறவர்கள் பணம் சம்பாதிக்க இந்த நிலைமையில் தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறவர்களைப் பழி வாங்குவதற்காக அல்ல. ஏற்கனவே அதிகமான அளவில் இந்தக் குற்றத்தில் ஈடுபட்ட ஆண்கள் அதிகமான அளவுக்குச் சிறைக்குப் போனதால் தாய்மார்கள் பெருமளவுக்குக் கண்ணீர் விட்டார்கள் என்ற காரணத்திற்காகத்தான் சட்டத்திலேயே மாற்றம்கொண்டு வர விரும்பினோம். எனவே இத்தகையோர்கள் மீதுதான்சட்டம் நடவடிக்கை எடுக்கிறது என்பதில் யாருக்கும் சந்தேகம் வேண் டாம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

## கூட்டுறவுக் கடன்

கூட்டுறவுக் கடன்கள். தமிழ்நாட்டில் விவசாயிகள் கூட்டு றவுக் கடன் சங்கங்களிலிருந்து பெற்ற கடன்களை நீண்ட கால



மாகச் செலுத்தாமல் இருந்த சூழ்நிலையில் கூட்டுறவு வங்கிகள்
ரிசர்வ் வங்கியிடமும் இதர கடன் வழங்கும் நிறுவனங்களிடமும்
வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்த முடியாத கடுமையான
நிதி நெருக்கடி ஏற்பட்டது. தமிழ்நாட்டில் வேளாண்மைத்
தொழிலுக்கும், விவசாயிகளுக்கும் பேருதவி புரிந்து வந்த
கூட்டுறவு சங்கங்களே மூடப்படும் அபாய நிலை ஏற்படுத்துவதைத்
தடுத்து நிறுத்துவதற்காகக் கடன் வசூல் செய்ய சில நடவடிக்கை
களைத் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் அரசு எடுத்து, நிலவரி
வசூல் சட்டத்தின் கீழ் கூட்டுறவுக் கடன்களை வசூல் செய்ய
1981-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அனுமதி அளித்தது. மிகுந்த
நிதிநிலை நெருக்கடியையும் பொருட்படுத்தாது தமிழக அரசு
விவசாயிகளின் கஷ்டங்களையும், நெருக்கடிகளையும் கருத்தில்
கொண்டு, கடந்த இரண்டு ஆண்டுகளில் சுமார் 200 கோடி
ரூபாய்க்கு மேல் கூட்டுறவுக் கடன் மற்றும் தக்காவிக் கடனில்
சலுகை வழங்கியது. 30-6-81-க்குள் கடன்களைச் செலுத்தும்
சிறு விவசாயிகளுக்கு வட்டியைத் தள்ளுபடி செய்யும் சலுகை
அளித்தது.

விவசாயிகள் திரும்பக் கடனைக் கொடுக்க வேண்டாமென்றால், வாங்கிய கடனைத் திரும்பக் கட்டாதே என்றால், எங்கேயிருந்து மீண்டும் கடனை வாங்கிக் கொடுப்பது? செப்டம்பர் திங்களில் ஜப்தி செய்யப்பட்ட எல்லாப் பொருள்களையும் விவசாயிகளிடம திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறோம். விவசாயிகளுக்கு நாங்கள் என்ன செய்திருக்கிறோம் என்று கேட்கிறவர்களுக்கு இதுதான் பதில்.

விவசாயிகளின் சங்கடங்களைத் தெரிந்த உறுப்பினர்களைக் கொண்ட உயர் மட்டக் குழுவை இவ்வரசு அமைத்திருக்கிறது. தேர்தலின்போது இதைச் சொல்லவில்லை. ஆனால், இந்தக் காரியத்தை நாங்கள் செய்திருக்கிறோம். தேர்தலின்போது சொன்ன எல்லாவற்றையும் நிறைவேற்றியிருக்கிறீர்களா என்று இங்கே கேட்டிருக்கிறார்கள். இதற்குப் பின்னால் வருகிறேன். இதற்கிடையில் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான கால வரையறையை விவசாய சங்கத்தலைவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க 31.12.1981 வரை நீடித்து அரசு உத்தரவு பிறப்பித்தது. உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டதுமே அவர்களோடு மற்றவர்கள் எப்படி ஒத்துழைத்தார்கள் என்பதை எண்ணிப் பார்க் வேண்டும். எந்த அளவுக்கு அதில் தி.மு.க. அங்கம் வகித்தது. எந்த அளவுக்கு அவர்கள் ஒத்துழைத்தார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தக் குழுவோடு தி.மு.க. ஒத்துழைக்கக் கூடாதா என்று நான் கேட்கிறேன். குழு அமைக்கப்பட வேண்டும் என்றார்கள். கம்யூனிஸ்ட் கட்சியை அல்லது மார்க்சிஸ்ட் கட்சியை நான் வேண்டுமென்று முக ஸ்துதிக்காக பாராட்டவில்லை. அவர்கள் ஏற்றுக் கொள்ள போகிறார்களா இல்லையா என்பதல்ல பிரச்சனை. விவாதித்தார்களா, பேசினார்களா என்பதுதான் பிரச்சனை. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், பார்வட் பிளாக் கட்சியைச் சேர்ந்தவர்கள், குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் விவாதித்திருக்கிறார்கள். கமிட்டி ஏற்றுக் கொள்கிறதா இலலையா என்பதலல. ஆனால் கமிட்டியில் போட்டவர்கள் எல்லாம் வருகிறார்களா பேசுகிறார்களா என்பது தான் பிரச்சனை. ஆனால் சிலபேர் வருவதேயில்லை. அதுபோல் காரியங்களைச் செய்ய முற்படுவதற்கு முன் இன்னின்ன காரியங்களை செய்ய இருக்கிறோம் என்று சொல்வதற்காக அழைத்தால் கூட வருவதேயில்லை. இதற்கு நாங்கள்என்ன செய்வது? ''நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்டால்'' பிரதிநிதிகளைப் பார்த்து நீங்கள் என்ன கேட்டீர்கள் என்று கேட்பது தான் நியாயம். ஆனால், இதை அரசியலாக ஆக்கி பயனடைய நினைக்கும் போதுதான் நமக்கு தொல்லைகள் ஏற்படுகின்றன.

## கிராமப் பொருளாதார மேம்பாடு

கிராமப் பொருளாதாரம் பற்றி ஒரு கருத்தைச் சொன்னேன். உற்பத்திப் பொருளுக்கு நியாயமான விலை, கடன் தள்ளுபடி, விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம், பயிர் பாதுகாப்பு திட்டம், உயர்மட்டக்குழு இப்படி பல்வேறு திட்டங்கள் உள்ளன. உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டிருக்கிறது. கடன்தள்ளுபடியும்

பெருமளவுக்கு செய்யப்பட்டிருக்கிறது. மேற்கொண்டும் செய்வதற்கு வாய்ப்பும் வசதியும் இருந்தால்-மத்திய அரசு அனுமதி தந்தால் நாங்கள் செய்யத் தயாராக இருக்கிறோம். ஒன்றைச் சொல்கிறார்கள். மத்திய அரசு கொடுக்க மறுத்தாலும் ''நாங்கள் கொடுப்போம்'' என்று நீங்கள் தேர்தலின் போது சொல்லவில்லையா என்று கேட்கிறார்கள். இதுகுறித்து நான ஒன்றைச் சொல்ல வேண்டும். மத்திய அரசு தராவிட்டால் நாங்களே அந்தப் பொறுப்பை ஏற்று கடனைத் தீர்ப்போம் என்று சொன்னோம். ஆனால் நிலைமை என்ன? அவர்கள்தான் கொடுக்கிறார்கள், வாங்குகிறது தானே என்றும் சொல்கிறார்கள். ரெயில்வே கட்டணம் அதிகம் ஆகிறது என்ற உடனே அதிகம் ஆக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். அதே சமயத்தில் சம்பள உயர்வு வேண்டுமென்றும் கேட்கிறார்கள். ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் இதுவரை வரி உயர்வு என்று கொண்டு வரவில்லை. அதற்குப் பதிலாக இருக்கின்ற வரியைக் குறைத்துவிடு, குறைத்துவிடு என்று சொல்கிறார்கள். நாங்களே உயர்த்தி விட்டால் ''இந்த அளவுக்கு விடு'' என்று சொல்லி அத்துடன் நிறுத்தி விடுவார்களோ என்னவோ? ஆனால் அந்தத் திறமை எங்களுக்கு இல்லை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

மத்திய அரசு 1980-ல் ஒரு குவிண்டால் நெல்லுக்கு 95 ரூபாய் என்று நிர்ணயித்தது. ஆனால் இந்தமாநில அரசு 105 ரூபாய் என்று நிர்ணயித்து அதிகமான தொகையைக்கையிலிருந்து கொடுத்தது. அப்படி கொடுக்கக் கூடாது என்று மத்திய அரசு தடை போட்டது. அதுபோல் நெல் விலையை 147 ரூபாயாக நிர்ணயிக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதிய கடிதம் குறித்தும் தீர்வு காணப்படவில்லை. அவ்வாறு விலையைக் கூடுதலாகக் கொடுத்தால் ரிசர்வ் வங்கி பண உதவி செய்வதை ''நிறுத்த செய்வோம்'' என்று கடிதம் எழுதியுள்ளார்கள். அதுபோல் கரும்பு கொள்முதல் விலையையும் டன்னுக்கு 130 ரூபாய் என்று இருந்ததை வேறு வகையில் வாய்ப்பு இருந்ததால் இந்த அரசு 175 ரூபாய் என்று நிர்ணயித்தது. இதை நான் சொல்லக் காரணம் ஆலையிலிருந்து நமக்குக் கொடுக்கிற அந்தப் பணத்தை ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும். அந்த 10 ரூபாயையும் சேர்த்து கரும்பு பயிரிடுபவர்களுக்கே கொடுத்து விடுங்கள் என்று சொல்லிவிட்டோம்.

அடுத்து, குறைந்த விலையில் நமக்கு இடுபொருள்கள் தேவை. தேசியமயமாக்கினால் மட்டும் குறைந்த விலையில் கிடைத்து விடுமா? அதற்கும் வழி இல்லையே? மத்திய அரசு இடுபொருள்களைப் பெற்றுக் கொள்கிறது. அதுதான் ஒதுக்கவும் செய்கிறது. அது ஒதுக்குவதற்கு ஏற்ப நியாய விலையில் விநியோகிக்க முடிகிறது. அந்த விலையை நிர்ணயிக்கக் கூட யாருக்கும் அதிகாரம் இல்லை. முதல் நாள் நான் கேட்ட கேள்வி பற்றி இங்கே குறிப்பிடுகிறேன். சில துணிகளை உற்பத்தி செய்கிறவர்கள் அவர்களாகவே அதன் விலையையும் நிர்ணயித்துக் கொள்கிறார்கள். இந்த விவசாயிகள் மட்டும் தாங்கள் உற்பத்தி செய்கின்ற நெல்லுக்கு விலையை நிர்ணயிக்க முடியவில்லை. இந்த உரிமை தரப்படாமல் விலைவாசி உயரும். அரிசி விலை உயரும். சாதாரண மக்கள், ஏழையெளிய மக்கள் அரிசி வாங்க முடியாது.

அவர்கள் வாங்கி சாப்பிடக் கூடிய அளவுக்கு, அவர்கள் வாங்கக்கூடிய சக்திக்கு ஏற்ப அரிசியின் விலை இருக்க வேண்டும். அரிசியின் விலையை உயர்த்துவது என்றால் ஏழையெளியவர்களுக்கு நியாய விலையில் தேவையான அரிசியை அரசு வழங்க வேண்டும். நியாய விலையில் கிடைக்கா விட்டால்கூட பரவாயில்லை என்று சொல்லினால் அரிசி விலையை உயர்த்தலாம். ஆனால் அப்படி கூட விலை உயர்வை தடுக்க இடைத் தரகர்களை ஒழிக்க இந்த அரசு முயற்சி எடுத்து வரு கிறது.

## மகளிர்க்கு வேலை வாய்ப்புகள்

ஆதரவற்ற மகளிர்க்குச் சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் 3000 குடிமக்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரப் பட்டிருக்கிறது. ஆதரவற்ற விதவைகளுக்கு வேலைவாய்ப்பு அளிக் கும் வகையில் அரசு மருத்துவ மனையில் ஆயா என்றழைக்கப் படும் பணியாளர்கள், பெருக்குபவர்கள், துப்புரவுப் பணியினர் சமையல்காரர், தண்ணீர் எடுப்பவர், செவிலியர் போன்ற பணியாட்கள் தேவைப்படும் பணியிடங்களை விதவைகளுக்கே ஒதுக்கிவைத்து ஆணையிடப்பட்டிருக்கிறது. வழிதவறிவிடும் மக



ளிருக்கும் பாதுகாப்பு அளிக்கும் வகையில் சென்னை, தஞ்சை, கோவை ஆகிய நகரங்களில் உள்ள இரயில்வே நிலையங்களில் பெண் காவலர்களைக் கொண்ட வழிகாட்டு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் அந்தப் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறோம்.

கிராமப்புறப் பெண்களுக்கு அவசர உதவி அடிப்படையில் மருத்துவ உதவியும் 1000 பேருக்கு வேலைவாய்ப்புத் திட்டமும் என்ற திட்டத்தை 10 அம்ச சிறப்புத் திட்டம் என்ற வகையில் தேர்தல் அறிக்கையில் வெளியிட்டோம். தமிழ்நாட்டிலே கிராமப்புறங்களிலே வாழும் ஏழைத் தாய்மார்களுக்கும், சகோதரிகளுக்கும் அடிப்படை மருத்துவ வசதி கிடைக்கும் வகையில் அவர்களுக்கு அவசர அடிப்படையில் மருத்துவ உதவி கிடைக்கச் சுமார் 10 ஆயிரம் மருத்துவப் பயிற்சி பெற்ற மருத்துவப் பெண் உதவியாளர்கள் நியமிக்கப்படுவர்கள் என்று குறிப்பிட்டிருந்தோம். அதற்கேற்ப தற்போது கிராமப்புறங்களில் 10 கிராமங்களுக்கு ஒன்று வீதம் மருத்துவத் துணை நிலையங்கள், 'மெடிக்கல் சப்-சென்டர்'களை ஏற்படுத்தி பிரசவத்தின்போதோ அல்லது கிராமப்புறங்களிலோ உள்ளவர்களைப் பாம்பு போன்ற விஷ ஜந்துக்கள் கடித்து விட்டாலோ அவர்கள் மருத்துவதேவையைப்பூர்த்திசெய்யக் கிராமப்புறங்களிலே மருத்துவவசதி இல்லை என்பதற்காக ஒவ்வொரு கிராமத்திற்கும் பட்டம் பெற்ற மருத்துவர்களை நியமிக்கவும் இன்றைய சூழ்நிலையில் முடியாது. ஆனால் கிராமப்புறங்களில் பரம்பரையாகப் பிரசவம் பார்க்கும் பெண்கள், சித்த மருத்துவர்கள் இருக்கிறார்கள். அவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குப் பயிற்சி அளித்து மருத்துவ உதவியாளர்களாக நியமிக்கலாம் என்று அதற்கென்று அவர்களுக்கு ஒரு தொகையை அளிக்கவும் அரசு விரும்புகிறது. ஜனதா ஆட்சிக் காலத்தில், முன்னாள் மருத்துவத் துறையிலே-பொது நலத்துறையிலே அமைச்சராகப் பணியாற்றிய திரு. ராஜ்நாராயணன் அவர்கள் இப்படிப்பட்ட திட்டத்தை வேறு வகையில் கொண்டு வந்தார்கள். மூன்று அல்லது நான்கு மாத காலம் பெண்களுக்குப் பயிற்சி அளித்து இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று சொன்னார்கள். அதை நடைமுறைப்படுத்துவதைப் பொறுத்தவரையில், சாதாரணமாக நடைமுறையில் சரிவர நடைமுறைப்படுத்த முடியாத நிலைமை இருப்பதாக சொல்லியிருந்தோம். ஆனால் இந்த முறை அதுவல்ல.

நாம் இங்கே பயன்படுத்த இருக்கிற மருத்துவ முறை, சித்த மருத்துவ முறை. இந்த முறையில் நல்ல அனுபவம் உள்ள தாய்மார்கள் இருப்பார்களேயானால் அவர்களைப் பயன்படுத்துகிறோம். இதை செய்யும்போது மத்திய அரசினுடைய அனுமதியும் பெற வேண்டியுள்ளது என்பதால் அதற்கேற்ப நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைக் கூறி இதை எப்படியும் நிறைவேற்றும் வகையிலே கடமையை செய்துசொண்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். 200 ஊராட்சிஒன்றியங்களில் சித்த

மருத்துவம் தெரிந்தவர்கள் மருத்துவர்களாக நியமிக்கப்படுள்ளார்கள் என்பதையும் கிராமப்புறங்களில் மருத்துவ உதவியாளர்களை நியமித்து சம்பந்தமான எல்லா விவரங்களையும் குடும்ப நலத்துறையிடம் கேட்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் சீனாவில் நிலவிடும் 'பேர்-ஃபூட் டாக்டர்' திட்டம் போன்றதாக இருந்தாலும் நாம் நம்முடைய நாட்டுக்கேற்ப அவற்றைப்பயன்படுத்த வேண்டும் என்று சொல்லும்போது ஏதோ தேர்தல் நேரத்திலே மட்டும் சிலவற்றைச் சொல்லுகிறோம் என்றில்லாமல் அவற்றை நிறைவேற்றுவதற்கு நாங்கள் எப்படி முனைகிறோம் என்று சொல்வது அரசின் கடமை.

## தொழில் முனைவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும்

தொழில் முனைவர்களுக்கு அளிக்கப்படும் புதிய ஊக்குவிப்புகள் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். பிற்பட்ட பகுதிகளில் தொழில் தொடங்க மத்திய அரசு தமிழ்நாட்டில் 33 தாலுக்காக்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறது. தமிழக அரசு மேலும் 24 தாலுக்காக்களில் தொழில் துவங்க முதலீட்டு மானியம் அறிவித்துள்ளது. இதன்படி தொழில் துவங்க முதலீட்டில் 15 சத வீதம் அல்லது 15 இலட்சம் இவற்றில் எது குறைவாக இருக்கிறதோ அந்தத் தொகையை மானியமாக அரசு அளிக்கும். தொழிலைத் துவங்குவதற்கு இந்த அரசுக்கு அக்கறையில்லை என்று சொல்லப்படும குறை நீக்கப்படும். இனியாவது அப்படி குறை சொல்லமாட்டார்கள் என்று நம்புகிறேன். இதைப் பத்திரிகைகள் மூலம் படித்தோ அல்லது இங்கே இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் மூலமோ கேட்டோ அந்தக் கருத்தை மாற்றிக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். மேலும் எந்தெந்தச் சலுகைகளை அளித்திருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வட்டியில்லா விற்பனை வரிக் கடன் அளிக்கிறோம்; அளித்திருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வட்டியில்லாக் விற்பனைக் கடன் அளிக்கிறோம். இதன்படி விரிவாக்கத்திற்காக 50 இலட்சம் ரூபாயும், புதிய தொழில்களைத் துவங்குவதற்காக அளிக்கப்படும் தொகை 48 இலட்சத்திலிருந்து ரூபாய் ஒரு கோடிக்குச் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு உயர்த்தப்பட்டுள்ளது.

இதையெல்லாம் இந்த அவையில் இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்கவேண்டும். இந்தத் திட்டங்களில் நாங்கள் எவ்வளவு அக்கறை காட்டுகிறோம், தொழில் வளர்ச்சியடைய வேண்டும் என்பதில் எவ்வளவு அக்கறையோடு நடவடிக்கை எடுக்கிறோம் என்பதை தேர்தல் நேரத்தில் வாக்குறுதி கொடுத்ததை மனதில் வைத்திருப்பதைப் போல நாங்கள் செய்துவரும் இந்த நல்ல காரியங்களையும் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். முதலீட்டு மானியத் திட்டம் அமுலில் இல்லாத இடங்களில் எலக்ட்ரா

னிக்ஸ், மருத்துவக் கருவிகள், பேருந்துகளுக்குத் தேவைப்படும் உபரி பாகங்கள் போன்ற பொருட்களைச் செய்யும் தொழில் களுக்கு அவர்கள் போட்டிருக்கும் முதலீட்டில் 10 சதவீதம் அல்லது வேலைக்கு அமர்த்தப்படும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ. 20 ஆயிரம், இவற்றில் எது குறைவோ அதை அளித்து அந்த தொழில்களை ஊக்குவிக்க இருக்கிறோம். தூத்துக்குடி, புதுக் கோட்டை, கும்மிடிப்பூண்டி, கடதர் ஆகிய இடங்களிலே புதிய தொழிற்பேட்டைகளில் ஆரம்பிக்கப்படும் தொழில்களுக்கு 5 ஆண்டுகளுக்கு மின்வெட்டு இருக்காது என்றும், முதலீட்டு மானியத்திற்கும் அவர்கள் அருகதையுள்ளவர்கள் என்றும் அரசு அறிவித்திருக்கிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மைய அரசின் முதலீடு குறைவு என்பதை நான் குறிப்பிட வேண்டும். 1979-ஆம் ஆண்டு இறுதியில் நாடு முழுவதும் மைய அரசுத் துறைகளில முதலீடு செய்யப்பட்ட தொகை ரூ. 15,668 கோடியாகும். இதில் தமிழ் நாட்டில் மட்டும் செய்யப்பட்ட முதலீடு ரூ. 616 கோடி தான். இது மொத்தத் தொகையில் 4 சதவீதமாகும்.

கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மைய அரசுத் துறை களில் முதலீடு செய்யப்பட்ட தொகையின் அளவு 8 சதவீதத்தி லிருந்து 4 சதவீதமாகக் குறைந்துள்ளது. அதிகமான பொதுத் துறைத் திட்டங்களை நமது மாநிலத்தில் ஏற்படுத்த மாநில அரசு மைய அரசோடு தீவிரமாகத் தொடர்பு கொண்டுள்ளது. அதன் விளைவாக, பி.எச்.இ.எல். நிறுவனத்தின் புதிய பிரிவு ஒன்று இராணிப்பேட்டையில் தொடங்குவதற்காக மத்திய அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. அதற்கான வேலைகள் நடைபெற் றுக் கொண்டிருக்கின்றன. இந்தத் திட்டத்திற்கான முதலீடு சுமார் 22 கோடி ரூபாயாகும். இதன் காரணமாகக் கிட்டத்தட்ட 1500 நபர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். இது 1982-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து உற்பத்தியைத் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் விண்வெளித்துறையில் ஆராய் சித்திட்டம் ஒன்று செயல்பட மத்திய அரசு ஒப்புதல் அளித்துள் ளது. இதற்கான தொடக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதுமட்டுமல்ல, கீழ்க்காணும் திட்டங்களுக்கு மத்திய அர சின் அனுமதியைக் கோரி பலமுறை நாங்கள் கடிதங்கள் எழுதி யிருக்கிறோம்.

இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனத்தின் மூலம் எலக்ட் ரானிக் தட்டச்சுப் பொறி, மற்றும் ஏனைய எலக்ட்ரானிக் பொருட்களை உற்பத்தி செய்தல்.

இந்துஸ்தான் நிழற்பட சுருள் ஆலை மூலம் ஊடுகதிர் சுருள் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கான புதிய பிரிவைத் துவங்கு தல்.

இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்தின் மூலம் புதிய விமானத் தொழிற்சாலை ஒன்றை இங்கே தொடங்க வேண்டும் என்றும் நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

பாரத் எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் மூலம் சென்னை அருகில் ஒரு பிரிவைத் தொடங்குவது.

இந்துஸ்தான் மெஷின் டூல்ஸ் நிறுவனத்தின் மூலம் கைக் கெடியாரங்களுக்குத் தேவையான பொருள்களைத் தயாரிக்கும் பிரிவைத் தொடங்குவது.


இது போல இன்னும் பலவற்றை நாங்கள் கேட்டிருக்கிறோம். கேட்டுக் கொண்டேயிருக்கிறோம். இத்திட்டங்களுக்கு மைய அரசு நிச்சயமாக உதவி செய்யும், அனுமதி தரும் என்றுதான் நான் கருதுகிறேன்.

டிட்கோ நிறுவனத்தைப் பொறுத்தவரையில் அது செயல் படுத்தி வரும் கூட்டுத் துறை நிறுவனங்களில் எண்ணிக்கை 14. இந்த ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்களில் தொழில்கள் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.....

சிட்கோ மூலம் தொடங்கிய தொழில்களைப் பொறுத்த வரையில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அதில் தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல் ஒன்று.

கூட்டுத் துறையில் இந்த ஆண்டு மேலும் பல திட்டங்களை நிறைவேற்றுவதற்கான வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவைகளில் சில:

ஆட்டோமோட்டிவ் கேஸ்ட்டிங்ஸ் திட்டம்
கெமிக்கல் எக்விப்மென்ட் திட்டம்
பிஸ்கட்ஸ் திட்டம்



பொதுத்துறையில் டிட்கோ நிறுவனத்தின் கீழ், கீழ்க்காணும் தொழில்கள் புதிய திட்டங்களை நிறைவேற்றுவதற்காக வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன:

ஆலங்குலம் சிமிண்ட் தொழிற்சாலை
அரியலூர் சிமிண்ட் தொழிற்சாலை

அரக்கோணம் இரும்புத் தொழிற்சாலை-ரீரோலிங் மில்ஸ்

நடப்பு ஆண்டின் கீழ்க்கண்ட நிறுவனங்கள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன.

ஆலங்குளம் சிமிண்ட் தொழிற்சாலை

அஸ்பெஸ்டாஸ் தொழிற்சாலை

அரக்கோணம் இரும்புருக்குத் தொழிற்சாலை, இந்த ஆண்டு புதிய பிரிவை ஏற்படுத்த மத்திய அரசு அனுமதி தந்துள்ளது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த ஆகும் செலவு 7 கோடியாகும். இதற்கு மாநில அரசும் அனுமதி வழங்கியுள்ளது. இவற்றையெல்லாம் நான்சொல்கிறேன் என்றால்'நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்கிற அந்தப் பெரியவர்கள் இவற்றையெல்லாம் தெரிந்திருந்தும் ஏன் வெளியே சொல்லமாட்டேன் என்கிறார்கள்' என்பதுதான எனக்கும் புரியவில்லை.

குறை சொல்லுங்கள்; நாங்கள் தவறு செய்தால் எடுத்துச் சொல்லுங்கள்; வழி மாறிப் போனால் இது சரியல்ல என்று எடுத்துச் சொல்லி, இப்படி நடக்க வேண்டும் என்று உங்கள் அனுபவத்தைச் சொல்லுங்கள். நாங்கள் முயன்று கொண்டிருக்கிறோம். அப்படி முயன்று கொண்டிருப்பவர்களைப் பார்த்து 4-வது இடத்திலிருந்து10-வது இடத்திற்குப் போய்விட்டீர்கள் என்றுசொன்னால் அது எப்படி நியாயமாகும்.

1.1.1977 முதல் 31.12.1981 வரை நடுத்தர மற்றும் பெரிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்ட விவரங்கள்:

| | |
|---|---|
| தனியார் துறையில் | 271 |
| பொதுத் துறையில் | 9 |
| கூட்டுத் துறையில் | 12 |
| கூட்டுறவுத் துறையில் | 7 |
| மொத்தம் | 299 |


டிட்கோ நிறுவனம் பொதுத் துறையிலும், கூட்டுத் துறையிலும் செயல்படுத்தும் நிறுவனங்கள் மூலம் வேலை வாய்ப்பு கிடைக்கும் மக்களின் எண்ணிக்கை 8,312. திட்டங்கள் முடிவுற்று வேலை முழுவதுமாகத் துவங்கும்போது 10,276 பேருக்கு வேலை கிடைக்கும் என்ற குறிப்பு எனக்குத் தரப்பட்டிருக்கிறது.

## வேலை வாய்ப்பு

ஒருவருக்காவது வேலை கொடுத்தீர்களா? என்று என்னைப் பார்த்து நேராக அல்ல, பொது மேடைகளில் கேட்கிறார்கள். இங்கேயும் சிலர் அந்தச் சந்தேகத்தைக் கிளப்பியுள்ளனர். இந்தப் புள்ளி விவரங்கள் அனைத்தும் அறிக்கைகளிலே சொல்லப்பட்டிருக்கின்றன என்றாலும் அவைகளை மறந்துவிட்டுக் கேட்கிறார்களே என்றுதான் வருத்தப்படுகிறேன். என்னை மறந்து விட்டாலும் கூடப் பரவாயில்லை. இந்த நாட்டில் நாங்கள் செய்துள்ள நன்மைகளை மறந்துவிடாதீர்கள். 1000 பேருக்கு வேலை கொடுக்கிறோம் என்றால் ஒரு குடும்பத்துக்கு 5 பேர் என்றாலும் 5000 பேர்களுக்கு ஒரு வேளை சாப்பாட்டடிற்கு உறுதி செய்யப்பட்டிருக்கிறது என்ற உண்மையை அறிந்து இனியாவது திட்டுவதைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே இருக்கிற உறுப்பினர்களைச் சொல்லவில்லை. வெளியே யாராவது இருந்தால் அவர்களுக்குச் சொல்லுங்கள் என்று பணிவோடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

## கூட்டுறவு நூற்பாலைகள்


கூட்டுறவு நூற்பாலைகள், மூன்று புதிய கூட்டுறவு நூற்பாலைகள் ஒவ்வொன்றும் புதுக்கோட்டை, தர்மபுரி மற்றும் தேனி ஆகிய இடங்களில் நிறுவப்பட இருக்கின்றன. ஒரு கதிர் திறன் 25,000. ஒவ்வொரு நூற்பாலைக்கும் தேவைப்படும் மூலதனம் ரூபாய் 706 இலட்சம், மேலும் 12,000 கதிர் திறனுடன் ரூ. 497 இலட்சம் முதலீட்டில் எட்டையபுரத்தில் சிறிய நூற்பாலை நிறுவப்படும். சேலம், மற்றும் வேலூர் நூற்பாலைகளில் ஒவ்வொன்றிலும் அதிகப்படியாக 13,200 கதிர்கள் நிறுவப்படும். இதற்காக ஓர் ஆலைக்குத் தேவைப்படும் மூலதனம் ரூபாய் 350 இலட்சமாகும். ஆறு நூற்பாலைகளை மேற்குறித்தவாறு அமைக்க, மேம்படுத்த ரூபாய் 3,315 இலட்சம் செலவாகும். இவைகளினால் சுமார் 3,160 பேர்களுக்குப் புதியதாக வேலை வாய்ப்புக் கிடைக்கும். எங்கள் கொள்கையை ஏற்கனவே இந்த அவையிலும்சொல்லியிருக்கிறேன் என்று நினைக்கிறேன். ஓர் இலட்சம் செலவு செய்துவிட்டு ஓர் ஆளுக்கு வேலை கிடைப்பதை விட ஓர் இலட்சம் செலவு செய்துவிட்டு 500 பேர், 600 பேர், ஆயிரம் பேர்களுக்கு வேலை கிடைத்தால் நல்லது என்பதுதான் நாங்கள் சொல்லியிருக்கின்ற கொள்கை. அது மட்டுமல்லாமல் இப்படிப்



பட்ட தொழில்களும் தேவையென்ற காரணத்தால, நாம் வெளி மாநிலங்களை எதிர்பார்த்து இருக்கக் கூடாது என்ற நிலைமையிலே இதையும் செய்துகொண்டிருக்கிறோம். முயற்சி செய்து வெற்றி பெறும் நிலைமையில் ஆரம்பித்துவிட்டோம் என்று சொல்லும்போது, இந்த அரசு தொழில் துறையில் தயக்கம் காட்டவில்லை என்பதும் , நாங்கள் தொழில் துறையில் முனைப்போடு அக்கறை செலுத்துகிறோம் என்பதும் இந்த அவை தெரிந்து கொள்ளும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

## அரசுச் சர்க்கரை ஆலை

உளுந்தூர்பேட்டையில் ரூபாய் 755 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்ட சர்க்கரை ஆலையின் மூலம் 750 பேர்களுக்குப் புதிதாக வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.



## தொழில் முன்னேற்றத்திற்கு ஊக்கம்

தொழில் முன்னேற்றத்திற்காகத் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனமும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆகியவை வழங்கிய கடன் விவரங்கள், வட்டியில்லாத விற்பனை வரிக் கடன் 1.4.1977 முதல் 31.12.1981 முடிய ரூ. 869.99 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டது. வழங்கப்பட்ட தொகை இதுவரை 811.60 இலட்சம் ரூபாய். தவணைக் கடன் - 4,523.86 இலட்சம் ரூபாய் ஒப்புதல் அளிக்கப்பட்டது. வழங்கப்பட்டத் தொகை 2,367.56 இலட்சம்.


1980-81-ல் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் உதவி கொடுத்த தொழில்களின் எண்ணிக்கை 2,265. வழங்கப்பட்ட தொகை ரூபாய் 2,377.91 இலட்சம். நான் இங்கே இதைச் சொல்லும்போது கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு தொழிற்சாலைக்கு ஐந்து பேர் என்று வைத்துக் கொண்டாலும் 2,265 சிறு தொழில்களின் மூலம் பத்தாயிரம் பேருக்கு மேல் வேலை கிடைக்கிறது. அதைத் தொடர்ந்து ஏற்படும் சின்னஞ்சிறு தொழில்களின் மூலம் பல பெருக்கு வேலை கிடைக்கும் என்பதை இங்கே குறிப்பிடுவது என்னுடைய கடமையாகக் கருதுகிறேன்.

1.7.1977 முதல் 31.12.1981 வரை உருவாக்கப்பட்ட புதிய வேலை வாய்ப்புக்கள் எத்தனை பேருக்கு வேலை கொடுக்கப் பட்டது என்பதற்காக அந்தக் கணக்கைக் கொண்டு வந்திருக்கி றேன். பட்டு வளர்ப்புத் தொழிலில் 1,73,326 பேருக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் என்ன செய்திருக் கிறீர்கள். எத்தனை பேருக்கு வேலை கொடுத்திருக்கிறீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள். அப்படிக் கேட்டிருந்தால் பரவா யில்லை. கேட்க வேண்டியதுதான். அப்படிக் கேட்பதால் உண்மை வெளிவருகிறதல்லவா? அதைப் போலவே மாவட்ட தொழில் மையங்கள் மூலம், சிறு தொழில்கள் மூலம் வேலை வாய்ப்பு 2,99,4832 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கதர் கிரா மத் தொழில் வாரியத்தின் மூலம் 23,034 பேர்களுக்கும், தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 2,306 பேர்களுக்கும், தொழில்துறை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 14,200 பேர்களுக்குத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் 28,340 பேர் களுக்கும் ஆக மொத்தம் 5,40,688 பேர்களுக்கு வாய்ப்புக் கிடைத் திருக்கிறது.

## காகித ஆலைத் திட்டம்

தொழில்களைப் பற்றி இன்னுமொன்றைச் சொல்லக் கட மைப்பட்டிருக்கிறேன். காகித ஆலைத் திட்டத்திற்கு ரூபாய் 100 கோடி என்று முதலில் சொல்லப்பட்டது. இப்போது 200 கோடியாக உயர்ந்துள்ளது. ஆரம்பக் கட்டத்தில் கரும்புச் சக்கை

41



யைப் பயன்படுத்தி நாள் ஒன்றுக்கு 250 டன் செய்திப் பத்திரிகைத் தாள் உற்பத்தி செய்ய செலவு 100 கோடி ரூபாய் என மதிப் பீடு செய்யப்பட்டது. பிறகு மைய அரசோடு விவாதித்து வெறும் பத்திரிக்கைக்குத் தேவையான காகிதங்களை மாத்திரம் உற்பத்தி செய்தால் இலாபம் பெற முடியாது ஒருவேளை நஷ்டம் வந்தாலும் வரும், பத்திரிகைக் காகிதம் தேவைதான், அதற்காக பத்திரிகைக் காகிதம் மட்டும் உற்பத்தி செய்தால் போதாது. ஆகவே, வேறு வகை தேவைகளுக்கும் காகிதம் உற்பத்தி செய்ய வேண்டும் என்று நிபுணர்கள் எல்லாம் சொல்ல, அவர்களும் விவா தித்து அவர்களும் இதிலே ஈடுபட்டு இந்தத் திட்டத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்ற முகவுரையை முதலிலே சொல்லி விட்டு பிறகு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

1978-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் நாள் ஒன்றுக்கு 250 டன் செய்தித் தாள் மற்றும் 50 டன் எழுதும் மற்றும் அச்சிடும் தாள் உற்பத்தி செய்ய திட்டச்செலவு 132 கோடி ரூபாய் ஆகுமென்று முடிவு செய்யப்பட்டது. பின்னர் திருத்தியமைக்கப் பட்ட ஒருங்கிணைப்புத் திட்டத்திற்குச் செலவு 153 கோடி ரூபா யாக இருக்குமென்று தொழில்நுட்ப ஆலோசகர்களால் மதிப் பிடப்பட்டது. ஆரம்பத்தில் செய்தித் தாள்கள் மட்டும் தயாரிப்ப தாக இருந்தோம். செய்தித் தாள்கள் மட்டும் தயாரிக்கின்ற திட்ட மாக இருந்தால் லாபமாக இருக்காது என்று குறிப்பிட்டதன் கார ணமாக ஆண்டு ஒன்றுக்கு 50 ஆயிரம் டன் செய்தித் தாள் மற்றும் 40 ஆயிரம் டன எழுதும் தாள் உற்பத்தி செய்யக்கூடிய ஒருங் கிணைந்த திட்டமாகத் திருத்தியமைக்கப்பட்டது. இந்த ஒருங் கிணைந்த திட்டத்திற்கு உலக வங்கி மற்றும் இந்திய நிதி நிறு வனங்கள் மற்றும் மைய அரசு, மாநில அரசு கொடுக்க இருக்கும் சலுகைகளைக் கருத்திற்கொண்டு இந்தத் திட்டத்திற்குச் செலவு 190 கோடி என மதிப்பிடப் 'ட்டுள்ளது. மேற்கொண்டு உற்பத்தி செலவின் அடிப்படையில் இத்திட்டத்திற்காக இறக்குமதி செய் யப்படும் இயந்திரங்களுக்சாக வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.


இந்தத் திட்டத்தின்கீழ் தயாரிக்கப்படும் காகிதத்திற்கு கடன் முடியும் வரை, மைய அரசு ஆயத் தீர்வையிலிருந்து விலைக்கு அளிக்கும். இந்தத் திட்டத்தின் தற்போதைய நிலைமை-செய்தித் தாள் மற்றும் அச்சிடும் தாள் நிறுவனம் திருச்சி மாவட்டத்தில் புகளூரில் நிறுவப்படும் என்ற விவரம் உங்களுக்குத் தெரியும். அதற்காக 678.73 ஏக்கர் நிலத்தையும், அதற்கு அருகில் உள்ள 31.01 ஏக்கர் புறம்போக்கு நிலங்களையும் கையகப்படுத்த அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது என்பதையும் இங்கே சேர்த்துச் சொல்ல விரும்புகிறேன். சர்க்கரை ஆலையில் இருக்கும் கரும்புச் சக்கைக்கும், தமிழ்நாடு காகித ஆலையிலிருந்து உற்பத்தியாகும் காகிதத்திற்கும் விற்பனை வரியிலிருந்து அரசு விலக்களித்துள்ளது. அரசுத் தலைமை மின் ஆய்வாளரின் ஒப்புதலுக்குட்பட்டு 17.5 மெகாவாட் திறன் கொண்ட சுழல் மின் உற்பத்தி இயந்திரத்தை நிறுவத் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்குத் தமிழ் நாடு மின்வாரியம் அனுமதித்துள்ளது. இந்த நிறுவனம் தானே தயாரிக்கும் மின் சக்தி உற்பத்தி வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட் டுள்ளது. தமிழ்நாடு வனக் கழகத்திடமுள்ள இருப்பிலிருந்து 70 ஆயிரம் டன் கலப்பு இன நீலகிரி மரத்தை மின்துறை இனத்திற்கு ஒதுக்கியுள்ளது.

மரக்கூழ் தயாரிப்பு இயந்திரங்கள் வழங்கவும், அடிப்படைப் பொறியியல் டணி ஏனைய பணிகளுக்கு இந்த நிறுவனம் உடனடி யாகவும், படிப்படியாகவும் சுமார் 18.48 கோடிக்கு வழங்கி யுள்ளது. இத்திட்டத்திற்கு இதுவரை அரசு 22.20 கோடியை வங்கி மூலதனத் தொகையாக அளித்துள்ளது. ரூ. 5.00 கோடி விரைவில் வழங்கப்படவிருக்கிறது. இத்திட்டத்திற்கு 190 கோடி அளவுக்கு கிடைக்கும்.

உதவி நிறுவனங்கள் மூலமாகக் கிடைக்கும் தொகை 32.5 கோடி, கடன் 113.5 கோடி, நடைமுறை மூலதனம் 10 கோடி ஆக ரூ.180 கோடி அளவுக்கு கிடைக்கும். இந்த உலக வங்கி திட்டத்திற்கு இந்திய பேரரசு இந்திய தொழில் வளர்ச்சி ஆகியவற்றின் மூலமாக ரூ. 80 கோடிக்குச் சமமாக, 100 மில்லியன் அமெரிக்கன் டாலர்கள் கடனுதவி அளிக்கும் என்று சொல்லியுள்ளது. ஆகவே இங்கே கேட்கும்போது, ரூ. 100 கோடி என்பது 200 கோடி என்று எண்ணும்படி ஆயிற்று என்று கேட்பது நியாயம் தான்.

பல்வேறு உண்மைகள் தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். இதைப் பற்றி முடிவு செய்வது இந்தியப் பேரரசு. அவர்களுடைய அனுமதி யின்றி உலக வங்கியோடு நாம் நேரடி யாகப் பேசமுடியாது. அவர்கள் வாங்கித்தான் நமக்குக் கொடுத் தாக வேண்டும். அதுபோக, இந்திய நிதி நிறுவனங்களுடன் நாம் கையெழுத்திட்டு ஏற்பாடு செய்கிறோம் என்றால் அதற்கு இந்திய பேரரசினுடைய அனுமதியும் வேண்டும் என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அப்படிப்பட்ட நிலையில் இந்த தொழில்களை நாம் பார்க் கும்போது, அது 1978-ஆம் ஆண்டு என்று கருதுகிறேன். அந்தப் பணி ஐந்தாண்டுகளோடு முடிந்து இருக்கும். அப்படியில்லை என்று இருக்கும்போது, மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு வருபவர்கள் தொடர்ந்து செய்ய வேண்டும். நாம் இடுகின்ற திட்டம் நாம் இருக்கும்போதே முடிந்துவிட வேண்டும் என்பது மட்டுமல்ல, அது எதிர்காலத்திலேயும் உதவியாக இருக்கவேண்டும் என்ற அளவுக்கும் மக்களுக்குச் செய்யவேண்டியதாக இருக்கிறது. நம் காலத்திலேயே முடிக்கும் அளவுக்கும் சில திட்டங்கள் இருக்கின் றன. நாம் நெடுங்காலத்திட்டம் என்று செய்கின்றபோது, நாட்



டுக்காகத்தான் இந்த பொறுப்பை ஏற்றுக்கொண்டு செய்கின்றோமே தவிர, புகழுக்காகவோ அல்லது வேறு எந்த லாபத்திற்கோ அல்ல என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

## சிறு தொழில்கள் மேம்பாடு


1978-79 முதல் 1980-81 வரையிலான காலத்தில் சுமார் 12,800 நிரந்தரச் சான்றிதழ்கள் தொழிலுக்கு வழங்கப்பட்டுள்ளன. 6,908 சிறு தொழில்களுக்கு 13.99 கோடி ரூபாய் நிதியுதவியாகத் தொழில் மையங்களுக்கு என்று வங்கியிடமிருந்து பெற்றுத்தரப்பட்டுள்ளது. இதை நான் இங்கே கூறும்போது இந்த பதிவு பெற்ற சிறுதொழில்கள் மூலம் மட்டும் தோற்றுவிக்கப்பட்ட வேலைவாய்ப்பு 1.74 இலட்சம் ஆகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொழில வளர்ச்சி வேலை வாய்ப்பு இவையெல்லாம் இல்லை என்று சொல்கின்றார்களே, இந்த அளவுக்கு தொழில் மையங்கள் அமைத்து இருக்கிறோமா இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும். நாங்கள் எப்படி வேலை செய்கின்றோம் என்பதை மக்கள் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல பாராட்டப்படக்கூடிய நிலையில்தான் தமிழகம் இருக்கிறது. இந்த அவைக்கு நிச்சயமாக அதிகப் பெருமை உண்டு என்பதைக் கூறிக்கொள்ள விழைகிறேன்.

அபிவிருத்தி ஆணையாளர், சிறுதொழில்கள், மேற்கொண்ட ஒரு கணிப்பின்படி, 1979-80-ஆம் ஆண்டு நாட்டிலுள்ள 382 மாவட்ட தொழில் மையங்களில், 6.65 லட்சம் பேர்களுக்குக் கூடுதலாக வேலைவாய்ப்பை அளிக்கின்ற புதிய தொழில்கள் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில் மையம் என்ற அளவில் சராசரியாக 306 புதிய தொழில்கள் அமைக்கப்பட்டு 1,741 பேர்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்பு தோற்றுவிக்கப்பட்



டுள்ளன. ஏதோ பணத்தை மட்டும் கொடுக்கிறோம். அவர்கள் தொழில்கள் ஆரம்பிக்கிறார்கள் என்பது மட்டுமல்ல. ஒரு தொழில் மையம் ஆரம்பிக்கின்ற போது அந்த தொழில் முறைகள் தெரியாத வர்களுக்குச் சொல்லிக் கொடுக்கவும் வழி செய்கிறோம். அந்த பணியில் படித்தவர்கள் எல்லாம் பங்கு கொள்ள வேண்டும் என்ற வகையிலும் இந்த அரசு பணி செய்து கொண்டிருக்கிறது என் பதைத் தெரிவிப்பதற்காக இதைச் சொல்கிறேன்.

தமிழ்நாட்டில் 783 தொழிற்கூடங்கள் அடங்கிய 33 தொழிற் பேட்டைகளை சிட்கோ தமிழகஅரசு சார்பில் தொடர்ந்து நிர் வகித்து வருவதன் மூலமாக 45,500 பேர்களுக்குத் தொழில் வாய்ப்பைத் தொடர்ந்து ஏற்படுத்தி வருகிறதென்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன். பம்பாயில் உள்ள இந்தியப் பொருளாதார எடுத்துக்காட்டு மையம் பொருளாதார அடிப்படையில் புள்ளி விவரங்களைத் தனது 1980-ஆம் ஆண்டு நவம்பர் வெளியீட்டில் வெளியிட்டுள்ளது. தமிழ்நாட்டில் தொழில் முன்னேற்றத்தைப் புள்ளி விவரங்களோடு எடுத்துக் காட்டியுள்ளது.



## உற்பத்தியும், வேலைவாய்ப்பும்

1978-ஆம் ஆண்டு நிலவரப்படி தொழிற்சாலைகள்—எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் தமிழகம் நான்காம் இடத்தைப் பெறுகிறது. ஐந்தாவது இடத்திற்குப் போயிருக்கிறதென்று சொன்ன..ர்களே அவர்களுக்காகச் சொல்லுகிறேன். இங்கே உள்ளவர்களுக்காக அல்ல. அவர்களுக்குச்செய்தி போய்ச் சேரவேண்டும். தமிழகம் நான்காம் இடத்தில் இருக்கிறது. தொழிற்சாலைகளின் எண்ணிக்கையைப் பொறுதத மட்டில், மகாராஷ்டிரம், குஜராத், ஆந்திரம் ஆகிய மாநிலங்கள் தமிழ்நாட்டைவிட முன்னேறி இருக்கின்றன. 1978-ஆம் ஆண்டில் வேலை வாய்ப்புகள் பொறுத்த மட்டில் தமிழகம் மூன்றாம் இடத்தைப் பெறுகிறது என்பதை அது குறிப்பிட்டிருக்கிறது. அதற்காக உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். பத்தாம் இடத்தில் இல்லை, மூன்றாம் இடத்தில் வேலைவாய்ப்பு கொடுப்பதில் - இருக்கிறது. தொழிற்சாலைகளில் நான்காம் இடம், வேலைவாய்ப்பு கொடுப்பதில் மூன்றாம் இடம்-இதைத் தெரிந்து கொள்ள வேண்டும். நம்முடைய தேவை என்ன? எத்தனைத் தொழிற்சாலைகள் என்பதை விட எத்தனை பேர்களுக்கு வேலை என்பதுதான் முக்கியம். அந்த வகையில் மூன்றாம் இடத்தில் இருக்கிறோமென்று குறிப்பு சொல்கிறது. 1978-ஆம் ஆண்டில் மகாராஷ்டிரம், உத்திரபிரதேசம் வேலை வாய்ப்பில் முதலிடத்தைப் பெற்றன. தொழில் உற்பத்தியில் 1979-ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது, 1977-ம் ஆண்டில் 137.60ஆக இருந்தது. 1978-ல் 164.10 ஆக உயர்ந்துள்ளது. 1979-ஆம் ஆண்டு மேலும் 5 சதவிகிதம் அதிகரித்து, 1972.30 ஆக உயர்ந்துள்ளது. இதே ஆண்டில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 8508-லிருந்து 9139-ஆக உயர்ந்துள்ளது. உற்பத்தியின் மதிப்பைக் கொண்டு பார்க்கும்போது 1960-61-ல் நான்காம் இடத்திலிருந்து 19765-66-ல் மூன்றாம் இடத்திற்கு வந்தது. ஆனால் 1977-78-ல் மீண்டும் நான்காம் இடத்திற்குப் போயிற்று. உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பைக் கொண்டு பார்க்கும்போது மகாராஷ்டிரம், மேற்கு வங்கம், குஜராத் மாநிலங்களுடன் தமிழகம் ஒன்றாக விளங்குகிறது என்று சொல்லுவதில் பெருமை அடைகிறேன் என்று சொல்லவில்லை, அந்த அளவிற்கு அக்கறை காட்டுகிறோமென்று மனநிறைவு அடைகிறேன்.

பட்டுத் தொழில் பற்றி சொல்லியாக வேண்டும். மார்ச் 31 வரையில் 40,000 ஏக்கர் முசுக்கொட்டை செடி பயிர் செய்து, பட்டு உற்பத்தி செய்தார்கள். மேலும் 35,000 ஏக்கர் அளவிற்கு விரிவு படுத்தப்பட்டு, 22 கோடி ரூபாய் முதலீடு செய்தபிறகு ஓரளவிற்குத் தன்னிறைவுத் திட்டமென்ற அளவிலே, தன்னிறைவு எய்தும். அப்படிச் செய்தால், நமக்குத் தேவைப்படும் 1300 டன் பட்டை நாமே உற்பத்தி செய்யலாம்.

மேலும் 1980-81-ஆம் ஆண்டில் தமிழகத்தில் 1,49,000 கிலோ கச்சாப் பட்டும், 50,000 கிலோ கழிவுப்பட்டும், 18,39,714 கிலோ பட்டு நூல்களும் உற்பத்தி செய்யப்பட்டன. 64 இலட்சம் பட்டு முட்டைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன. 1981-82-ஆம் ஆண்டில் மட்டும் 47000 கிராம மக்களுக்குக் கூடுதல் வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது. திரும்பத் திரும்பச் சொல்கி றேன். கிராமப்புறங்களிலே மக்களை ஏமாற்றிவிட்டார்கள். என்று சொல்கிறார்கள். ஒன்றும் அறியாத மக்கள், கவர்ச்சியில் ஈடுபட்டு, என்னை ஆதரித்து அனுப்பி விட்டார்கள் என்று சொல்கிறார்கள். அவர்கள் தயவுசெய்து இதைப் பார்க்க வேண் டும். மேலும் 5,770 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. தமிழ்நாடு மாநில பட்டு உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு இணையம் 2.53 கோடி மதிப்புள்ள 95,960 கிலோ கச்சாப் பட்டு விற்பனை செய்துள்ளது. 1981-82-லே எம்.5 முசுக்கொட்டைச் செடி எல்லா மாவட்டத்திலும் பயிரிட உதவித் தொகை அளிக்கும் திட்டமும், விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டமும் நீட் டிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளாலே நடத்தப்படும் 25 கிராமப் புற இளம் பட்டுப் புழு வளர்ப்புச் சங்கங்களை 1981-82-ல் நிறுவ அரசு ஆணை வழங்கியுள்ளது.

தீப்பெட்டித் தொழில் முன்பே இருந்த தொழில்தான். என்ன முன்னேறியிருக்கிறதென்று கேட்கலாம். இருப்பதைவிட அதிக மாகச் செய்துவிட்டால் பெருமையாகக்கூட இருக்கலாம். 1976-77-ஆம் ஆண்டில் தீப்பெட்டி சேவா சங்கங்கள் 11. தற்போதைய நிலைமை, 31.12.81-ல் 100. ஒன்றுமே செய்யவில்லை! எங்க ளுடைய ஆட்சியில் எங்களுக்குத் துணையாக உள்ள அதிகாரிகள் 11லிருந்து 100 தான் செய்திருக்கிறார்கள். 11லிருந்து குறைந் திருக்க வேண்டும். பெரிய குற்றம் சுமத்துகிறார்கள். தீப்பெட்டித் தொழிற் சங்கங்கள் முன்பு 25, இப்போது 410. இந்த அமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 1976-77-ல் 847. இப்போது 6953. 1976-77-ல் பங்கு மூலதனம் மூலம் அரசின் உதவி 2.75 இலட்சம். ஆனால் இன்றைய நிலைப்படி 31.12.81ல் 11.25 இலட்சம். பங்கு மூலதனம் கடன்கள் பழைய விவரம் சரியாகக் கிடைக்கவில்லை. இன்று 70.31 இலட்சம். வேலை வாய்ப்பு பெற்றவர்கள் அன்று 16,000; இன்று 1,10,000 எப்படி கணக்குப்போட்டாலும், 3 பேர்கள் 5 பேர்கள் ஒரு குடும் பத்தில் இருந்தாலும், அந்தக் குடும்பத்திற்கு ஏதோ வருமானம் வருகிறதா, இல்லையா என்பதுதான் என்னுடைய டணிவான கேள்வி. இந்த அரசு என்ன செய்தது என்று கேட்கிறார்களே; இந்த அரசுக்கு என்ன செய்யத் தெரியுமென்று கேட்கிறார்களே; நீங்கள் எதற்காகப் பதவியில் இருக்கிறீர்களென்று கேட்கிறார் களே; 16,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு என்று இருந்ததை 1,10,000 ஆயிரம் பேர் என்று பெருக்கியதற்காக மீண்டும் ஆட் சிக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதைச் செய்திருக்கிறோமென்ப திலே உண்மையிலேயே மகிழ்ச்சி அடைந்திருக்கிறேன்.

1980-81-ல் 40 இலட்சத்து 50 ஆயிரமும், 1981-82-ல் 54 இலட்சத்து 40 ஆயிரமும் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. தொழில் நிறுவனங்களில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. என்றெல்லாம் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், உண்மையில் தமிழ்நாடு தொழிலில் முன்னேற்ற நிறுவனமும் அரசு தொழில் நிறுவனங்களும் லாபம் அடைந்துள்ளன. 1975-76-ல் 2 இலட்சத்து 77 ஆயிரம் லாபம். 1979-80-ல் 32 லட்சத்து 15 ஆயிரம் லாபம். தமிழ்நாடு துணிக்கழகம் 2.97 இலட்சம் லாபத்தில் இருந்தது. அதை 6.52 லட்சம் இலாபமாக ஆக்கியிருக்கிறோம். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் 2.15 இலட்சம் லாபம் அடைந்துள்ளது. அதற்கு அடுத்து தொழில் முதலீட்டுக் கழகம் 1975-76-ல் 89.19 இலட்சம் லாபம் அடைந்துள்ளது. 1979-80-ல் 115.156 இலட்சம் லாபம் அடைந்துள்ளது. நஷ்டம் அடைந்துள்ள நிறுவனங்களையும் அதே சமயத்தில் அவை எவ்வாறு லாபம் அடைந்துள்ளன என்பதையும் குறிப்பிடுகிறேன். நான் இந்த ஆண்டு தொடர்கின்ற, முதன் முதலாக முதலீடு செய்கின்ற நிறுவனங்களின் மூலம் இலாபம் வருகிறதா இல்லை நஷ்டம் வருகிறதா என்பதல்ல பிரச்சனை. ஆனால் தொடர்ந்து எப்படி நடந்து வந்திருக்கிறது என்பதை மாண்பு மிகு எதிர்க்கட்சித்தலைவர் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் நன்றாக உணர்வார்கள் என்பதில் ஐயமில்லை. ஒரு நிறுவனம் 1975-76-ல் 45.28 இலட்சம் நஷ்டம். 1979-80-ல் 17.53 இலட்சம் லாபம். தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு 1975-76-ல் 12.83 இலட்சம் நஷ்டம். 1979-80-ல் 22.70 இலட்சம் லாபம்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் நஷ்டம் அடைந்துள்ள பல நிறுவனங்கள் இன்றைக்கு இலாபம் அடைந்துள்ளன என்கிற விவரத்தையும் அதே ரிப்போர்ட்டில் குறிப்பிட்டிருப்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதே போல் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் முன்பு 1974-75-ல் 8.56 இலட்சம் லாபம் சம்பாதித்தது. ஆனால் 1975-876-ல் 61.54 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. 1979-80-ல் 1.90 இலட்சம் லாபம் சம்பாதித்துள்ளது. பல்லவன் போக்குவரத்துக்கழகம் 1974-75ல் 89.89 லட்சம் நஷ்டம் அடைந்துள்ளது. 1979-80ல் 3 ஆயிரம் லாபம் அடைந்துள்ளது. சோழன் போக்குவரத்துக் கழகம் 1975-76-ல் 102.81 இலட்சம் நஷ்டம் அடைந்துள்ளது. 1980-80-ல் 18.33 இலட்சம் லாபம் அடைந்துள்ளது. அண்ணா போக்குவரத்துக் கழகம் 1975-76-ல் 25.81 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. 1979-800-ல்2.13 இலட்சம் லாபம் அடைந்துள்ளது.

1979-லே வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் 331 1980-லே 293; 1979-லே வீணான மனித உழைப்பு நாட்கள் 83 இலட்சம். 1980-லே வீணான மனித உழைப்பு நாட்கள் 35 இலட்சம். போக்குவரத்துக் கழகங்களிலே பேச்சுவார்த்தைகள் மூலம் ஏற்பட்ட சம்பள உயர்வு ரூ. 70-லிருந்து ரூ. 120.

அடுத்து செங்கல் உற்பத்தி, இது ஒரு உற்பத்தியா என்று கேட்கலாம். சிலருக்கு அடிக்கடி செங்கல் தேவைப்படுகிறது. வீடு கட்டினாலும்சரி, ஒரு வீட்டுச் செங்கல்லை உடைத்தாலும் சரி-செங்கல் என்று பார்த்தால், 1977-ஆம் ஆண்டுக்கு முன்பு குறிப்பிடத் தக்க அளவுக்கு ஒன்றும் உருவாகவில்லை. அத்தகைய சங்கங்கள் 7 இருக்கின்றன. 1300 பேர் உறுப்பினர்களாக இருக் கிறார்கள். 460 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். தனியார் மூத லீடு அதில் எவ்வளவு என்ற விவரத்தைத் தேடி கண்டு பிடிக்க வில்லை. அரசுக்கு ஒரு பெரிய பொறுப்பு இதிலே இருக்கிறது.

கிராமங்களுக்குப் போனால் பெரிய பெரிய பள்ளங்களை நாம் பார்க்கிறோம். ரோடுகள் கொஞ்சம் கொஞ்சமாக அகலம் குறைந்து கொண்டே வருகிறது. மக்களுடைய போக்குவரத்து பற்றி ஒரு சாராருக்கு கவலையில்லை. பள்ளம் தோண்டி மண் எடுக்கிறார்கள். லாரியிலே வந்து மண் எடுத்துவிட்டு போய்விடு கிறார்கள். முந்தைய ஆட்சிக்காலத்தில் என்னுடைய சத்தியாத் தோட்டத்தில் ஓர் எல்லையில் ஒவ்வொரு மரமாகச் சாய்ந்து கொண்டே வந்தன. எடுத்து நிறுத்த முடியாது. என்னவென்று பார்த்தால் பெரிய பெரிய மரங்கள் அவை. அடியிலேயிருந்து மண்ணை தோண்டியெடுத்து லாரியிலே கொண்டு சென்று விடு வார்கள். ஆனால் மண் எடுப்பது வெளியே தெரியாது. அதனால் பள்ளமாகிவிட்டது. அது தனிப்பட்ட தோட்டம் பரவாயில்லை. ஆனால் மக்கள் தொகையின் காரணமாகப் போக்குவரத்தைப் பெருக்க வேண்டிய நிலையில் இருக்கின்ற போக்குவரத்து வசதி போதாது என்ற நிலையில் போக்குவரத்து வசதியைப் பெருக்க ரோட்டை அகலப்படுத்த வேண்டிய நிலையில் நாம் இருக்கும் போது, ஆங்காங்கு இப்படி மண் எடுத்து பள்ளம் தோண்டுவது என்பது மன்னிக்க முடியாத குற்றம். அதற்கு நில நடவடிக்கை களை அரசு கையாள வேண்டியிருக்கிறது.

அடுத்து, வீடுகட்ட கற்கள் வேண்டியிருக்கிறது. ஏன் சுண் ணாம்பை வீடுகட்டப் பயன்படுத்தக்கூடாது என்று சொல்லியிருக் கிறார்கள். அதையும் செய்யலாம். அதனால் வீடு நிரந்தரமாக் இருக்காது என்பதல்ல. உறுதியாக இருக்காது என்பதல்ல. சிமெண்டு மட்டுமல்ல சுண்ணாம்பையும் பயன்படுத்த இந்த அரசு முயலுகிறது.

அடுத்து, கதர் கைத்தறி வாரியத்தின் மூலம் செங்கல் உற் பத்தி பற்றி குறிப்பிடுகிறேன். மண்பாண்டம் செய்யும் அளவுக்கு ரூபாய் 3 ஆயிரம் வீதமும், செங்கல் சூளைக்கு ரூபாய் 5 ஆயிரம் வீதமும் அளிக்கப்பட்டு வருகிறது. 1978-79-ல் 557 பேர் களுக்கும் 1979-80-ல் 629 பேர்களுக்கும் 1980-81-ல் 2013 பேர் களுக்கும் 1981-82-ல் 2918 பேர்களுக்கும் வேலைவாய்ப்பு கொடுக் கப்பட்டிருக்கிறது. திட்டமிட்டபடி செய்யப்பட்டிருக்கிறது. 1978-79ல் 11 இலட்சமும், 1979ல் 13 லட்சத்து 50 ஆயிரமும்

அதையும் சேர்த்துக் சொல்கிறேன் என்று சொன்னால் லாபம் வருகிறது என்று சொன்னால் ரூ. 70-லிருந்து 120-க்குக் கொடுக்க முடிகிறது. நஷ்டம் வரும்போது அப்படிக் கொடுக்க முடியவில்லை. ஆகவே, இந்த நிலையைப் பற்றி இரண்டு குறிப்புகளையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று சொல்கிறேன்.

தோல் பதனிடும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் தினசரி 50 பைசாவிலிருந்து 1.75 ரூபாய் வரையில் கூடுதலாக இப்போது பெறுகிறார்கள். அவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் 7,500 பேர்கள். இவ்வளவு தொழிலாளர்களின் குடும்பத்திற்கும் நாங்கள் உதவி செய்திருக்கிறோம். அவர்களை அழிக்கப் பார்க்கிறோம் என்று சொல்பவர்களைக் கேட்கிறேன். 50 பைசாவிலிருந்து 1.75 ரூபாய் வரை அவர்கள் கூடுதலாகப் பெறுவதற்கு உதவி செய்தோம். அது அவர்களை அழிப்பதற்காகவா?

அடுத்தபடியாக, திருநெல்வேலி செராமிக்ஸ் மற்றும் ரிஃப்ராக்டர்ஸ் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் பிரச்சனையிலே ஏற்பட்ட உடன்பாட்டின் பயனாகத் திரும்பவும் போனஸ் 20 சதவீதம் என்ற வகையில் நபர் ஒன்றுக்கு 250 அளவிலே பெற்றிருக்கிறார்கள். இதனால் பயன்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 650.

அதுபோல, திருப்பூரில் உள்ள 1300 பனியன் தொழிற்சாலைகளில், வேலை நிறுத்தம் ஏற்கபட்டபோது, அங்கு ஏற்பட்ட பேச்சுவார்த்தைகளின் பயனாகப் பயன்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 20 ஆயிரம் பேர்கள்.

1500 தொழிலாளர்கள் பால்வளத் துறையில் பணியாற்றியவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள் என்றார்கள். அவர்கள் என்ன வேலை நிறுத்தம் செய்ததாலா வெளியே அனுப்பப்பட்டார்கள்? அதற்கு அல்ல. வேறு குற்றத்திற்காக அனுப்பப்பட்டார்கள். பால் உற்பத்தி செய்யப்படுவது இங்கே உள்ள அமைச்சர்கள் குடிப்பதற்கு மட்டுமல்ல. சாதாரண ஏழை எளிய மக்கள் குடிப்பதற்கும் பால் உற்பத்தி செய்து விநியோகிக்கிறோம். அதில் கலப்படத்தைக் கொண்டு வருகிறார்கள். கலப்படம் செய்கிறார்கள் என்று கண்டுபிடித்தால் அதற்காக வேலை நிறுத்தம் செய்வது என்றால் என்ன பொருள். வேலை நீக்கம் செய்தவர்களை வேலைக்கு எடுக்காவிட்டால் வேலை நிறுத்தம் செய்வோம் என்றால் என்ன நியாயம். மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நல்ல பாலில் தண்ணீர் கலக்கக்கூடாது என்றுதான் நாம் விரும்புகிறோம். ஆனால் இதற்கு உத்தரவாதம் இல்லை என்றால் என்ன பொருள்? பால் குறைகிறது என்று வந்தால் அதற்கு யார் காரணமோ அவர் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அப்படிப் பட்ட தவறு செய்தால் அவரை வேலையை விட்டு நீக்குவோம் அல்லது முறைப்படி அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்போம்

என்றால், அப்படிச் செய்யக்கூடாது. அவர்களையும் உடனே வேலைக்கு வைக்க வேண்டும் என்று சொல்லி ஓர் ஆண்டு அல்லது ஒன்றரை ஆண்டு வேலைக்கு வராமல் இருந்தால் இப்போது வேறு நபர்களை வைத்து வேலை நடக்கும்போது அவர்களையெல்லாம் வெளியே அனுப்பிவிட்டு நாங்கள் உள்ளே வரவேண்டும் என்று போராட்டத்தில் இறங்குவார்களேயானால் இது நியாயமா? இது தான் சட்டம், ஒழுங்குக்குக் கட்டுப்படும் நிலையா? அடிக்கடி நீங்கள்தானே சொல்கிறீர்கள். யார் தவறு செய்தாலும் நடவடிக்கை எடுங்கள், மக்களுக்கு யார் துரோகம் செய்தாலும் சரி, அவர்கள் யாராக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, எந்தத் தொழிலில் இருந்தாலும் சரி, எந்தப் பதவியில் இருந்தாலும் சரி, நடவடிக்கை எடுங்கள். நாங்கள் உங்களுக்குப் பக்கபலமாக இருக்கிறோம் என்று சொல்கிறீர்களே, இதுதான் நியாயமா என்று கேட்க விரும்புகிறேன்.

## பால் வள நிறுவனத்தின் பணிகள் மேலும் சிறந்திட....

பால் எடுத்துச் செல்லும் வேன்கள் மீது கல் எரிவது, பால் வண்டி ஓட்டுநர்கள், பால் விநியோகத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் ஆகியவர்களின் வீட்டுக்குச் சென்று மிரட்டுவது போன்ற செயல்களில் ஈடுபட்டு அவர்களுடைய உயிருக்குப் பாதுகாப்பில்லை என்று நிலை ஏற்பட்டால் எப்படி ஒழுங்காக சமுதாயம் வளர முடியும்? உண்மையிலேயே, அரசு நிறுவனமாக இருந்தாலும் சரி, யாரானாலும் சரி தவறாக நடவடிக்கை எடுத்தால் நியாயத்தை ஒத்துக்கொள்ள மறுத்தால் அப்போது வேலை நிறுத்தம் செய்ய எல்லோருக்கும் உரிமையுண்டு. இதிலே யாருக்கும் மாற்று கருத்து இருக்க முடியாது. ஆனால் ஒன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்த அரசைப் பொறுத்த வரையில், பால் வள நிறுவனத்தில் இந்த ஓராண்டுக் காலத்திற்கு மேலாகப் பணியாற்றி பால் வளநிறுவனம் சென்னையில் ஒழுங்காகப் பணிபுரிய உதவினார்களே அவர்களை மறுபடியும் வெளியே வேலை இல்லாமல் தள்ள மனசாட்சி இல்லை இந்த அரசாங்கத்திற்கு. இந்த அரசாங்கத்தின் எண்ணம் அதுவல்ல என்பதை மட்டும் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் எப்படி சட்டப்பூர்வமாகப் பெற வேண்டுமோ அதைச் செய்யவேண்டும். அதிலும் போராட்டம்தான் என்றால் அதற்கு மக்கள்தான் பதில் சொல்ல வேண்டுமே தவிர வேறு பதில் இருக்காது. இல்லாவிட்டால் தானியங்கி இயந்திரத்தை எதற்காக வைக்கிறோம்? அவர்களையே உறுப்பினர்களாக ஆக்கி அவர்களிடமே விநியோகத்தை ஒப்படைத்துவிடலாம் என்ற அந்த நிலைக்கு ஏன் வருகிறோம்.?



## போக்குவரத்தில் மகத்தான வளர்ச்சி

பேருந்து விடுங்கள் என்று கேட்கிறார்கள், விடுகிறோம். பாதுகாப்பை நாங்கள் கொடுக்க வேண்டாமா? எத்தனை பேருந்துகள் விடப்பட்டன என்பதைக் குறிப்பிடுகிறேன்.

1976-77ஆம் ஆண்டில் 4,953 பேருந்துகள்
1977-78ஆம் ஆண்டில் 5,068 பேருந்துகள்
1978-79ஆம் ஆண்டில் 5,601 பேருந்துகள்
1979-80ஆம் ஆண்டில் 6,407 பேருந்துகள்
1980-80ஆம் ஆண்டில் 7,103 பேருந்துகள்
1981-82ஆம் ஆண்டில் 7,735 பேருந்துகள்

கடந்த நான்கு ஆண்டுகளில் நாங்கள் சுமார் மூவாயிரம் பேருந்துகள் அதிகமாக விட்டிருக்கிறோம் என்றால் அது சாதனை என்று நான் சொல்லவில்லை. நாங்கள் மக்களுக்குச் சொன்னோமே ''கிராமங்களில் இருந்து நகரத்திற்குச் சென்றுவர உங்களுக்குப் பாதை வசதி, போக்குவரத்து வசதி செய்து கொடுப்போம் என்றோமே, அதை நாங்கள் நான்கு ஆண்டுக் காலத்திலே செய்ய முயற்சிக்கவில்லையா?

அதைப்போலவே நாள் ஒன்றுக்கு பேருந்துகள் ஓடியதூரம் 12.30 லட்சம் கிலோ மீட்டர் 1976-77ஆம் ஆண்டில்,

1977-78ல் 12.70 இலட்சம் கிலோ மீட்டர்
1978-79ல் 14.20 இலட்சம் கிலோ மீட்டர்
1979-80ல் 16.60 இலட்சம் கிலோ மீட்டர்
1980-81ல் 19.20 இலட்சம் கிலோ மீட்டர்
1981-82ல் 21.66 இலட்சம் கிலோ மீட்டர்

இதன் பொருள் என்ன? எத்தனை மக்களுக்குப் பயன்படுகிறது என்பதை கணக்குப் போட்டுப் பார்க்க வேண்டாமா? பாதை வசதியில்லை, பேருந்துகள் வசதிகள் இல்லை என்ன செய்கிறார்கள் என்று கேட்கிறார்கள். எந்த அரசாக இருந்தாலும் ஒரே ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள 17 ஆயிரம் கிராமங்களுக்கும் பேருந்துகளை விட நிதி வசதி உண்டா? என்று கேட்கிறேன். நான் இங்கே இன்னுமொன்றைக் குறிப்பிட்டாக வேண்டும்.

நாள் ஒன்றுக்குப் பயணம் செய்தவர்களின் எண்ணிக்கையை நாம் பார்ப்போம். 1876-77ல், 37.50 இலட்சம் பேர்கள். ஆனால் இன்றைய தினம், அதாவது 1981-82ல் 65.62 இலட்சம் பேர்கள். நூற்றுக்கு நூறு அதிகமாக ஆக்கப்பட்டிருக்கிறது. மக்கள் போக்குவரத்து வசதிக்காக எதுவுமே செய்யவில்லை என்று சொல்லும்போது இதையெல்லாம் சாதனை என்று ஒத்துக் கொள்ளத் தயாராக இல்லை. யாருமே செய்ய முடியாததை நாங்கள் செய்தால் தான் சாதனை. அண்ணாவின் கொள்கையை நிறைவேற்றினால்தான், நிறைவேற்றப்பட்டு விட்டது என்ற நிலை வந்தால் தான்சாதனை. ஆகவே அந்தச் சாதனையை ஏற்படுத்தத் தொடர்கிறோம். தொடர்ந்து முயற்சிக்கிறோம் என்று சொல்வோமே தவிர எல்லாவற்றையும் முடித்துவிட்டோம் என்று சொல்லத்

தயாராக இல்லை. ஆனாலும் நான்கு ஆண்டுகளில் இப்படிச் செய்திருக்கிறோம். அதுபோலவே வழித்தடங்களின் எண்ணிக்கை யைப் பார்க்கவேண்டும். 1976-77ல், 2,045 வழித்தடங்கள், இன்று 3,874 வழித்தடங்கள். இந்த வழித்தடங்களில் எல்லாம் பேருந்துகள் போய் வருவது என்றால் அந்தப் பாதைகளை செப்ப னிடாமல் பேருந்துகள் போகமுடியுமா? அந்தப் பாதைகள் செப்ப னிடாமலே போக முடிந்தது என்றால், இதற்கு முன்பும் அப்படி செய்திருக்கமாட்டார்கள்? இதனால் பயன டைந்த கிராமங்களின் எண்ணிக்கையைக் கணக்குப் பார்க்க வேண்டும். அன்று 152 இருந்தன என்றால் இன்றைக்கு 620 என்று ஆகியிருக்கிறது. இப்படி ஒவ்வொன்றிலும் மிகப் பெரிய வித்தியா சத்தை அதிகமாக நாங்கள் செய்துக் காட்டிக் கொண்டிருக்கி றோம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். மக்கள் பணத்தை ஒழுங்காக செலவழித்தோம். அந்த அளவில்தான் நாங்கள் இவை களை எல்லாம் செய்ய முடிந்தது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.




இதிலே பேருந்துகளில் பணியாற்றியவர்கள் பற்றி சொல் கிறேன். புதிதாக எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத் தது? எத்தனை பிரச்சனைகள் இந்த வேலை வாய்ப்புகள் கொடுப் பதிலே வந்திருக்கின்றன. இந்தத் துறையிலே பலருக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கின்றதா இல்லையா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உருவாக்கப்பட்ட புதிய வேலை வாய்ப்புக்கள் 21,424 என்று சொல்லவிரும்புகிறேன். ஓட்டுனர்கள் 7,135, நடத் துனர்கள் 7,147 ஆகும். தொழில்நுட்பப் பணியாளர்கள் 3,568, மேற்பார்வை அலுவலகப் பணியாளர்கள் 3,574. வேலை நிறுத் தங்கள், கதவடைப்புகள் எண்ணிக்கை 1979ல் 331.

நாங்கள் தொழிலாளர்களுக்கு வேலையின்றி வெளியேற வேண்டும், அவர்கள் அதனால் கஷ்டப்படவேண்டும் என்ற எண்ணத்துடனா பணியாற்றுகிறோம்? 1979ம் ஆண்டு 331 ஆக இருந்தது. இன்று 14 என்ற அளவில் குறைக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு குறைத்து இருக்கின்றபோது நாம் இதை பற்றி இங்கே புகழ்ந்து பேச வேண்டாமா?

## கைத்தறி நெசவாளர்கள் மேம்பாடு


கைத்தறி நெசவாளர்களைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். இங்கே குறிப்புக்களிலேயே சொல்லியிருப்பார்கள். என்னென்ன செய்து இருக்கிறோம் என்று சொல்லியிருக்கக்கூடும். கைத்தறி நெசவாளர்களுக்காக மாநில அரசு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செலவிட்ட தொகை 297.82 கோடி. ஆனால் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 84.58 கோடி என்ற அளவில் செலவிட இந்த அரசு திட்டமிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



நாங்கள் 1977ஆம் ஆண்டு பொறுப்பேற்றபோது மாநிலத்தில் இருந்த 5.56 லட்சம் கைத்தறிகளில் 1.82 லட்சம் கைத்தறிகள் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தன. மொத்தத்தில் 32.73 சதவிகிதம் கொண்டு வரப்பட்டது. 1981ஆம் ஆண்டு இறுதியில் 2.89 இலட்சம் கைத்தறிகள் அதாவது 52 சதவிகிதம் கூட்டுறவுத் துறையின் அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. 6வது திட்ட இறுதிக்குள் 67 சதவிகிதமாக உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளது. அறிஞர்அண்ணா அவர்கள் கொள்கையைப் பின்பற்றுவது பற்றிச் சொல்கின்றார்கள். அரசுடைமையாக ஆக்கவேண்டும் என்ற கொள்கையிலிருந்து நீங்கள் மாறிவிடாதீர்கள் என்று இங்கே சொன்னார்கள். இது ஒன்றே நாங்கள் கூட்டுறவு அமைப்பிற்கும் இயக்கத்திற்கும் உழைப்பவர்களும் பங்கு பெறவேண்டும் என்ற ஒரு கருத்துக்கு எவ்வளவு மதிப்பு கொடுக்கிறோம், அக்கறை காட்டுகிறோம் என்பதற்கு உதாரணமாக இருக்கும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

## மீனவர் நலம்

அடுத்து மீனவர் நலம் பற்றிச் சொல்லும்போது, அதைப்பற்றி அதிகமாய்ச் சொல்ல விரும்பவில்லை. முன்பெல்லாம், 1972 முதல் மீனவர்களுக்கு கீழ்க்கண்டவாறு நிவாரணம் அளிக்கப்பட்டது. அதுவும் நடந்து வருகிறது. அதிலே சில மாற்றங்கள் இருக்கின்றன. படகுகள் வலைகள் சேதம் அடைந்தால் உயர்ந்த பட்ச நிவாரணம் 500 ரூபாய். படகுகள் பழுதுபார்க்க, வலைகள் மற்ற வகைகளுக்கு நிவாரணம் ரூ. 1000 என்று இரண்டும் சேர்த்து கொடுக்க மொத்தத்தில் ரூ. 25 ஆயிரம் போடப்பட்டிருக்கிறது. இந்த நிவாரணம் 50 சதவிகிதம் கடனாகவும், 50 சதவிகிதம் மான்யமாகவும் அளிக்கப்படுகிறது. இந்த நிவாரணம் மீனவர்கள்



கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக நைலான் வலையாகவோ பொருளாகவோ வழங்கப்படுகிறது. முன்பு 2 ஆண்டுகளில் 20 தவணைகளில் திரும்ப தரவேண்டும் என்று இருந்தது. அதை நாங்கள் 3 ஆண்டுகளில் என்று மாற்றி இருக்கிறோம். அந்த சதவிகிதத்தையும் மேலும் உயர்த்தி இப்போது 75 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறோம் என்பதை இங்கே சொல்வதன் மூலம், இதுபோன்ற பல்வேறு திட்டங்களை நாங்கள் மீனவர்களுக்காக செய்து கொண்டிருக்கிறோம் என்று என்பதைக் கூற விரும்புகிறேன்.

இவ்வளவு நெருக்கடியிலும், இவ்வளவு போராட்டங்களை நடத்திய போதிலும் இவ்வளவு சங்கடங்களை உண்டுபண்ணிய போதிலும்கூட அவைகளை எல்லாம் சந்தித்துக் கொண்டு முடிக்கிறோம் என்றால் நிர்வாகத் திறமை அற்றவர்கள் அல்ல என்பதை நான் சொல்லியாக வேண்டும். இப்படிப் பல பிரச்சனைகள் உண்டு.



## ஆசிரியர் நலன் காக்கும் அரசு

ஆசிரியர்களைப் பற்றியும் நான் சொல்லியாக வேண்டும். ஆசிரியர்களுக்காக ஒன்றுமே செய்யவில்லை, அவர்களைக் கைது செய்கிறோம். நடவடிக்கை எடுக்கிறோம் என்றெல்லாம்கூட சொன்னார்கள். அவர்கள்மீது போடப்பட்டுள்ள வழக்குகளை வாபஸ் பெறவேண்டும் என்று சொன்னார்கள். தேர்தல் அறிக்கையில் ஒன்றை குறிப்பிட்டேன். பொதுவாக ஆசிரியர் நலன் பேணப்படும். குறிப்பாக ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கக் கழகம் உறுதி அளிக்கிறது என்று தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தோம். இதைச் செய்தோமோ இல்லையா? வந்து 2 ஆண்டுகள் ஆட்சி நடத்துவதற்குள் அனுப்பப்பட்டோர் பிறகு திரும்பி வந்தோம். அந்த அறிக்கையின்படி இன்றையதினம் அத்தனைபேரையும் அரசு ஊழியர்களாக அரசுக்குச் சொந்தமானவர்களாக ஆக்கி அரசு ஊழியர்களாக, அரசு ஊழியர்களுக்குரிய அத்தனை சலுகைகளையும் அவர்கள் பெறுகின்ற வகையில் ஆக்கியிருக்கின்றோமே இல்லையா?



அரசுக்கு நேரடியாக தொடர்புடைய மற்ற ஊழியர்களைப் போல் இவர்களும் ஆக்கப்பட்டு விட்டார்கள். இதனால் அரசுக்கு எவ்வளவு செலவு ஏற்படும் என்பதும் அனைவருக்கும் தெரிந்த ஒன்று. அதே நேரத்தில் ஒன்றையும் சொன்னேன். ஆசிரியர்களை மாவட்டம் விட்டு மாவட்டம் மாற்ற இதிலே உரிமையுண்டு என்று சொன்னதை எல்லோரும் ஒத்துக் கொண்டார்கள். அந்த ஒத்துழைப்போடு தான் இப்போது அப்பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒருவகையில் அவர்களை நான் பாராட்டியிருக்கிறேன். பள்ளி மாணவர்களுடைய தேர்வு கெட்டுப்போகாமல் அதை நடத்தி முடித்துவிட்டு போராட்டத்தை நடத்தினார்கள். அதை நான் அப்போதைக்கு பாராட்டியிருக்கிறேன். இப்போது மீண்டும் இன்னொன்றையும் சொல்லி எப்படிப்பட்ட தொடர்பு ஆசிரியர்களுக்கும் எனக்கும் இருந்தது என்பதையும் நான் இங்கே நினைவு படுத்தியாக வேண்டும். நான் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்த நேரம். அப்போது ஒரு போராட்டத்திற்காக ஆசிரியர்கள் சென்னைக்கு வந்தபோது நான் நடிகனாக இருந்தாலும் அவர்களுக்கு நான் எந்த அளவிற்கு தொண்டு செய்தேன் என்பதை அவர்கள் நன்றாக உணர்வார்கள். இங்கே இருப்பவர்களும் அதை மறந்திருக்க மாட்டார்கள். அந்த வகையில் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தனி மனிதாக இருந்துகொண்டு செய்த அந்தத்தொண்டை முதலமைச்சராக இருந்து செய்ய முடியாதா?


அந்த அளவில் ஆசிரியர்களுக்கும் எவ்வளவு மதிப்பும் மரியாதையும் நான் தருகின்றேனோ அந்தளவில் அவர்களும் இந்த அரசுக்கு இன்னும் அதிகமாக ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். ஒத்துழைப்பு தரவேண்டுமென்று நான் கேட்டால் இப்போது ஒத்துழைப்பு தரவில்லையென்று அல்ல. இன்னும் மிகவும் அதிகமாக ஒத்துழைப்பு தரவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள் முயன்றால் மாணவர்களிடையே போராட்டம் இல்லாமல் பார்த்துக் கொள்ள முடியும் என்று நான் இந்த நேரத்தில் ஆசிரியர்களுக்கு வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன். அதற்குரிய காரணத்தை இங்கே கேட்க மாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன்.

அடுத்து, பட்டதாரி ஆசிரியர்களுக்கு நாங்கள் என்னன்ன செய்தோம் என்பது எல்லாருக்கும் தெரியும். தஞ்சைமாவட்ட தமிழ் ஆசிரியர்கள் மாநாடு ஒன்று நடந்திருக்கிறது. அங்கே ஒரு துண்டு பிரசுரத்தை வெளியிட்டிருக்கிறார்கள். என் பெயரைச் சொல்லி, தமிழக அரசுக்கு தலையாய பாராட்டு என்று சொல்லி விட்டு நாங்கள் ஏன் இந்த அரசைப் பாராட்டுகிறோம். பாராட்ட வேண்டும் என்று அதற்கான காரணத்தையும் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் ஏதாவது சொன்னால் அதிகாரிகள் கொடுத்ததை வைத்துக்கொண்டு படிக்கிறார்கள், சொல்கிறார்கள், என்று நினைப்பார்கள். ஆனால் இது அப்படி அல்ல. ஆகவே அதில் சொல்லப்பட்டிருப்பதை நான் படிக்கிறேன். 'உயர் தொடக்கப் பள்ளிகளில் முதல் நிலை பி.டி. ஆசிரியர்களுக்குரிய ஊதிய விகிதத்தை தமிழ் ஆசிரியர்களை நியமனம் செய்தமைக்கு பாராட்டு' என்று சொல்லி பாராட்டியிருக்கிறார்கள்.

தமிழ் ஆசிரியர்கள் சொல்லியிருக்கிறார்கள். என்னையும், இந்த அரசையும் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களாகத் தமிழ் ஆரிசியர்களுக்கு வாய்ப்பு தரவேண்டுமென்ற அடிப்படையில் முதல் படியாக உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பணி மூப்பு அடிப்படையில் துணைப்பதவி தர இந்த அரசு முன் வந்தமைக்கு பாராட்டுகள் என்று அடுத்து சொல்லியிருக்கிறார்கள். நாங்கள்செய்தோம் அல்லது முதலமைச்சர் செய்தார் என்றால்-இதற்கு முன்பு இருந்த யாரும் செய்யவில்லை என்று தானே பொருள்.

உயர்நிலைப் பள்ளித் தணிக்கைக் குழுவில் தலைமையாசிரியர்களும், பட்டதாரி ஆசிரியர்களும் தான் இருக்கவேண்டும் என்பதை மாற்றியமைத்து இந்த அலுவலர்களுடன் தமிழ் ஆசிரியர்களும் இடம்பெறச் செய்து, தமிழாசிரியர்களின் மதிப்பை உயர்த்தினோம். அதற்காக இப்படிச் சொன்னால், இப்படி முன்னாலே இல்லை இப்போதுதான் வந்திருக்கிறது என்று பொருள் தானே. ஆசிரியர்கள் தமிழிலேதான் கையெழுத்து இடவேண்டும் என்பதற்காக, எழுத்துச் சீர்திருத்தத்தை கொண்டு வந்ததற்காக தமிழகத்தில் இருக்கும் மக்களுக்கும், வெளிநாட்டவர்களுக்கும் தமிழின் சிறப்பை எடுத்துச் சொல்லி, தமிழுக்கு ஏற்றத்தைத் தந்ததற்காக, ஏழ்மையில் வாழும் முதியவர்களுக்கு ரூ. 150 உதவித் தொகை தந்ததற்காக, இருந்ததை உயர்த்தியதற்காகவா அல்லது இதை புதிதாக தந்ததற்காகவா, தமிழ்ச் சான்றோர்களைப் போற்றி உதவி தந்ததற்காக பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின்



நினைவால் ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த தமிழ் பாவலருக்கு ரூ 10 ஆயிரம் வழங்க முன் வந்ததற்காக, இயல் இசை நாடக மன்ற முத்தமிழ் வளரும் வகையிலே இசை-இயல்-நாடகக் கலைஞர்களைப் பாராட்டி பரிசு அளித்து ஊக்கப்படுத்தியதற்காக, நமது தொன்மையாக தொழில் கலைகளான நாயனக் கலையையும், தோல் கருவியாகிய தவுல் கலையையும் வளர்க்கும் வகையில் அவற்றை முறையாகக் கற்றுத் தேறும் இளைஞர்களுக்கு திங்கள் தோறும் உதவித்தொகை ஊதியம்போல தருவதற்காக, சாந்திநிகேதன், ஜெய்ப்பூர் இன்னும் மற்ற பல்கலைக் கழகங்களிலே தமிழ்த்துறை தோன்ற பெருந்தொகையாகிய ரூ. 20,000 இந்தியாவிலே தமிழ் வளர்ச்சியடைய வேண்டும் என்பதற்காக கடல் கடந்த நாடுகளிலே தமிழகத்தின் பெருமையும் திருக்குறள் போன்ற தமிழ் இலக்கியத்தின் பெருமையும் வளர வேண்டும் என்றும் நடவடிக்கை எடுத்ததற்காக மேல்நிலைப் பள்ளிகளில் 12 ஆண்டு கால படிப்பில் தமிழை பயிற்சி மொழியாகக் கொண்டு படிப்பவர்களுக்கு இலவசக் கல்விச் சலுகை அளித்ததற்காக, இடைநிலை ஆசிரியர்கள் புலவர் தகுதி பெற்றால் இரண்டு ஊக்க ஊதியம் தர ஒப்புக் கொண்டமைக்காக. இதறகு மேலும் புள்ளி விவரங்களை வைத்திருக்கிறேன். அவற்றைப் படிக்க விரும்பவில்லை. ஆசிரியர்களிடம் மாணவர்கள் நல்லபெயர் வாங்குவது என்பது அவ்வளவு சாதாரண காரியம் அல்ல. எப்படியோ அவர்களுடைய உள்ளம் நெகிழ்ந்து உண்மையை வெளிக்காட்டியதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# நேருவும் அண்ணாவும்

நம்முடைய நாட்டிலே இரண்டு பெரியவர்கள் பதவியேற்ற போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஒருவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். இன்னொருவர் பண்டிதநேரு அவர்கள். பண்டிதநேரு அவர்கள் பதவியேற்றபோது சொன்னார்கள். நான் இந்த நாட்டின் கடைசித் தொண்டன், நம்பிக்கைக்குரியவன் என்று தான் இந்தப் பொறுப்பை மக்கள் தந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதைப்போலவே பேரறிஞர் அண்ணா அவர்கள் பதவியேற்றபோது, மக்களுடைய சேவகன் என்ற வகையிலே என்னை நம்பிக்கைக்குரியவனாக ஆக்கியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்த அளவுக்குத் தகுதி எனக்கு இல்லாவிட்டாலும் அந்தக் கொள்கையை நான் உள்ளத்தில் பதிய வைத்திருக்கிறேன். ஆகவே, கட்சியைப் பயன்படுத்தி கட்சிக்காக இருக்கிறேன் என்று சொன்னால் நான் எந்த உத்தரவையும் போடமுடியாது. இப்படிப்பட்ட ஒரு பாராட்டை என்னால் இந்த 4 ஆண்டு காலத்திற்குள் பெற்றிருக்கமுடியாது. மாணவர்களைத் தகுந்த குடிமக்களாக ஆக்கும் ஆசிரியர்கள் அதுவும் தமிழாசிரியர்கள் சேர்ந்து என்னை பாராட்டியிருக்கிறார்கள் என்று சொன்னால் இந்த அமைச்சரவை தமிழன் அமைச்சரவை மட்டுமல்ல; தமிழின் அமைச்சரவை என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.






## உடல் ஊனமுற்றோர் நலன்

உடல் ஊனமுற்றவர்களுக்காக இந்த அரசு எவ்வளவு பெரிய முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும். கண்பார்வை இல்லாத ஏழைகளுக்கு இலவச பஸ் போக்குவரத்து வசதி செய்து கொடுத்திருக்கிறோம். 1980-81ஆம் ஆண்டுக்கான 35.35 இலட்சம் ரூபாய், 1981-82ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் 37.61 இலட்சம் ரூபாய் ஒதுக்கி படிப்புக்கு உதவி தொகை கொடுத்திருக்கிறோம். மேலும் உடல் ஊனமுற்றோருக்கு தொழிற் பயிற்சியும் கொடுக்கிறோம்.

இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். துணைவேந்தர் பதவியை ஒரு பெண்ணுக்கே கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார். இந்த அரசு நிச்சயமாக அதைத்தான் செய்யும் என்பதையும் அங்கே பணியாற்றுகிறவர்களில் 100க்கு 99 கூட அல்ல 100 பேரும் பெண்களாகத்தான் இருப்பார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதை அவர்கள் மிகவும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.





## ஏழை, எளிய விவசாயத் தொழிலாளர்கள் வாழ்க்கை வளம்பெற.......

அடுத்து, எங்கள் தேர்தல் அறிக்கையில் 60 வயதான ஏழை, எளிய விவசாயத் தொழிலாளர்களுக்கு மாதம் ஓய்வூதியம் வழங்கப்படும் என்று வாக்குறுதி அளித்திருந்தோம். அதை எப்படி நிறைவேற்றியிருக்கிறோம் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். இங்கே பேசிய பலரும் கேட்டார்கள். 5 படி அரிசி வாங்கினால் ஒரு படி அரிசி இலவச அரிசி எங்கே என்று கேட்டார்கள். அவர்களுக்கெல்லாம் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எத்தொழிலிலும் புரிய இயலாத, ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள், முதியோர் உதவித் தொகை அளிக்கும் திட்டத்தின் மூலம் பயன்பெறும் பொருட்டு, இத்திட்டத்தை விரிவுபடுத்தியுள்ளோம். இத்திட்டத்தை 1981ஆம் ஆண்டு முதல் அரசு செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் 60 வயதுக்கும் அதற்கு மேற்பட்ட ஆதரவற்ற எத்தொழிலும் செய்ய இயலாத நிலையில் உள்ள வேளாண் தொழிலாளர்கள் பயன்பெற உள்ளனர். இத்திட்டத்தின் முதற்கட்டமாக, மாநிலத்தில் உள்ள 30,000 ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு உதவித் தொகை அளிக்க அரசு ஆணைபிறப்பித்துள்ளது. அதைப்போலவே வேட்டி சேலை கொடுப்பதைப் பற்றியும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

## மாநகராட்சி நிர்வாகம்

மாநகராட்சி நிர்வாகம் பற்றி சொன்னார்கள். ஏறத்தாழ 20 கோடி அல்லது 22 கோடி ரூபாய் அளவுக்கு இதிலே வருமானம் வருகிறது என்றால், சம்பளமாக செலவு அது போன்ற மற்ற செலவுகளுக்கு என்று ரூ. 20 கோடி அளவுக்கு ஆகிவிடுகிறது. அதற்குப் பிறகு இருப்பது ஒரு கோடி அல்லது 2 கோடி ரூபாய்கள் தான். அதிலேதான் இவ்வளவு காரியங்களை செய்ய வேண்டிய தாக இருக்கிறது. ஆகவே மாநகராட்சிக்கு வருமானம் வந்தாக வேண்டும். மாநகராட்சிக்கு வருகின்ற வருமானத்தை உயர்த்தி னால்தான் அதிகமாக அவர்கள் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வசதியாக இருக்கும். அவர்களுக்கு உரிய அளவுக்கு நிதி கிடைத் தால் தான் அவர்களிடமிருந்து வேலை வாங்கமுடியுமே தவிர வேறல்ல. ஒரு தனி அலுவலர் அல்லது இன்னொரு தனி அலு வலர் என்பதைவிட, 10 தனி அலுவலர் என்று போட்டா லும் சம்பளம்தான் போகும். அதனாலே பலன் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்


நாங்கள் தேர்தல் அறிக்கையில், 10 அம்ச சிறப்புத் திட்டம் என்று சொல்லியிருக்கிறோம். வேலை வாய்ப்புத் திட்டம் 18 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் அனைவருக்கும். வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், வேலை வாய்ப்பு தகுதி பெற்றவர் களுக்கு, சிறு உழவர்கள் மேம்பாட்டு நிறுவனம், வளர்ச்சித் திட்டங்கள் ஆகிய திட்டங்களின் கீழ் உதவி பெற்றவர்களுக்கு



வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் வேலை பெற விரும்பும் அனைவரும் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், அந்த அலுவலகங்களில் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம். வேலை வாய்ப்பு இல்லாதவர்கள், இத்திட்டத்தின் கீழ் தேர்ந்து உதவி பெறுகின்றவர்களுக்கு ஊர் நல அலுவலர்களும், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களும் தக்க முயற்சி எடுப்பார்கள். ஊர் நல அலுவலர், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் வேலையற்று இருப்பவர்கள் குறித்து ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு பதிவேடு வைத்திருப்பார்கள். பதிவு செய்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ்ப் பதிவு செய்து இருப்பவர்கள் கட்டாயமாக வேலை செய்ய வேண்டும் என்ற நிபந்தனை இல்லை. விருப்பம் இருப்பவர்கள் மாத்திரம் இந்த திட்டத்தின் கீழ் வேலை செய்யலாம். அப்படி வேலை செய்யாமல் மறுப்பதற்கு அவர்களுக்கு எல்லாவிதமான உரிமையும் உண்டு. அந்த வட்டாரத்திற்குள்ளேயே அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும். அருகிலுள்ள கிராமங்களிலும் வேலை வாய்ப்பு அளிக்க முயற்சி எடுக்கப்படும். செய்கின்ற வேலைக்கு ஏற்ப அவர்களுக்கு ஊதியம் அளிக்கப்படும். அவ்வாறு 30 நாட்களுக்குள் எந்த நபருக்காவது வேலை கொடுக்க இயலாது என்ற நிலை ஏற்பட்டால் அந்த நபர்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் இலவசமாக அளிக்கப்படும் என்று அரசு ஆணை இட்டுள்ளது. 1.9.81 முதல் 31.12.81 வரை 4,55,261 பேர்கள் இத்திட்டத்தின் கீழ் வேலை வேண்டிப் பதிவு செய்திருக்கிறார்கள். அதில் 3,31,770 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள 1,23,497 பேர்களுக்கு தாங்களாகவே பதிவு செய்து கொண்டதிலிருந்து விலகிக் கொண்டு இருக்கிறார்கள். இத்திட்டத்தின் கீழ் தம்பதிவு செய்து கொண்ட அனைவருக்கும் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் வேலை அளிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு ஒரு நாளைக்கு ரூ. 7 கூலி அமையும்படியாக ஊதியம் கொடுக்கப்பட வேண்டும் அல்லது பொருளாகவோ அல்லது முழுவதும் பணமாகவோ வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## எளியோருக்கு மனைப் பட்டா

இன்னொன்று, எல்லோருக்கும் மனைப்பட்டா வழங்குவது என்று தேர்தல் அறிக்கையில் வெளியிட்டோம். இருப்பதற்கு இடம் இல்லாமல் தவிக்கும் ஏழைகளுக்கு மனைப்பட்டாக்கள் கொடுக்கிறோம் என்று சொன்னோம். 1977-78ம் ஆண்டு முதல் 30.1.81 வரை 2,08,029 வீட்டுமனைப் பட்டா வழங்கியுள்ளது. 67,725 பேர்கள் ஆதிதிராவிடர்கள். 9,696 பேர்கள் பழங்குடியினர். கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 93,894 பேர்களுக்கு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.



இதில் 21,312 பேர்கள் ஆதிதிராவிடர்கள், 982 பேர்கள் பழங்குடியினர். இதுதவிர தனியார் நிலங்களைக் கையகப்படுத்துவதன் மூலம் 1977-78ஆம் ஆண்டு முதல் 1981-82 ஜூன் வரை 57,920 மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 29,064 மனைப் பட்டாக்கள் வழங்கப் பட்டுள்ளன.

வேலைவாய்ப்பு பற்றித் தேர்தல் அறிக்கையிலே சொன்னது: வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேலையில்லாத இளைஞர்களுக்கு, ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளித்து வேலை கொடுக்கப்படும். ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொருவருக்காவது கட்டாயமாக வேலைதரப்படும், வேலையில்லாதவர்களுக்குள் 1 இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள். ரூ. 50 வீதம் உதவிப் பணம் கொடுத்தால் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6 கோடி செலவாகும் என்று அண்ணா தி.மு.க. அறிவித்தது. இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி, செகண்டரிகிரேட் ஆசிரியர் பயிற்சி பெற்று வேலையில்லாமல் இருக்கிறவர்களுக்கு உதவித் தொகை ரூ. 50 கொடுக்கப்படுமென்று சொன்னேன். படித்துப் பட்டம் பெறற பட்டதாரிகளுக்கு 50 ரூபாய் கொடுக்கும் திட்டமொன்றைத் தீட்டி, அரசு செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் 15.1.82 நிலவரப்படி உதவித் தொகை வழங்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 11,815; இந்தத் திட்டத்தின் கீழ் செலவழிக்கப்பட்ட தொகை 80-81ல் 22,04,000 ரூபாய்; 81-82ல் 43,60,000 ரூபாய். வேலையில்லாத பட்டதாரிகள்

தாங்களே சுயமாக வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் சொள்ள மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் குழு ஒன்று அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

மகப்பேறு கால ஊதியம்—பிரசவத்தின்போது தாய் சேய் உடல்நலப் பராமரிப்பிற்காக ஏழைத் தாய்மார்களுக்கு மாதம் ரூபாய் 50 வீதம் 3 மாதங்களுக்கு 150 ரூபாய் தரப்படுமென்று அறிவித்தோம். இம்மாதிரித் திட்டம் சிறப்புச் சத்துணவுத் திட்டம், உலக வங்கி சத்துணவுத் திட்டம் ஆகிய திட்டங்களின் மூலம் குறிப்பிட்ட வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகிறது. இருப்பினும் மாநிலம் முழுவதுமுள்ள ஏழைத் தாய்மார்களுக்கு மாநில அரசே ரூபாய் 150 வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வந்திருக்கிறது. இதுபற்றி அறிவிப்பு உரிய நேரத்தில் உங்களுக்குக் கிடைக்கும். இதற்கு மேல் சொல்லக்கூடாது.

தமிழ்நாட்டில் எக்காரணத்தைக் கொண்டும் பட்டினிச்சாவு நிகழக்கூடாது என்பது லட்சியம். அத்தகையவர்கள் அரசு அதிகாரிகளை அணுகி தம் நிலையைச் சொன்னால் 100 ரூபாய் உதவித் தொகை அளிப்பதுடன், தேவையான வேலை வாய்ப்பு தர வழி வகை செய்யப்படும்—இது தேர்தல் அறிக்கையில் குறிப்




பிட்டது. தமிழகத்தில் எக்காரணத்தைக் கொண்டும் பட்டினிச் சாவு நிகழக்கூடாது. பட்டினிச் சாவு தடுப்புத் திட்டம் 1980 டிசம்பர் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 185 பேர்கள் நிதி உதவி பெற்றுள்ளனர். வழங்கியுள்ள தொகை 18,500 ரூபாய். தகுதியுள்ள ஒவ்வொருவரும் இத்திட்டத்தின் கீழ் 100 ரூபாய் பெறுகின்றனர். யார் யார் எங்கெங்கே அப்படி இருக்கிறார்களோ அவர்களைப் பற்றி உறுப்பினர்கள் தகவல் தந்தால் அந்த மாவட்டத்திலுள்ள அதிகாரிகள் அதைக் கவனிப் பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ள ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் 5 கிலோ அரிசி வாங்கினால், ஒரு கிலோ இலவச மாக அளிக்க ஏற்பாடு செய்வோமென்று சொன்னோம். சொன்னது போல் முதியோர் உதவித்தொகை, விதவைகள் உதவித்தொகை உடல் ஊனமுற்றோர் உதவித்தொகை, ஆதரவற்ற ஏழை விவ சாயத் தொழிலாளர்கள் உதவித்தொகை ஆகியவை பெறும் 2 இலட்சம் பேர்களுக்கு வாரம் ஒரு கிலோ அரிசி வழங்கப்பட்டு வருகிறது. எங்காவது இது நடைபெறவில்லை என்ற சந்தேகம் இருந்தால், அதைப் பற்றிக் குறிப்பிடலாம். நடவடிக்கை எடுப் போம் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.



சட்டம், ஒழுங்கு சரியாக இருந்தால்தான், நாட்டிலே அமைதி இருந்தால்தான் திட்டங்களைத் தொடர்ந்து நடத்தவும், விரைவு படுத்தவும் முடியுமென்பதை நாங்கள் சொல்லி, நீங்கள் ஒத்துக் கொள்ள வேண்டியதில்லை. நீங்களே சொல்லக்கூடிய ஒன்று; உங்களுக்குத் தெரியாததல்ல என்பதைக் குறிப்பிட விரும்புகி றேன். அதே சமயத்தில் திட்டங்கள் தீட்டுவது என்பது மக்க ளுக்காக. அதிலும் யார் முதலிலே பெறவேண்டுமோ, அந்த முன் னுரிமை பெற்றிருக்கிற வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர் களுக்குப் போய்ச் சேரும் வகையில் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதுதான் அமரர் அண்ணாவின் கொள்கை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊழலற்ற நிர்வாகம் இருந்தால்தான் நிச்சயமாக நன்மைகள் நடக்கமுடியும். அண்ணாவின் கொள்கையை நிறைவேற்ற வேண்டு மென்பதுதான் இந்த அரசின் நோக்கம். சட்டம், ஒழுங்கு காப் பாற்றப்பட வேண்டும். சட்டம், ஒழுங்கு தனி மனிதன் கையில் எடுத்துக் கொண்டால், அதற்குப்பிறகு நீதியிராது. இதைக் கொஞ் சம் அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு நண்பரிடம் ஆங்கிலத்தில் எழுதிக் கொடுத்திருக்கி றார்:



*"Dear Brother,*

*Go to the people, live among them,*
*learn from them, love them,*
*serve them, plan with them,*
*start with that they have*
*build on what they have.*
*To those who want to engage*
*themselves in public service."*

என்று சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டியவர்கள் மக்களோடு இருந்து திட்டம் தீட்டியாக வேண்டும். மக்களோடு அன்போடு பழக வேண்டும். மக்களோடு சம வாழ்க்கையை வாழ்கின்ற முறையினை அமைத்துக் கொள்ள வேண்டும். அதைத்தான் நான் பின்பற்றுகிறேன்.



16-4-1982

# தமிழரசு

## இலவச இணைப்பு

தமிழரசு அச்சகம், சென்னை-600 002.